REGISTERED AS A NEWSPAPER IN SRI LANKA
www.thinakaran.lk
/Thinakaran.lk / ThinakaranLK

2023 நவம்பர் 27 திங்கட்கிழமை

# தினகரன்


THINAKARAN தினகரன்

வரு. 91 இல. 281 | Monday 27, November, 2023 | 28 பக்கங்கள் | 50/-

யாழ். ஸ்ரீ நாகபூஷணி ஆலயத்தில்

## பக்தர்களை மெய்சிலிர்க்க வைத்த நாக பாம்பு!

ஆலய சுற்றாடலில் காட்சி கொடுத்தது



இலங்கையில் பிரசித்தி பெற்ற யாழ்ப்பாணம் நயினாதீவு ஸ்ரீ நாகபூஷணி அம்மன் ஆலய துறை முகத்தில் நாக பாம்பு படமெடுத்து ஆடி அங்கிருந்த பக்தர்களை 06

கூட்டு ஒப்பந்தமா? சம்பள நிர்ணய சபையா? தீர்மானிக்க அவகாசம்;

## தோட்ட தொழிலாளரது சம்பள விடயத்தில் அரசியல், கட்சி பிரச்சினைகள் கிடையாது




ஆளும், எதிரணி உறுப்பினர்கள் சகலரும் ஒத்துழைப்பர் -ஜீவன் நம்பிக்கை

**லோரன்ஸ் செல்வநாயகம்**

கூட்டு ஒப்பந்தமா? சம்பள நிர்ணய சபையா? என்ற தீர்மானத்தை மேற்கொள்வதற்கு எமக்கு அடுத்த வெள்ளிக்கிழமை வரை கால அவகாசம் காணப்படுகிறது என இ.தொ. காவின் பொதுச் செயலாளரும் நீர் வழங்கல், தோட்ட உட்கட்டமைப்பு அமைச்சருமான ஜீவன் தொண்டமான் பாராளுமன்றத்தில் தெரிவித்தார். மலையகத் தோட்டத் தொழிலாளர்களுக்கான சம்பளப் பிரச்சினையில் அரசியல் பிரச்சினைகள் கிடையாது என்பதை சபையில் சுட்டிக்காட்டிய அமைச்சர், 06

## நான்கு மாகாணங்களில் டெங்கு அபாயம் தீவிரம்

இதுவரை 74,000 பேர் பாதிப்பு



நான்கு மாகாணங்களில் டெங்கு அபாயம் அதிகரித்துள்ளதாக தெரிவிக்கப்படுகிறது. மேல், தெற்கு, மத்திய மற்றும் சப்ரகமுவ மாகாணங்களில் அதிக நுளம்புகள் பெருகும் இடங்கள் பதிவாகியுள்ளதாக தேசிய 06

## எதிர்க்கட்சிகள் அதிகாரத்தை பெற சிறந்த வழி அரசுடன் ஒன்றிணைவதே

மாத்தளை அரசியல் பிரமுகர்களுடனான சந்திப்பில் ஜனாதிபதி



பொருளாதார நெருக்கடியின் போது எதிர்க்கட்சிகள் அரசாங்கத்தை ஆதரித்திருந்தால், சில மாதங்களுக்கு முன்பே நாட்டை வங்குரோத்து நிலையில் இருந்து மீட்டெடுத்து இருக்கலாம். நமக்காக அன்றி எதிர்கால சந்ததியினருக்காகவே நாட்டைக் கட்டியெழுப்ப வேண்டும் என ஜனாதிபதி ரணில் விக்கிரமசிங்க வலியுறுத்தினார்.

ஆனால் எதிர்க்கட்சிகள் தம்மைப் பற்றி மாத்திரமே சிந்திப்பதாகவும் அரசாங்கத்துடன் இணைந்து செயற்படுவதே சிறந்த 06

# நாடு அடுத்த மாதத்திற்குள் வங்குரோத்து நிலையில் இருந்து விடுவிக்கப்படும்

நிறைவேற்றுவதற்கு இன்னும் பல பணிகள் உள்ளன

### 2024 வரவு செலவுத் திட்டத்தில் "உறுமய" காணி உறுதிப்பத்திரம் வழங்க 2 பில்லியன் ரூபா ஒதுக்கு



**லோரன்ஸ் செல்வநாயகம்**

நாடு அடுத்த மாதத்திற்குள் வங்குரோத்து நிலையில் இருந்து விடுபடும் என்றும் சம்பந்தப்பட்ட நாடுகளிலிருந்து அது தொடர்பில் தேவையான பதில்கள் வழங்கப்பட்டுள்ளதாகவும் ஜனாதிபதி ரணில் விக்கிரமசிங்க தெரிவித்தார்.

அது மட்டுமன்றி எமக்கு நிறைவேற்றுவதற்கு இன்னும் பல பணிகள் உள்ளன என்றும் தெரிவித்த அவர், நாட்டின் அனைத்து கிராமங்களையும் தொழில்முயற்சி கிராமங்களாக அபிவிருத்தி செய்வதன் மூலம் ஏற்றுமதிப் பொருளாதாரத்தை பலப்படுத்தப்போவதாகவும் குறிப்பிட்டார். அதற்குத் தேவையான வசதிகளை வழங்குவதற்காக விவசாய நவீனமயமாக்கல் சேவை நிலையங்களை நிறுவுவதற்கும் திட்டமிடப்பட்டுள்ளதாகவும் அவர் குறிப்பிட்டார். 06

## பண்டிகைக் காலங்களுக்காக ஒருதொகுதி அரிசி இறக்குமதி

**லோரன்ஸ் செல்வநாயகம்**

எதிர்வரும் பண்டிகைக் காலங்களில் அரிசி தட்டுப்பாட்டை நிவர்த்தி செய்யும் வகையில் ஒரு தொகை அரிசியை இறக்குமதி செய்வதற்கு நடவடிக்கை எடுத்துள்ளதாக வர்த்தக அமைச்சர் நளின் பெர்னாண்டோ தெரிவித்துள்ளார்.

நாட்டில் கீரி சம்பா அரிசிக்கு தட்டுப்பாடு நிலவும் நிலையில் அதற்கு சமமான ஒருவகை அரிசியை இவ்வாறு இறக்குமதி செய்ய தீர்மானித்துள்ளதாகவும் அவர் தெரிவித்துள்ளார்.

பாரிய நெல் ஆலை உரிமையாளர்கள் கீரி சம்பா அரிசியை சந்தைக்கு விற்பனைக்கு விடாமல் அதனை பதுக்கி வைத்துள்ளதால் சந்தையில் தற்போது கீரி சம்பா மற்றும் சம்பா அரிசிக்கும் தட்டுப்பாடு உருவாகியுள்ளதாக அமைச்சர் தெரிவித்துள்ளார்.

அதற்கிணங்க பண்டிகைக் காலங்களில் ஏற்படக்கூடிய அரிசி தட்டுப்பாட்டை நிவர்த்திக்கும் வகையிலேயே அரிசி இறக்குமதி செய்வதற்கு தீர்மானிக்கப்பட்டுள்ளதாகவும் அமைச்சர் தெரிவித்துள்ளார்.

வர்த்தக சந்தையில் அரிசிக்கான தட்டுப்பாட்டை உருவாக்குவதற்கு பாரிய நெல் ஆலை உரிமையாளர்கள் செயற்பட்டு வருகின்றனர். அவர்களின் சூழ்ச்சியை கட்டுப்படுத்தும் வகையிலேயே இந்த தீர்மானம் எடுக்கப்பட்டுள்ளது.

அத்த்துடன் எதிர்வரும் பண்டிகைக் காலங்களில் சதொச நிறுவனம் மூலம் நுகர்வோருக்கு விசேட விலைக் கழிவுடன் அரிசியை பெற்றுக் கொடுப்பதற்கு நடவடிக்கை எடுக்கப்பட்டுள்ளதாகவும் அவர் தெரிவித்துள்ளார்.

அதேவேளை, கடந்த ஒன்பது வருடங்களிற்குப் பின்னர் கடந்த பத்து மாத காலமாகவே சதொச நிறுவனம் இலாபமீட்டி வருவதாகவும் அவர் தெரிவித்துள்ளார்.



03 உயிரிழந்த தமிழ் பொலிஸ் அதிகாரிக்கு பதவி உயர்வு

ஊடக பேச்சாளர் தெரிவிப்பு

## GCE (O/L) முடிவுகளை வெளியிடுவதில் சிறு தாமதம்

இம்மாத இறுதிக்குள் வெளியிட தீவிர முயற்சி



கல்விப் பொதுத் தராதர சாதாரண தர பரீட்சையின் பெறுபேறுகளை வெளியிடுவதில் சிறு தாமதம் ஏற்பட்டுள்ளதாக கல்வி அமைச்சு தெரிவித்துள்ளது.

இம்மாத இறுதிக்குள் வெளியாகும் என கல்வி அமைச்சு அறிவித்திருந்த நிலையில், தற்போது அதற்கான சாத்தியங்கள் மிகக்குறைவாக இருப்பதாக கல்வி அமைச்சின் தகவல்கள் தெரிவிக்கின்றன. நடைமுறை ரீதியாக நிலவுகின்ற சிரமங்களால் 06

## வைத்தியர்களின் சம்பளம் விரைவில் அதிகரிக்கப்படும்

சுகாதார அமைச்சினால் யோசனைகள் முன்வைப்பு



வைத்தியர்களுக்கு வழங்கப்படும் சம்பளம் மற்றும் கொடுப்பனவுகளை அதிகரிக்க சுகாதார அமைச்சு யோசனைகளை முன்வைத்துள்ளது.

நீண்டகாலமாக தீர்க்கப்படாத சம்பளம் மற்றும் ஏனைய தொழில்சார் பிரச்சினைகள் காரணமாக வைத்தியர்கள் நாட்டை விட்டு வெளியேறுவது அதிகரித்துள்ளமையினால் இது தொடர்பில் சுகாதார அமைச்சு கவனம் செலுத்தியுள்ளது. 06

## எதிர்க்கட்சி தலைவருக்கு எதிராக நடவடிக்கை அவசியம்

ஆளும் தரப்பு MPக்கள் சபாநாயகரிடம் வலியுறுத்து



எதிர்க்கட்சி தலைவர் சஜித் பிரேமதாசவின் பாராளுமன்ற உரை தொடர்பில் கடும் விமர்சனம் காணப்படுகிறது. வெறுக்கத்தக்க சொற்களை பயன்படுத்தி எதிர்த்தரப்பினரை சாடுகிறார். ஆகவே, இவ்விடயம் தொடர்பில் உரிய நடவடிக்கை எடுக்குமாறு சபாநாயகரிடமும், சபை முதல்வரிடமும் வலியுறுத்தியுள்ளோம் என ஆளும் தரப்பின் பாராளுமன்ற உறுப்பினர் நாமல் ராஜபக்ஷ தெரிவித்தார். 06

பண்டிகை காலத்தை முன்னிட்டு

## அத்தியாவசிய பொருட்கள் 400 இன் விலைகள் குறைப்பு

உணவு பாதுகாப்பு அமைச்சர் தெரிவிப்பு



அத்தியாவசிய பொருட்கள் உள்ளிட்ட 400 பொருட்களின் விலைகளை குறைக்க லங்கா சதொச ஊடாக நடவடிக்கை எடுக்கப்படவுள்ளதாக வர்த்தக மற்றும் உணவு பாதுகாப்பு அமைச்சர் நளின் பெர்னாண்டோ தெரிவித்துள்ளார். பாராளுமன்ற வளாகத்தில் நேற்று முன்தினம் (25) இடம்பெற்ற கலந்துரையாடல் 06

வடக்கு, கிழக்கு மாகாணங்களில் முன்னெடுக்கப்படும்

## சட்டவிரோத நினைவேந்தலுக்கு ஒருபோதும் இடமில்லை


மீறி செயற்படின் சட்ட நடவடிக்கை



வடக்கு, கிழக்கில் முன்னெடுக்கப்படும் நினைவேந்தல்கள் சட்டத்துக்கு எதிரானதாக அமையும் பட்சத்தில் அவை தொடர்பில் பாரபட்சமின்றி குற்றவியல் சட்டத்தின் கீழ் சட்ட நடவடிக்கைகள் எடுக்க வேண்டும் என்ற அறிவுறுத்தல் வடக்கு, கிழக்கு மாகாண பொலிஸ் பிரதானிகளுக்கு பொலிஸ் மா அதிபரால் அனுப்பி வைக்கப்பட்டுள்ளதாக பொலிஸ் ஊடக 06

## யாழ். பல்கலை விரிவுரையாளர் மூவருக்கு பேராசிரியர் பதவி

திறமை அடிப்படையில் புதிதாக நியமனங்கள்



யாழ்ப்பாண பல்கலைக்கழக தாவரவியல் துறைத் தலைவர் உட்பட சிரேஷ்ட விரிவுரையாளர்கள் மூவர் பேராசிரியர்களாக பதவி உயர்த்தப்பட்டுள்ளனர். அதன்படி விஞ்ஞான பீடத்தின் தாவரவியல் துறைத் தலைவரும் 06

## பலத்த மழை அனர்த்தத்தினால் இதுவரை 2,17,900 பேர் பாதிப்பு

இவ்வருடத்தில் மட்டும் 51 பேர் பலி; 103 பேருக்கு காயம்



நாட்டில் பதிவான பலத்த மழைவீழ்ச்சியால் ஏற்பட்ட அனர்த்தங்களினால் 2,17,900 பேர் பாதிக்கப்பட்டுள்ளதாக பாதுகாப்பு இராஜாங்க அமைச்சர் பிரமித்த பண்டார தென்னகோன் தெரிவித்தார். இவர்களில் 51,572 குடும்பங்கள் அடங்குவதாகவும் அவர் மேலும் 06

## எலுமிச்சை பழத்தின் விலை அதிகரிப்பு

சந்தையில் 01 Kg ரூ. 2000 ஆனது



இலங்கையில் எலுமிச்சை பழத்தின் விலை கடுமையாக உயர்ந்துள்ளதாக வியாபாரிகள் தெரிவிக்கின்றனர். சந்தையில், ஒரு கிலோ எலுமிச்சை பழத்தின் விலை, 2000 ரூபாய் வரை உயர்ந்துள்ளது. 06

03 லக்விஜய அனல் மின் உற்பத்தி நிலைய

மூன்றாவது மின் பிறப்பாக்கி தேசிய மின் கட்டமைப்புடன்

எதிர்வரும் 29ஆம் திகதி இணைக்க ஏற்பாடு



03 பூஸ்ஸ சிறையில் 23 CCTV கமராக்களை உடைத்த கைதி

உயரதிகாரிகளால் விசாரணைகள் ஆரம்பம்!

பாராளுமன்ற உறுப்பினர்களின் உத்தியோகபூர்வ இல்லங்கள்

## மின் கட்டணத்தில் 16 மில். வழங்க தவறியுள்ளன

கணக்காய்வாளர் திணைக்களம் தெரிவிப்பு

**லோரன்ஸ் செல்வநாயகம்**


பாராளுமன்ற உறுப்பினர்களின் உத்தியோபூர்வ வாசஸ்தலங்களுக்கு வழங்கப்பட்டுள்ள மின்சாரத்துக்காக கடந்த வருட இறுதிவரை 16 மில்லியன் ரூபா அறவிடவேண்டியுள்ளதாக தெரிவிக்கப்படுகிறது.

மேற்படி 16 மில்லியன் ரூபாவை சம்பந்தப்பட்ட பாராளுமன்ற உறுப்பினர்கள் வழங்க தவறியுள்ளதாகவும் கணக்காய்வு திணைக்களம் அறிக்கை தெரிவிக்கின்றது.

இவ்வாறு 74 மின்சார இணைப்புகளுக்கான கட்டணம் மின்சார சபைக்கு கிடைக்கவில்லையென்றும் அதில் 29 இணைப்புகளுக்கான ஐந்து மில்லியன் ரூபா ஆறு வருட காலமாக அறவிடப்படமுடியாத நிலையில் இருப்பதாகவும் மேலும் 30 06

வெல்லம்பிட்டிய பகுதி

## திடீர் சுற்றிவளைப்பில் 4 பெண்கள் உட்பட 40 பேர் கைது



வெல்லம்பிட்டி, சிங்கபுர பிரதேசத்தில் பொலிஸாரும் இராணுவத்தினரும் இணைந்து நேற்று (26) அதிகாலை மேற்கொண்ட சுற்றிவளைப்பில் 04 பெண்கள் உட்பட 40 பேர் கைது செய்யப்பட்டுள்ளனர். 06

# நகர்வலம்



## அநுராதபுரத்தில் உரத் தொழிற்சாலை திறந்துவைப்பு

**அநுராதபுரம் தினகரன் நிருபர்**

முழு நாட்டிற்கும் (கெடடொஹர) உரத்தினை வழங்கும் நோக்கில் அநுராதபுரம் ஓயாமடுவ பகுதியில் அமைக்கப்பட்டுள்ள உரத் தொழிற்சாலையினை மாவட்ட அரசாங்க அதிபர் ஜனக்க ஜயசுந்தர அண்மையில் திறந்து வைத்தார்.

'நேஷ பியுட்டி கிரியெக்ஷன்' நிறுவனத்தினால் அநுராதபுரம் மஹவிளச்சிய பிரதேச செயலாளர் பிரிவுக்குட்பட்ட ஓயாமடுவ பகுதியில் அரசாங்கத்தின் பூரண வழிகாட்டலின் கீழ் இவ்வுரத் தொழிற்சாலை ஆரம்பிக்கப்பட்டுள்ளது. இதன் மூலம் இலங்கையின் தொழிநுட்பத்திற்கு அமைய வருடமொன்றுக்கு பத்தாயிரம் மெற்றிக் தொண் உரத்தினை வழங்க முடியுமென கூறப்படுகின்றது. அதற்கு மேலதிகமாக இத்தொழிற்சாலையில் உரத்தினை அடுக்கிவைக்கும் பெல்ட்டும் தயாரிக்கப்படுகின்றமை குறிப்பிடத்தக்கதாகும்.

இதன் மூலம் இந்நாட்டிலுள்ள விவசாயிகள் பெரிதும் நன்மையடைவார்கள் என எதிர்பார்க்கப்படுகின்றது. இந் நிகழ்வில் உரத் தொழிற்சாலையின் உயர் அதிகாரிகள் மற்றும் அரச உரக்கூட்டுத் தானத்தின் உயர் அதிகாரிகள் என பலரும் கலந்துகொண்டனர்.

## ஸ்கேன் பரிசோதனைகளை தடையின்றி முன்னெடுக்கவும்

### சுகாதாரத்துறை அதிகாரிகளுக்கு அமைச்சர் ரமேஷ் பத்திரண பணிப்புரை

**லோரன்ஸ் செல்வநாயகம்**



அரசாங்க வைத்தியசாலைகளில் எம்.ஆர்.ஐ ஸ்கேன் மற்றும் சி.டி பரிசோதனைகளை உரிய முறையில் தடையின்றி முன்னெடுப்பதற்கு நடவடிக்கை எடுக்குமாறு சுகாதார அமைச்சர் ரமேஷ் பத்திரண சம்பந்தப்பட்ட அதிகாரிகளுக்கு பணிப்புரை வழங்கியுள்ளார்.

அது தொடர்பில் மருத்துவ உபகரணங்கள் மற்றும் சேவை வழங்கள் சபை அதிகாரிகளுடன் சுகாதார அமைச்சர் விஷேட பேச்சு வார்த்தையொன்றை நடத்தியுள்ளார். அதனையடுத்தே இந்த பணிப்புரையை அவர் விடுத்துள்ளதாக சுகாதார அமைச்சு தெரிவித்துள்ளது. அதேவேளை தற்போது இடம்பெறும் அமெரிக்கன் டொலரின் ஏற்ற இறக்கம் காரணமாக மருத்துவ உபகரணங்களை உடனடியாக இறக்குமதி செய்வதில் ஏற்பட்டுள்ள சிக்கல்கள் தொடர்பிலும் இந்த கலந்துரையாடலின் போது கவனம் செலுத்தப்பட்டுள்ளது.

அந்த வகையில் தற்போது செயற்பாட்டில் உள்ள உபகரணங்களை முறையாக பயன்படுத்தி தடையின்றி ஸ்கேன் பரிசோதனைகளை உரிய முறையில் நடத்த நடவடிக்கை எடுக்குமாறும் அவர் சம்பந்தப்பட்ட அதிகாரிகளுக்கு பணிப்புரை விடுத்துள்ளார்.

## ஹம்பாந்தோட்டை ஸாஹிராவில் சின்னம் சூட்டும் நிகழ்வு நாளை

**ஹம்பாந்தோட்டை குறூப் நிருபர்**

ஹம்பாந்தோட்டை ஸாஹிரா தேசிய பாடசாலையின் இவ்வருட மாணவர் தலைவர்களாக தெரிவுசெய்யப்பட்டவர்களுக்கு சின்னம் அணிவிக்கும் நிகழ்வு பாடசாலையின் அதிபர் எம்.எம். ரிஸான் தலைமையில் நாளை (28) செவ்வாய்கிழமை நடைபெறவுள்ளதாக பாடசாலையின் பிரதி அதிபர் எம். சீ. எஸ். பாயிஸா தெரிவித்தார்.

இந்த நிகழ்வில் ஹம்பாந்தோட்டை ஸங்கரீலா ஹோட்டலின் பொது முகாமையாளர் ரெப்ஹான் என் ரஸீன் விசேட அதிதியாக கலந்து சிறப்பிக்கவுள்ளார். பாடசாலையின் பிரதி, உதவி அதிபர்கள், ஆசிரியர்கள் மாணவர்கள், பெற்றோர்கள், பாடசாலை நிர்வாகக் கமிட்டி உறுப்பினர்கள் மற்றும் பாடசாலையின் பழைய மாணவர்களும் கலந்து கொள்ளவுள்ளனர்.

நிகழ்வில் பாடசாலை மாணவர்களின் கலை நிகழ்வுகளும் இடம்பெறவுள்ளதாகவும் பாடசாலையின் பிரதி அதிபர் மேலும் தெரிவித்தார்.

## புத்தாக்க கண்காட்சியில் சாகல ரத்நாயக்க பங்கேற்பு





**பாணந்துறை மத்திய குறூப் நிருபர்**

"Macktiles Masterpieces" புதிய உயர்தர மற்றும் புத்தாக்க கண்காட்சியை ஜனாதிபதியின் சிரேஷ்ட ஆலோசகர் சாகல ரத்நாயக்க பிரதம அதிதியாக கலந்துகொண்டு வைபவரீதியாக நாடாவை வெட்டி திறந்து வைத்தார்.

இந்த கண்காட்சி கொழும்பு மென்டரீனா ஹோட்டலில் அண்மையில் இடம்பெற்றது. பிரதம அதிதி பிரமுகர்கள் சகிதம் கண்காட்சியை பார்வையிட்டதோடு நிறுவன குழுமியத்தின் தலைவர் மில்பர் மக்கீன், முகாமைத்துவ பணிப்பாளர் மிஸ்வர் மக்கீன் உள்ளிட்ட பிரமுகர்கள் பலரும் இந்நிகழ்வில் கலந்துகொண்டு சிறப்பித்தார்கள்.

## கொழும்பு ஸாஹிராக்கல்லூரியில் ஊக்கமளிக்கும் செயலமர்வு

### ஊக்கமளிக்கும் பேச்சாளர் சார்ள்ஸ் தோமஸ் பங்கேற்பு



**ருஸைக் பாரூக்**

பிரபல ஊக்கமளிக்கும் பேச்சாளர் சகோதரர் Charles Thomas அவர்களின் "தருவந்ட ரடக் ரடட ஹெடக்" என்ற தொனிப்பொருளில் கொழும்பு சாஹிரா கல்லூரி நடத்திய ஊக்கமளிக்கும் அமர்வு சாஹிரா கல்லூரி கபூர் மண்டபத்தில் அதிபர் ரிஸ்வி மரிக்கார் தலைமையில் அண்மையில் நடைபெற்றது.

வசீகரிக்கும் கவிதைகள் மற்றும் பாடல்கள் கொண்ட இந்த நிகழ்ச்சி, இன எல்லைகளைக் கடந்து பல்வேறு பாடசாலைகளை ஒன்றிணைத்தது.

மேலும் மாணவர்களிடையே தேசபக்தியின் மதிப்புகளை வளர்ப்பதே இந்த பணியின் நோக்கமாகும்.

றோயல் கல்லூரி, டி.எஸ்.சேனநாயக்கா கல்லூரி, கோதமி பாலிகா வித்தியாலயம், ஹமீத் அல் ஹுசைனி கல்லூரி, தாருஸ் சலாம் கல்லூரி, இந்து மகளிர் கல்லூரி, முஸ்லிம் மகளிர் கல்லூரி, கைரியா பெண்கள் கல்லூரி, ஸாஹிரா கல்லூரி, பாத்திமா முஸ்லிம் பெண்கள் கல்லூரி மற்றும் பல்வேறு பாடசாலைகளைச் சேர்ந்த ஏராளமான மாணவர்கள் கலந்துகொண்டனர். பாடசாலை அதிபர்கள் மற்றும் ஆசிரியர்கள் கலந்து சிறப்பித்தனர்.

நிகழ்வில் கல்லூரியின் சார்பாக சகோதரர் Charles Thomasக்கு அதிபர் ரிஸ்வி மரிக்கார் நினைவுச் சின்னம் வழங்கி வைத்தார்.

சமயப் பிரமுகர்கள், பொலீஸ் அதிகாரிகள், ஸாஹிரா கல்லூரி பிரதி அதிபர் (நிர்வாகம்) மொஹமட் ஷாதுலி, துணை அதிபர் சீனத் இஸ்மாயில், ஒழுங்குமுறை பொறுப்பாசிரியர் முஹ்சீன் ஆரிப், கல்லூரி ஆளுநர் சபை தலைவர் பௌசுல் ஹமீட், செயலாளர் அலவி முக்தார், பழைய மாணவர் சங்க தலைவர் மொஹமட் ஷிராஸ், செயலாளர் நுஸ்ரி மன்சூர், பெற்றோர், ஆசிரியர் சங்க உறுப்பினர்கள், ஆசிரியர்கள், பழைய மாணவர்கள் கலந்துகொண்டனர்.

## சிகிச்சை பெறச்சென்ற பெண் வைத்தியரால் துஷ்பிரயோகம்

**அநுராதபுரம் மேற்கு தினகரன் நிருபர்**

அநுராதபுரம் புளியங்குளம் பகுதியில் அமைந்துள்ள தனியார் வைத்திய நிலையத்திற்கு சிகிச்சைபெறச் சென்ற 29 வயதுடைய பெண் ஒருவரை பாலியல் துஷ்பிரயோகம் செய்ததாக கூறப்படும் வைத்தியர் ஒருவரை அநுராதபுரம் தலைமையக பொலிஸார் (24) கைது செய்துள்ளனர்.

அநுராதபுரம் பிராந்திய சுகாதார சேவைகள் பணிப்பாளர் அலுவலகத்தில் கடமையாற்றும் வைத்தியர் ஒருவரே இவ்வாறு கைது செய்யப்பட்டுள்ளார்.

அநுராதபுரம் புளியங்குளம் பகுதியில் நடாத்திச் செல்லப்படும் தனியார் வைத்திய நிலையத்தில் சிகிச்சை பெறச் சென்ற பெண்ணை பாலியல் துஷ்பிரயோகம் செய்ததாக முன்வைக்கப்பட்ட முறைப்பாட்டின் பிரகாரம் இவர் கைது செய்யப்பட்டுள்ளார்.

## கிராம சேவகர் பதவிக்கு ஆட்சேர்ப்பு கருத்தரங்கு

**புத்தளம் தினகரன் நிருபர்**



கிராம சேவகர் பதவிக்கு புதிதாக ஆட்களை சேர்ப்பதற்கான போட்டிப் பரீட்சை எதிர்வரும் டிசம்பர் மாதம் 02 ம் திகதி, நாடளாவிய ரீதியில் நடைபெறவுள்ளது. இதற்காக விண்ணப்பித்த பரீட்சார்த்திகளை தயார்ப்படுத்தும் நோக்கத்தோடு ஏற்பாடு செய்யப்பட்ட முழுநாள் இலவச கருத்தரங்கு புத்தளம் 'நேவி கைஸ்' அமைப்பின் ஏற்பாட்டில் சனிக்கிழமை (25) நடைபெற்றது.

இந்த கருத்தரங்கை நடாத்த ஸ்ரீலங்கன் மஜ்லிஸ் கத்தார் அமைப்பு நிதி அனுசரணை வழங்கியிருந்தது.

புத்தளம் Science எகடமியில் நடைபெற்ற இந்த இலவச கருத்தரங்கில், அக்கரைப்பற்றை சேர்ந்த உதவிக் கல்விப் பணிப்பாளர் ஏ.ஜீ. பஸ்மில் வளவாளராக கலந்து சிறப்பித்தார்.

சுமார் 90 பேர் வரை கலந்து கொண்ட இந்த கருத்தரங்கில் நுண்ணறிவு மற்றும் மொழித்திறன் ஆகிய பாடங்கள் விரிவாக ஆராயப்பட்டன.

## முஸ்லிம் லீக் சம்மேளனத்தின் அம்பலாந்துவ மகளிர் பிரிவு



அகில இலங்கை முஸ்லிம் லீக் வாலிப முன்னணிகள் சம்மேளனத்தின் களுத்துறை மாவட்ட அம்பலாந்துவ பிரதேச மகளிர் பிரிவின் நிர்வாகிகள் தெரிவு நேற்று (26) மாவட்டத் தலைவர் அதிபர் ரிஸ்மி மஹ்ரூப் தலைமையில் இடம்பெற்றது. இந்நிகழ்வில் முன்னணிகளின் முன்னாள் தேசிய தலைவர்களில் ஒருவரும் பாராளுமன்ற உறுப்பினருமான இம்தியாஸ் பாக்கிர் மாக்கார் பிரதம அதிதியாக கலந்து கொண்டதோடு, முஸ்லிம் சமய கலாசார அலுவல்கள் திணைக்களத்தின் முன்னாள் பணிப்பாளர் அஷ்ஷெய்க் ஏ.பி.எம். அஷ்ரப் (நளீமி) சிறப்பு விருந்தினராக கலந்து கொண்டார். புதிதாக தெரிவு செய்யப்பட்ட நிர்வாக குழு அங்கத்தவர்களை படத்தில் காணலாம்.

## வெலிகம மதுராபுர அஸ்ஸபாவில் பொன் விழா நிகழ்வுகள்

**வெலிகம தினகரன் நிருபர்**

மாறை / வெலிகம மதுராபுர அஸ்ஸபா மகா வித்தியாலத்தின் 50வது வருட பூர்த்தியையொட்டி, (பொன் விழா) பல்வேறு நிகழ்வுகள் அப்பாடசாலையில் இடம்பெற்று வருகின்றன.

அதன் வரிசையில் முதற்கட்டமாக நாளை 28 ம் திகதி செவ்வாய் கிழமை விசேட வழிகாட்டல் நிகழ்ச்சியொன்று ஏற்பாடு செய்யப்பட்டுள்ளது.

இவ்வழிகாட்டல் நிகழ்ச்சி மூன்று கட்டங்களாக இடம்பெறவுள்ளன. இதனை பிரபல வளவாளர் ஸாபிர் முஹம்மது ஹாசிம் நடத்துவார்.

காலை 8.30 மணி முதல் 11.00 மணி வரை மாணவர்களுக்கும் 12.00 மணி முதல் 2.00 மணி வரை ஆசிரியர்களுக்கும் பிற்பகல் 3.30 மணி முதல் 5.30 மணி வரை பெற்றோர்களுக்கும் ஏற்பாடு செய்யப்பட்டுள்ளன. மேலும் 29ம், 30 ம் திகதிகளில் (புதன், வியாழன்) தென் மாகாண தமிழ் மொழி மூல பாடசாலைகளுக்கிடையிலான அறிவுக் களஞ்சிய போட்டிகளும் இடம்பெறவுள்ளன.

இப்பாடசாலையின் பொன் விழா கொண்டாட்டங்கள் டிசம்பர் மாதம் 19ம் திகதி முதல் 24ம் திகதி வரை மிக விமர்சையாக நடைபெறவுள்ளமை குறிப்பிடத்தக்கது.

## மாளிகாவத்தை மஸ்ஜித்கள் சம்மேளன ஏற்பாட்டிலான போட்டிகளின் பரிசளிப்பு





**ருஸைக் பாரூக்**

மாளிகாவத்தை மஸ்ஜித்கள் சம்மேளனம் ஏற்பாடு செய்த மத்ரஸாக்களுக்கி டையிலான போட்டிகளில் வெற்றிபெற்ற மாணவர்களுக்கு பரிசளிப்பு வைபவம் கொழும்பு மாளிகாவத்தை பிரதீபா மண்டபத்தில் சம்மேளனத்தின் தலைவர் அஷ்ஷேக் ஷியாம் அஸார் தலைமையில் அண்மையில் நடைபெற்றது.

மாளிகாவத்தை ஜும்ஆப் பள்ளிவாசல் பிரதித் தலைவர் அல் ஹாஜ். ஏ.எச்.எம். மாஹிர் பிரதம அதிதியாக கலந்து கொண்டு வெற்றி பெற்றவர்களுக்கு சான்றிதழ் மற்றும் பணப்பரிசில்களை வழங்கினார்.

இப்போட்டியில் பத்து மத்ரஸா மாணவ, மாணவிகள் பங்குபற்றினர்.

மேலும் ரஸா ஒடோ பிரைவேட் லிமிடெட் தலைவர் எம். றஸ்னி மற்றும் கொழும்பு மாவட்ட மஸ்ஜித் சம்மேளனத்தின் தலைவர் அல் ஹாஜ் ஷிராஸ் நூர்தீன் ஆகியோர் கௌரவ அதிதிகளாக கலந்துகொண்டனர்.

பாராளுமன்ற உறுப்பினர் ஏ.எச்.எம். பௌஸி , மாளிகாவத்தை ஜும்ஆ பள்ளிவாசல் டிரஸ்டி எம். அசார், மஸ்ஜிதுஸ் ஸலாம் ஜும்ஆ பள்ளிவாசல் தலைவர் ஜௌபர் ஜமால்தீன், மஸ்ஜித்கள் சம்மேளன செயலாளர் எம்.டி.எம். இல்யாஸ், பொருளாளர் பர்ஹாத் சித்தீக், உப தலைவர் எம்.இசட்.எம். யாசீர் மற்றும் உறுப்பினர்கள், பள்ளிவாசல் நிர்வாக சபை உறுப்பினர்கள் , பெற்றோர்கள் மற்றும் மாணவர்களும் கலந்துகொண்டனர்.

# பெரும்போக விவசாயிகளுக்கு MOP உரம் 9,000 ரூபாவுக்கு

## ரூ. 19,000 விலிருந்து குறைத்து வழங்க அமைச்சரவை அனுமதி

**லோரன்ஸ் செல்வநாயகம்**

இம்முறை பெரும் போக நெற்பயிர்ச் செய்கையில் ஈடுபடும் விவசாயிகளுக்கு குறைந்த விலையில் உரம் வழங்கப்படும் என்றும் அந்த வகையில் பொட்டாசியம் முறியேற்று உரமான எம். ஓ.பி. உரத்தை 9,000 ரூபா மானிய விலைக்குப் பெற்றுக் கொடுக்க தீர்மானித்துள்ளதாகவும் விவசாய மற்றும் பெருந்தோட்டக் கைத்தொழில் அமைச்சர் மஹிந்த அமரவீர தெரிவித்துள்ளார்.

மேற்படி உரம் ஒரு மூடை தற்போது சந்தையில் 19,000 ரூபாவுக்கு விற்பனை செய்யப்படுவதுடன் விலைக் குறைப்பு தொடர்பில் தாம் அமைச்சரவைக்கு சமர்ப்பித்த பத்திரத்திற்கு அமைச்சரவை அனுமதி வழங்கியுள்ளதாகவும் தெரிவித்த அமைச்சர், அந்த வகையில் இம்முறை பெரும்போக விவசாயிகளுக்காக 9 ஆயிரம் ரூபாவுக்கு அதனை வழங்கவுள்ளதாகவும் தெரிவித்துள்ளார்



அரசாங்கத்திற்குச் சொந்தமான இரண்டு உர நிறுவனங்கள் மூலம் விவசாயிகளுக்கு இந்த எம்.ஓ.பி உரத்தை பெற்றுக் கொடுக்க வுள்ளதுடன் அதனை 9,000 ரூபா என்ற மானிய விலைக்கு பெற்றுக் கொடுக்க நடவடிக்கை எடுத்துள்ளதாகவும் அமைச்சர் தெரிவித்துள்ளார்.

அதேவேளை, சிறு போகத்தில் நெற்பயிர் செய்கை பாதிக்கப்பட்ட விவசாயிகளுக்கு நேற்றைய தினம் 1000 லட்சம் ரூபா அரசாங்கத்தால் வழங்கப்பட்டுள்ளது என்பதை குறிப்பிட்டுள்ள அமைச்சர், நேற்றைய தினம் வளவ நெற் பயிர் செய்கை வலயத்திலுள்ள விவசாயிகளுக்கு அந்த நட்டஈடு வழங்கப்பட்டதாகவும் அவர் தெரிவித்துள்ளார்.

# சீன ஜனாதிபதி ஆட்சி தொடர்பான மொழிபெயர்ப்பு புத்தகம் வெளியீடு

## அமைச்சர் பந்துல குணவர்த்தன பங்கேற்பு



சீன வெளிநாட்டு மொழிகள் பதிப்பகத்தால் சரசவி வெளியீடாக வெளியிடப்பட்ட "Xi Jinping The Governance of China (volume 1)" (President of China) என்ற மொழிபெயர்ப்பு புத்தகத்தின் வெளியீடு நெடுஞ்சாலைகள் மற்றும் வெகுஜன ஊடக அமைச்சர் பந்துல குணவர்தன மற்றும் சீனாவுக்கான இலங்கைத் தூதுவர் கீ ஷெங்கோன் ஆகியோர் தலைமையில் கொழும்பிலுள்ள இலங்கை மன்ற கல்லூரியில் நடைபெற்றது.

இந்நூலின் முதற் பிரதியை அமைச்சர் பந்துல குணவர்தனவிடம் சரசவி பதிப்பக நிறுவனத்தின் தலைவரால் வழங்கி வைக்கப்பட்டது.

இந்நிகழ்வில் உரையாற்றிய அமைச்சர் பந்துல குணவர்தன,

'சிங்கள மொழி பேசும், எழுதும் மக்களுக்கான விசேடப் பணியாக ஷி ஜின்பிங்கின் ஆட்சி நிர்வாகம் பற்றிய இவ்வாறான புத்தகத்தை மொழிபெயர்த்து சரசவி பதிப்பக நிறுவனத்தினூடாக விநியோகிக்க பங்களிப்புச் செய்த அனைவருக்கும் அரசாங்கத்தின் சார்பாகவும் சீனாவின் நண்பன் என்ற வகையிலும் எனது அன்பான வாழ்த்துக்களையும் நன்றியையும் தெரிவித்துக் கொள்கிறேன்.

தற்காலத்தில் சீன ஆட்சி நிர்வாகம் பற்றிய படைப்பானது படித்து முடிக்க முடியாத ஒரு ஆழமான படைப்பாகவே பார்க்கிறேன். சீன சோசலிச மக்கள் குடியரசை விட மக்களுக்கு சிறந்த சேவை செய்ய வேண்டும் என்ற நோக்கில் துணிச்சலாக பல தீவிர மாற்றங்களை உலகிற்கு அறிமுகப்படுத்திய ஆட்சி.

உலகில் இரண்டு பொருளாதார முறைகள் காணப்படும்போது மத்திய திட்டமிடப்பட்ட பொருளாதார அமைப்பை அடிப்படையாகக் கொண்ட கம்யூனிசத் தத்துவம் இருந்தபோதிலும், உலகை முதலாளித்துவ சந்தைப் பொருளாதாரமாக மாற்றுவதில் சீனா முன்னோடியாக இருந்தது.

ஷி ஜின்பிங் ஆட்சியானது இலங்கை சமூகத்திற்கு மிகப்பெரிய பாடத்தை கற்பிக்கிறது. நாங்கள் தொடர்ந்து சோசலிச கொள்கைகளாக கருதி, எந்த மாற்றங்களையும் செய்ய அனுமதிக்கவில்லை. ஒரு நாட்டின் உற்பத்தி, வருமானம், வேலை வாய்ப்பு, விலை நிர்ணயம், கொடுப்பனவு இருப்பு, சேமிப்பு மற்றும் முதலீடு போன்ற மேக்ரோ பொருளாதார மாற்றங்களை உருவாக்க சீன ஆட்சி உலகிற்கு பல புதிய பாடங்களை கற்பித்துள்ளது. எனக்கு அது பற்றிய கல்விப்புரிதல் உள்ளது.

1952 இல் ஏற்படுத்தப்பட்ட சீனா இலங்கை 06

கிரிக்கெட் நிறுவன சிக்கல்கள், தடை தொடர்பில் பேச்சு;

# சர்வதேச கிரிக்கெட் சபைத் தலைவர் இலங்கை வருகை

**லோரன்ஸ் செல்வநாயகம்**

இலங்கை கிரிக்கெட் நிறுவனம் தொடர்பில் எழுந்துள்ள சிக்கல்கள், முன்வைக்கப்பட்டுள்ள குற்றச்சாட்டுக்கள் மற்றும் விதிக்கப்பட்டுள்ள தடை ஆகியவை தொடர்பில் விசாரணைகளை மேற்கொள்வதற்காக இலங்கைக்கு வருகைதந்து ஜனாதிபதி ரணில் விக்கிரமசிங்கவுடன் பேச்சுவார்த்தை நடத்தவுள்ளதாக சர்வதேச கிரிக்கெட் கவுன்சிலின் தலைவர் கிரேக் பாக்லே தெரிவித்துள்ளார்.

விரைவில் தாம் இலங்கைக்கு வருகை தந்து ஜனாதிபதியுடன் பேச்சுவார்த்தை நடத்தி நிலவும் சிக்கல்களுக்கு தீர்வுகாண நடவடிக்கை எடுக்கவுள்ளதாக அவர் ஜனாதிபதிக்கு அறிவித்துள்ளதாகவும் அரசாங்க உயிர்மட்ட வட்டாரங்கள் தெரிவித்துள்ளன.

ஜனாதிபதி ரணில் விக்கிரமசிங்கவினால் இலங்கை கிரிக்கெட் தடை தொடர்பில் சர்வதேச கிரிக்கெட் சபையின் தலைவருக்கு அனுப்பியுள்ள ஈமெயில் செய்திக்கு பதிலளிக்கும் வகையிலேயே அவர் மேற்படி அறிவித்தலை ஜனாதிபதிக்கு அனுப்பியுள்ளதாகவும் அந்த வட்டாரங்கள் தெரிவிக்கின்றன.

சர்வதேச கிரிக்கெட் சபையின் நிறைவேற்றுக் குழு அதிகாரிகள் இருவரினது கடும் எதிர்ப்புக்கு மத்தியிலேயே இலங்கைக்கான கிரிக்கெட் தடை நீடிக்கப்பட்டுள்ளதாகவும் ஏனைய அதிகாரிகள் உதவி வழங்குவதற்கு விருப்பத்துடன் உள்ளதாகவும் தெரிவிக்கப்பட்டுள்ளது.

இலங்கை சனநாயக சோஷலிசக் குடியரசு

திறைசேரி உண்டியல்கள் வழங்கல்

**ரூ. 160,000 மில்லியனுக்கான திறைசேரி உண்டியல்கள் 2023 நவம்பர் 29ஆம் திகதி ஏலவிற்பனையினூடாக வழங்கப்படும்**

திறைசேரி உண்டியல் வழங்கல்களின் விபரங்கள் பின்வருமாறு:

| முதிர்வுக் காலம் | 91 நாட்கள் | 182 நாட்கள் | 364 நாட்கள் | மொத்தம் |
|---|---|---|---|---|
| ஐஎஸ்ஐஎன்* | LKA09124C011 | LKA18224E311 | LKA36424K296 | |
| முன்வைக்கப்பட்ட தொகை (ரூ. மில்.) | 60,000 | 70,000 | 30,000 | 160,000 |

ஏல விற்பனைத் திகதி : 2023 நவம்பர் 29
தீர்ப்பனவுத் திகதி : 2023 டிசெம்பர் 01
வழங்கப்படும் திகதி : 2023 டிசெம்பர் 01
விலைக்குறிப்பீடு சமர்ப்பிக்கப்படுவதற்கான இறுதித் திகதியும் நேரமும் : 2023 நவம்பர் புதன்கிழமை மு.ப. 11.00
விலைக்குறிப்பீட்டின் ஆகக்குறைந்த தொகை : ஐந்து மில்லியன் ரூபாய்கள் (ரூ.5,000,000/-) அதிலிருந்து ஒரு மில்லியன் ரூபாய்களின் (ரூ.1,000,000/-) பெருக்கங்களிலிருந்து

அரசாங்கப் பிணையங்களிலுள்ள முதனிலை வணிகர்களிடமிருந்து விலைக்குறிப்பீடுகள் கோரப்படுகின்றன. இலங்கை மத்திய வங்கியால் வழங்கப்பட்ட இலத்திரனியல் விலைக்குறிப்பீட்டு வசதியூடாக மட்டுமே விலைக்குறிப்பீடுகள் அனுப்பப்பட வேண்டும். முதலீட்டாளர்களாக வரக்கூடியவர்கள் (பொதுமக்கள் அல்லது எவரேனும் வேறு முதலீட்டாளர்கள்) மேலே குறிப்பிட்டவாறு விலைக் குறீப்பீடொன்றின் குறைந்தபட்ச தொகையுடன் இணங்கியொழுகி பின்வரும் முதனிலை வணிகர்களூடாக ஏலத்திற்கு விலைக் குறிப்பீடுகளைச் சமர்ப்பிக்கலாம்.

**முதனிலை வணிகர்களின் பட்டியல்**

| | |
|---|---|
| அக்குயிட்டி செக்குரிட்டீஸ் லிமிடட் | 2206297 |
| இலங்கை வங்கி | 2541938 |
| கெப்பிட்டல் எலையன்ஸ் பிஎல்சி | 2317777 |
| கொமர்ஷல் பாங்க் ஒவ் சிலோன் | 2332319 |
| பெஸ்ட் கெப்பிட்டல் ட்ரெஸரீஸ் பிஎல்சி | 2639883 |
| என்.எஸ்.பீ பண்ட் மனேஜ்மன்ற் கம்பனி லிமிடட் | 2425010 |
| மக்கள் வங்கி | 2206783 |
| சம்பத் வங்கி பிஎல்சி | 2305842 |
| செலான் வங்கி பிஎல்சி | 2456340 |
| வெல்த்றஸ்ற் செக்குரிட்டீஸ் லிமிடட் | 2675096 |

சந்தை நிலைமைகளுக்கமைய இலங்கை மத்திய வங்கி ஏலங்களில் முதிர்வுகளுக்கிடையிலான தொகைகளை மீள் ஒதுக்குச் செய்வதன் மூலம் ஒவ்வொரு முதிர்வுக்கும் முன்வைக்கப்பட்ட தொகைகளிலும் பார்க்க உயர்ந்த அல்லது குறைந்த தொகையினை, முன்வைக்கப்படுகின்ற மொத்த தொகையினை விஞ்சாது ஏற்றுக்கொள்ளக்கூடும்.

முதலீட்டாளர்களாக வரக்கூடியவர்கள் இரண்டாந்தரச் சந்தையில் முதனிலை வணிகர்களிடமிருந்தும் அல்லது ஏதேனும் வேறு உரிமம்பெற்ற வங்கியிடமிருந்தும் திறைசேரி உண்டியல்களை கொள்ளவனவு செய்யலாம்.

* பன்னாட்டுப் பிணையங்கள் அடையாள இலக்கம்

**என். டி. வை. சி. வீரசிங்க**
**பொதுப்படுகடனின் கண்காணிப்பாளர்/பதிவாளர்**

*வழங்கும் அலுவலகம்:*
**பொதுப்படுகடன் திணைக்களம்,**
**இலங்கை மத்திய வங்கி,**
**30, சனாதிபதி மாவத்தை,**
**கொழும்பு-1.**
**தொலைபேசி: +94112477011, தொலைநகல்: +94112477687**
**வெப்தளம்: www.cbsl.gov.lk**

லக்விஜய அனல் மின் உற்பத்தி நிலைய

# மூன்றாவது மின் பிறப்பாக்கி தேசிய மின் கட்டமைப்புடன்

## எதிர்வரும் 29ஆம் திகதி இணைக்க ஏற்பாடு

பராமரிப்பு பணிகளுக்காக செயலிழக்க செய்யப்பட்ட நுரைச்சோலை லக்விஜய அனல் மின்னுற்பத்தி நிலையத்தின் மூன்றாவது மின்பிறப்பாக்கியை எதிர்வரும் 29 ஆம் திகதி தேசிய மின் கட்டமைப்புடன் இணைக்கவுள்ளதாக இலங்கை மின்சார சபை தெரிவித்துள்ளது.

இயந்திரக்கோளாறினால் செயலிழக்க செய்யப்பட்ட நுரைச்சோலை அனல் மின்னுற்பத்தி நிலையத்தின் இரண்டாவது மின்பிறப்பாக்கியை அடுத்த மாதம் 16 ஆம் திகதி தேசிய மின் கட்டமைப்புடன் இணைப்பதற்கான இயலுமை காணப்படுவதாக இலங்கை மின்சார சபையின் ஊடகப்பேச்சாளர் பொறியியலாளர் நோயல் பிரியந்த தெரிவித்தார்.



06

# உயிரிழந்த தமிழ் பொலிஸ் அதிகாரிக்கு பதவி உயர்வு

## ஊடக பேச்சாளர் தெரிவிப்பு



ஜாஎல பகுதியில் சந்தேக நபரை துரத்திச் சென்றபோது உயிரிழந்த தமிழ் பொலிஸ் உத்தியோகத்தருக்கு பொலிஸ் சார்ஜன்ட் பதவி உயர்வு கொடுக்கப்பட்டுள்ளதாக பொலிஸ் பேச்சாளர் தெரிவித்துள்ளார்.

கடந்த வியாழக்கிழமை (23) ஜாஎல பகுதியில் கைவிலங்குடன் நீரோடையில் குதித்து தப்பிச் செல்ல முயன்ற சந்தேக நபரை துரத்திச் சென்றபோது, பொலிஸ் உத்தியோகஸ்தர் ஒருவர் நீரில் மூழ்கி உயிரிழந்தார்.

சம்பவத்தில் உயிரிழந்த பொலிஸ் உத்தியோகத்தரான கிருஷ்ணமூர்த்தி பிரதாபன், 06

மீட்கப்படாத தங்க ஆபரணங்கள் மீதான ஏல விற்பனை

| கிளை | அடகு வைக்கப்பட்ட கால வரையறை | ஏலம் விடப்படும் இடம் மற்றும் திகதி |
|---|---|---|
| மொனராகலை, பதுளை, சியம்பலாண்டுவை, புத்தலை, பண்டாரவளை, ருவான்வெல்லை, வரக்காப்பொலை, தெரணியகலை, இரத்தினபுரி, எம்பிலிபிட்டி. | 31.08.2022 | 07.12.2023 (வியாழன்) SDB வங்கி, இல.25, H.K.T கட்டிடம், பள்ளேகம, எம்பிலிப்பிட்டி. |

ஏலத்தில் விடும் நிகழ்வு மு.ப 10.30 மணிக்கு ஆரம்பமாகும்

(இந்நிகழ்வை இரத்து செய்வதற்கு, ஒத்தி வைப்பதற்கு அல்லது ஏலத்தில் விடும் நிகழ்வில் ஏதேனும் மாற்றங்கள் செய்வதற்கு மற்றும் ஏலம் இடம்பெறும் இடத்தில ஏதேனும் மாற்றங்களை முன்னறிவித்தல் இன்றி மேற்கொள்வதற்குரிய சகல உரிமையும் வங்கியையே சாரும்.)

முகாமையாளர் அடகு
இல 12 எட்மன்டன் வீதி, கிருலப்பனை, கொழும்பு 06 ,இலங்கை.
தொலைபேசி 011 5411 411 / 011 283 2500

SDB வங்கி

கொலைச் சம்பவமொன்றில் தேடப்பட்டவர்

# நான்கு வருடங்களின் பின் நேற்று கைது

## தெபுவன பகுதியில் சம்பவம்

**லோரன்ஸ் செல்வநாயகம்**

மாணிக்கக்கல் அகழ்வு செயற்பாடுகளின் போது நபரொருவரை கூரிய ஆயுதத்தால் தாக்கி படுகொலை இதுவரை காலம் மறைந்துவாழ்ந்துவந்த நபரை நான்கு வருடங்களுக்குன் பின்னர் நேற்று கைதுசெய்துள்ளதாக பொலிஸார் தெரிவித்துள்ளனர்.

மேற்படி குற்றவாளியான நபர் கடந்த நான்கு வருடங்கள் கட்டாடி போன்று வேடமணிந்து தலைமறைவாக வாழ்ந்து வந்துள்ளதாகவும் அவர் தெபுவன கோட்டையாஹேன பிரதேசத்தைச் சேர்ந்த 30 வயதுடையவரென்றும் பொலிஸார் தெரிவித்துள்ளனர். மேற்படி சந்தேகநபர் நான்கு வருடங்களுக்கு முன்னர் அயகம பொலிஸ் பிரதேசத்தில் மாணிக்கக்கல் அகழ்வு நடவடிக்கைகளின் போது மற்றொரு நபருடன் ஏற்பட்ட தர்க்கம் உக்கிரமடைந்ததில் அந்த நபரை படுகொலைசெய்துள்ளார் என பொலிஸார் தெரிவித்துள்ளனர்.

குறித்த நபர் மீது குற்றம் சாட்டப்பட்டு இரத்தினபுரி மேல் நீதிமன்றத்தில் வழக்கு விசாரணைகள் முன்னெடுக்கப்பட்ட நிலையிலேயே அவர் நீதிமன்றத்தில் ஆஜராகாமல் தலைமறைவாக வாழ்ந்து வந்துள்ளதாகவும் பொலிஸார் தெரிவித்துள்ளனர்.

# பூஸ்ஸ சிறையில் 23 CCTV கமராக்களை உடைத்த கைதி

## உயரதிகாரிகளால் விசாரணைகள் ஆரம்பம்!



பூஸ்ஸ சிறைச்சாலையில் பொருத்தப்பட்டிருந்த 23 சிசிரிவி கமராக்களை கைதி ஒருவர் உடைத்தமை தொடர்பில் விசாரணைகள் ஆரம்பிக்கப்பட்டுள்ளதாக சிறைச்சாலைகள் ஆணையாளர் துஷார உபுல்தெனிய தெரிவித்துள்ளார்.

அண்மையில் அங்குனுகொலபெலஸ்ஸ சிறைச்சாலையிலிருந்து பூஸ்ஸ சிறைச்சாலைக்கு மாற்றப்பட்ட கைதி ஒருவர் உடற்பயிற்சிக்காக வெளியே அழைத்துச் செல்ல கதவுகள் திறக்கப்பட்டபோது சிறைச்சாலையின் சுவரில் ஏறியுள்ளார். அதன்போது, அங்கு பொருத்தப்பட்டிருந்த 23 பாதுகாப்பு கமராக்களை அவர் உடைத்துள்ளதாக தெரிவிக்கப்படுகிறது.

இதன் பின்னரே, சிறைச்சாலை அதிகாரிகள் தலையிட்டு, கைதியின் செயற்பாடுகளை கட்டுப்பாட்டுக்குள் கொண்டு வந்துள்ளதாக தெரியவருகிறது.

பின்னர் சிறைச்சாலை அத்தியட்சகரின் விசாரணையின் பின்னர் இரண்டு சிறைச்சாலை அதிகாரிகளும் சிறை கண்காணிப்பாளர் ஒருவரும் பணி இடைநிறுத்தம் செய்யப்பட்டுள்ளதாக தெரிவிக்கப்படுகின்றது.

இந்தநிலையில், குறித்த கைதியை கட்டுப்படுத்த முடியாமல் போனமையே இதற்கு பிரதான காரணமாகும் என சிறைச்சாலைகள் ஆணையாளர் துஷார உபுல்தெனிய தெரிவித்துள்ளார். 06






தினகரன்
THINAKARAN

35, டி. ஆர். விஜயவர்தன மாவத்தை, கொழும்பு - 10

தபால் பெட்டி இலக்கம் : 834
தொலைபேசி இலக்கம் : 2429429, 2429272, 2429279
பெக்ஸ் : 2429270, 2429329, விளம்பர முகாமையாளர் : 2429321

சோபகிருது வருடம் கார்த்திகை மாதம் 11ஆம் நாள் திங்கட்கிழமை
ஹிஜ்ரி வருடம் 1445 ஜுமாதல் ஊலா பிறை 12

### குறள் தரும் சிந்தனை



இன்மையின் இன்னாதது யாதெனின் இன்மையின்
இன்மையே இன்னாதது

வறுமைத் துன்பத்துக்கு உவமையாகக் காட்டுவதற்கு வறுமைத் துன்பத்தைத் தவிர வேறு துன்பம் எதுவுமில்லை.

# மின்தேவையை நிறைவேற்றும் புதிய மின்னுற்பத்தி திட்டங்கள்

இலங்கையில் மின்சாரத் தேவை நாளுக்கு நாள் அதிகரித்துச் செல்கிறது. அத்தேவையை நிறைவேற்றி வைப்பதற்கு ஏற்ப நடவடிக்கைகள் முன்னெடுக்கப்பட வேண்டும். அதன் முக்கியத்துவமும் தேவையும் பெரிதும் உணரப்பட்டுள்ளது.

இன்றைய காலகட்டத்தில் மின்சாரமானது, அத்தியாவசியத் தேவைகளில் ஒன்றாக விளங்குகிறது. குறிப்பாக வீட்டு பாவனை முதல் கைத்தொழில் துறை உட்பட அனைத்துக்கும் பயன்படக்கூடிய ஒன்றாக விளங்குகிறது மின்சக்தி.

அதனால் இந்நாட்டின் மின்தேவையை நிறைவேற்றுவதற்கு நீர், நிலக்கரி, டீசல், காற்றாலை என்பவற்றைப் பயன்படுத்தி உற்பத்தி செய்யப்படும் மின்சக்தி பயன்படுத்தப்படுகிறது. இருந்தபோதிலும் மின்தேவை அதிகரித்த வண்ணமே உள்ளது.

இதன் விளைவாகவே நாட்டின் மின்தேவையை நிறைவேற்றவென தனியார் துறையினரிடமிருந்து அதிக விலைக்கு மின்சக்தியை கொள்வனவு செய்து குறைந்த விலையில் பாவனையாளருக்கு அதனை வழங்க வேண்டிய நிலை ஏற்பட்டிருக்கிறது.

இலங்கை மின்சார சபை நஷ்டத்திற்கு உள்ளாக இதுவும் ஒரு முக்கிய காரணியாகும். நாட்டினதும் மின்சக்தி பாவனையாளர்களதும் மின் தேவையை நிறைவேற்றவே அரசாங்கம் இந்நடவடிக்கையை முன்னெடுக்கிறது.

அதன் விளைவாக மின்சார சபை முகம் கொடுக்கும் நஷ்டத்தை குறைத்து கட்டுப்படுத்தும் நோக்கில் மின்கட்டணங்கள் அதிகரிக்கப்படுகின்றன. அதனால் சாதாரண மக்களுக்கு ஏற்படும் பொருளாதார சுமைகளைக் குறைக்கும் வகையிலான நிவாரணத் திட்டங்களும் முன்னெடுக்கப்படவே செய்கின்றன.

இந்நாட்டில் மின்சக்தியை உற்பத்தி செய்து கொள்ளப் பயன்படுத்தக் கூடிய நீர், காற்றாலை, சூரிய சக்தி, கடலலை என்பன இயற்கையாகவே தாராளமாகக் கிடைக்கப் பெறுகின்றன. இந்த வளங்களை ஒழுங்குமுறையாகவும் சீராகவும் பயன்படுத்தி மின் உற்பத்தியை மேற்கொண்டால் இந்நாட்டின் மின்தேவையை எவ்வித குறைபாடுகளும் இன்றி தீர்த்து வைக்க முடியும். அதுவே மின்துறை நிபுணர்களின் கருத்தாகும்.

இந்நிலையில் நாட்டின் மின்தேவையைக் குறைவின்றி தொடராக வழங்க வழிவகை செய்யும் வகையில் மேலும் ஆறு புதிய மின்திட்டங்கள் அடுத்த மாதம் ஆரம்பிக்கப்பட உள்ளன. இது தொடர்பில் மின்சக்தி, வலுசக்தி அமைச்சர் கஞ்சன விஜேசேகர 2024 ஆம் ஆண்டுக்கான வரவு செலவுத்திட்டத்தின் மின்சக்தி அமைச்சுக்கான நிதியொதுக்கீட்டு குழுநிலை விவாதத்தில் உரையாற்றும் போது, 'மன்னார் காற்றாலை மின்னுற்பத்தி திட்டம், யாழ், பூநகரி மின்னுற்பத்தி திட்டம், சம்பூர் அனல் மின்னுற்பத்தி திட்டம், மட்டக்களப்பு ஓட்டமாவடி மின்னுற்பத்தி திட்டம் உள்ளிட்ட ஆறு மின்னுற்பத்தி திட்டங்கள் அடுத்த மாதம் தொடக்கி வைக்கப்படும்' என்று குறிப்பிட்டார்.

'நாட்டின் மின் தேவைக்கு ஏற்ப மின்னுற்பத்தி நிலையங்கள் ஏற்கனவே அமைக்கப்பட்டிருந்தால் இன்றைய நிலைமை ஏற்பட்டிருக்காது' என்பதையும் அவர் சுட்டிக்காட்டத் தவறவில்லை.

அதுதான் உண்மை. இந்நாட்டில் மின்னுற்பத்திக்கு பயன்படுத்தக்கூடிய இயற்கை வளங்களை உரிய முறையில் பயன்படுத்தி இருந்தால் மின்தேவையை இடையூறுகள் இன்றி நிறைவேற்ற முடிந்திருக்கும்.

நாட்டின் மின் தேவையயை நிறைவேற்றும் வகையில் புதிய மின் திட்டங்களை ஆரம்பிக்க முன்னெடுக்கப்பட்டுள்ள வேலைத்திட்டங்கள் வரவேற்கப்பட வேண்டியவையாகும். அதுவே நாட்டின் முன்னேற்றத்தில் உண்மையான அக்கரை கொண்டுள்ளவர்களின் கருத்து ஆகும்.

இன்றைய நவீன அறிவியல் யுகத்தில் அபிவிருத்திக்கு மின்சக்தி அதிக பங்களிப்பை அளிக்கக் கூடியதாகும். இது உலகளாவிய ரீதியில் ஏற்றுக் கொள்ளப்பட்டுள்ள உண்மையும் கூட. அதன் காரணத்தினால் மின்சக்தியின் முக்கியத்துவத்தையும் தேவையையும் உணர்ந்து செயற்பட வேண்டிய தேவை பரவலாக எழுந்துள்ளது.

மின்தேவை நாளுக்கு நாள் அதிகரித்துச் செல்லும் போது அதனை இடையூறுகள் இன்றி 24 மணித்தியாலமும் தொடராக வழங்குவதை உறுதிப்படுத்த வேண்டிய அவசியமும் நிலவவே செய்கிறது. அதனால் புதிய மின்னுற்பத்தி நிலையங்களின் தேவை இன்றியமையாததாகும்.

பொருளாதார அபிவிருத்தியை இலக்காகக் கொண்டுள்ள இந்நாட்டின் மின்தேவையை இடையூறுகள் இன்றி தொடராக வழங்க வேண்டும். அது நியாயமான கட்டணத்தில் கிடைக்கப்பெறவும் வேண்டும் என்ற எதிர்பார்ப்பும் மக்களிடம் உள்ளது.

ஆகவே நாட்டின் மின்தேவையை நிறைவேற்றக் கூடியதாக புதிய மின்திட்டங்கள் அமையும் என்ற நம்பிக்கையும் அவை தமக்கு நிவாரணங்கள் கிடைக்கப்பெற வழிவகுக்கும் என்ற எதிர்பார்ப்பும் மக்களிடம் காணப்படுகின்றன. அதற்கு ஏற்ப இத்திட்டங்கள் வழிவகை செய்ய வேண்டும் என்பதே அனைத்துத் தரப்பினரதும் விருப்பமாகும்.

editor.tkn@lakehouse.lk

# பாடசாலை இடைவிலகலுக்கு விரைவில் முடிவு காணப்பட வேண்டியது அவசியம்



சிறுவர்கள் 16 வயது வரை கட்டாயக்கல்வி கற்பது அவசியம் ஆகும். இக்காலத்தில் பல்வேறு காரணங்களுக்காக பலர் பாடசாலைக் கல்வியை இடைநடுவில் விட்டுவிடுகின்றனர். இதற்காக பல்வேறு காரணிகளை முன்வைக்கின்றனர். வறுமை, பொருளாதார நெருக்கடி, பொருட்களின் விலையேற்றம், குடும்பத்தை நடத்துவதற்கான நாளாந்த வருமானம் கிடைக்காமை, போக்குவரத்து கட்டணம் அதிகரிப்பு எரிபொருள் விலையேற்றம், பிரத்தியோக வகுப்பிற்கான மோகம் அதிகரித்து உள்ளமையும், கட்டண அதிகரிப்பு என பல்வேறு காரணங்கள் அனைத்தும் ஒன்றுடன் ஒன்று தொடர்புபட்டு வலைப்பின்னல் போல் உள்ளன.

பெண் தலைமை தாங்கும் குடும்பங்கள், அதிக குடும்ப அங்கத்தவர்கள் உள்ள குடும்பங்கள், வெளிநாட்டில் பணிபுரியும் தாய் தந்தையர் உள்ள குடும்பங்கள் என வறுமைக் கோட்டின் கீழ் உள்ள குடும்பங்கள், பெற்றோர் நிரந்தர நோயாளியாய் உள்ள குடும்பங்களில் உள்ள பிள்ளைகள் போன்றோர் இவ்வாறான பாடசாலை இடைவிலகல்களில் அதிகமாய் உள்ளனர். படித்து தொழில்புரிந்து எதிர்காலத்தில் வருமானம் ஈட்டுவதை விட விடியும் ஒருபொழுதை கழிப்பதற்கான வழிகளை இவர்கள் தேடுகின்றனர். இதனால் தொழிலில் ஈடுபடுவதில் ஆர்வமாய் உள்ளனர். பருவகால தொழிலாக இருந்தாலும் சரி, நிரந்தரமான வேலைகளாக இருந்தாலும் சரி தமக்கு ஏற்ற வேலைகளில் ஈடுபட்டு தமது குடும்பத்தில் வாழ்க்கையை நடாத்த தங்களால் ஆன பங்களிப்பை வழங்கி வழங்குகின்றனர். இதன்போது தொழில் வழங்குனர்கள் தமக்கு சாதகமாக நிலைமையை பயன்படுத்தி சுரண்டல்களில் ஈடுபடுவதும் உண்டு

இவற்றைவிட தற்காலத்தில் தொழில்நுட்பத்தின் வளர்ச்சியின் பயனாக தொலைபேசி, இணையம், ஈமெயில், சினிமா, முகநூல் என சமுகவலைத்தளங்களில் மக்கள் மூழ்கியுள்ளனர். ண்பர் வட்டங்களின் மூலமான போதைப் பாவனையும் பாடசாலை இடைவிலகல்களுக்கு காரணமாக அமைகிறது. யௌவன பருவமாற்றங்களும் இதற்கு உறுதுணையாய் காணப்படுகின்றன. தரம் 8_11 வரையான காலப்பகுதிகளிலே இவ்வாறான இடைவிலகல்கள் அதிகரித்துள்ளன. இக்காலப்பகுதிகளில் இவர்களை பாடசாலைகளில் இணைக்கும்போது பல்வேறு நடைமுறைச் சிக்கல்கள் ஏற்படுகின்றன. இவ்வாறான தன்மைகள் ஆரம்பத்தில் கண்டறியப்பட்டால் மாத்திரமே இடைவிலகல்களை குறைத்து பாடசாலை கல்வியை சிறப்பாக வழங்க முடியும்.

தரம் 8 இன் பின்னரான காலப்பகுதி சிறுவர்களின் கல்வி வளர்ச்சியில் முக்கிய காலமாகும். இக்காலத்தில் இவர்களின் உடல் மாற்றம் மனமாற்றமும் ஏற்படுகிறது. இக்காலத்தில் பாடசாலை ஆசிரியர்கள் நடந்து கொள்ளும்விதமே கல்வி கற்பதா?அல்லது இடைவிலகிச்செல்வதா? என்பதை தோற்றுவிக்கிறது. பிள்ளைகளை தரம் குறைத்தல், அதிகமாக தண்டித்தல், மனம் நோகும்படி ஏசுதல், கிண்டல் செய்தல், அனைவர் மத்தியிலும் வைத்து மனம் பாதிக்கும்படி பட்டப்பெயர் சூட்டி அழைத்தல் போன்ற காரணங்களாலும் குடும்ப நிலை காரணமாக தாமதமாக பாடசாலை செல்லல், பாதணி இன்றி பாடசாலை செல்லல் என்பவற்றுக்காக உயரிய தண்டனை வழங்கல், ஏசுதல் போன்ற செயற்பாடுகளாலும், மெல்லக்கற்கும் மாணவர்களைப் பற்றியும் அக்கறை செலுத்தாது பாடவிதானங்களை முடிப்பதில் ஆர்வம் காட்டுவதனாலும் இத்தகைய தன்மை அதிகரித்து காணப்படுகிறது.

இவ்வாறான நிலமைகளை குறைப்பதற்கு நடவடிக்கை எடுத்தல் வேண்டும். பாடசாலைகளில் நியமிக்கப்பட்டுள்ள உளவள ஆலோசனை ஆசிரியர்கள் மூலமாகவும் இத்தகைய மாணவர்களின் வரவு குறைதல் கண்டறியப்பட்டு அவர்களின் பிரச்சினையை நிவர்த்திக்க வேண்டும். இதைவிட பாடசாலை கட்டாய கல்விக்குழுவில் உள்ள ஆசிரியர்கள் மற்றும் பிரதேச செயலக சிறுவர் மகளிர் பிரிவு உத்தியோகத்தர்கள் கிராம உத்தியோகத்தர் போன்ற பொறுப்பு வாய்ந்த அதிகாரிகள் அனைவர் மூலமாகவும் ஆரம்பநிலையிலேயே ஒருமித்த சேவையை வழங்குவதன் மூலம் மீண்டும் பாடசாலையில் இனணத்தல் என்பது சாத்தியப் பாடானதாக காணப்படும்

கல்வி என்பது காலத்தால் அழியாத செல்வம். இச்செல்வத்தை பெற்றுக்கொள்ள இடம் பொருள் காலம், வயது என எதுவும் தடையாக இருக்க முடியாது. நாம் ஒவ்வொருவரும் இச்செல்வத்தை எம் எதிர்கால சந்ததியினருக்கு கொடுத்து வளமிக்க சிறுவர் சமூகத்தை கட்டி எழுப்புவோம்.

**ஏ.எம்.கஸ்பியா வீவி...**
சிறுவர் உரிமைகள் மேம்பாட்டு உதவியாளர், பிரதேச செயலகம் அட்டாளைச்சேனை.

# உலகின் பொருளாதார பலம் மிகுந்த நாடாக வேகமாக வளர்ந்து வரும் சவூதி அரேபியா

உலகளவில் பல நாடுகள் பொருளாதார ரீதியாக பல பின்னடைவுகளை சந்தித்து வரும் இக்காலகட்டத்தில், முன்னேறிவரும் பொருளாதாரக் கொள்கையைக் கடைப்பிடித்து உலகில் பலம் பொருந்திய பொருளாதார நாடாக சவூதி அரேபியா திகழ்ந்து வருவதாக சவூதி அரேபிய ஆய்வுகளுக்கான ஆர்வலர் கலாநிதி அம்ஜத் ராஸிக் கூறுகின்றார்.

தினகரனுக்கு அவர் வழங்கிய பேட்டியில் இவ்வாறு தெரிவித்தார்.

**கேள்வி: சவூதி அரேபியாவின் பொருளாதாரம் உலகளவில் எவ்வாறு கணிக்கப்படுகின்றது என்பதனை விளக்க முடியுமா?**





## சவூதி அரேபிய ஆய்வுகளுக்கான ஆர்வலர் கலாநிதி அம்ஜத் ராஸிக் விளக்குகிறார்



**பதில்:** உலகிலேயே 17 ஆவது சக்தி வாய்ந்த போட்டித்திறன்மிக்க பொருளாதாரமாக சவூதி அரேபியாவின் பொருளாதாரம் காணப்படுகின்றது. சில மாதங்களுக்கு முன் வெளியிடப்பட்ட சுவிற்சர்லாந்தினை மையமாகக் கொண்டியங்கும் சர்வதேச முகாமைத்துவ மேம்பாட்டுக்கான ஆய்வுமையத்தின் (IMD) வருடாந்த சர்வதேச வரிசைப்படுத்தலுக்கான அறிக்கையில் போட்டித்திறன்மிக்க பொருளாதார பலத்தினை உடைய 64 முதல்தர நாடுகளுக்கு மதியில் 17 ஆவது இடத்தினை சவூதி அரேபியா இவ்வருடம் 2023 இல் அடைந்துள்ளதாக குறிப்பிடப்பட்டுள்ளது.

இவ்வறிக்கையை சவூதி அரேபியாவின் முடிக்குரிய இளவரசரும் பிரதம மந்திரியுமான முஹம்மத் பின் சல்மான் 'பொக்ஸ் நியூஸ்' இற்கான நேர்காணலில் தெரிவித்திருந்தார். "இன்று 17 ஆவது சக்திவாய்ந்த பொருளாதாரமாக இருக்கும் சவூதி அரேபியாவின் பொருளாதாரம் விரைவில் உலகிலேயே முதல் 7 ஏழு ஸ்தானங்களுக்குள் இடம்பிடிக்கும்" எனவும் அவர் உறுதியுடன் குறிப்பிட்டிருந்தார். G20 இல் முதலாவது இடத்தினை சவூதி அரேபியா 2022 இல் பிடித்ததனை அவர் விஷேடமாகக் குறிப்பிட்டார். அதேவேளை சர்வதேச நாணய நிதியமும் சென்ற செப்டம்பரில் வெளியிட்ட ஒரு ஆய்வில் சவூதி அரேபியாவின் பொருளாதாரம் சென்ற நான்கு வருடங்களில் பாரிய முன்னேற்றங்களை அடைந்துள்ளதனை புள்ளிவிபரங்களுடன் பதிவுசெய்துள்ளது.

**கே: சவூதி அரேபியாவின் பொருளாதார அபிவிருத்திக்கு வித்திட்ட காரணிகள் இவை?**

ப: சவூதி அரேபியாவை இதுவரை நல்லாட்சி புரியும் ஆட்சியின் ஸ்திரத்தன்மை இதற்கான முக்கிய விடயம். முதலில் 1932 காலப்பகுதியில் சவுதியை ஸ்தாபித்த மன்னர் அப்துல் அஸீஸ், அன்றைய உலக வல்லரசுகளுடன் கைகோர்த்து பல துறைசார் நிபுணர்களின் ஆலோசைனைக்கமைய தனது நாட்டின் பொருளாதாரத்திற்கு அடித்தளமிட்டார்.

அதன் பின்னர் பெற்றோலிய உற்பத்தி சவுதியின் பொருளாதாரத்தில் பாரிய முன்னேற்றங்களைப் பதித்தது. இன்று அந்த நாடு பெற்றோலிய உற்பத்தியில் தன்னிறைவு பெற்று அதன் உற்பத்தியின் அனைத்து பொறிமுறைகளையும் தேசிய மனித வளங்களைக் கொண்டு மாத்திரம் மேற்கொள்ளும் அளவுக்கு பரிணமித்துள்ளது. அந்நாட்டு அரசின் நல்ல பொருளாதாரக் கொள்கைகளே இதற்கான காரணங்கள்.

**கே: சவூதி அரேபியாவின் பொருளாதார வளர்ச்சியின் பயணத்தை எவ்வாறு நோக்கலாம்?**

ப: சுமார் 80 ஆண்டுகளுக்குள் பொருளாதார ரீதியாக பலமான ஒரு நிலையினை தொடர்ந்தும் பேணிவரும் சவூதி அரேபிய அரசு அதற்கென்று பல திட்டங்களைக் மேற்கொண்டுள்ளது. குறிப்பாக பெற்றோலிய உற்பத்தியில் ஆரம்பத்தில் மேற்கத்திய வல்லரசு நாடுகளுடன் கைகோர்த்து பெற்றோலிய அகழ்வுகளை ஆரம்பித்த சவூதி, இன்று தேசிய மனிதவளங்களை மேம்படுத்தி பிற நாட்டு தலையீடுகளின்றி தனது உற்பத்திகளை பாதுகாக்கும் ஒரு பொருளாதார திட்டத்தில் வெற்றிகண்டுள்ளது.

மேலும் ஹஜ் மற்றும் உம்ராவுக்காக வரும் யாத்திரிகர்கள் மூலம் கிடைக்கும் அந்நிய செலாவணி சவூதி அரேபியாவின் பொருளாதாரத்தில் பங்களிப்பினை வழங்கும் அதேவேளை, அந்த யாத்திரிகர்களுக்கான வசதிவாய்ப்புகளை அந்நாடு திறம்பட மேற்கொண்டு வருகிறது. பெற்றோலியத்தினை மாத்திரம் தங்கியிருக்காது பல்துறை தேசிய உற்பத்திகளில் தன்னிறைவுபெற்று பொருளாதார அபிவிருத்தியில் வெற்றிகொள்வது என்பது முக்கிய நோக்கமாகக் காணப்படுகின்றது.

**கே: தற்போதைய சவுதிய பொருளாத அபிவிருத்தியின் பாரிய திட்டங்கள் பற்றி?**

ப: தற்பொழுது சவூதி அரேபியா பாரிய பொருளாதார திட்டங்களை வகுத்து பல மைற்கற்கள் கடந்து சென்று பயணிக்கின்றது. குறிப்பாக இளவரசர் முஹம்மத் பின் சல்மானின் பாரிய திட்டங்கள் இன்று உலகையே திரும்பிப் பார்க்க வைத்துள்ளன.

**கே: சவூதியின் பொருளாதாரத்தின் பலத்தினை எடுத்துக்காட்டும் தரவுகள் எதாவது உள்ளனவா?**

ப: சவுதியின் அந்நிய செலாவணி கையிருப்பு இவ்வருட ஆரம்பத்தில் 453.4 பில்லியன் அ. டொலர்களாகும். உள்நாட்டில் மேற்கொள்ளப்படும் வெளிநாட்டு முதலீடுகள் இவ்வருட ஆரம்பத்தில் 9.9% வீதத்தினால் அதிகரித்து 1.885 ட்ரில்லியன் ரியால்களை (502.7) அ. டொலர்களை எட்டியுள்ளது. வெளிநாட்டு வர்த்தக வரவுசெலவுத்திட்டத்தில் மேலதிக வருவாயாக 73.7 பில்லியன் ரியால் இவ்வருட முதல் ஆறுமாதங்களில் மாத்திரம் பதிவாகியுள்ளது. இவ்வாறு கணக்கீடுகளை சொல்லிக்கொண்டே போகலாம்.

**கே: சவுதியின் பொருளாதாரத் திட்டங்களிலிருந்து இலங்கை எவ்வாறு பயனடைய முடியும்?**

ப : ஒரு பலம்பொருந்திய பொருளாதாரக் கொள்கையினை உடைய நாடு என்ற வகையில் சவுதியுடனான பொருளாதார உ டன்படிக்கைகளில் கவனம் செலுத்துவது சா லச் சிறந்தது என்பதனை பொருளாதார விற்பன்னர்களே கூறுவர். இதில் மாற்றுக்கருத்தில்லை.

**இக்பால் அலி...**

# வடமத்திய மேலதிக மாகாண கல்விப்பணிப்பாளர் ஏ.அப்துல் ஸமது சேவையில் இருந்து ஓய்வு

கல்விப்புலத்தில் நீண்ட காலமாக கலங்கரைவிளக்காகத் திகழ்ந்தவரும், எல்லோரதும் நன்மதிப்பைப் பெற்றவருமான வடமத்திய மாகாண மேலதிக மாகாணக் கல்விப் பணிப்பாளர் (திட்டமிடல்) ஏ.அப்துல் ஸமது, கடந்த 2023.11.20 அன்று பணியிலிருந்து ஓய்வு பெற்றார்.

இவர் கஹடகஸ்திகிலிய, நெலுகொல்லாகட கிராமத்தில் மர்ஹூம்களான ஆப்தீன் மற்றும் றுகையா பீவி ஆகியோரின் மகனாவார். இவர் தனது ஆரம்பக்கல்வியை தனது கிராமப் பாடசாலையான நெலுகொல்லாகட பாடசாலையில் கற்றார்.அதன் பின்னர் கஹடகஸ்திகிலிய முஸ்லிம் மகாவித்தியாலயத்தில் கல்வியைத் தொடர்ந்து, 1979இல் ஜாமியா நளீமியா கலாசாலைக்கு தெரிவாகினார். 7 வருட இஸ்லாமிய கற்கைநெறியை பூர்த்தி செய்த இவர், பேராதனை பல்கலைக்கழகத்தின் இளமாணி பட்டதாரியானார்.



1987 ஆண்டு பட்டதாரிகளுக்கான ஆசிரியர் நியமனத்தின் மூலம் பட்டதாரி ஆசிரியரானார். தான் கல்விகற்ற அதேபாடசாலைக்கு ஆசிரியராக இணைந்து 11 வருடங்கள் பணியாற்றினார். மாணவர்களின் மனதைக் கவர்ந்த ஏ.அப்துல் ஸமது அவர்கள் கெபிதிகொள்ளேவ கல்வி வலயத்தின் சமய மற்றும் வரலாற்றுப் பாடங்களுக்கான இணைப்பாளராகவும் கடமையாற்றினார். உதவிக்கல்விப்பணிப்பாளர் (திட்டமிடல்) நியமனம் கிடைத்தது.

இலங்கை கல்வி நிர்வாக போட்டிப் பரீட்சையில் சித்தியடைந்து கலன்பிந்துனுவெவ வலயக்கல்வி அலுவலகம் மற்றும் கஹடகஸ்திகிலிய கோட்டங்களின் கல்வி நிருவாக அதிகாரியாக பணியாற்றினார். தம்புத்தேகம வலயக்கல்வி அலுவலகத்தில் உதவிக்கல்வி பணிப்பாளராக (நிர்வாகம்) கடமையாற்றிய பின்னர் அநுராதபுர வலயக்கல்விப் பணிமனையின் திட்டமிடல் பணிப்பாளராக 2014.08.17 வரை கடமையாற்றினார்.அதன் பின்னர் 2015.05.13 வரை மாகாணக் கல்வித்திணைக்களத்தில் திட்டமிடல் பணிப்பாளராக கடமை புரிந்தார்.

அதனையடுத்து அனுராதபுரம் சாஹிரா தேசிய பாடசாலைக்கு அதிபரானார். அவரது பதவிக்காலம் ஸாஹிரா தேசியப்பாடசாலை வரலாற்றில் பொன்எழுத்துக்களால் பொறியப்படவேண்டியதாகும்.

2023.11.20 அன்று அவர் தனது சேவையிலிருந்து ஓய்வு பெற்றார்.

**டப்ளியூ.எம்.பைசல்...**
(கல்நேவ தினகரன் விசேட நிருபர்)

# சோமசிமாறர்



142

சிவ வேள்விகள் புரிந்து சுந்தரரை வழிபட்டுச் சிவபதம் அடைந்த மறையவர்.

அம்பரான் சோமாசி மாறனுக்கும் அடியேன்" – திருத்தொண்டத் தொகை.

சோமசிமாறர்சோமாசிமாற நாயனார் என்பவர் சைவ சமயத்தவர்களால் பெரிதும் மதிக்கப்படும் அறுபத்து மூன்று நாயன்மார்களில் ஒருவர் ஆவார். இவர் சோழநாட்டில் திருவம்பர் என்னும் ஊரிலே அந்தணர் குலத்திலே தோன்றினார். சிவபக்தி உடையவராய்ச் சிவனடியார்களுக்குத் திருவமுதளிக்கும் இயல்புடையவராயிருந்தார். உமையொரு பாகனாகிய சிவபெருமானையே முதல்வன் எனக்கொண்டு போற்றும் வேள்விகள் பலவற்றையும் உலகங்கள் ஏழும் உவப்ப விதிப்படி செய்தார்.

ஈசனுக்கு அன்பர் என்போர் எக்குலத்தவராயினும் அவர்கள் தன்னை ஆளாகவுடையார்கள் என்று உறுதியாகத் தெளிந்திருந்தார்கள். சிவன் அஞ்செழுத்தும் சித்தந் தெளிய ஓதும் நித்த நியமம் உடைய இந்நாயனார் சீரும், திருவும் பொலியும் திருவாரூரினை அடைந்து தம்பிரான் தோழராகிய வன்றொண்டர்க்கு அன்பினால் நெருங்கிய நண்பரானார்; திருவாரூரில் ஐம்புலச் சேட்டைகளையும், காமம் முதலிய அறுவகைக் குற்றங்களையும் நீக்கிய இவர் அத்திருவாரூரில் தங்கி ஆரூரர் தம் திருவடிகளைப் பணிந்து போற்றிய சிறப்பினால் என்றும் நின்று நிலவும் சிவலோகத்தில் இன்பம் உற்றா சோழமண்டலத்திலே, திருவம்பரிலே, பிராமணகுலத்திலே சோமாசிமாறநாயனாரென்பவர் ஒருவர் இருந்தார். அவர் பரமசிவனது ஸ்ரீ பஞ்சாக்ஷரத்தை மிகுந்த அன்பினோடு ஜபித்தலை நித்திய நியமமெனக் கொண்டவர் எந்தக் குலத்தினராயினும், எந்தக் குணத்தினராயினும், பரமசிவன் மேல் அன்புடையவர்களாயின், அவர்களே நம்மை ஆள்பவர் என்னும் மெய்யறிவினையுடையவர் அவ்வன்பர்கள் தம்முடைய வீட்டுக்கு எழுந்தருளிவந்தால், அவர்களை எதிர் கொண்டு வணங்கித் திருவமுது செய்விப்பவர். பரமசிவனுக்குப்பிரீதியாகிய யாகங்களை, புகழ் பயன் முதலியன கருதாது நிஷ்காமியாக வேதவிதிப்படி செய்பவர், அவர் திருவாரூரிற் சென்று, சைவசமயாசாரியராகிய சுந்தரமூர்த்திநாயனாரை அடைந்து, அவருடைய திருவடிகளிலே பக்தி பண்ணி, அதனாலே சிவபதத்தைப் பெற்றார்.



கலாநிதி சிவஸ்ரீ
**கு.வை.க. வைத்தீஸ்வர குருக்கள்**
தலைவர், இந்துக் குருமார் அமைப்பு.

# ஐயப்பனின் அவதார மகிமை

கேரள மாநிலத்திற்கு உட்பட்ட பந்தள தேசத்தின் மன்னனின் மகனாக ஐயப்பன் வளர்ந்த காரணத்தால் ஆரம்பத்தில் சபரிமலை யாத்திரை என்பதும், ஐயப்ப வழிபாடு என்பதும் கேரள மாநிலத்தவர்கள் மட்டுமே மேற்கொள்ளும் ஒரு வழிபாட்டு முறையாக இருந்தது. அப்போதெல்லாம் மாதத்தின் கடைசி நாளில் நடைதிறக்கப் படும் போது 20 பேர் என்ற அளவிலும், மண்டல பூஜையின் போது அதிகபட்சமாக 1000 பேர் வரையிலும் மட்டுமே கலந்து கொண்டனர். ஐயப்பனின் திருமேனிக்கு அபிஷேகம் செய்து, பிரசாதமாக கொடுக்கப்படும் நெய், அடுத்த ஆண்டு சபரிமலை யாத்திரை செல்லும் வரை கூட அதே நறுமணம் மாறாமலும், கெட்டுப் போகாமலும் இருக்கும். இந்த நெய்யை ஒரு மண்டலம் மருந்தாக எடுத்துக் கொண்டால் தீராத நோய் அனைத்தும் தீரும் என்பது இப்போதும் நடக்கும் அதிசயம்.



கார்த்திகை முதல் நாளான இன்று ஐயப்ப பக்தர்கள் அனைவரும் மாலை அணிந்து, விரதத்தை துவங்கி வருகின்றனர். இந்த சமயத்தில் சபரிமலை ஐயப்பன் பற்றியும், ஐயப்பன் வழிபாடு உலகம் முழுவதும் பரவியது எப்படி என்பது பற்றியும் பலரும் அறியாத 10 முக்கிய தகவல்களை இங்கே பார்ப்போம்.

1. இருமுடி சுமந்த முதல் நபர் பந்தள மன்னனுக்கு வளர்ப்பு மகனாக, மணிகண்டன் என்ற திருநாமத்துடன் வளர்ந்த சுவாமி ஐயப்பன், தனது தந்தையை பிரிந்து சபரிமலையில் தவம் செய்ய புறப்பட்டார். அப்போது அவரது தந்தையான பந்தள மன்னன், வன பகுதிக்கு செல்லும் மகனுக்கு பசிக்குமே என்பதற்காக உடனே சாப்பிட கூடிய வகையிலான உணவுகளை ஒரு பகுதியாகவும், நீண்ட நாட்கள் கெட்டு போகாத வகையிலான நெய்யினால் செய்யப்பட்ட உணவுகள் ஒரு பகுதியாகவும் வைத்து இரண்டு முடிகளாக கட்டி கொடுத்தனுப்பினார். இரு முடிகளை சுமந்து சபரிமலை யாத்திரை துவங்கிய முதல் நபர், சுவாமி ஐயப்பனே.

2. வழிகாட்டும் கருடன் " எனக்கு வயதாகி விட்டது. நான் உன்னை காண வேண்டுமானால் வனத்திற்குள் எப்படியப்பா வருவது?" என பந்தள மன்னன் ஐயப்பனிடம் கேட்டார். அதற்கு சுவாமி ஐயப்பன், "நீங்கள் என்னை காண வரும் போது பந்தளத்தில் இருந்து சபரிமலை வரை கருடன் வழிகாட்டுவார்" என பதிலளித்தார். பந்தள மன்னர், ஐயப்பனை காண வரும் போதெல்லாம் ஐயப்பனின் ஆபரணங்களை எடுத்து வந்து, அவருக்கு அணிவித்து அழகு பார்ப்பதை வழக்கமாக கொண்டார். அவர் புறப்படும் போது கருடனும் வழிகாட்டினான். அன்று துவங்கி இன்று வரை, ஆண்டுக்கு ஒருமுறை மகரஜோதி நாளன்று, பந்தளத்தில் இருந்து ஐயப்பனின் திருவாபரணப் பெட்டி புறப்படும் சமயத்தில் கருடன் வந்து வழிகாட்டும்.

3. வயதான பந்தள மன்னன் மலை ஏற சிரமப்பட்டு, ஐயோ...அப்பா என கூறிக் கொண்டே மலை ஏறி வந்ததால், நாளடைவில் அதுவே ஐயப்பா என்று ஆகி விட்டதாக சொல்லப்படுவது உண்டு.

4. நீண்ட நாட்களானாலும் கெட்டு போகக் கூடாது என ஐயப்பனுக்காக பந்தள மன்னன் எடுத்துச் சென்ற அரவனை பாயசம், உன்னி அப்பம் போன்றவைகளே தற்போது வரை சபரிமலையில் பக்தர்களுக்கு பிரசாதம் ஆக கொடுக்கப்பட்டு வருகிறது.

5. 60 ஆண்டுகளுக்கு முன் நவாப் ராஜமாணிக்கம் பிள்ளை என்பவர் 'ஸ்ரீ ஐயப்பன்' என்ற தலைப்பில் ஐயப்பனின் வரலாற்றையும், வழிபாட்டு முறை பற்றியும் நாடகமாக போட்டு கேரளாவை தாண்டி பிற மாநிலத்தவர்களும் ஐயப்பன் பற்றி தெரிந்து கொள்ள செய்தார். அதற்கு பிறகு தான் மற்ற மாநிலத்தை சேர்ந்தவர்கள், குறிப்பாக தமிழகத்தை சேர்ந்த பலரும் சபரிமலை யாத்திரை மேற்கொள்ள துவங்கினர்.

6. ஐயப்பனுக்கு விபூதி, சந்தனம், பால், பன்னீர், 108 ஒரு ரூபாய் நாணயம், தேன், பஞ்சாமிர்தம், இளநீர் ஆகிய எட்டும் கொண்டு செய்யப்படும் அபிஷேகத்துக்கு அஷ்டாபிஷேகம் என்று பெயர்.











கம்பளை நாட்டுக்கோட்டை நகரத்தார் அருள்மிகு ஸ்ரீ கதிர்வேலாயுத சுவாமி திருக்கோயில் கந்தசஷ்டி நிறைவு நாள் சூரசம்ஹாரம் இடம்பெற்ற நிகழ்வுகளை படங்களில் காணலாம்.
(நாவலப்பிட்டி சுழற்சி நிருபர், டி.வசந்தகுமார் கம்பளை)

# யுகரிஷியின் ஆன்மிகச் சிந்தனைகள் - அத்தியாயம் 64



இன்று நம்மிடம் இருக்கும் செல்வம், சொத்து. பதவி, கௌரவம், வாய்ப்பு இவையாவும் சமுதாயத்திலிருந்து நமக்கு கிடைத்தவையாகும். சமுதாயம் எங்களை ஒதுக்கியிருந்தால், புறக்கணித்து இருந்தால் நாம் இவ்வாழ்வை வாழ முடியாது. சிறிது காலத்திற்குக் கூட நம்மால் பிழைப்பை நடத்த முடியாது. எனவே சமுதாயத்திற்கு நாம் புறம்பாக நடந்து கொள்ளக் கூடாது. அது நன்றி கெட்டத்தனமாகி விடும். இவ்வுலக மற்றும் பரலோக வாழ்வு. உடல் மற்றும் ஆத்மா சம்பந்தப்பட்ட வாழ்வு ஆகியவைகளின் மங்கல மயம் உண்டாக நாம் பிறர் நலம் பேணுதல் வேண்டும். பிறருக்காக வாழ வேண்டும்.

இவைகளை புறக்கணிப்பது என்பது நிகழ்காலத்தையும் எதிர்காலத்தையும் சீரழித்துவிடும். இந்த தத்துவத்தை அனுபவப் பூர்வமாக உணர்ந்து கொண்ட வியாச முனிவர் பின் வருமாறு கூறுகிறார்.

எவன் ஒருவன், எப்போதும் பிறருக்காக வாழ்கிறானோ. பிறருடைய நலத்தையே விரும்புகிறானோ, அவன் பிறப்பின் பயனை எய்துவான். பரோபகாரம் பிறருக்கு உபகாரம் செய்பவனுக்கு பயம் இருக்காது. அவன் இம்மையிலும் மறுமையிலும் சிறப்பாக போற்றப்படுவான்.

மனவலிமை மிகும் போது தான் ஒருவன் தன் துணிவை, தன் உணர்வாற்றலை, திறமையை, கலை நுணுக்கத்தை காட்டிட முடியும். வெறும் புத்தி பலத்தால் மட்டும் இது சாத்தியமாகாது. இதயம் மற்றும் இதயத்தின் உணர்ச்சி வெளிபாடு மனிதனுக்கு மட்டுமல்லாமல் மற்ற ஜீவராசிகளுக்கும் உண்டு. மனவலிமையை போல். வாழ்வில் வெற்றிக் கொள்ள சில நற்பண்புகள் உள்ளன. அவையாவன அன்பு. நன்னடத்தை, நற்குணம், சிரத்தை, பக்தி, ஈடுபாடு, உண்மை முதலியன. படித்தவன் நற்பண்புகள் கொண்ட இதயமில்லாதவனாக இருந்தால் அவனுக்கு செல்வம், வெற்றி. புகழ் என பல இருந்தாலும் வாழ்வில் அவன் துன்பப்பட்டுக் கொண்டு தானிருப்பான். அதே வேளையில் பிறரிடம் அன்பு பாராட்டுபவன். சகோதர பாசம், தாய்பாசம், புத்திர பாசம் நம்பிக்கை, உண்மை நட்பு ஆகிய நற்பண்புகளுடன் விளங்கும். ஒருவன் படிக்காதவனாக இருந்த போதும், அவன் ஏழையாக இருந்தாலும், அவனது வாழ்வில் சுகம் நிறைந்து காணப்படும். படிக்காத பலருடைய வாழ்க்கை, குடும்ப ரீதியாகவும், தாம்பத்ய ரீதியாகவும், சமுதாய ரீதியாகவும் இன் சுவை நிறைந்து காணப்படுகிறது. அறிவு. புத்தி பலம் என்றால் அன்பு, கருணை. நற்பண்பு, பக்தி, ஈடுபாடு நட்பு, நம்பிக்கை, உண்மை இவை யாவும் மனோபலமாகும். புத்தி பலத்தை விட மனோபலம் சிறந்தது. இவையெல்லாவற்றையும் ஒன்று படுத்தி அதற்கு வித்யா என சான்றோர்கள் பெயரிட்டுள்ளனர். தற்காலத்து கல்விமுறை இந்த 'வித்யாவில் அடங்காது. வாழ்வில் முன்னேற வித்யா அவசியம்.

# அறநெறி அறிவுநொடி



**கே. ஈஸ்வரலிங்கம்**
தமிழர் நற்பணி மன்றத் தலைவர்

**1 வீட்டில் விளக்கேற்றும் போது சுவாமி படங்களுக்கு பூ கட்டாயம் போட வேண்டுமா?**

காலையில் விளக்கேற்றி பூ சாத்தி வழிபடவேண்டும். மாலையில் பூ கட்டாயமில்லை.

**2 செவ்வாய், வெள்ளிக்கிழமையில் வீட்டில் ஒட்டடை அடிக்கக் கூடாதா ஏன்?**

செவ்வாயும் வெள்ளியும் பொருள் வாங்கிச் சேர்த்தால் வளரும். அதனால் இவ்விரு நாட்களிலும் வீட்டைத் துடைப்பதில்லை. முதல்நாளே ஒட்டடை அடித்து சுத்தப்படுத்தி விடுங்கள்.

**3 கண்ணை மூடிக் கொண்டு கடவுளை வழிபடக்கூடாது என்கிறார்களே உண்மையா?**

கடவுளின் திருவுருவம் கண் முன்னே இருக்கும்போது கண்ணாரக் கண்டு வழிபட வேண்டும். திருவுருவம் இல்லாத இடத்தில் வழிபட வேண்டிய காலத்தில்இ கண்ணை மூடி மனதில் கடவுளின் உருவத்தை நிலை நிறுத்தி வழிபாடு செய்யலாம்.

**4 திருமணஞ்சேரியில் வேண்டிக்கொண்ட பிரார்த்தனை மாலை தொலைந்துவிட்டது. மீண்டும் மாலை செலுத்த விரும்புகிறேன். பரிகாரம் என்ன?**

அறியாமல் செய்த தவறு தானே! இதற்காகக் குழம்பிக் கொள்ள வேண்டாம். மீண்டும் திருமணஞ்சேரி சென்று புதுமாலை வாங்கி சேர்த்து விடுங்கள். தவறைப் பொறுக்குமாறு கல்யாணசுந்தர சுவாமியிடம் வேண்டிக் கொள்ளுங்கள்.

**5 சஞ்சீவிமலையைத் தூக்கி வரும் அனுமனை வீட்டில் வைத்து வழிபடக்கூடாது என்கிறார்களே ஏன்?**

சஞ்சீவி என்பது உயிர் காக்கும் மூலிகை. இந்த அனுமனை வழிபட்டால் கவலை நம்மை தீண்டாது. இவரை வழிபட நோயில்லாத நல்வாழ்வு உண்டாகும்.

**6 கனவில் பாம்பு அடிக்கடி வருகிறது. அதைத் தவிர்க்க ஏதாவது பரிகாரம் உண்டா?**

பொதுவாக கனவில் பாம்பு வந்தால் பணம் வரும் என்பார்கள். மற்றபடி பயப்பட ஏதுமில்லை. முருகனுக்கு அர்ச்சனை செய்து பயத்தைப் போக்கிக் கொள்ளுங்கள்.

**7 பூஜை, விரதம் போன்றவற்றை பெண்கள் மட்டுமே கடைபிடிக்க வேண்டுமா, ஆண்கள் கடைபிடிக்கக் கூடாதா?**

இவற்றில் ஆண், பெண் பாகுபாடு கிடையாது. வீடு, குழந்தைகள் நலன் விஷயங்களில் பெண்களே அதிகம் அக்கறை கொண்டவர்களாக இருப்பதால் பூஜை, விரதங்களில் ஈடுபாடு காட்டுகிறார்கள். மற்றபடி ஆண்கள் பூஜை, விரதம் போன்றவற்றைச் செய்யாமல் இல்லை.

**8 மாலை நேரத்தில் சாப்பிடக் கூடாது என்று பெரியவர்கள் சொல்வதன் காரணம் என்ன?**

சாப்பிடுவது, தூங்குவது, நகம் வெட்டுவது போன்றவை குறிப்பிட்ட நேரங்களில் தான் செய்ய வேண்டும். காலை சூரிய உதயம்இ மாலை சூரிய அஸ்தமனம் ஆகிய இரு வேளைகளும் சந்தியா காலங்கள் என்று அழைக்கப்படுகின்றன. இந்த இரு வேளைகளிலும் தெய்வ வழிபாட்டை தவிர மேற்படி விஷயங்களை செய்யக்கூடாது. மகாலட்சுமி நம் வீட்டிற்கு வரும் வேளையில் விளக்கேற்றி வரவேற்க வேண்டுமே தவிர மற்றதைச் செய்யக்கூடாது.

தொடரும்...

# ஆடற்கலைப் போட்டியில் வத்தளை சபரிகிரீசன் அறநெறி வெற்றி






அகில இலங்கை கிராமிய கலைகள் ஒன்றியம் இந்து கலாசார திணைக்களத்துடன் இணைந்து நடத்தும் ஆடற்கலைப் போட்டி நேற்று ஆரம்பமானது. நேற்றைய போட்டி கொழும்பு, கொட்டாஞ்சேனை இந்து மகா வித்தியாலயத்தில் நடைபெற்றது. இதில் கம்பஹா மாவட்ட அறநெறிப் பாடசாலைகள் பங்குபற்றின. இந்தப் போட்டியில் வத்தளை ஸ்ரீ சபரிகிரீசன் ஐயப்ப அறநெறிப் பாடசாலை வெற்றிப் பெற்று இறுதிச் சுற்றுப் போட்டிக்கு தெரிவாகியுள்ளது. எதிர்வரும் 16 ஆம் திகதி வவுனியா மாவட்டப் போட்டியும் முல்லைத்தீவு மாவட்டப் போட்டியும் நடைபெறவுள்ளது. இதில் 16 அறநெறிப் பாடசாலைகள் பங்குபற்றவுள்ளன.

எதிர்வரும் 17ஆம் திகதி கொழும்பு மாவட்டப் போட்டி நடைபெறவுள்ளது. இதில் 08 அறநெறிப் பாடசாலைகள் பங்குபற்றவுள்ளன. ஹட்டன், கொட்டகலை, தலவாக்கலை, மஸ்கெலியா, டிக்கோயா ஆகிய பகுதிகளில் உள்ள அறநெறிப் பாடசாலைகள் விண்ணப்பம் பெற அகில இலங்கை கிராமிய கலைகள் ஒன்றியத்தின் பொருளாளருடன் (0767565936 ) தொடர்பு கொள்ளுமாறு கேட்கப்பட்டுள்ளது. கம்பஹா மாவட்ட ஆடற்கலைப் போட்டியில் வத்தளை ஐயப்பன் அறநெறிப் பாடசாலை வெற்றி.




ஆடற்கலைப் போட்டியில் கலந்து கொண்ட கந்தானை புபுதுகம ஸ்ரீ முத்துமாரியம்மன் அறநெறிப் பாடசாலையின் மாணவ, மாணவிகள்.

## நான்கு மாகாணங்களில்...


டெங்கு கட்டுப்பாட்டு பிரிவு தெரிவித்துள்ளது. இந்த வருடத்தில் இதுவரை 74,000 டெங்கு நோயாளர்கள் பதிவாகியுள்ளதாக அதன் பணிப்பாளர் டொக்டர் நளின் ஆரியரத்ன தெரிவித்துள்ளார்.

## எலுமிச்சை பழத்தின்...

தற்போது பெய்து வரும் கனமழை காரணமாக, எலுமிச்சை அறுவடை குறைந்துள்ளதாக தெரியவந்துள்ளது. இதனால் எலுமிச்சை பழங்களின் தேவை அதிகமாக இருப்பதாக தெரிவிக்கப்படுகின்றது. இந்த காரணங்களே, எலுமிச்சை பழத்தின் விலை உயர்வுக்கு காரணமாகியுள்ளதென வியாபாரிகள் தெரிவிக்கின்றனர்.

## சொல்ல நினைத்த கதை






அகில இலங்கை கிராமிய கலைகள் ஒன்றியம் "சொல்ல நினைத்த கதை" என்ற பெயரில் குறுந்திரைப்படமொன்றை தயாரிக்கவுள்ளது. இதற்கான பூஜை நேற்று கொழும்பு, கொச்சிக்கடை ஸ்ரீ பொன்னம்பலவாணேஸ்வரர் ஆலயத்தில் நடைபெற்றது. அதன் பின் அதில் நடிப்பவர்கள் அகில இலங்கை கிராமிய கலைகள் ஒன்றியத்தின் தலைவர் எஸ். விஜேராஜுடன் எடுத்துக் கொண்ட படம். படம் : எம். நஸார்.

## எதிர்க்கட்சிகள் அதிகாரத்தை பெற...

வழி எனவும், அரசாங்கத்துடன் இணைந்து செயற்பட்டு பெறும் அனுபவத்தின் அடிப்படையில் அடுத்த தேர்தலில் அரசாங்க அதிகாரத்தைப் பெற முயற்சிக்கலாம் எனவும் ஜனாதிபதி தெரிவித்தார்.

மாத்தளை மாவட்ட பிரதேச அரசியல் பிரதிநிதிகளுடன் நேற்று முன்தினம் (25) பிற்பகல் மாத்தளை மாவட்ட செயலக கேட்போர் கூடத்தில் இடம் பெற்ற சந்திப்பின்போதே ஜனாதிபதி ரணில் விக்கிரமசிங்க இவ்வாறு குறிப்பிட்டார்.

மாத்தளை மாவட்ட பொதுஜன பெரமுன, ஐக்கிய தேசியக் கட்சி மற்றும் தொழிலாளர் காங்கிரஸின் உள்ளூராட்சி மன்றப்பிரதிநிதிகள் இதில் கலந்து கொண்டதுடன், அவர்கள் எதிர்நோக்கும் பிரச்சினைகள் குறித்தும் ஜனாதிபதியுடன் கலந்துரையாடினர். சில பிரச்சினைகளுக்கு அதே இடத்தில் தீர்வுகளை வழங்கவும் ஜனாதிபதி நடவடிக்கை எடுத்தார்.

கடந்த காலங்களில் எதிர்கொண்ட பொருளாதார சவாலுக்கு முகங்கொடுத்து எவரும் நாட்டை பொறுப்பேற்க முன்வரவில்லை எனவும், ஆளும் கட்சியின் வேண்டுகோளுக்கு இணங்க தான் அந்த சவாலை ஏற்றுக்கொண்டதாகவும், அனைத்து அரசியல் கட்சிகளும் தமக்கு வழங்கிய ஆதரவை நன்றியுடன் நினைவு கூருவதாகவும் ஜனாதிபதி தெரிவித்தார்.

அவ்வாறு ஏற்றுக்கொண்ட நாட்டை சரியான திசையில் கொண்டு சென்று பொருளாதார ஸ்திரத்தன்மையை ஏற்படுத்த முடிந்ததாகக் குறிப்பிட்ட ஜனாதிபதி ரணில் விக்கிரமசிங்க, நாட்டை பொருளாதார நெருக்கடியில் இருந்து 5 வருடங்கள் சென்றாலும் மீட்க முடியாது என எதிர்க்கட்சி அரசியல்வாதிகள் கூறினாலும், 16 மாத குறுகிய காலத்தில் நாட்டை வங்குரோத்து நிலையில் இருந்து மீட்டெடுக்க முடிந்ததாகவும் தெரிவித்தார்.

இந்தப் பொருளாதார நெருக்கடியின் போது எதிர்க்கட்சி அரசியல்வாதிகள் அரசாங்கத்திற்கு ஆதரவளித்திருந்தால் ஒரு சில மாதங்களுக்கு முன்னரே நாட்டை வங்குரோத்து நிலையில் இருந்து மீட்டெடுக்க முடிந்திருக்கும் எனவும் ஜனாதிபதி மேலும் தெரிவித்தார்.

ஜனாதிபதியினால் முன்னெடுக்கப்படும் வேலைத்திட்டத்தை பாராட்டிய பிரதேச அரசியல் பிரதிநிதிகள், எதிர்காலத்தில் இந்த வேலைத்திட்டங்களுக்கு பூரண ஆதரவை வழங்குவதாகவும் தெரிவித்தனர்.

இங்கு மேலும் கருத்துத் தெரிவித்த ஜனாதிபதி ரணில் விக்கிரமசிங்க,

“2021 முதலில் ஒரு நாடு என்ற வகையில் பொருளாதார சிக்கலை எதிர்கொண்டோம். 2022 இல், இது ஒரு நெருக்கடியாக மாறியது. நாட்டின் அனைத்து விவகாரங்களும் முடங்கியது. நாடு பணத்தை இழந்தது. வருமானம் இல்லாமலானது. அதே நேரத்தில், அனைத்து அபிவிருத்தித் திட்டங்களும் நிறுத்தப்பட்டன. நாம் வங்குரோத்து அடைந்த நாடாக மாறியதால், வெளிநாடுகளின் உதவியையும் இழந்தோம்.

அந்த சவாலான நேரத்தில் நாட்டைப் பொறுப்பேற்க யாரும் முன்வரவில்லை. நாட்டின் பிரச்சினைகளை தீர்ப்போம் என்று சொன்னவர்கள் கைவிட்டுச் செல்லும்போது, அந்தப் பொறுப்பை நான் ஏற்றுக்கொண்டேன். அதன்போது, அரசியல் வேறுபாடின்றி அனைத்துக் கட்சிகளும் எனக்கு உதவின. எவ்வாறாயினும், நாங்கள் ஒன்றிணைந்து இந்த சவாலை எதிர்கொண்டு நாட்டை முன்னோக்கி கொண்டு சென்றோம்.

நான் இந்தப் பொறுப்பை ஏற்றுக் கொண்ட போது, வீழ்ச்சியடைந்துள்ள இந்தப் பொருளாதாரத்தை மீளக் கட்டியெழுப்ப 04 05 வருடங்கள் ஆகும் என்று பலர் கூறினார்கள். இதற்குத் தீர்வு இல்லை என்று பலர் நாட்டை விட்டு வெளியேறிச் சென்றனர். நாங்கள் தற்போது சர்வதேச நாணய நிதியத்துடனும் ஏனைய நாடுகளுடனும் பேச்சுவார்த்தை நடத்தி வருகிறோம்.

அதன்படி, இந்த ஆண்டு இறுதிக்குள் நாடு வங்குரோத்து என்ற முத்திரையில் இருந்து விடுபடும் என நான் எதிர்பார்க்கிறேன். இந்த நடவடிக்கைகளுக்காக எங்களுக்கு 16 மாதங்கள் தேவைப்பட்டன. எதிர்க்கட்சிகள் எங்களை ஆதரித்திருந்தால் இன்னும் இரண்டு மூன்று மாதங்களுக்கு முன்னரே இதை நிறைவேற்றியிருக்கலாம்.

நாம் கடினமான பயணத்தையே மேற்கொண்டோம். எவ்வாறாயினும் அடுத்த வருடம் முதல் அரச ஊழியர்களுக்கு 10,000 ரூபா கொடுப்பனவை வழங்க முடிந்துள்ளது. இவ்வாறு செய்ய முடியும் என்று யாரும் நினைக்கவில்லை. மேலும், சமுர்த்தியைப் போன்று மூன்று மடங்கு அஸ்வெசும கொடுப்பனவு அதிகரிக்கப்பட்டது. இவை கடினமான நேரத்திலே செய்யப்பட்டன. மேலும், சிறிய மற்றும் நடுத்தர அளவிலான திட்டங்களின் மேம்பாட்டிற்காக பணத்தை வழங்க நாங்கள் எதிர்பார்த்துள்ளோம்.

நான் அத்தோடு நிற்கவில்லை. இந்நாட்டு மக்கள் பாதிக்கப்பட்டனர். அவர்களுக்கு முடிந்த அளவு நிவாரணங்களை வழங்கவே நான் முயற்சிக்கிறேன். அதற்காக நாட்டில் மிகப்பெரிய விவசாய நவீனமயமாக்கல் வேலைத் திட்டம் திட்டமிடப்பட்டுள்ளது. நவீனமயமாக்கலின் முதல் படி உரிமையாகும். இதன்படி காணி கட்டளைச் சட்டத்தின் கீழ் அனுமதிப்பத்திரம் பெற்றவர்களுக்கு முழு உரிமைகொண்ட காணி உறுதிப்பத்திரம் வழங்கும் வேலைத் திட்டம் எதிர்வரும் பெப்ரவரி மாதம் ஆரம்பிக்கப்படவுள்ளது. இந்தச் செயற்பாடுகளை மாவட்ட அபிவிருத்திக் குழுக்களிடம் ஒப்படைக்குமாறு பணிப்புரை வழங்கியுள்ளேன். இந்தத் திட்டத்திற்கு அனைவரின் ஆதரவையும் எதிர்பார்க்கிறேன். இது யாராலும் செய்ய முடியாத காரியம். ஏனையவர்கள் வெறுமனே கதை பேசினார்கள். ஆனால் நாங்கள் அனைவரும் இணைந்து இவற்றை நடைமுறைப்படுத்தினோம் எனவும் ஜனாதிபதி தெரிவித்தார்.

## நாடு அடுத்த மாதத்திற்குள்...

2024 ஆம் ஆண்டுக்கான வரவு செலவுத் திட்ட முன்மொழிவான "உறுமய" திட்டம் தொடர்பாக மக்களுக்கு விழிப்புணர்வூட்டும் நிகழ்ச்சியின் முதலாவது நிகழ்வை அநுராதபுரம், நொச்சியாகமவில் நேற்று ஆரம்பித்து வைத்து உரையாற்றும் போதே ஜனாதிபதி ரணில் விக்கிரமசிங்க இவ்வாறு தெரிவித்தார். ஷங்ரிலா ஹோட்டலுக்கு காணி உறுதிப்பத்திரம் வழங்க முடியுமாயின், எமது நாட்டில் பரம்பரை பரம்பரையாக விவசாயம் செய்து வரும் மக்களுக்கு காணி உறுதிப்பத்திரம் வழங்குவதில் என்ன தவறு என ஜனாதிபதி இங்கு கேள்வி எழுப்பினார். ஷங்ரிலா அமைந்துள்ள காணியினால் இலங்கைக்கு அந்நியச் செலாவணி கிடைப்பதைப் போன்றே நவீன விவசாயக் கைத்தொழில் மூலம் ஏற்றுமதிப் பொருளாதாரத்தை வலுப்படுத்த முடியும் என்றும் ஜனாதிபதி சுட்டிக்காட்டினார். நாட்டிலுள்ள விவசாயிகளுக்கு இலவச காணி உறுதிப் பத்திரங்களை வழங்குவதென்பது அவர்களின் முன்னோர்களின் பாரம்பரியத்தை வழங்குவதாகவே அமையும் என்பதோடு அரசாங்கத்திற்கு நன்றி தெரிவிப்பதாகவும் இருக்கும் எனவும் ஜனாதிபதி மேலும் தெரிவித்தார். 2024 வரவு செலவுத் திட்டத்தில் "உறுமய" காணி உறுதிப்பத்திரம் வழங்குவதற்காக இரண்டு பில்லியன் ரூபா ஒதுக்கப்பட்டுள்ளது. வெளிநாட்டவர்கள் இலங்கையில் நிலங்களை கையகப்படுத்திய பின்னர் அந்த நிலங்களில் பயிரிடுவதற்கு பூர்வீக மக்களுக்கு உரிமம் வழங்கியிருந்தனர்.

ஆனால் 1935 ஆம் ஆண்டின் காணி அபிவிருத்தி கட்டளைச் சட்டத்தின் ஊடாக உள்நாட்டவர்களுக்கு காணி உறுதிகளை வழங்குவதற்கு மற்றொரு அனுமதிப் பத்திர முறை அறிமுகப்படுத்தப்பட்டது.

காணியை வைத்திருப்போருக்கு பயிர்ச் செய்கை மேற்கொள்ளவும் வீடுகளை கட்டவும் அனுமதி வழங்கப்பட்டது. ஆனால் நிலத்தின் உரிமையைமற்றவருக்குமாற்றவோவிற்கவோ அதிகாரம் வழங்கப்படவில்லை.

ஜயபூமி, சௌமிய பூமி, ஸ்வர்ணபூமி, போன்ற அனைத்து காணி உறுதிகளுக்குப் பதிலாக காணி உறுதிப்பத்திரம் வழங்க 2024ஆம் ஆண்டுக்கான வரவு செலவுத் திட்டத்தில் ஜனாதிபதி ரணில் விக்ரமசிங்க முன்மொழிந்துள்ளார்.

இதன்படி, 2024ஆம் ஆண்டு முதல் இந்த அனுமதிப் பத்திரங்களை வழங்கும் வேலைத்திட்டம் நடைமுறைப்படுத்த திட்டமிடப்பட்டுள்ளது.

## பலத்த மழை அனர்த்தத்தினால்...

கூறினார். கடந்த வருடத்தை விடவும் இவ்வருடம் வெள்ளம் மற்றும் மண்சரிவுகளினால் அதிகளவானோர் பாதிக்கப்பட்டுள்ளமை தெரியவந்துள்ளதாகவும் அனர்த்தங்களினால் 51 பேர் உயிரிழந்துள்ளதாகவும் 103 பேர் காயமடைந்துள்ளதாகவும் பாதுகாப்பு இராஜாங்க அமைச்சர் மேலும் குறிப்பிட்டார்.

## தோட்ட தொழிலாளரது சம்பள...

எதிர்க்கட்சி, ஆளும்கட்சி என்ற வேறுபாடின்றி அனைவரும் அதற்கான ஒத்துழைப்பை வழங்குவார்கள் என்ற நம்பிக்கை உள்ளதாகவும் அவர் தெரிவித்தார். பாராளுமன்றத்தில் இடம் பெற்ற 2024 ஆம் ஆண்டுக்கான வரவு செலவுத்திட்டத்தில் நீர் வழங்கல், தோட்ட உட்கட்டமைப்பு அமைச்சுக்கான செலவுத்தலைப்பு மீதான விவாதத்தில் உரையாற்றிய தமிழ் தேசிய கூட்டமைப்பு எம்பி ஸ்ரீதரன் முன் வைத்த கருத்துக்களுக்கு பதிலளிக்கும் போதே அவர் இவ்வாறு தெரிவித்தார். அது தொடர்பில் மேலும் தெரிவித்த அமைச்சர், ஜனாதிபதி தமதுரையின் போது ,மலையக மக்களின் நீண்ட நாள் கோரிக்கையாகவுள்ள காணி உரிமை கட்டாயம் வழங்கப்படுமென தெளிவாகக் கூறியிருந்தார். மலையகம் 200 நிகழ்விலும் அவர் அதனை உறுதியாக தெரிவித்திருந்தார்.

அந்தக் காணி உரிமையை வழங்குவதற்காகவே நாம் அமைச்சரவைக்குள் பிரதமர் தினேஷ் குணவர்தன தலைமையில் ஒரு குழுவை நியமித்து எதிர்காலத்தில் இவ்விடயத்தை எவ்வாறு செயற்படுத்தலாம் என ஆராய்ந்து வருகின்றோம்.

## மின் கட்டணத்தில்...

இணைப்புகளுக்கான மூன்று மில்லியன் ரூபா மூன்று வருடங்களுக்கு மேல் அறவிடப்படாமலும் உள்ளதாக அந்த அறிக்கையில் தெரிவிக்கப்பட்டுள்ளது.

அதேவேளை கடந்த 2022 ஆம் ஆண்டு எவ்வித அனுமதியுமின்றி மின்சார சபை ஊழியர்களுக்காக பொறியியலாளர் கொடுப்பனவு ஊக்குவிப்பு கொடுப்பனவு மற்றும் தற்காலிக கொடுப்பனவுகளுக்காக 418 மில்லியன் ரூபா செலவிடப்பட்டுள்ளதாகவும் கணக்காய்வாளர் திணைக்களம் தெரிவித்துள்ளது.

## GCE (O/L) முடிவுகளை...

பரீட்சை முடிவுகள் வெளியாவது இன்னும் தாமதிக்கலாம் என்று கூறப்படுகிறது. இதுதொடர்பாக கருத்து தெரிவித்த கல்வி அமைச்சின் பேச்சாளர் ஒருவர்; இன்னும் ஓரிரு வாரங்களில் பரீட்சை பெறுபேறுகளை வெளியிட தீவிர முயற்சி எடுத்து வருவதாக தெரிவித்தார்.

இதற்கமைய, எதிர்வரும் 4 அல்லது 5 நாட்களில் கல்விப் பொதுத்தராதர சாதாரண தரப்பரீட்சை பெறுபேறுகளை வெளியிடுவதற்கு எதிர்பார்ப்பதாகவும் பரீட்சைகள் ஆணையாளர் நாயகம் குறிப்பிட்டுள்ளார்.

சமூக வலைத்தளங்களில் பரவிவரும் தகவல்களுக்கு பதிலாய் அவர் இதனைத் தெரிவித்துள்ளார். பெறுபேறுகளை வெளியிடுவதற்கான அனைத்து நடவடிக்கைகளும் பூர்த்தியாகியுள்ளது. ஆகையினால், வெகுவிரைவில் பரீட்சை பெறுபேறுகளை வெளியிடுவதற்கு எதிர்பார்ப்பதாக அவர் கூறியுள்ளார்.

## எதிர்க்கட்சி தலைவருக்கு...

கொழும்பில் நேற்று ஞாயிற்றுக்கிழமை (26) இ டம்பெற்ற நிகழ்வில் கலந்துகொண்டதன் பின்னர் ஊடகங்களுக்கு கருத்து தெரிவிக்கையில் மேற்கண்டவாறு குறிப்பிட்டார்.

கட்சி என்ற ரீதியில் பலமாக செயற்படுகிறோம். அடுத்த மாதம் இடம்பெறவுள்ள கட்சியின் தேசிய மாநாட்டில் அரசியல் ரீதியில் முக்கிய தீர்மானங்களை அறிவிப்போம். ஜனாதிபதி ரணில் விக்கிரமசிங்கவுக்கு ஆதரவு வழங்குவது தொடர்பில் கொள்கை ரீதியில் எவ்வித தீர்மானங்களும் எடுக்கப்படவில்லை.

ஜனாதிபதி தேர்தலுக்கான அறிவிப்பு வெளியானதும் எமது வேட்பாளரை நாங்கள் அறிவிப்போம். ஜனாதிபதியின் தீர்மானங்கள் நூற்றுக்கு நூறு வீதம் சிறந்தது என்று குறிப்பிட முடியாது. நாட்டில் மீண்டும் அரசியல் நெருக்கடி தோற்றம் பெறக்கூடாது என்பதற்காக ஒன்றிணைந்து செயற்படுகிறோம். தேர்தல் அறிவிக்கப்பட்டவுடன் நாட்டு மக்கள் அரசியல் ரீதியில் தீர்மானம் எடுக்கலாம்.

எதிர்க்கட்சித் தலைவர் சஜித் பிரேமதாசவின் பாராளுமன்ற உரை தொடர்பில் கடும் விமர்சனங்கள் காணப்படுகின்றன. சபைக்கு பொருந்தாத, வெறுக்கத்தக்க சொற்களை பயன்படுத்தி ஆளும் தரப்பின் உறுப்பினர்களை சாடுகிறார், ஆத்திரமூட்டும் வகையில் கருத்துக்களை குறிப்பிடுகிறார்.

கடந்த செவ்வாய்க்கிழமை பாராளுமன்றத்தில் இடம்பெற்ற சம்பவத்துக்கு எதிர்க்கட்சித் தலைவரே பொறுப்புக்கூற வேண்டும்.

எதிர்க்கட்சித் தலைவரின் கருத்துக்கள் தொடர்பில் உரிய நடவடிக்கை எடுங்கள் அல்லது எதிர்க்கட்சித் தலைவரின் பாராளுமன்ற உரையை நேரலையாக ஒளிபரப்புவதை தாமதப்படுத்துமாறு சபாநாயகரிடமும், சபை முதல்வரிடமும் வலியுறுத்தியுள்ளோம் என்றார்.

## திடீர் சுற்றிவளைப்பில்...

ஒழுங்கமைக்கப்பட்ட குற்றக் கும்பல் உறுப்பினர்கள், அதிகரித்த குற்றங்கள் மற்றும் போதைப்பொருள்கள் உள்ளிட்ட காரணங்களைக்கருத்திற் கொண்டு பொலிஸ் அதிகாரிகள் 138 பேர் மற்றும் இராணுவ அதிகாரிகள் 200 பேர் இணைந்து இந்த சுற்றிவளைப்பை மேற்கொண்டனர்.

மேல் மாகாணத்திற்குப் பொறுப்பான சிரேஷ்ட பிரதிப் பொலிஸ் மா அதிபர் தேசபந்து தென்னகோன், மேல் மாகாணம் தெற்கிற்குப் பொறுப்பான பிரதிப் பொலிஸ் மா அதிபர் கயங்க மாரப்பன, மேல் மாகாண தெற்கு குற்றப் பிரிவின் பணிப்பாளர், பொலிஸ் அத்தியட்சகர் லலித் அபேசேகர ஆகியோரின் பணிப்புரைக்கமைய இந்த நடவடிக்கை மேற்கொள்ளப்பட்டுள்ளதாக தெரிவிக்கப்படுகின்றது.

இந்த நடவடிக்கையின் கீழ், 61 வீடுகள் மற்றும் 196 நபர்கள் சோதனை செய்யப்பட்டனர். இதன்போது ஹெரோயின், ஐஸ், சட்டவிரோத மதுபானம், வாள்கள், தடைசெய்யப்பட்ட கத்திகள் மற்றும் 12 கையடக்கத் தொலைபேசிகள் கண்டுபிடிக்கப்பட்டுள்ளன. இந்த நடவடிக்கையில் 40 சந்தேக நபர்கள் கைது செய்யப்பட்டுள்ளதாக தெரிவிக்கப்பட்டுள்ளது.

## வைத்தியர்களின் சம்பளம்...

இந்த பிரேரணையின் பிரகாரம், முதன்முறையாக சேவையில் சேரும் வைத்தியர் ஒருவரின் அடிப்படை சம்பளத்தை எழுபத்தைந்தாயிரம் ரூபாவாக அதிகரிக்க முன்மொழியப்பட்டுள்ளது. தற்போது வைத்தியர் ஒருவருக்கு ஆரம்பகட்ட சம்பளமாக 54,000 ரூபாய் வழங்கப்படுகின்றமை குறிப்பிடத்தக்கது.

இந்த பிரேரணையின் பிரகாரம், முதன்முறையாக சேவையில் சேரும் வைத்தியர் ஒருவரின் அடிப்படை சம்பளத்தை எழுபத்தைந்தாயிரம் ரூபாவாக அதிகரிக்க முன்மொழியப்பட்டுள்ளது.

## சட்டவிரோத நினைவேந்தலுக்கு...

பேச்சாளர், சிரேஷ்ட பொலிஸ் அத்தியட்சகர் நிஹால் தல்துவ தெரிவித்தார். வடக்கு, கிழகில் உள்ள எட்டு மாவட்டங்களிலும் மாவீரர் நினைவேந்தல் நிகழ்வுகள் நேற்று ஞாயிற்றுக்கிழமை (26) எழுச்சியுடன் முன்னெடுப்பதற்கான ஏற்பாடுகள் நிறைவுக்கு வந்துள்ள நிலையிலேயே அவர் மேற்கண்டவாறு தெரிவித்துள்ளர்.

இலங்கை இராணுவத்தின் ஓய்வு பெற்ற புலனாய்வு அதிகாரியினால் தாக்கல் செய்யப்பட்ட மனு மேன்முறையீட்டு நீதிமன்றத்தில் விசாரணைக்கு எடுத்துக்கொள்ளப்பட்டபோது, தமிழீழ விடுதலைப் புலிகளின் மாவீரர் தினத்தை நினைவுகூர முயற்சிப்பவர்கள் மீது குற்றவியல் நடைமுறைச் சட்டத்தின் கீழ் நடவடிக்கை எடுக்கப்படுமென பொலிஸ் மா அதிபர் மற்றும் பயங்கரவாத தடுப்பு பிரிவின் பணிப்பாளர் மேன்முறையீட்டு நீதிமன்றில் உறுதியளித்துள்ளனர்.

இந்நிலையில், குறித்த விடயம் உள்ளிட்ட உரிய பணிப்புரைகள் மாகாண பொலிஸ் பிரதானிகளுக்கு அனுப்பி வைக்கப்பட்டுள்ளது. அந்தவகையில் சட்டத்துக்கு எதிரான முறையில் நினைவேந்தல் செயற்பாடுகளை முன்னெடுப்பவர்களுக்கு எதிராக குற்றவியல் நடைமுறைச் சட்டத்தின் கீழ் பாரபட்சமின்றி நடவடிக்கைகள் முன்னெடுக்கப்படும்.

ஆகவே இவ்விதமான நிகழ்வுகளில் பங்கேற்பவர்கள் சட்டத்தினை மீறும் போது உரிய நடவடிக்கைகள் எடுக்கப்படும் என்பதில் கவனத்தில் கொள்ள வேண்டும் என்றார்.


# இன்றைய பலன்கள்

## ( 27. 11. 2023 )




கலாநிதி சிவஸ்ரீ இராமசந்திர குருக்கள் பாபு சர்மா
(ஸ்ரீ வித்யா ஜோதிட நிலையம் கொழும்பு)


**மேஷம்:**
மனதுக்கு பிடிக்காத இடத்திற்கு சென்று வரவேண்டி இருக்கும். தொழில் வியாபாரம் தொடர்பாக பயணங்கள் சென்று வரவேண்டி இருக்கும்.




**ரிஷபம்:**
வீடு, வாகனங்கள் வாங்கும் நிலை உருவாகும். தொழில், வியாபாரம் முன்னேற்றம் காணப்படும். வியாபார வளர்ச்சிக்கு புதிய திட்டங்களை தீட்டுவீர்கள்.



**மிதுனம்:**
தொழில், வியாபாரம் மிகவும் சிறப்பாக நடைபெறும். வியாபாரம் மற்றும் தொழிலை விரிவுபடுத்துவது பற்றி திட்டங்களை செயல்படுத்துவீர்கள்.



**கடகம்:**
தொழில் வியாபாரத்தில் இருப்பவர்கள் வாக்கு வன்மையால் எளிதாக தங்களது தொழில் மற்றும் வியாபாரத்தில் நல்ல லாபம் கிடைக்க பெறுவார்கள்.




**சிம்மம்:**
புதுவியாபாரம் தொடர்பான முயற்சிகள் சாதகமான பலன் தரும். கடித போக்குவரத்து மூலம் தொழில் வியாபாரத்தில் லாபம் கிடைக்கும்.




**கன்னி:**
தொழில் வியாபாரம் தொடர்பாக அலைச்சல் உண்டாகும். புதிய ஆர்டர்கள் கிடைப்பதில் தாமதம் ஏற்படலாம்.



**துலாம்:**
எதையும் திட்டமிட்டு செய்வதன்மூலம் சாதகமான பலன் கிடைக்கும்.வியாபாரத்தில் பங்குதாரர்களுடன் ஆலோசனை செய்து வியாபாரத்தை மேற்கொள்வது கூடுதல் லாபம் கிடைக்க வழிசெய்யும்.



**விருச்சிகம்:**
விவேகம் உண்டாகும். தொழில் வியாபாரம் தொடர்பான விஷயங்கள் சாதகமாக நடந்து முடிய திறமையாக செயல்படுவீர்கள்.



**தனுசு:**
எந்த காரியங்களில் ஈடுபட்டாலும் மன தடுமாற்றம் இல்லாமல் இருப்பது நல்லது. தொழில் வியாபாரம் தொடர்பான காரியங்களில் இழுபறியான நிலை காணப்படும்.



**மகரம்:**
தொழில் வியாபாரம் வேகம் பிடிக்கும். புதிய ஆர்டர்கள் கிடைக்கும். தொழில் வியாபாரம் பற்றி மனதில் இருந்த கவலை நீங்கி தைரியம் உண்டாகும்.



**கும்பம்:**
நீண்ட நாட்களாக இருந்து வந்த பிரச்னை தீரும். தொழில் வியாபாரம் தொடர்பான விஷயங்கள் கூடுதல் முயற்சிக்கு பிறகு எதிர்பார்த்தபடி நடந்து முடியும்.



**மீனம்:**
தொழில் வியாபாரம் தொடர்பான அலைச்சல் இருக்கும். வாடிக்கையாளர்களிடம் சாமர்த்தியமாக பேசுவதன் மூலம் வியாபாரம் வளர்ச்சி பெறும்.



## உயிரிழந்த தமிழ்... (3ஆம் பக்க தொடர்ச்சி)

அம்பாறை திருக்கோவில் பொலிஸ் நிலையத்தில் கடமையாற்றி, பின்னர் ஜா – எல பொலிஸ் நிலையத்தில் பணியாற்றி வந்தவர் ஆவார்.

## பூஸ்ஸ சிறையில்... (3 ஆம் பக்க தொடர்ச்சி)

எவ்வாறாயினும், சம்பவம் தொடர்பில் மேலும் இரண்டு சிறைச்சாலை அதிகாரிகள் இரண்டு பேருக்கு பணி இடைநிறுத்தக் கடிதங்கள் வழங்கப்பட்டுள்ளதாக சிறைச்சாலைகள் ஆணையாளர் மேலும் குறிப்பிட்டுள்ளார்.

## மூன்றாவது... (3 ஆம் பக்க தொடர்ச்சி)

இதேவேளை, எரிவாயு மற்றும் நீராவி விசையாழியின் பராமரிப்பு பணிகள் காரணமாக களனிதிஸ்ஸ அனல் மின் நிலையம் கடந்த 17 ஆம் திகதி முதல் 6 வார காலத்திற்கு மூடப்பட்டுள்ளது. மழையுடனான வானிலையால் தற்போது நாளாந்த மின்னுற்பத்தியில் 64% மின்சாரம், நீர் மின்னுற்பத்தி ஊடாகவே பெறப்படுகின்றது.

## சீன ஜனாதிபதி... (3 ஆம் பக்க தொடர்ச்சி)

ரப்பர் அரிசி ஒப்பந்தம் இரு நாடுகளுக்கிடையேயான பொருளாதார, சமூக மற்றும் அரசியல் நிலைமைகள் குறித்து புலமைப் பரிசில் மூலம் சீன வெளிநாட்டு ஆய்வு பல்கலைக்கழகத்தில் மூன்றாண்டு ஆய்வு ஆய்வறிக்கையை சமர்ப்பித்து கலாநிதி பட்டம் பெற்றேன். சமூகத்தில் பெரும்பான்மையான மக்கள் வறுமை, ஊட்டச்சத்து குறைபாடு மற்றும் வேலையில்லா திண்டாட்டம் இல்லாமல் மகிழ்ச்சியாக வாழும் பொருளாதாரத்தை உருவாக்க ஜி ஜின்பிங்கின் ஆட்சியில் தொழில்நுட்ப மற்றும் சமூக அணுகுமுறைகள், நெறிமுறைகள், புள்ளிவிவரங்கள் போன்றவற்றில் பல புரட்சிகரமான மாற்றங்கள் நிகழ்ந்துள்ளன என்றார்.

## அத்தியாவசிய பொருட்கள்...

ஒன்றில் கலந்துகொண்டபோதே அமைச்சர் இதனைத் தெரிவித்துள்ளார்.

பண்டிகை காலத்தை அடிப்படையாகக் கொண்டே இந்த விலை குறைப்பு மேற்கொள்ளப்படவுள்ளது. அத்துடன், நாட்டில் நிலவும் சம்பா அரிசி தட்டுப்பாட்டை நிவர்த்திப்பதற்கான வழிமுறைகள் குறித்தும் இதன்போது கலந்துரையாடப்பட்டுள்ளதாக தெரிவிக்கப்பட்டுள்ளது.

## பக்தர்களை மெய்சிலிர்க்க வைத்த...

பரவசப்படுத்தியுள்ளது. காட்சி கொடுத்த நாக பாம்பின் புகைப்படங்கள் சமூக வலைத்தளங்களில் வைரலாகி வருகின்றன. இதேவேளை, எதிர்வரும் தை மாதம் நயினாதீவு நாகபூசணி அம்மன் ஆலய கும்பாவிஷேகம் நடைபெறவுள்ளது. தற்போது, ஆலயத்தில் புனருத்தாரண வேலைகள் இடம்பெற்று வருகின்றமை குறிப்பிடத்தக்கது.

## யாழ். பல்கலை பேராசிரியர்கள்...

சிரேஷ்ட விரிவுரையாளருமான கலாநிதி ஈ.சி. ஜெயசீலன், கணிதவியலும் புள்ளிவிபரவியலும் துறையைச் சேர்ந்த சிரேஷ்ட விரிவுரையாளர் கலாநிதி கே.கண்ணன், கலைப்பீடத்தின் கல்வியியல் துறையின் சிரேஷ்ட விரிவுரையாளர் கலாநிதி (திருமதி) ஜே. இராசநாயகம் ஆகியோரை பேராசிரியர்களாக பதவி உயர்த்துவதற்கு பல்கலைக்கழகப் பேரவை சனிக்கிழமை (25) நடவடிக்கை எடுத்துள்ளது. பல்கலைக்கழக பேரவையின் மாதாந்த கூட்டம் துணைவேந்தர் பேராசிரியர் சி. சிறிசற்குணராஜா தலைமையில் இடம்பெற்றது. பல்கலைக்கழக மானியங்கள் ஆணைக்குழுச் சுற்றறிக்கை நியமங்களுக்கமைய, திறமை அடிப்படையில் பேராசிரியர் பதவிக்கு விண்ணப்பித்தவர்களின் மதிப்பீடு மற்றும் நேர்முகத் தேர்வு முடிவுகள் இன்றைய பேரவைக் கூட்டத்தில் சமர்ப்பிக்கப்பட்டன.

அதன்படி, கலாநிதி ஈ.சி. ஜெயசீலன் தாவரவியலில் பேராசிரியராகவும், கலாநிதி கே.கண்ணன் கணிதவியலில் பேராசிரியராகவும், கலாநிதி (திருமதி) ஜே. இராசநாயகம் கல்வியியலில் பேராசிரியராகவும் பதவி உயர்த்தப்பட்டுள்ளனர்.

# புதிய பொலிஸ் மா அதிபர் தொடர்பில் அடுத்த வாரம் அறிவிப்பு வெளிவரும்

## தீர்மானம் மிக்க உயர்மட்ட கலந்துரையாடல் இன்று

**லோரன்ஸ் செல்வநாயகம்**

புதிய பொலிஸ் மா அதிபரை நியமிப்பது தொடர்பில் தீர்மானம் மிக்க உயர்மட்ட கலந்துரையாடலொன்று இன்றைய தினம் நடைபெறவுள்ளதாக அரசாங்க வட்டாரங்கள் தெரிவிக்கின்றன.

அந்த வகையில் புதிய பொலிஸ் மா அதிபரை நியமிப்பது தொடர்பில் அடுத்த வாரம் அறிவிக்கப்படும் என்றும் அந்த வட்டாரங்கள் தெரிவிக்கின்றன.

புதிய பொலிஸ் மா அதிபரை நியமிப்பது தொடர்பில் அண்மையில் உயர்மட்ட கலந்துரையாடல் ஒன்று இடம்பெற்ற போதும் அது தொடர்பில் இறுதித் தீர்மானம் எதுவும் அக் கலந்துரையாடலில் மேற்கொள்ளப்படவில்லை.

பொலிஸ் மா அதிபர் சி டி விக்ரமரட்ன கடந்த வெள்ளிக்கிழமை ஓய்வு பெற்றார். அவர் கடந்த மார்ச் மாதம் 25ஆம் திகதி பதவியிலிருந்து ஓய்வு பெற இருந்த நிலையில் ஜனாதிபதி ரணில் விக்கிரமசிங்க அவருக்கு நான்கு தடவைகள் சேவை நீடிப்பை வழங்கியிருந்தார்.

அதேவேளை, புதிய பொலிஸ் மா அதிபர் நியமனம் தொடர்பில் நியமனப் பத்திரத்தை அடுத்த வாரம் அரசியலமைப்பு பேரவைக்கு ஜனாதிபதி அனுப்பவுள்ளதாகவும் தெரிவிக்கப்படுகிறது. எனினும் அரசியலமைப்பு பேரவை அமர்வுக்கான திகதி இதுவரை தீர்மானிக்கப்படவில்லை என்றும் அது தொடர்பான திகதி இன்றைய தினம் அறிவிக்கப்படலாம் என்றும் அந்த வட்டாரங்கள் மூலம் தெரியவருகிறது.

## சீனன்கோட்டை அல்ஸலாஹில் ஹிப்ழ் மாணவர்கள் கௌரவிப்பு



பேருவளை சீனன்கோட்டை அல் ஸலாஹ் அரபுக் கல்லூரியில் அல்குர்ஆனை முழுமையாக மனனமிட்ட இரு மாணவர்களான அல்ஹாபிழ் யூசுப் ரியாஸ், அல்ஹாபிழ் சுஹைல் சிராஜ் ஆகியோர் ஒரே நாளில் அல்குர்ஆனை முழுமையாக ஓதும் நிகழ்வு நேற்று (26) அதிகாலை 4.00 மணிக்கு ஆரம்பிக்கப்பட்டு இஷா தொழுகையோடு நிறைவு பெற்றது. இந்நிகழ்வில் சீனன்கோட்டை பள்ளிச்சங்கத் தலைவர் அல்ஹாஜ் ஏ.ஆர்.எம் முக்தார் உட்பட ஸலாஹ் மத்ரஸா நிர்வாக சபை உறுப்பினர்கள், ஊர் பிரமுகர்களும் கலந்து சிறப்பித்தனர்.

இஷாத் தொழுகையின் பின்னர் நடைபெற்ற கௌரவிப்பு நிகழ்வில் மேற்படி இரு மாணவர்களும் பெறுமதியான பரிசுகள் வழங்கி ஊர் பிரமுகர்களால் கௌரவிக்கப்பட்டமை விசேட அம்சமாகும்.

**எதிர்க்கட்சித் தலைவர் உரையாற்றும் போது**

# மாணவர்களை கலரியில் அனுமதிக்க வேண்டாம்

# நேரடி ஒளிபரப்பையும் தடுக்க நடவடிக்கை எடுக்க வேண்டும்

**ஆளும் கட்சி எம்பி திஸ்ஸ குட்டியாராச்சி சபையில் வலியுறுத்து**

**லோரன்ஸ் செல்வநாயகம்**



எதிர்க்கட்சித்தலைவர் சஜித் பிரேமதாச சபையில் தவறான வார்த்தை பிரயோகங்களை மேற்கொள்வதால் மாணவர்களை பாராளுமன்ற பார்வையாளர் கலரிக்கு அந்த சந்தர்ப்பத்தில் அனுமதிக்க வேண்டாம் என்றும் அவர் பேசும் போது சபை நடவடிக்கைகள் நேரடியாக ஒளிபரப்பப்படுவதனையும் நிறுத்த வேண்டும் என்றும் ஆளும் கட்சி எம்பி திஸ்ஸ குட்டியாராச்சி சபையில் வலியுறுத்தினார்.

பாராளுமன்றத்தில் சிறப்புரிமை மீறல் பிரச்சினையை முன் வைத்து இவ்வாறு வலியுறுத்திய அவர் எதிர்கட்சித்தலைவரின் இவ்வாறான மோசமான செயற்பாடுகளினால் ஒட்டுமொத்த எம்.பி.க்களினதும் சிறப்புரிமைகள் மீறப்படுகின்றன என்றும் தெரிவித்தார்.

அது தொடர்பில் அவர் மேலும் தெரிவிக்கையில்,

எதிர்க்கட்சித்தலைவர் சஜித் பிரேமதாச சபையில் மிக அநாகரிகமாக பேசுகின்றார். தவறான வார்த்தைப் பிரயோகங்களைப் பயன்படுத்துகின்றார்.

அவர் உரையாற்றும் சந்தர்ப்பத்தில் பார்வையாளர் கலரியில் பெருமளவான மாணவர்களும் ஆசிரியர்களும் அமர்ந்திருக்கின்றனர்.

அவர்கள் இதனைப் பார்த்து பாராளுமன்றம் தொடர்பிலும் எம்.பி.க்கள் தொடர்பிலும் தவறான அர்த்தத்தையே ஏற்படுத்திக்கொள்வர்.

அத்துடன் பாராளுமன்ற விவாதங்கள் நேரலையில் ஒளிபரப்பப்படுவதனால் நாட்டு மக்களும் இவ்வாறான தவறான கருத்துக்களையே கொண்டிருப்பர்.

எதிர்கட்சித்தலைவரின் இவ்வாறான மோசமான செயற்பாடுகளினால் ஒட்டுமொத்த எம்.பி.க்களினதும் சிறப்புரிமைகள் மீறப்படுகின்றன.

அதனைக் கவனத்திற் கொண்டு எதிர்க்கட்சித்தலைவர் சபையில் பேசும்போது மாணவர்களை பாரவையாளர் கலரிக்கு அனுமதிக்க வேண்டாம் என்றும் அதேவேளை அவர் உரையாற்றும் சந்தர்ப்பங்களில் சபைநடவடிக்கைகள் நேரடியாக ஒளிபரப்பப்படுவதனையும் நிறுத்த வேண்டும் என்றும் அவர் மேலும் தெரிவித்தார்.

## கிராம சேவை அதிகாரிகள் நியமனம்; டிசம்பர் 2ஆம் திகதி பரீட்சை

**லோரன்ஸ் செல்வநாயகம்**

நாடளாவிய ரீதியில் நிலவும் அனைத்து கிராம சேவகர் உத்தியோகத்தர்களுக்கான வெற்றிடங்களையும் நிரப்புவதற்கு நடவடிக்கை எடுக்கப்பட்டுள்ளதாக உள்நாட்டலுவல்கள் இராஜாங்க அமைச்சர் அசோக ப்ரியந்த தெரிவித்துள்ளார்.

அதற்கிணங்க எதிர்வரும் பெப்ரவரி மாதம் 4ஆம் திகதி சுதந்திர தினத்திற்கு முன்பதாக அனைத்து வெற்றிடங்களையும் நிரப்புவதற்கு நடவடிக்கை எடுக்கப்படும் என்றும் அவர் தெரிவித்துள்ளார்.

நிகழ்வொன்றில் கலந்து கொண்ட பின்னர் ஊடகவியலாளர்களுக்கு கருத்து தெரிவிக்கும் போதே அவர் இவ்வாறு தெரிவித்துள்ளார்.

அந்த வகையில் 2021 ஆம் ஆண்டு கிராம சேவை உத்தியோகத்தர் பதவிக்காக விண்ணப்பித்து தகமைகளை பெற்றுக் கொண்டுள்ள விண்ணப்பதாரர்களுக்கு டிசம்பர் எதிர்வரும் டிசம்பர் 2ஆம் திகதி பரீட்சை திணைக்களத்தினால் அவர்களுக்கான பரீட்சை நடத்தப்பட உள்ளது உள்ளது.

இந்த பரீட்சை மூலம் நாடளாவிய ரீதியில் நிலவும் கிராம சேவை அதிகாரிகளின் வெற்றிடத்தை நிரப்பும் வகையில் 2,238 பேர் தெரிவு செய்யப்படவுள்ளதாகவும் அவர் மேலும் தெரிவித்தார்.


நிதி அமைச்சு

**ஊழியர் நம்பிக்கை பொறுப்பு நிதியச் சபை**

**ETF அறிவித்தல்**

**2023 ஆம் ஆண்டில் 5ஆம் வருட புலமைப்பரிசிலில் சித்தியடைந்த ETF அங்கத்தவர்களின் பிள்ளைகளுக்கு நிதி உதவி வழங்குவதற்கான விண்ணப்பகோரல்**

வெட்டுப்புள்ளிக்கு மேலாக பெற்றுக்கொண்ட 2023 ஆம் ஆண்டில் 5ஆம் வருட புலமைப்பரிசிலில் சித்தியடைந்த ஊழியர் நம்பிக்கை பொறுப்பு நிதிய அங்கத்தவர்களின் ஒவ்வொரு பிள்ளைக்கும் பதினைந்தாயிரம் ரூபாய் (15,000/- ரூபா) பெறுமதியான 9,000 புலமைப்பரிசில்களை வழங்குவதற்கு ஊழியர் நம்பிக்கை பொறுப்பு நிதியச் சபையானது தீர்மானித்துள்ளது.

**விண்ணப்பங்களை எப்படி பெற்றுக்கொள்ளலாம்**

➢ **www.etfb.lk** என்ற இணையத்தளத்தில் 5ஆம் வருட புலமைப்பரிசில் விண்ணப்பத்தின் 3 பகுதிகளை பூர்த்தி செய்து தேவையான ஆவணங்களைப் பதிவேற்றவும்.

மேலதிக விபரங்களுக்கு : நேரடியாக அல்லது தொடர்பு கொள்ளவும்.

**தலைமை அலுவலகம் :** புலமைப்பரிசில் பிரிவு - "மெஹெவர பியச", 19 ம் மாடி, நாராஹேன்பிட்டி, கொழும்பு-05.

**பிராந்திய அலுவலகங்கள்:**

01. **கம்பஹா** 6 ஆம் மாடி, லக்ஷியனே மந்திரய, கம்பஹா. தொ.இல : 033-2234520 / 033-4922530/033-2320602
02. **கண்டி** இல.79, வீடமைப்பு செயலகம், யட்டிநுவர வீதி, கண்டி. தொ.இல : 081-2233793/081-2237525, 081-2232446
03. **இரத்தினபுரி** இல. 53/1/2, சேனநாயக்க மாவத்தை, இரத்தினபுரி. தொ.இல : 045-2222529 / 045-2222930
04. **காலி** இல. 30/1, ஸ்ரீ தேவமித்த வீதி, காலி. தொ.இல : 091-2245814 / 091-2231129
05. **அனுராதபுரம்** இல. 87/25, 1ம் ஒழுங்கை, தர்மபால மாவத்தை, அனுராதபுரம். தொ.இல : 025-2222185 / 025-2222150
06. **மாத்தறை** இல. 63/02, காளிதாச மாவத்தை, மாத்தறை. தொ.இல : 041-2231877 / 041-2237607/041-2224366
07. **களுத்துறை** இல. 294, காலி வீதி, களுத்துறை வடக்கு. தொ.இல : 034-2237722 / 034-2223040
08. **கேகாலை** இல. 247/1, கொழும்பு வீதி, கேகாலை. தொ.இல : 035-2222991
09. **குருநாகல்** இல. 27, செஞ்சிலுவை கட்டிடம், கச்சேரி வீதி, குருநாகல். தொ.இல : 037-2228194 / 037-2056394
10. **ஹம்பாந்தோட்டை** இல. 57, வில்மட் வீதி, ஹம்பாந்தோட்டை. தொ.இல : 047-2222460 / 047-2222462
11. **பதுளை** இல. 9B, கங்கபட வீதி, பதுளை. தொ.இல : 055-2225357 / 055-2224482
12. **அம்பாறை** இல. 693, மல்வத்த வீதி, அம்பாறை. தொ.இல : 063-2222845
13. **யாழ்ப்பாணம்** இல. 20, 2ஆம் மாடி, Main Street, Jaffna தொ.இல : 021-2220010
14. **வவுனியா** இல. 69/1/1, மில் வீதி, வவுனியா. தொ.இல : 024-2228225
15. **திருகோணமலை** இல. 455, ஆண்டான்குளம், கண்டி வீதி, திருகோணமலை. தொ.இல : 026-2056606 / 026-2056607
16. **நுவரெலியா** இல. 56, லோசன் வீதி, நுவரெலியா. தொ.இல : 052-2224457 / 052-2224475

**விண்ணப்பங்களை ஏற்றுக்கொள்ளும் முடிவுத் திகதி: 2024/01/12**

பூரணமற்ற மற்றும் இறுதித்திகதிக்கு பின்னர் கிடைக்கப் பெறும் விண்ணப்பங்கள் எந்த காரணத்திற்காகவும் ஏற்றுக்கொள்ளப் படமாட்டாது.
உரியமுறையில் பூர்த்தி செய்யப்பட்ட விண்ணப்பங்களை பதிவுத் தபாலில் பின்வரும் முகவரிக்கு அனுப்பி வைக்க முடியும்.
புலமைப்பரிசில் பிரிவு, ஊழியர் நம்பிக்கை பொறுப்பு நிதியச் சபை, "மெஹெவர பியச",
19 ம் மாடி, நாராஹேன்பிட்டி, கொழும்பு-05.

தவிசாளர்/பிரதான நிறைவேற்று அலுவலகர்
ஊழியர் நம்பிக்கை பொறுப்பு நிதியச் சபை
மேலதிக விபரங்களுக்கு: புலமைப்பரிசில் அலுவலர் - 011-7747281 / 011-7747282



**அழகியற்கலை பல்கலைக்கழகம்**

**கொழும்பு-07**

**வழங்குநர்கள் மற்றும் ஒப்பந்தக்காரர்களைப் பதிவு செய்தல் — 2024**

அழகியற்கலை பல்கலைக்கழகத்திற்கு 2024ஆம் வருடத்தில் கீழே குறிப்பிடப்பட்டுள்ள பொருட்கள், சேவைகள் மற்றும் வேலைகளுக்காக பதிவு செய்துகொள்ள விரும்பும் உற்பத்தியாளர்கள், ஒப்பந்தக்காரர்கள், விநியோகஸ்தர்கள், முகவர்கள், தனிநபர் வர்த்தக கம்பனிகள், கூட்டுத்தாபனம் மற்றும் கூட்டுத்தாபன நிறுவனங்களிடமிருந்து விண்ணப்பங்கள் கோரப்படுகின்றன.

**பொருட்கள் பெறுகை**

01. அலுவலக காகிதாதி மற்றும் பாவனைப் பொருட்கள்
02. நடனம் மற்றும் நாடக கலாபீடத்தின் நடவடிக்கைகளுக்குத் தேவையான பொருட்கள் மற்றும் உபகரணம்
03. இசை பீடத்தின் கல்வி நடவடிக்கைகளுக்காகத் தேவைப்படும் உபகரணம் மற்றும் பொருட்கள்
04. கட்புலக் கலை பீடத்தின் கல்வி நடவடிக்கைகளுக்குத் தேவையான பொருட்கள், உபகரணங்கள்
05. சிற்றுண்டிச்சாலை உபகரணங்கள்
06. மோட்டார் வாகன உதிரிப்பாகங்கள்
07. விளையாட்டுத்துறை பொருட்கள் மற்றும் விளையாட்டு உடைகள்
08. சீருடைத் துணிகள் மற்றும் யன்னல் திரைகள்
09. பாதுகாப்பு உபகரணம்
10. தீயணைக்கும் உபகரணம்
11. பட்டதாரி அங்கிகளை வழங்கல்

**சேவைகளின் பெறுகை**

12. உபகரணங்களின் திருத்தவேலைகள்
13. அச்சிடும் வேலைகள் மற்றும் புத்தகம் கட்டுதல்
14. கதிரை இழைத்தல்
15. மோட்டார் வாகன திருத்தவேலைகள் (ஒட்டோ ஏசீ, ஒட்டோ இலெக்ட்ரிகல், டிங்கரிங் பண்ணல், நிறப்பூச்சு மற்றும் இயந்திர திருத்தவேலைகள், குஷன் வேலைகள்)
16. வாகனங்களை சேர்விஸ் செய்தல்
17. தோட்ட அலங்காரங்கள், கட்டிடங்கள் உள்ளக அலங்கரிப்பு ஒப்பந்தக்காரர்கள் (திரைச்சீலை, வர்டிகல் பிளைன்ட்ஸ், கண்ணாடி ஸ்டிக்கர் செய்வோர்)
18. தொழிலாளர் சேவைகளை வழங்கல்
19. பொருட்கள் மற்றும் பயணிகள் சேவை
20. மண் தோண்டும், அழுத்தும் இயந்திரம், லொறி, டிப்பர் வண்டி உட்பட வாடகைக்கு வழங்கும் ஒப்பந்தக்காரர்கள்
21. வைபவங்களுக்கான தற்காலிக கூடாரங்களை (Canopies, Tent) வாடகைக்கு வழங்குதல்
22. உணவு, பானங்களை வழங்குதல்
23. நூலகப் புத்தகங்கள், வார சஞ்சிகைகள் (வெளியீட்டாளர்கள் மற்றும் உள்ளூர் பிரதிநிதிகள்)
24. வைபவங்களுக்காக மலர்களை அமைத்தல்
25. பட்டமளிப்பு விழாக்களின்போது புகைப்படமெடுத்தல் மற்றும் வீடியோ படமெடுத்தல்
26. பட்டதாரி அங்கி மற்றும் திரைச்சீலை கழுவும் சேவைகள்

**வேலை பெறுகைகள்**

27. கணனி வலையமைப்பிடுதல்
28. அலுமினிய ஒப்பந்தக்காரர்கள் (அலுமினியம் பார்டிஷன், ஜிப்சம் போர்ட் பார்டிஷன், சஸ்பெண்டட் சீலின், MDF பார்டிஷன்)
29. வீதி நிர்மாண ஒப்பந்தக்காரர்கள்
30. கட்டிட நிர்மாணம், நிறப்பூச்சிடல், திருத்தவேலைகள் மற்றும் பராமரிப்பு வேலைகள் (ICTAD/CIDA சான்றிதழ் பிரதியொன்றை விண்ணப்பத்துடன் சமர்ப்பித்தல் வேண்டும்)

மேற்படி பொருள் மற்றும் சேவைக்காக பதிவு செய்துகொள்ள விரும்பும் விண்ணப்பதாரர்கள் அழகியற்கலை பல்கலைக்கழகத்தின் வழங்கல் பிரிவிலிருந்து குறித்த விபரங்கள் மற்றும் விண்ணப்பங்களைப் பெற்றுக்கொள்ளலாம் என்பதுடன், அவ்விண்ணப்பத்தை பற்றுச்சீட்டுடன் இணைத்து நிதியாளர் அழகியற்கலை பல்கலைக்கழகம், இலக்கம் 21, எல்பர்ட் கிரசண்ட், கொழும்பு-07 என்ற முகவரிக்கு 2023 டிசம்பர் 22ஆம் திகதி அல்லது அதற்கு முன்னர் பதிவுத் தபால் மூலம் அனுப்பி வைத்தல் வேண்டும். ஒவ்வொரு வகுதியின் கீழ் பதிவு செய்து கொள்வதற்கு 1500.00 ரூபா கட்டணம் அறவிடப்படும் என்பதுடன் இந்தக் கட்டணத்தை, அழகியற்கலை பல்கலைக்கழகத்தின் சிறாப்பருக்கு (சிறாப்பர் கருமபீடம் திறக்கப்படும் நேரம் மு.ப. 9.00 முதல் பி.ப. 3.00 வரை) அல்லது இணையதளத்தின் ஊடாக செலுத்தலாம். மேலும் இலங்கை வங்கி, டொரிங்டன் கிளையில் பேணப்படும் 84072227 எனும் கணக்கிலக்கத்திற்கு ''அழகியற்கலை பல்கலைக்கழகம்'' எனும் பெயரில் எழுதப்பட்ட வரவுப்படிவத்தின் மூலம் செலுத்தலாம்.

விண்ணப்பங்கள் அனுப்பப்படும் தபாலுறையின் இடது பக்க மேல் மூலையில் "2024ஆம் வருடத்திற்காக வழங்குநர்கள் மற்றும் ஒப்பந்தக்காரர்களைப் பதிவு செய்தல்" என தெளிவாகக் குறிப்பிடுதல் வேண்டும்.

எதிர்காலத்தில் சகல அரச நிறுவனங்களும் நிதி அமைச்சினால் அறிமுகப்படுத்தப்பட்டுள்ள இலத்திரனியல் பெறுகை இணையதளத்தின் **(promise.lk)** மூலம் பெறுகை நடவடிக்கைகளை மேற்கொள்ள உத்தேசித்துள்ளதால் மேற்கூறப்பட்ட பதிவு செய்யும் செயற்பாட்டிற்கு இணைவாக (promise.lk) இணையதளத்தினுள் பதிவு செய்வதற்கு நடவடிக்கையெடுத்தல் வேண்டும். மேலதிக விபரங்களை கொழும்பு-07, எல்பர்ட் கிறசண்ட், இலக்கம் 21, அழகியற்கலை பல்கலைக்கழகம் உதவி நிதியாளர் / வழங்கல் அவர்களிடம் 011-2033710 நீடிப்பு 1202/1203 அல்லது 0112026776 என்ற தொலைபேசி இலக்கங்கள் ஊடாக சாதாரண அலுவலக நேரங்களில் பெற்றுக்கொள்ளலாம். (**இணையதளம்: www.vpa.ac.lk**)

**பதிவாளர்,**
**அழகியற்கலை பல்கலைக்கழகம்,**
**கொழும்பு-07.**

# இலங்கை - சவுதி அரேபிய நட்புறவை மேலும் வலுப்படுத்தும் பொருளாதார அமைச்சரின் வருகை

இலங்கைக்கும் சவுதி அரேபியாவுக்கும் இடையில் மிகவும் நெருக்கமான நட்புறவு நீண்ட காலமாக நிலவி வருகின்றது. இப்பின்புலத்தில் இந்நாட்டின் சமூக, பொருளாதார மற்றும் உட்கட்டமைப்பு மேம்பாடுகளுக்காக பல வகையான உதவி ஒத்துழைப்புக்களை நல்கக்கூடியதாக உள்ளது சவுதி.

மத்திய கிழக்கின் பலம் மிக்க நாடாகவும் பொருளாதாரத்தில் பாரிய வளர்ச்சி கண்ட நாடாகவும் முன்னேற்றமடைந்துவரும் சவுதி அரேபியாவின் பொருளாதார மற்றும் திட்டமிடல் அமைச்சர் பைஸல் பின் பாழில் அல் இப்ராஹீம் தற்போது இலங்கைக்கு வருகை தந்துள்ளார்.



சவுதி அரேபியாவின் பொருளாதார மற்றும் திட்டமிடல் அமைச்சர் பைஸல் பின் பாழில் அல் இப்றாஹீம்

'சவுதியின் மன்னரான இரு புனித பள்ளிவாசல்களின் பாதுகாவலர் சல்மான் பின் அப்துல் அஸீஸ் ஆல் ஸஊத் மற்றும் பட்டத்து இளவரசர் முஹம்மத் பின் ஸல்மான் பின் அப்துல் அஸீஸ் ஆல் ஸஊத் ஆகியோரின் ஆலோசனை மற்றும் வழிகாட்டல்களின் கீழ் இலங்கைக்கு விஜயம் செய்யும் இவர், இரு நாடுகளுக்கும் இடையிலான பொருளாதார நட்புறவை மேலும் மேம்படுத்தும் நோக்கில் சந்திப்புக்களையும் பேச்சுவார்த்தைகளையும் மேற்கொள்வார்' என்று கொழும்பிலுள்ள சவுதி அரேபிய தூதரக வட்டாரங்கள் தெரிவித்துள்ளன.

சவுதி அரேபியாவானது மன்னர் சல்மான் பின் அப்துல் அஸீஸ் ஆல் ஸஊத் மற்றும் பட்டத்து இளவரசர் முஹம்மத் பின் சல்மான் பின் அப்துல் அஸீஸ் ஆல் ஸஊத் ஆகியோரின் பதவிக்காலத்தில் பொருளாதார ரீதியில் பாரிய வளர்ச்சி கண்டுள்ளது. குறிப்பாக இளவரசரின் விஷன் 2030 திட்டம் சவுதியின் பொருளாதார வளர்ச்சிக்கு பாரிய பங்களிப்பு நல்கி வருகிறது.

உலகின் இருபது பெரிய பொருளாதாரங்களில் ஒன்றாக விளங்கும் சவுதியின் பொருளாதாரம், அரபுலகிலும் மத்திய கிழக்கிலும் மிகப் பாரியதாகத் திகழுகிறது. ஒபெக் நாடுகள் அமைப்பின் நிரந்தர உறுப்பினராக விளங்கும் சவுதி அவ்வமைப்பின் தலைமையையும் வகிக்கிறது. அத்தோடு ஜி 20 நாடுகள் அமைப்பிலும் நிரந்தர உறுப்பு நாடாக உள்ளது.

உலகின் இரண்டாவது மிகப் பெறுமதி மிக்க இயற்கை கனிய வளங்களைக் கொண்ட நாடான சவுதி, எண்ணெய் ஏற்றுமதியின் முன்னணி நாடாகும். வருடமொன்றுக்கு 35 ட்ரில்லியன் அமெரிக்க டொலர்கள் பெறுமதியான எண்ணெயை ஏற்றுமதி செய்கின்றது. ஐந்தாவது பெரிய நிரூபிக்கப்பட்ட இயற்கை எரிவாயு இருப்புக்களைத் தன்னகத்தே கொண்டுள்ள ஆற்றல் மிக்க தேசமாக சவுதி கருதப்படுகிறது. சவுதி பொருளாதாரத்தின் பிரதான மூலாதாரம் எண்ணெய் ஏற்றுமதியாகும். என்றாலும் சவுதியின் பொருளாதாரம் எண்ணெய் சார்ந்திருப்பதைக் குறைப்பதையும் பொருளாதாரத்தைப் பல்வகைமைப்படுத்துவதையும் பொருளாதார சீர்திருத்தங்களை மேற்கொள்வதையும் நோக்காகக் கொண்டு இளவரசர் முஹம்மத் பின் சல்மான் விஷன் 2030 திட்டத்தை 2016 இல் அறிமுகப்படுத்தினார். இதன் ஊடாக எண்ணெய் அல்லாத வருமான முறைமைகள் ஊடாக 2019 முதல் 2020 வரை சவுதியின் பொருளாதாரம் 2.1 வீதம் வளர்ச்சி கண்டுள்ளது.



நிர்வாக மேம்பாட்டுக்கான சர்வதேச நிறுவனத்தால் வெளியிடப்பட்ட 2019 ஆம் ஆண்டுக்கான உலகளாவிய போட்டித்திறன் அறிக்கையின் படி, ஜி20 நாடுகளின் குழுவில் 7வது இடத்தையும், உலகளாவிய போட்டித் திறன் தரநிலையில் 26வது இடத்தையும் சவுதி பெற்றுள்ளது.

உலகளவில் போட்டித் தன்மை மிக்க பொருளாதாரத்தைக் கொண்ட 63 நாடுகளில் சவுதி அரேபியா 24வது இடத்தில் உள்ளது. கொரோனா பாதிப்பால் ஏற்பட்ட பொருளாதார தாக்கங்களையும் சவுதி அரேபியா சீரமைத்து முன்னேறியுள்ளது. இதன் ஊடாக மத்திய கிழக்கு மற்றும் வளைகுடா நாடுகள் மட்டத்தில் முன்னேற்றமடைந்த நாடாக விளங்குகிறது சவுதி அரேபியா. சவுதியின் வருமானம் பெற்றோலியத்துறை மூலம் சுமார் 45 வீதமாகவும் மொத்த உள்நாட்டு உற்பத்தி மூலம் 45 வீதமாகவும் அமைந்துள்ளது. மொத்த உள்நாட்டு உற்பத்தியில் 40 வீதம் தனியார் துறை மூலம் கிடைக்கப் பெறுவது குறிப்பிடத்தக்கது. இதன்படி மொத்த உள்நாட்டு உற்பத்தி 4.155 ட்ரில்லியன் ரியால்களை எட்டியுள்ளது, இது முதல் முறையாக ஒரு ட்ரில்லியன் ரியால்கள் என்ற உச்ச வரம்பைத் தாண்டி உலகளவில் ட்ரில்லியன் பொருளாதாரங்களின் அமைப்பில் சவுதியை இணைத்துள்ளது.

> **சவுதியின் மன்னரான இரு புனித பள்ளிவாசல்களின் பாதுகாவலர் சல்மான் பின் அப்துல் அஸீஸ் ஆல் ஸஊத் மற்றும் பட்டத்து இளவரசர் முஹம்மத் பின் ஸல்மான் பின் அப்துல் அஸீஸ் ஆல் ஸஊத் ஆகியோரின் ஆலோசனை மற்றும் வழிகாட்டல்களின் கீழ் இலங்கைக்கு விஜயம் செய்யும் இவர், இரு நாடுகளுக்கும் இடையிலான பொருளாதார நட்புறவை மேலும் மேம்படுத்தும் நோக்கில் சந்திப்புக்களையும் பேச்சுவார்த்தைகளையும் மேற்கொள்வார்' என்று கொழும்பிலுள்ள சவுதி அரேபிய தூதரக வட்டாரங்கள் தெரிவித்துள்ளன**

நாட்டின் சனத்தொகை அதிகரிப்புக்கு ஏற்ப வேலைவாய்ப்புகளை உருவாக்கவென தனியார் துறை அரசினால் ஊக்குவிக்கப்படுகிறது. இதன் கீழ் இவ்வாண்டில் 1.18 மில்லியனுக்கும் மேற்பட்ட புதிய தொழில்வாய்ப்புக்கள் உருவாக்கப்பட்டுள்ளன. அவற்றில் 212,000 பேர் பணியாற்றுகின்றனர். அவர்களில் 71 வீதத்தினர் பெண்களாவர். விஷன் 2030 திட்டத்தின் ஊடாக இவ்வாண்டு இறுதிக்குள் சவுதி மக்களிடையே வேலையின்மை விகிதத்தைக் குறைக்க முடிந்துள்ளது. சவுதியின் பொருளாதாரம் மற்றும் தனியார் துறையின் பங்களிப்பின் தொடர்ச்சியான வளர்ச்சியின் பயனாக, 152.8 ஆயிரம் சவுதி ஆண்களும் பெண்களும் தனியார் துறையில் பணிபுரியும் வாயப்பைப் பெற்றுள்ளனர், அவர்களில் 71% பெண்கள், 29% ஆண்களாவர். இவை இவ்வாறிருக்க, மின்சார உற்பத்திகள், தகவல் தொழில்நுட்பத் துறைகளில் தனியார் மற்றும் வெளிநாட்டு முதலீடுகளுக்கு சவுதி அனுமதி வழங்க ஆரம்பித்துள்ளது. 2005 இல் சவுதி அரேபியா உலக வர்த்தக அமைப்பில் இணைந்ததன் பயனாக வெளிநாட்டு முதலீடுகளை கவர்ந்திழுப்பதற்கும் பொருளாதாரத்தை பன்முகப்படுத்துவதற்கும் வாய்ப்பு கிடைக்கப்பெற்றுள்ளது. 1974இல் 32 பில்லியன் ரியால்களாகக் காணப்பட்ட சவுதியின் கைத்தொழில் உற்பத்தி, 2018ஆம் ஆண்டின் இறுதியில் 319.5 பில்லியன் ரியால்கள் வரை வளர்ச்சியடைந்திருந்தது.

இயற்கை கனிய வளங்களில் செல்வச்செழிப்பு மிக்க நாடாகவும் விளங்குகிறது சவுதி. 2 மில்லியன் சதுர கிலோமீற்றர்களுக்கும் மேற்பட்ட பரப்பளவைக் கொண்ட சவுதி, மத்திய கிழக்கின் மிகப்பெரிய நாடாக மாத்திரமல்லாமல் உலகின் 14வது பெரிய தேசமாகவும் உள்ளது. இங்கு பல்வேறு கனிய வளங்கள், எண்ணெய் மற்றும் எரிவாயு, உற்பத்தி மற்றும் கைத்தொழில்துறை வளர்ச்சிக்கான முக்கிய மூலப் பொருட்கள் நிறைந்து காணப்படுகின்றன. அந்த வகையில் நான்காவது பெரிய இயற்கை எரிவாயு படிமத்தை தன்னகத்தே கொண்ட நாடாக திகழுகிறது சவுதி. இந்த எரிவாயுவின் மூன்றில் ஒரு பகுதி சவுதியின் கிழக்கு பிராந்தியத்தில் காணப்படுகிறது. 2025 ஆம் ஆண்டிற்கான சவுதியின் இலக்குகளை முன்கூட்டியே அடையும் திட்டத்தின் கீழ் 8.7% வளர்ச்சி என்பது இதன் நோக்கமாகும். முந்தைய ஆண்டின் இதே காலாண்டுடன் ஒப்பிடுகையில், இவ்வாண்டின் முதல் காலாண்டில் எண்ணெய் அல்லாத ஏற்றுமதி 5.4 சதவீத வளர்ச்சியைக் கண்டது. சவுதியின் அரசாங்க கொள்கைகள் மற்றும் திட்டங்களின் வெற்றியின் தொடர் முன்னேற்றம் சவுதி பெண்களை மேம்படுத்தியுள்ளது. சவுதியர்களை வேலையின்மையிலிருந்து பாதுகாத்து அவர்கள் தொடர்ந்தும் முன்னேற்றமடைதற்கு வழிவகுத்திருக்கிறது. சர்வதேச நிறுவனங்களின் கூற்றுப்படி, திட்டமிடப்பட்ட காலத்திற்கு முன்பே விஷன் 2030 திட்ட இலக்குகளை அடைவதற்கேற்ற சரியான பாதையில் சவுதி செல்கிறது.

அல் அரேபியா பிசினஸ் மதிப்பாய்வு செய்த பல அறிக்கைகள், ஆய்வுகள் மற்றும் அதிகாரப்பூர்வ அரசாங்கத் தரவுகளின் அடிப்படையில் சவுதி அரேபியா தனது பல இலக்குகளை அடைவதற்கான சரியான பாதையில் செல்கிறது. ஒருவேளை திட்டமிட்ட காலத்திற்கு முன்பே அதன் இலக்குகளை அடையும்.

இளவரசர் முஹம்மத் பின் சல்மான் கடந்த செப்டம்பரில் அமெரிக்காவின், 'பொக்ஸ் நியூஸ்' செனலுக்கு அளித்த பேட்டியின் போது, சவுதியின் பொருளாதாரம் ஜி20 நாடுகளில் வேகமாக வளர்ந்து வருவதை உறுதிப்படுத்தினார். 'சவுதியின் பொருளாதாரம் உலகில் 17வது இடத்தில் உள்ளது, மேலும் அது "7" பட்டியலுக்கு திரும்ப முடியும்' என்றும் அவர் கூறினார்.

2022 இல் வெளிநாட்டு நேரடி முதலீடுகள் சுமார் 122 பில்லியன் ரியால்களாக (33 பில்லியன் டொலர்கள்) இருந்தது, இதனால் சவுதி ஜி20 பொருளாதாரங்களில் பத்தாவது இடத்தைப் பிடித்தது. 2022 இல் வெளிநாட்டு நேரடி முதலீட்டின் இருப்பு 775 பில்லியன் ரியால்களை (207 பில்லியன் டொலர்கள்) எட்டியதாக சவுதி முதலீட்டு அமைச்சு அறிவித்தது, இது ஜி20 நாடுகளின் பொருளாதாரங்களில் சவுதிக்கு 16வது இடத்தைப் பெற்றுக்கொடுத்துள்ளது. இவ்வாறு வளர்ச்சி அடைந்துவரும் சவுதி, தனது பொருளாதாரத்தின் மூலம் ஏழை நாடுகளுக்கும் வளர்ந்துவரும் நாடுகளுக்கும் நீண்ட, குறுகிய கால வட்டியில்லா கடன்கள் அடிப்படையில் உதவி, ஒத்துழைப்புக்களை நல்கி வருகிறது. அத்துடன் மனிதாபிமான உதவிகளையும் இன, மத பேதமின்றி அனைவருக்கும் அளிக்கின்றது. அந்த அடிப்படையில் சவுதி அரேபியா இலங்கைக்கும் நேச நாடு என்ற அடிப்படையில் பல பில்லியன் ரியால்கள் பெறுமதியான உதவிகளைச் செய்துள்ளது.



இலங்கைக்கான தூதுவர் காலித் பின் ஹமூத் அல் கஹ்தானி

இந்நிலையில் தற்போது இலங்கைக்கு வருகை தந்துள்ள சவுதி அரேபியாவின் பொருளாதார மற்றும் திட்டமிடல் அமைச்சர் பைஸல் பின் பாழில் அல் இப்றாஹீம் அந்நாட்டின் இலங்கைக்கான தூதுவர் காலித் பின் ஹமூத் அல் கஹ்தானியின் ஏற்பாட்டில் இந்நாட்டின் அரசாங்க உயர் தலைவர்களையும் அமைச்சர்கள் மற்றும் அதிகாரிகளையும் சந்தித்து கலந்துரையாடவுள்ளார். சவுதி அமைச்சர் மேற்கொண்டுள்ள இந்த உத்தியோகபூர்வ விஜயம் இரு நாடுகளுக்கும் இடையிலான நட்புறவை மேலும் மேம்படுத்துவதோடு இந்நாட்டின் பொருளாதார முன்னேற்றத்திற்கும் நன்மைகள் பெற்றுத்தரக்கூடியதாக அமையும் என உறுதிபடக்கூறலாம்.



**அஷ் ஷெய்க் எம்.எச். சேஹுத்தீன் மதனி** (பி.ஏ)
**பணிப்பாளர், அல் ஹிக்மா நிறுவனம், கொழும்பு.**

---

சீரற்ற காலநிலையினால்

## அக்குறணை பிரதேச வீதியொன்று 40 அடி ஆழத்திற்கு தாழிறக்கம்

போக்குவரத்து பாதிப்பு; மக்கள் இடம்பெயர்வு



(மாத்தளை சுழற்சி நிருபர்)

சீரற்ற காலநிலை காரணமாக பெய்து வரும் அடைமழையினால் அக்குறணை பிரதேச செயலாளர் பிரிவுக்குட்பட்ட அலவத்துகொட, ரம்புக்கல்ல கிராமத்தின் பாடசாலைக்கு செல்லும் வீதியின் ஒரு பகுதி சுமார் 40 அடி ஆழத்திற்கு தாழிறங்கியுள்ளது. இதனால் இவ்வீதியின் போக்குவரத்து முற்றாக பாதிக்கப்பட்டுள்ளதால் இக் கிராமத்தில் உள்ள 350 இற்கும் மேற்பட்ட குடும்பங்கள் பல பிரச்சினைகளை எதிர் நோக்கி வருகின்றனர்.

அதேவேளை இத்தாழிறக்கம் காரணமாக மண் மேடொன்று சரிந்து விழுந்ததில் அருகில் உள்ள வீடொன்று பாதிக்கப்பட்டுள்ளது. அவ்வீட்டில் இருந்த நான்கு பேரைக் கொண்ட குடும்பம் ஒன்று குறித்த வீட்டில் இருந்து வெளியேற்றப்பட்டு உறவினர் வீட்டில் தங்க வைக்கப்பட்டுள்ளது.

மேலும் இவ்வீதியைப்பயன்படுத்தும் மாணவர்கள், ஆசிரியர்கள், தொழிலுக்கு செல்வோர் மற்றும் நோயாளிகள் இப் பாதையின் போக்குவரத்து தடைப்பட்டுள்ளமையால் பெரிதும் சிரமத்திற்கு உள்ளாகி வருகின்றனர்.

இதனை கருத்தில் கொண்டு சம்பந்தப்பட்ட அதிகாரிகள் துரித கதியில் இப் பாதையை புனரமைக்குமாறு வேண்டுகோள் விடுவிக்கின்றனர்.

அதேவேளை, அலவத்துகொட,அங்கும்புர பிரதான வீதியில் மண் மேடுகள் ஆங்காங்கே சரிந்து வீழ்வதனால் இப் பாதையைப் பயன்படுத்தும் சாரதிகள் எச்சரிக்கையாக இருக்குமாறு தெரிவிக்கப்படுகிறது.

---

இபலோகம பிரதேச செயலக

## ரணஜயபுர கிராமத்திற்கு காட்டு யானைகளால் அச்சுறுத்தல்

அநுராதபுரம் மேற்கு தினகரன் நிருபர்



இபலோகம பிரதேச செயலக பகுதிக்குட்பட்ட ரணஜயபுர கிராமத்திற்கு காட்டு யானைகளின் அச்சுறுதல் ஏற்பட்டுள்ளதாக பிரதேச மக்கள் தெரிவிக்கின்றனர்.

குறித்த கிராமத்தில் வங்கி, பாடசாலை, வியாபார நிலையங்கள் மற்றும் பௌதீக வளங்கள் நிறைந்துள்ள நிலையில் காட்டு யானைகள் கிராமத்திற்குள் உட்பிரவேசிப்பதால் மக்கள் பீதியுடன் வாழ வேண்டிய சூழ்நிலை ஏற்பட்டுள்ளது.

கடந்த (25) காலை காட்டு யானைக்கூட்டம் கிராமத்திற்குள் நுழைந்து மா, தென்னை உள்ளிட்ட பெறுமதிமிக்க மரங்கள் பாடசாலை வளாகத்திலிருந்த குடிநீர் குழாய் விளையாட்டு மைதான வேலி என்பனவைகளை சேதப்படுத்தியுள்ளதுடன் பாடசாலை வளாகத்தில் காட்டு யானைகள் நடமாடுவதாகவும் பிரதேசவாசிகள் தெரிவித்தனர்.

2010 ஆம் ஆண்டு பாடசாலை ஆரம்பிக்கப்பட்டதில் இருந்து நடப்பட்டிருந்த மா மரங்களை காட்டு யானைகள் சேதப்படுத்தியுள்ளது. 100 க்கும் மேற்பட்ட யானைகள் பாடசாலைக்கு அண்மையிலுள்ள காட்டில் நிற்பதாகவும் தெரியவந்துள்ளது. இதனால் எந்நேரத்திலும் பீதியுடன் வாழவேண்டிய நிலை ஏற்பட்டுள்ளதாகவும் அவர்கள் தெரிவித்தனர். கடந்த 04 மாத காலமாக யானைகளின் அச்சுறுத்தல் அதிகரித்துள்ளதுடன் இது தொடர்பில் சம்பந்தப்பட்ட பொறுப்புவாய்ந்த தரப்பினருக்கு அறிவித்த போதும் இது வரைக்கும் எவ்வித மாற்று நடவடிக்கைககளையும் மேற்கொள்ளவில்லை எனவும் தெரிவித்தனர்.

கிராமத்தவரின் அல்லது சிறுவர்களின் உயிருக்கு அச்சுறுத்தல் ஏற்பட்டதன் பின்னர் தீர்வு கொடுப்பதில் அர்த்தமில்லை எனவும் மக்கள் தெரிவிக்கின்றனர்.

---

## நாடகக் கலைஞர் நிஹால் சில்வாவின் நினைவுதினம்

பிரபல மேடை நாடகக் கலைஞர் நிஹால் சில்வாவின் நினைவுதினம் மற்றும் 'சார்ஜன்ட் நல்லதம்பி' தொடர்பாக நாடக எழுத்தாளர் மஞ்சு காரியவசம் எழுதிய 'சார்ஜன்ட் நல்லதம்பி' நாடகம் நூல் வெளியீட்டு விழா எதிர்வரும் டிசம்பர் மாதம் 3ஆம் திகதி முற்பகல் 10.00 மணிக்கு கொழும்பு 07, பௌத்தாலோக மாவத்தையில் அமைந்துள்ள சிங்கள கலாசார நிலையம் என்ற சுதர்ஷி நிலையத்தில் நடைபெறவுள்ளது. இந்நிகழ்வில் பிரதம விருந்தினராக கலாசார விவகார அமைச்சர் விதுர விக்கிரமநாயக்க கலந்துகொள்ளவுள்ளார். அத்துடன் விசேட விருந்தினராக திரைப்பட இயக்குநரும் பாராளுமன்ற உறுப்பினருமான கலாநிதி சரத் வீரசேகர கலந்துகொள்வார்.



அக்கரைப்பற்று பிரதேச சபை அலி உதுமான் பொது நூலகத்தினால் தேசிய வாசிப்பு மாதத்தை முன்னிட்டு மக்கள் மத்தியில் வாசிப்பின் மகத்துவம் தொடர்பில் போஸ்டர்களின் ஊடாக விழிப்பூட்டும் வேலை திட்டத்திற்கு அமைவாக போஸ்டரின் முதல் பிரதி ஒன்றை அக்கரைப்பற்று பிரதேச சபையின் பதில் நூலகர் ஏ.கே ஜௌபரினால் பிரதேச சபையின் செயலாளர் எல். எம். இர்பானிடம் சம்பிரதாயபூர்வமாக கையளிப்பதை காணலாம். பிரதேச சபையின் பிரதம முகாமைத்துவ உதவியாளர் ஏ. எல். கியாஸ்தீன் உள்ளிட்ட நூலக ஊழியர்களும் காணப்படுகின்றனர்.

(படம் : இறக்காமம் தினகரன் நிருபர்)

தினகரன்
வடக்கின் உதயம்
Vadakkin Uthayam
2023 நவம்பர் 27 திங்கட் கிழமை

# 72 வயது சாதனைப் பெண் திருமதி அகிலத்திருநாயகி முல்லைத்தீவு மாவட்டச் செயலகத்தால் கௌரவிப்பு





பிலிப்பைன்ஸில் நடைபெற்ற National Masters & Seniors Athletics போட்டியில் முல்லைத்தீவு – முள்ளியவளையைச் சேர்ந்த 72 வயதுடைய திருமதி அகிலத்திருநாயகி 1500 மீட்டர் ஓட்டப்போட்டி மற்றும், 5000 மீட்டர் விரைவு நடைப்போட்டி ஆகியவற்றில் 2 தங்கப் பதக்கங்களையும் 800 மீட்டர் ஓட்டபோட்டியில் ஒரு வெண்கலப் பதக்கத்தையும் வென்று இலங்கைக்கும் முல்லைத்தீவ மாவட்டத்திற்கும் பெருமை சேர்த்தமையை பாராட்டி கௌரவிக்கும் நிகழ்வு முல்லைத்தீவு மாவட்டச் செயலக பண்டாரவன்னியன் மாநாட்டு மண்டபத்தில் மாவட்ட அரசாங்க அதிபர் அ.உ மாமகேஸ்வரனின் தலைமையில் இடம்பெற்றது.

இந்நிகழ்வில் திருமதி அகிலத்திருநாயகியின் சாதனைகள் தொடர்பாக வாழ்த்துரைகள் இடம் பெற்றதுடன் நினைவுச்சின்னம் மற்றும் பணமுடிப்பு வழங்கியும் பொன்னாடை மாலை அணிவித்தும் திருமதி அகிலத்திருநாயகி கௌரவிக்கப்பட்டார்.

குறித்த நிகழ்வில் மாவட்ட மேலதிக அரசாங்க அதிபர்(நிர்வாகம்) எஸ்.குணபாலன், பிரதம உள்ளகக் கணக்காய்வாளர் லிங்கேஸ்வரன் , பிரதம கணக்காளர் ம. செல்வரட்ணம், சமுர்த்தி பணிப்பாளர் M.முபாரக், மாவட்ட பதில் திட்டமிடல் பணிப்பாளர் திருமதி க.ஜெயபவானி, பதவிநிலை உத்தியோகத்தர்கள், உத்தியோகத்தர்கள் மற்றும் சமூக செயற்பாட்டாளர் சண்முகலிங்கம் திருமதி. அகிலத்திருநாயகியின் ஆசிரியர் திருமதி ஐயம்பிள்ளை என பலரும் கலந்து கொண்டனர்.

# பிள்ளையார் பெருங்கதையும் கஜமுகசூரன் சங்காரமும்

சாவகச்சேரி நுணாவில் மேற்கு விளைவேலி மருதடி அருள்மிகு வீரகத்தி விநாயகர் தேவஸ்தான பிள்ளையார் பெருங்கதை நாளை செவ்வாய்க்கிழமை ஆரம்பமாகி 21 தினங்கள் இடம்பெறவுள்ளது .

தினமும் பிற்பகல் 3 மணிக்கு பெருங்கதைபடிப்பும் பூஜையும் இடம்பெறும். எதிர்வரும் 17 ஆம் திகதி மாலை 3.30 மணிக்கு கஜமுகசூரன் சங்காரம் இடம்பெறும் .18 ஆம் திகதி திங்கட்கிழமை காலை 7 மணிக்கு திருவெம்பாவை பூஜை ஆரம்பமாவதுடன் விநாயகர் சஷ்டி விரத பூஜை காலை 9 மணிக்கு இடம்பெற்று பிள்ளையார் பெருங்கதை படிப்புடன் விரதம் பூர்த்தியடையும். ஆலய பிரதம குரு சிவஸ்ரீ து.கு. ஜெகதீஸ்வரக்குருக்கள், ஆலய குரு ஜெகதீஸ்வர சர்மா ஆகியோர் கிரியைகளை நடத்துவர்.

# அபுதாபியில் கட்டடத்தில் இருந்து விழுந்த யாழ்.வாசி உயிரிழப்பு

**யாழ்.விசேட நிருபர்**

யாழ்ப்பாணத்தை சேர்ந்த நபர் ஒருவர் அபுதாபியில் கட்டடம் ஒன்றில் இருந்து தவறி விழுந்து படுகாயமடைந்த நிலையில், சிகிச்சை பலனின்றி உயிரிழந்துள்ளார்.

தெல்லிப்பளை, புளியடியை சேர்ந்த முருகேசு விஜயரத்தினம் (வயது 55) என்பவரே உயிரிழந்துள்ளார்.

தொழில் நிமித்தம் அபுதாபியில் வசித்து வந்த நிலையில் கடந்த ஒகஸ்ட் மாதம் 10 ஆம் திகதி மூன்று மாடி உயர கட்டடத்தில் இருந்து தவறி விழுந்த நிலையில் படுகாயமடைந்துள்ளார்.

படுகாயமடைந்த நிலையில் அபுதாபியில் சிகிச்சை பெற்று வந்த நிலையில் , தூதரகத்தின் உதவியுடன் வீட்டார் அவரை கடந்த 17ஆம் திகதி இலங்கைக்கு கொண்டு வந்து, யாழ்.போதனா வைத்தியசாலையில் அனுமதித்தனர்.

யாழ்.போதனா வைத்தியசாலையில் சிகிச்சை பெற்று வந்த நிலையில் , சிகிச்சை பலனின்றி நேற்று முன்தினம் சனிக்கிழமை உயிரிழந்துள்ளார்.

# வடக்கு மாகாணத்தில் 214 தரம் 1 அதிபர்கள் தேவை கடமையில் இருப்பதோ 129 பேர் மட்டுமே

**கிளிநொச்சி குறூப் நிருபர்**

வடக்கு மாகாணத்தில் அதிபர் தரம் 1 ஐ சேர்ந்தவர்கள் 214 பேர் தேவையாக உள்ளபோதும் கடமையில் இருப்பது 129 பேர் என தகவல் அறியும் உரிமைச் சடத்தின் மூலம் கோரப்பட்ட தகவல்களுக்கு வடக்கு மாகாண கல்வி பண்பாட்டலுவல்கள் விளையாட்டுத்துறை மற்றும் இளைஞர் விவகார அமைச்சு பதிலளித்துள்ளது.

குறித்த பதிலில் வடக்கு மாகாணத்தில் 95 1AB பாடசாலைகளும். 124 1C பாடசாலைகளும் காணப்படுகின்றன. இவற்றில் 128 பாடசாலைகளில் மாத்திரமே தரம் 1 அதிபர்கள் கடமையாற்றுகின்றனர். அத்தோடு 21 தரம் 1 அதிபர்கள் கோட்டக் கல்விப் பணிப்பாளர்களாக கடமையாற்றுகின்றனர்.

ஆனால் கோட்டக் கல்விப் பணிப்பாளர் பதவி இலங்கை கல்வி நிர்வாக சேவை தரம் 2 மற்றும் 3ற்கு நிரற்படுத்தப்பட்ட பதவி என்பது இலங்கை கல்வி நிர்வாக சேவைப் பிரமாணக் குறிப்பின் பிரகாரம் உறுதிப்படுத்தப்பட்டுள்ளது. இதேவேளை இலங்கை அதிபர் சேவைப் பிரமாணக் குறிப்பில் கோட்டக் கல்விப் பணிப்பாளர் பதவிநிலை தொடர்பில் எங்கும் குறிப்பிடப்படவில்லை.

இந்த நிலையிலேயே 21 தரம் 1 அதிபர்கள வடக்கில் கோட்டக் கல்வி அதிகாரிகளாக கடமையாற்றி வருகின்றனர் என வடக்கு மாகாண கல்வி பண்பாட்டலுவல்கள் விளையாட்டுத்துறை மற்றும் இளைஞர் விவகார அமைச்சு பதிலளித்துள்ளது.

# முச்சக்கர வண்டி விபத்தில் இளம் பெண் உயிரிழப்பு

**யாழ்.விசேட நிருபர்**

முச்சக்கர வண்டி விபத்தில் படுகாயமடைந்த நிலையில் , யாழ். போதனா வைத்தியசாலையில் சிகிச்சை பெற்று வந்த பெண்ணொருவர் உயிரிழந்துள்ளார்.

பளை இத்தாவில் பகுதியை சேர்ந்த குணாளன் மதுசா (வயது 19) எனும் யுவதியே நேற்று முன் தினம் உயிரிழந்துள்ளார்.

இத்தாவில் பகுதியில் கடந்த 22ஆம் திகதி முச்சக்கர வண்டி மோதி விபத்துக்கு உள்ளானதில் படுகாயமடைந்த யுவதி பளை வைத்தியசாலையில் அனுமதிக்கப்பட்டு , அங்கிருந்து மேலதிக சிகிச்சைக்காக யாழ்.போதனா வைத்தியசாலைக்கு மாற்றப்பட்டு, சிகிச்சை பெற்று வந்த நிலையில் சிகிச்சை பலனின்றி உயிரிழந்துள்ளார்.

# யாழ்.பொன்னாலையில் பெருந்தொகை கஞ்சாவுடன் ஒருவர் கைது

**யாழ்.விசேட நிருபர்**

யாழ்ப்பாணம் பொன்னாலை பகுதியில் கஞ்சா விற்பனையில் ஈடுபட்ட குற்றச்சாட்டில், ஒருவர் வெள்ளிக்கிழமை கைது செய்யப்பட்டுள்ளார்.

பொலிஸ் விசேட அதிரடி படையினருக்கு கிடைக்கப்பெற்ற இரகசிய தகவலின் அடிப்படையில் நபர் ஒருவரை கைது செய்து விசாரணைகளை முன்னெடுத்த போது , அவரிடம் இருந்து ஒரு தொகை கஞ்சா மீட்கப்பட்டு உள்ளதாகவும் , அவற்றின் பெறுமதி பல இலட்ச ரூபாய் என தெரிவிக்கப்படுகிறது. கைது செய்யப்பட்ட நபரும் , மீட்கப்பட்ட கஞ்சாவும் மேலதிக சட்ட நடவடிக்கைக்காக வட்டுக்கோட்டை பொலிஸ் நிலையத்தில் ஒப்படைக்கப்பட்டுள்ளது. பொலிஸார் மேலதிக விசாரணைகளை முன்னெடுத்து வருவதுடன், விசாரணைகளின் பின்னர் மல்லாகம் நீதவான் நீதிமன்றில் முற்படுத்த நடவடிக்கை எடுத்துள்ளதாக தெரிவித்தனர்

# ஜா –எல பகுதியில் உயிரிழந்த பொலிஸ் உத்தியோகஸ்தரின் இறுதி கிரியைகள் யாழில்





**யாழ்.விசேட நிருபர்**

ஜா–எல பகுதியில் கால்வாயில் குதித்து தப்பிச் செல்ல முயன்ற சந்தேக நபரை கைது செய்ய சென்றவேளை நீரில் மூழ்கி உயிரிழந்த பொலிஸ் உத்தியோகஸ்தரின் இறுதி கிரியைகள் யாழ்ப்பாணம் சாவகச்சேரியில் உள்ள அவரது இல்லத்தில் நடைபெற்றது.

ஜாஎல பொலிஸ் நிலையத்தில் பணியாற்றிய யாழ்ப்பாணம் சாவகச்சேரியை சேர்ந்த கிருஷ்ணமூர்த்தி பிரதாபன் (வயது 26) என்ற பொலிஸ் உத்தியோகஸ்தரே இவ்வாறு உயிரிழந்துள்ளார்.

அவரது சடலம் சேதவத்த கால்வாய்க்கு அருகில், கடந்த வெள்ளிக்கிழமை கண்டெடுக்கப்பட்டது. அதனைத் தொடர்ந்து இறுதி கிரியைக்காக சடலம் அவரது சொந்த இடமான சாவகச்சேரிக்கு, நேற்று முன் தினம் சனிக்கிழமை கொண்டு வரப்பட்டு, மக்கள் அஞ்சலிக்காக வைக்கப்பட்டது.

அந்நிலையில் நேற்றைய தினம் ஞாயிற்றுக்கிழமை மேல்மாகாண சிரேஷ்ட பிரதிப் பொலிஸ் மா அதிபர் தேசபந்து தென்னக்கோன் கலந்து கொண்டு உயிரிழந்தவருக்கு இறுதி மரியாதையை செலுத்தி உயிரிழந்தவரின் குடும்பத்திற்கு ஆறுதல் கூறி ஒரு தொகை பணத்தையும் கையளித்தார்.

அதன் போது, உயிரிழந்த பொலிஸ் உத்தியோகஸ்தர் சார்ஜன்டாக பதவி உயர்வு பெற்றுள்ளதுடன் அவருக்குரிய கொடுப்பனவுகள் கிடைக்கபெறும் என மேல்மாகாண சிரேஸ்ட பிரதிப் பொலிஸ் மா அதிபர் தேசபந்து தென்னக்கோன் குடும்பத்தினருக்கு வாக்குறுதியளித்தார். இறுதி நிகழ்வில் பொலிஸ் திணைக்கள உயர திகாரிகள், வடமாகாண சிரேஸ்ட பிரதிப் பொலிஸ் மா அதிபர், யாழ்ப்பாண மாவட்ட பிரதிப் பொலிஸ் மா அதிபர், சிரேஸ்ட பொலிஸ் அத்தியட்சகர்கள் உள்ளிட்ட பொலிஸ் உத்தியோகத்தர்கள், பொதுமக்கள் என பலரும் கலந்துகொண்டனர்.

உயிரிழந்த பொலிஸ் உத்தியோகத்தரின் பூதவுடல் அரச மரியாதையுடன் சாவகச்சேரி கண்ணாடிப்பிட்டி இந்து மயானத்தில் தகனம் செய்யப்பட்டது.

கடந்த வியாழக்கிழமை குறித்த பொலிஸ் உத்தியோகத்தர் உள்ளிட்ட மேலும் சில பொலிஸ் உத்தியோகத்தர்கள் ஜாஎல பகுதியில் நீரோடை மூலம் தப்பிச் செல்ல முயன்ற சந்தேக நபரை துரத்திச் சென்ற போது குறித்த பொலிஸ் உத்தியோகத்தர் நீரில் மூழ்கி உயிரிழந்தார்.

# கொக்குத்தொடுவாய் மனித புதைகுழி அகழ்வு; நேற்று 5 மனித எலும்பு கூடுகள் மீட்பு!



முல்லைத்தீவு கொக்குத்தொடுவாய் மனிதப்புதைகுழி அகழ்வின் இரண்டாம் கட்ட அகழ்வு பணிகள் நேற்றும் முன்னெடுக்கப்பட்டுள்ளன. நேற்று ஆறாவது நாளாக இந்த அகழ்வு பணிகள் முன்னெடுக்கப்பட்டுள்ளன. நேற்றைய அகழ்வு பணிகள் தொடர்பில் முல்லைத்தீவு மாவட்ட மருத்துவமனை சட்டவைத்திய அதிகாரி க.வசுதேவா கருத்து தெரிவித்துள்ளார்.

நேற்றைய அகழ்வு பணியின் போது 5 மனித எலும்பு கூட்டு தொகுதிகள் மீட்கப்பட்டுள்ளன. அத்துடன் துப்பாக்கி சிதறல்கள், சன்னங்கள் மீட்கப்பபட்டுள்ளதுடன் கையில் அணியப்படும் இலக்கத்தகடும் மணிக்கூடு ஒன்றும் மீட்கப்பட்டுள்ளதாக தெரிவித்துள்ளார்.

# ஸ்ரீ அபய சாயிநாதர் ஆலயத்தில் இலட்ச தீப வழிபாடு

(நாகர்கோவில் விஷேட நிருபர்)

கார்த்திகை மாத தீபத்திருநாளை முன்னிட்டு கரணையம் பதி ஸ்ரீ அபய சீரடி சாயிநாதர் ஆலயத்தில் இலட்ச தீபா வழிபாடு இடம் பெற்றது. நேற்று ஞாயிற்றுக்கிழமை(26) காலை 8.00 மணி முதல் மாலை வரை இத் தீப வழிபாடு இடம் பெற்றது.

இதில் ஆயிரக்கணக்கான பக்தர்கள் கலந்து கொண்டு தீபங்களை ஏற்றி வைத்து சாயிநாதரை வழிபட்டனர்.



# அடிப்படை மனித உரிமை மீறல் தொடர்பான கற்கைநெறி முடித்தவர்களுக்கான சான்றிதழ் வழங்கும் நிகழ்வு







கிளிநொச்சி மாவட்டத்தின் பெண்கள் வாழ்வுரிமை சங்கத்தின் ஏற்பாட்டில் சுமார் 200 பேர்களுக்கு கடந்த 2019 ஆம் ஆண்டு ஆரம்பிக்கப்பட்ட அடிப்படை மனித உரிமை சட்டம் கற்க நெறியை நிறைவு செய்தவர்களுக்கான சான்றிதழ் வழங்கும் நிகழ்வு நேற்று 26.11.2023 கிளிநொச்சியில் நடைபெற்றது. இந்நிகழ்வு கிளிநொச்சி மாவட்ட பெண்கள் வாழ்வுரிமைச் சங்கத்தின் இணைப்பாளர் வள்ளிபுரம் வாசுகி தலைமையில் நடைபெற்றது. இந்நிகழ்வில் முதல் கட்டமாக 100 பேர்களுக்கு சான்றிதழ்கள் வழங்கி வைக்கப்பட்டது. அத்துடன் கலை நிகழ்வுகளும் இடம்பெற்றன.

# கிழக்கின் குரல்



## 'இலஞ்சம் மற்றும் ஊழலை' இல்லாது ஒழிப்பதற்கான தேசிய செயற்றிட்டம்

( காரைதீவு குறூப் நிருபர் )



"நேர்மையான இலங்கை" எனும் தொனிப்பொருளின் கீழ் இலஞ்சம் மற்றும் ஊழலை இல்லாது ஒழிப்பதற்கான தேசிய செயற்றிட்டம் தொடர்பான பயிற்சிப்பட்டறை களுவாஞ்சிக்குடி பிரதேச செயலகத்தில் பிரதேச செயலாளர் திருமதி சிவப்பிரியா வில்வரத்னம் தலைமையில் இச் செயலமர்வு இடம்பெற்றது.

நம் அனைவர் மீதும் சுமத்தப்பட்டுள்ள பெரும் பொறுப்பு எமக்கு தேவையான வளங்களை பயன்படுத்திவிட்டு எஞ்சிய வளங்களை எதிர்கால தலைமுறைக்காக பாதுகாத்து வைப்பதேயாகும். இந்த நோக்கை அடையும் வகையில் ஏற்பாடு செய்யப்பட்டு நடாத்தப்பட்டு வருகின்ற பயிற்சி நெறியில் இலஞ்சம் மற்றும் ஊழல் தொடர்பான விளக்கம் மற்றும் சட்ட ஏற்பாடுகள், அவற்றினால் ஏற்படும் பாதக விளைவுகள் என்பன தொடர்பாக வளவாளர்களான பிரதேச செயலாளர் மற்றும் உதவி பிரதேச செயலாளர் திருமதி சத்யகௌரி தரணிதரன் விளக்கமளித்தனர்.

அரச நிறுவனங்களில் இடம்பெறும் இலஞ்சம் மற்றும் ஊழல் தொடர்பாக சம்பவ கற்கைகள் மூலமும் உத்தியோகத்தர்களுக்கு தெளிவூட்டப்பட்டது. இந்த செயலமர்வானது பிரதேச அலுவலக உத்தியோகத்தர்களுக்கு பல கட்டங்களாக இடம்பெற்று வருகின்றமை குறிப்பிடத்தக்கது.

## பாம்பு தீண்டி ஆறு மாத குழந்தை பரிதாப பலி!

### மட்டக்களப்பில் சம்பவம்

மட்டக்களப்பு குறூப் நிருபர்

ஆறு மாத குழந்தை ஒன்றை விசப்பாம்பு தீண்டியதால் பரிதாபகரமான முறையில் பலியான சம்பவம் வெள்ளிக்கிழமை (24) அதிகாலை மட்டக்களப்பு காத்தான்குடி பொலிஸ் பிரிவிலுள்ள ஒல்லிக்குளம் பற்றிமாபுரத்தில் இடம்பெற்றுள்ளது.

பாத்திமா புரத்தில் உள்ள தனது வீட்டில் வெற்றுத்தரையில் தூங்கிக் கொண்டிருந்த ஆறு மாதங்களேயான மேற்படி குழந்தையை பாம்பு பல இடங்களில் தீண்டியுள்ளதால் மரணம் ஏற்பட்டிருப்பதாக திடீர் மரண விசாரணை அதிகாரியின் பிரேத பரிசோதனைகளில் இருந்து தெரியவந்துள்ளது.

தாயின் அருகே தூங்கிக் கொண்டிருந்த தனது குழந்தையை குறித்த தினம் அதிகாலை மூன்று முப்பது மணி அளவில் பாம்பு தீண்டி இருக்கிறது. ஆனால் தாயோ காலை 7 மணி அளவில் மயக்க நிலையில் இருந்த குழந்தையை ஆரையம்பதி வைத்தியசாலையில் அனுமதிக்கப்பட்டு அங்கு குழந்தை இறந்த நிலையில் மட்டக்களப்பு போதனா வைத்தியசாலைக்கு கொண்டு செல்லப்பட்டு அங்கு பிரேத பரிசோதனையின் பின்னர் குழந்தை உறவினர்களிடம் ஒப்படைக்கப்பட்டுள்ளது.

இக்னேஷ் அபிலாஷ் என்னும் 6 மாத வயதை கொண்ட ஆண் குழந்தையே இவ்வாறு பரிதாபகரமான முறையில் மரணமடைந்துள்ளது.

அகில இலங்கை ஜம்இய்யதுல் உலமாவின்

## அட்டாளைச்சேனை பிரதேச உலமா முக்கியஸ்தர்களுடனான சந்திப்பு



(ஒலுவில் கிழக்கு தினகரன் நிருபர்)

அகில இலங்கை ஜம்இய்யதுல் உலமாவின் அட்டாளைச்சேனை கிளையின் ஏற்பாட்டில் அட்டாளைச்சேனை பிரதேச முக்கியஸ்தர்களுடனான "சினேகபூர்வ கலந்துரையாடல்" நேற்று முன்தினம் (25) அட்டாளைச்சேனை பீச் ஹவுஸில் நடைபெற்றது.

அட்டாளைச்சேனை ஜம்இய்யதுல் உலமாவின் தலைவரும், ஓய்வு பெற்ற உதவிக் கல்விப் பணிப்பாளருமான மௌலவி யூ.எம்.நியாஸி தலைமையில் நடைபெற்ற இந்நிகழ்வில் கிழக்கிலங்கை அரபுக் கல்லூரியின் சிரேஷ்ட விரிவுரையாளர் மௌலவி ஏ.சீ.முகம்மது பாக்கவி, அக்கரைப்பற்று அபூபக்கர் சித்தீக் அரபுக் கல்லூரியின் அதிபர் மௌலவி எம்.எம். கலாமுல்லாஹ் (றசாதி) பிரதம வளவாளராக கலந்து கொண்டு இஸ்லாமிய நடைமுறைகள் பற்றிய பல்வேறுபட்ட விளக்கங்களை இங்கு முன்வைத்தனர்.

இதன் போது அட்டாளைச்சேனைப் பிரதேசத்தின் கல்வி, கலை, கலாசாரம், சமூக விழுமியங்கள், போதைப் பொருள் ஒழிப்பு, மாணவர்களின் ஒழுக்க நடைமுறைகள், பிரதேசத்தின் அபிவிருத்தி தொடர்பில்

புத்துஜீவிகள், பிரதேச முக்கியஸ்தர்கள் மற்றும் உலமாக்கள் உட்பட ஆறு குழுக்கள் அமைக்கப்பட்டதுடன் இக் குழுக்கள் ஊடாக பிரதேசத்தில் பல்வேறுபட்ட வேலைத்திட்டங்களை முன்னெடுப்பதெனவும் தீர்மானிக்கப்பட்டமை குறிப்பிடத்தக்கது.

இந்நிகழ்வில் அட்டாளைச்சேனை ஜம்இய்யதுல் உலமாவின் செயலாளரும் சேவைக்கால ஆசிரிய ஆலோசகருமான என்.ரீ. நஸீர், உட்பட அரசியல் பிரமுகர்கள், மூத்த உலமாக்கள், அட்டாளைச்சேனை பிரதேச பள்ளிவாசல்களின் தலைவர்கள், பாடசாலைகளின் அதிபர்கள், பிரதேச முக்கியஸ்தர்கள், புத்துஜீவிகள் மற்றும் அட்டாளைச்சேனை ஜம்இய்யதுல் உலமாவின் பதவி வழி உத்தியோகத்தர்கள், உறுப்பினர்கள் எனப் பலரும் கலந்து கொண்டர்.

## நிந்தவூரில் மூன்று நாள் பயிற்சி செயலமர்வு

( மாளிகைக்காடு குறூப் நிருபர்)

தேசிய இளைஞர் சேவைகள் மன்றம் ஒழுங்கு செய்திருந்த இளைஞர், யுவதிகளுக்கான மூன்று நாள் தலைமைத்துவ பயிற்சி முகாம் நிந்தவூர் அல் மதீனா தேசிய பாடசாலை மண்டபத்தில் (25) இடம்பெற்றது.

நிந்தவூர் பிரதேச செயலாளர் சட்டத்தரணி அப்துல் லத்தீப் பிரதம அதிதியாக கலந்து கொண்ட மேற்படி நிகழ்வில் பிராந்திய பிரதேச செயலகங்களை பிரதிநிதித்துவப்படுத்திய இளைஞர் யுவதிகளும், பிரதேச செயலாளர்கள், தேசிய இளைஞர் சேவைகள் மன்ற உத்தியோகத்தர்களும், பிரதேச செயலக உத்தியோகத்தர்களும் கலந்து கொண்டமை குறிப்பிடத்தக்கது.


25 வருடகாலமாக...

## எவ்வித புனரமைப்புமின்றி காணப்படும் கந்தளாய் பிரதேச வீதிகள்

கந்தளாய் தினகரன் நிருபர்

திருகோணமலை மாவட்டத்தில் கந்தளாய் பிரதேச சபைக்குட்பட்ட இரண்டாம் கொலணி பகுதி வீதி கடந்த இருபத்தைந்து வருடகாலமாக எவ்வித புனரமைப்புமின்றி காணப்படுவதாக மக்கள் கவலை தெரிவிக்கின்றனர்.

அப்பகுதியில் சுமார் 600க்கும் மேற்பட்ட குடும்பங்கள் வாழ்ந்து வருவதாகவும் தெரிவிக்கும் மக்கள், அம்மன் கோவில் வீதி, திருவள்ளுவர் வீதி, குளக்கோட்டன் வீதி, சேர்ச் வீதி, உப்பார் வீதி போன்ற வீதிகள் சுமார் ஆறு கிலோ மீட்டர் தூரம் வரை



குண்டும் குழியுமாக காட்சியளிக்கின்றன. அவ் வீதி ஊடாக செல்லும் பாடசாலை மாணவர்கள் மற்றும் கர்ப்பிணி தாய்மார்கள் எனப் பலரும் பல்வேறு அசௌகரியங்களுக்கு முகம் கொடுத்து வருவதாகவும் பொதுமக்கள் தெரிவிக்கின்றனர்.

அரசியல்வாதிகள் பொய் வாக்குறுதிகளை கொடுத்து அப்பகுதி மக்களை ஏமாற்றியதாகவும் குறித்த வீதி சம்பந்தமாக கந்தளாய் பிரதேச செயலகத்துக்கும் ஆளுநருக்கும் மற்றும் ஜனாதிபதி செயலகத்திற்கும் எழுத்து மூலம் அறிவித்த போதும் இதுவரைக்கும் எந்தவொரு நடவடிக்கைகளையும் எடுக்கவில்லை என்றும் மக்கள் தெரிவிக்கின்றனர்.

இதுகுறித்து சம்பந்தப்பட்ட அதிகாரிகள் கவனம் செலுத்தி கந்தளாய் பேராறு வீதிகளை புனரமைத்து தருமாறு மக்கள் கோரிக்கை விடுக்கின்றனர்.

## 'வாசிப்போம் அனுபவிப்போம்' நூல் விபரண வேலைத்திட்டம்





(பெரியபோரதீவு தினகரன் நிருபர்)

கலாசார அலுவல்கள் திணைக்களமும் மட்டக்களப்பு மாவட்டம் மண்முனை தென் எருவில் பற்று பிரதேச செயலகமும் இணைந்து ஏற்பாடு செய்த தேசிய வாசிப்பு மாதத்தினை முன்னிட்டு 'வாசிப்போம் அனுபவிப்போம்' எனும் தொனிப்பொருளில் அமைந்த நூல் விபரண வேலைத் திட்டமானது வெள்ளிக்கிழமை (24) பிரதேச செயலக மாநாட்டு மண்டபத்தில் பிரதேச செயலாளர் திருமதி சிவப்பிரியா வில்வரத்னம் தலைமையில் இடம்பெற்றது.

இந்நிகழ்வில் பிரதேச செயலகப் பிரிவில் இருந்து தெரிவு செய்யப்பட்ட பத்து பாடசாலைகளில் இருந்து 30 மாணவர்கள் பங்கு பற்றியமையோடு மாணவர்கள் அனைவரும் தாங்கள் வாசித்த புத்தகத்தை பற்றிய கருத்தாடலை அனைவர் முன்னிலையிலும் பகிர்ந்து கொண்டனர்.

இதன் மூலமாக இந்த நிகழ்வில் கலந்து கொண்ட அனைத்து மாணவர்களும் முப்பது வகையான புத்தகங்கள் பற்றியும் அறிந்து கொள்ளும் வாய்ப்பு ஏற்படுத்தப்பட்டிருந்தது.

இந்த நிகழ்வில் பிரதேச எழுத்தாளர்களான சிரேஸ்ட ஊடகவியலாளர் ரவிந்திரன் (ரவிப்பிரியா), எழுத்தாளர் அதிபர் நா.நாகேந்திரன், இளம் எழுத்தாளர், ஆசிரியர் ப.அனேஜா ஆகியோரின் பங்குபற்றலுடன் சிறப்பான முறையில் நடைபெற்று முடிந்தது.

## காட்டு யானை தாக்கி குடும்பஸ்தர் பலி!

(ஏறாவூர் நிருபர் )

மட்டக்களப்பு கரடியனாறு பொலிஸ் பிரிவுக்குட்பட்ட வெள்ளக்கல்மலைப் பகுதியில் காட்டு யானை தாக்கியதில் குடும்பஸ்தர் ஒருவர் உயிரிழந்துள்ளதுடன் காயமடைந்த மற்றுமொருவர் கரடியனாறு பிரதேச வைத்தியசாலையில் (25) அனுமதிக்கப்பட்டுள்ளார்.

வேப்பவெட்டுவான் வீதி இலுப்படிச்சேனை பகுதியை சேர்ந்த 2 பிள்ளைகளின் தந்தையான 41 வயதுடைய கந்தையா கீர்த்திகுமார் என்பவரே உயிரிழந்தவராவார். மாடு மேய்க்கச் சென்று மோட்டார் சைக்கிளில் வீடு திரும்பும் வேளையில் காட்டு யானை வழிமறித்துத் தாக்கியுள்ளது.

ஒருவர் சம்பவ இடத்திலேயே உயிரிழந்துள்ளதுடன் மற்றைய நபர் கரடியனாறு வைத்தியசாலையில் அனுமதிக்கப்பட்டுள்ளார்.

## மட்டக்களப்பு மாவட்டத்தில் பெரும்போக உர விநியோகம்

### சுமுகமாக இடம்பெற்று வருவதாக தெரிவிப்பு



புதிய காத்தான்குடி தினகரன் நிருபர்

நாட்டின் விவசாய உற்பத்திற்குப் பங்களிப்புச் செய்யும் பிரதான இடங்களில் ஒன்றான மட்டக்களப்பு மாவட்டத்தில் 2023/2024 காலப்பகுதிக்கான உர விநியோகம் சுமுகமாக இடம்பெறுவதாக மட்டக்களப்பு மாவட்ட தேசிய உரச் செயலகம் தெரிவிக்கின்றது.

அரசாங்கம் இம்முறை பெரும்போகமானியத்தைபணமாகஇரண்டு தடவைகளில் விவசாயிகளுக்கு வழங்கும் திட்டத்தை நடைமுறைப் படுத்தியுள்ளது.

அதற்கிணங்க மட்டக்களப்பு மாவட்டத்திலும் உர மானிய விநியோகம் சுமுகமாக இடம்பெற்று வருகிறது.

இப்போகத்தில் மட்டக்களப்பு மாவட்டத்தில் மாத்திரம் 72,317.82 ஹெக்டயர் நிலப்பரப்பில் விவசாயம் செய்வதற்காக எதிர்பார்க்கப்படுகிறது. ஒரு ஹெக்டயருக்கு தலா 15,000/ ரூபா உரமானியத் திட்டத்தின் கீழ் இதுவரை 68,654.58 ஹெக்டயர் நிலப்பரப்பில் நெற் செய்கை மேற்கொள்ளப்பட்டுள்ளது. அதில் 19,180 விவசாயிகளுக்கான உர மானியம் கமநல சேவைகள் அபிவிருத்தித் திணைக்களத்தினால் விநியோகிக்கப்பட்டுள்ளது.

அரசாங்கத்தினால் வழங்கப்படும் இவ்வுர மானியத்திலிருந்து விவசாயிகள் மாவட்டத்திலுள்ள 17 கமநல சேவைகள் நிலையங்களிலும் மற்றும் விநியோகத்தர்களிடமிருந்தும் உரத்தைக் கொள்வனவு செய்து கொள்ளலாம்.

அத்துடன் சிலோன் உரக் கம்பனி, கொழும்பு கொமர்ஷியல் உரக் கம்பனி, சி.ஐ.சி குழுமம், பஅர்ஸ் (Baurs), ஹேலீஸ், அக்ஸ்ட்ரோ, டிமோ, லக் கொவிஜன, கோல்டன் பூட் அக்ரோ, கங்காரா போன்ற விற்பனையாளர்கள் அவர்களின் விநியோகத்தர்களிடமும் பெற்றுக் கொள்ளலாம் என கமநல சேவைகள் அபிவிருத்தித் திணைக்களம் அறிவித்துள்ளது.

## ஆளுமைகளின் அடையாளம் நூல் வெளியீட்டு விழா



திராய்க்கேணி தினகரன் நிருபர்,
பாலமுனை கிழக்கு தினகரன்

பாவேந்தல் பாலமுனை பாரூக் எழுதிய நூல் வெளியீடு நேற்று முன்தினம் (25) அட்டாளைச்சேனை பிரதேச கேட்போர் கூடத்தில் பிரதேச செயலாளர் எம்.ஏ.சி. அகமது ஷாபிர் தலைமை இடம்பெற்றது . இந்நூலில் 50 இலக்கிய ஆளுமைகள், கவிஞர்கள், எழுத்தாளர்கள் போன்ற துறைசார்ந்தவர்களின் ஆளுமைகள் பற்றி இந்நூலில் தெளிவுபடுத்தப்பட்டுள்ளது.

நூல் வெளியீட்டு விழாவில் பிரதம அதிதியாக கிழக்கு மாகாண பண்பாட்டுத் திணைக்கள பணிப்பாளர் எஸ். நவநீதன், தென்கிழக்குப் பல்கலைக்கழக பேராசிரியர் ரமீஸ் அப்துல்லா மற்றும் அதிதிகளாக சம்மாந்துறை பிரதேச செயலாளர் எஸ். எல். எம். ஹனிபா , கல்முனை பிரதேச செயலாளர் டீ. அதிசயராஜ் மற்றும் எழுத்தாளர்கள், கவிஞர்கள், பல்துறை சார்ந்தவர்கள், ஊடாவியலாளர்கள் என பலரும் கலந்து சிறப்பித்தனர் . இந்நிகழ்வில் நூலாசிரியருக்கு பொது அமைப்புக்களினால் நினைவு சின்னங்களும் பொன்னாடைகளும் போர்த்தி கௌரவிக்கப்பட்டமை குறிப்பிடத்தக்கதாகும்.

## வயோதிபர்களின் அடிப்படை வசதிகளை மேம்படுத்தும் வேலைத்திட்டம் முன்னெடுப்பு

(அட்டாளைச்சேனை தினகரன் நிருபர்)



சிறுவர் மகளிர் மற்றும் சமூக வலுவூட்டல் அமைச்சின் கீழ் செயற்பட்டு வரும் முதியோர் தேசிய செயலகத்தின் நிதி ஒதுக்கீட்டின் மூலம் வயோதிபர்களுக்கான அடிப்படை வசதிகளை ஏற்படுத்திக் கொடுக்கும் பொருட்களைக் கையளிக்கும் நிகழ்வு பொத்துவில் பிரதேச செயலகத்தில் இடம்பெற்றது.

பிரதேச செயலாளர் சட்டத்தரணி எம்.ஐ. பிர்னாஸ் தலைமையில் இடம்பெற்ற இந்நிகழ்வின்போது பொத்துவில் பிரதேச செயலகப் பிரிவின் கீழ் தெரிவு செய்யப்பட்ட 28 சிரேஷ்ட பிரஜைகளுக்கு இவ்வுதவிப் பொருட்கள் வழங்கி வைக்கப்பட்டன.

பொத்துவில் பிரதேசத்தில் உள்ள வயோதிப நோயாளிகள், நீண்ட கால படுக்கையில் உள்ள முதியோர்கள், வருமானமற்ற சிரேஷ்ட பிரஜைகள் போன்ற தெரிவு செய்யப்பட்ட முதியோருக்கு இவ்வுதவிகள் வழங்கி வைக்கப்பட்டன.

இதன்போது தெரிவு செய்யப்பட்ட முதியோர்களுக்கென கட்டில் மெத்தைகள் உள்ளிட்ட அடிப்படை வசதிகளுக்கான உதவிப் பொருட்களை வழங்கி வைக்கப்பட்டமை குறிப்பிடத்தக்கது.

இந்நிகழ்வில் உதவிப் பிரதேச செயலாளர் எம்.இராமக்குட்டி, முதியோர் மேம்பாட்டு உத்தியோகத்தர் இசட். பர்ஸான், பிரதம முகாமைத்துவ உத்தியோகத்தர் எம்.ஏ. சனூசியா உள்ளிட்ட முக்கியஸ்தர்கள் கலந்து கொண்டனர்.

# கத்தார் நாட்டுக்கு வருகை தந்துள்ள லியோனியை வரவேற்ற ஸ்கை தமிழ் குழு




இந்தியாவின் பிரபல பட்டிமன்றப் பேச்சாளரான திண்டுக்கல் ஐ.லியோனி (24) கத்தாரில் நடைபெறவிருந்த பட்டிமன்ற நிகழ்வொன்றில் கலந்து கொள்வதற்கு வருகை தந்திருந்த போது அங்குள்ள சமசெட் ஹோட்டலில் ஸ்கை தமிழ் குழுவால் வரவேற்கப்பட்டார். இந்நிகழ்வில் கத்தாரில் உள்ள முக்கிய அமைப்புகளின் பிரதிநிதிகளும் கலந்து கொண்டனர். இதில் ஸ்கை தமிழ் ஊடகம் கத்தார் சார்பாக ஊடக பணிப்பாளர் ஜே.எம்.பாஸித்தும் ஸ்கை தமிழின் பிராந்திய முகாமையாளரும், புகைப்பட கலைஞனுமான ஹுபைப் முஸம்மிலும் கலந்து கொண்டதோடு நூல்களும் அன்பளிப்பு செய்யப்பட்டன.





கொழும்பு, கொட்டாஞ்சேனை இந்து மகா வித்தியாலயத்தில் நேற்று முன்தினம் நடைபெற்ற அகில இலங்கை கிராமிய கலைகள் ஒன்றியத்தின் ஆடற்கலைப் போட்டியை ஆரம்பித்து வைத்த சங்கத்தமிழ் இந்து மன்ற அறநெறிப் பாடசாலை மாணவிகளின் நடனம். இந்தப் போட்டி இம்முறை இந்து கலாசார திணைக்களத்துடன் இணைந்து நடத்தப்படுவது குறிப்பிடத்தக்கது.



பதுளை, தெல்பெத்த ,கெந்தகொல்ல வீர சக்தி விநாயகர் கோவிலில் புதிதாக நிர்மாணிக்கப்படவுள்ள வழி பிள்ளையார் ஆலயத்தில் அடிக்கல் நடு விழா நேற்று 26 பௌர்ணமி தினத்தன்று சுபவேளையில் இடம் பெற்றது. பிரதம அதிதியாக கலந்து கொண்ட பதுளை பாராளுமன்ற உறுப்பினர் வடிவேல் சுரேஸ் மற்றும் அதிதிகள் விசேட பூஜை வழிபாடுகளில் கலந்து கொண்ட பின்னர் அடிக்கல் நடுவதைப் படங்களில் காணலாம். (ஊவா சுழற்சி நிருபர்)




உடப்பு , வட்டவான் அருள்மிகு ஸ்ரீ கல்யாண முருகன் ஆலயத்தின் கும்பாபிஷேகத்தை முன்னிட்டு (23) வியாழக்கிழமை எண்ணெய் சாத்தும் நிகழ்வு இடம்பெற்றது. இதன் போது பக்தர்கள் பலர் கலந்துகொண்டனர். (உடப்பு குறூப் நிருபர்)

பலாங்கொடை

## விக்னேஸ்வராவில் 7 மாணவர்கள் சித்தி









*(இரத்தினபுரி சுழற்சி நிருபர்)*

பலாங்கொடை இ/ ஸ்ரீ விக்னேஸ்வரா வித்தியாலயத்தில் இருந்து இவ்வருடம் 7 மாணவர்கள் தரம் ஐந்து புலமைப்பரிசில் பரீட்சையில் சித்தியடைந்துள்ளனர். இதற்காக சகல ஒத்துழைப்புகளையும் வழங்கிய அதிபர் கே.கார்திகேசு உட்பட அனைவருக்கும் பொறுப்பாசிரியை பீ.மனோகரி நன்றி தெரிவித்தார். வீ.யுவாஷ் 153 ரீ.குருதிஷ் 153 கே.தருணி 153 ஜே வி.விமர்ஷனி 148 எஸ் ஒக்ஷான் 147 டீ.ருத்ரா 145 ஆர். சொபித்கான் 145.


பெருந்தோட்ட கைத்தொழில் அமைச்சு

**இறப்பர் அபிவிருத்தித் திணைக்களம்**

**2006 ஆம் ஆண்டு 20ஆம் இலக்க இறப்பர் மீள் பயிர்ச்செய்கை மானிய (திருத்திய) சட்டத்தின் கீழ் உடன் இயற்கை இறப்பர் மற்றும் இறப்பர் சார்ந்த பொருட்களை உற்பத்தி செய்யும் உற்பத்தியாளர்கள் மற்றும் ஏற்றுமதியாளர்களைப் பதிவு செய்தல் - 2024 ஆம் ஆண்டு.**

மேற்குறிப்பிட்ட சட்டத்தின் கீழ் செயற்படுத்தப்பட்ட 2007ஆம் ஆண்டு 01ஆம் இலக்க செஸ் வரி கட்டளைகளுக்கு அமைவாக பின்வரும் கைத்தொழிலாளர்களிடம் 2024 ஆம் ஆண்டுக்கான பதிவு செய்தல் மற்றும் பதிவுகளை புதுப்பித்தல் தொடர்பான விண்ணப்பங்கள் கோரப்படுகின்றன.

1) மூல இயற்கை இறப்பர் மற்றும் இறப்பர் சார்ந்த பொருட்கள் ஏற்றுமதியாளர்கள்.
2) இறப்பர் மற்றும் இறப்பர் சார்ந்த பொருட்கள் (முடிவுப்பொருள் / அறைகுறை) உற்பத்தியாளர்கள்
3) இயற்கை இறப்பர் உற்பத்தி கைத்தொழிலாளர்கள் (சகல கிரேப் இறப்பர் உற்பத்தியாளர்கள் மற்றும் நீக்கம் செய்யப்பட்ட திரவத்தன்மை வாய்ந்த இறப்பர் பால் உற்பத்தியாளர்கள்)

இந்த பதிவு செய்தல் மற்றும் புதுப்பித்தலுக்கான விண்ணப்பப்படிவங்களை கோருதல் 2023.12.31ஆம் திகதியன்று முடிவுறும். அவ்வாறே 2024ஆம் ஆண்டில் முதல் தடவையாக பதிவு செய்யும் விண்ணப்பதாரிகள் மற்றும் 2007 இருந்து 2023ம் வருடத்திற்காக பதிவு செய்தல் மற்றும் பதிவு செய்தலைப் புதுப்பித்தலைத் தாமதப்படுத்தியுள்ள விண்ணப்பதாரிகள் மேற்குறித்த திகதிக்காக பதிவு செய்வதற்காக விண்ணப்பித்தல் வேண்டும்.

பதிவு செய்தலுக்கான விண்ணப்பப்பத்திரங்களைப் பெற்றுக் கொள்ளுதல். தற்போது இந்தத் திணைக்களத்தில் பதிவு செய்துள்ள கைத்தொழிலாளர்களுக்கு 2024ஆம் ஆண்டுக்கான பதிவு செய்தலைப் புதுப்பித்தலுக்காக குறித்த விண்ணப்பப்பத்திரத்தை தபால் மூலம் அனுப்புவதற்கு நடவடிக்கை மேற்கொள்ளப்பட்டுள்ளதோடு ஏனைய சகல விண்ணப்பதாரிகளும் பதிவு செய்தலுக்கான விண்ணப்பப்படிவம் இறப்பர் அபிவிருத்தித் திணைக்களம், 465, கானகென, பத்தரமுல்லை என்ற முகவரியில் அமைந்துள்ள பிரதான அலுவலகத்திற்கு வந்து பெற்றுக்கொள்ள முடியும்.

பதிவு செய்தல் கட்டணம் மற்றும் பதிவு செய்தலைப் புதுப்பிப்பதற்கான கட்டணம். பூர்த்தி செய்து அனுப்பப்படும் விண்ணப்பப்படிவத்துடன் ரூபாய் 1150 பதிவு செய்தல் அல்லது பதிவு செய்தலைப் புதுப்பித்தல் கட்டணமாகவும், ரூபாய் 115 முத்திரைக் கட்டணமாகவும் செலுத்துதல் வேண்டும். இதனை ரூபாய் 1265 பெறுமதி வாய்ந்த காசுக்கட்டளையாகவோ அல்லது தபாற் கட்டளையாகவோ, காசோலையாகவோ "பணிப்பாளர் நாயகம்" இறப்பர் அபிவிருத்தித் திணைக்களம் என்ற பெயரில் மேற்குறித்த முகவரிக்கு அனுப்பலாம். அல்லது நேரடியாகக் கையளிக்கலாம். பணமாக சலுத்துவாதயின் பிரதான அலுவலகத்திற்கு வந்து செலுத்தலாம். இதற்கு மேலதிகமாக பதிவு செய்தலின்போது, இறப்பர் மற்றும் மற்றும் இறப்பர் சார்ந்த உற்பத்திகளில் அடங்கியுள்ள இறப்பரின் தன்மை மற்றும் உண்மையான சதவீத அளவு பற்றிய வெளியீடு விபரத்தை (RCESS 2 படிவம்) பதிவு செய்தல் விண்ணப்பப்படிவத்துடன் கிடைப்பதற்கான ஒழுங்கினை மேற்கொள்ளல் வேண்டும்.

2007 ஆம் ஆண்டு தொடக்கம் இதுவரை பதிவு செய்யப்படாத அல்லது பதிவு செய்தலைப் புதுப்பிக்காத கைத்தொழிலாளர்கள் நிலுவை அனுமதிப்பத்திரக் கட்டணத்துடன் குறித்த விண்ணப்பப்படிவத்தை மேற்குறித்த முகவரிக்கு அனுப்புதல் வேண்டும். இது தொடர்பான மேலதிக தொடர்புகளுக்கு தொலைபேசி இலக்கம் 0112889447க்கு அழைத்து அல்லது எமது www.rubberdev.gov.lk என்ற இணையதளத்தில் பெற்றுக் கொள்ள முடியும். பதிவு செய்தலைப் பெற்றுக்கொள்ளாத அல்லது பதிவு செய்தலைப் புதுப்பிக்காத இறப்பர் தொடர்பான உற்பத்திக் கைத்தொழில் உள்ளவர்கள் 2006 ஆம் ஆண்டு 20ஆம் இலக்க இறப்பர் மீள் பயிர்ச்செய்கை மானியச் சட்டத்தின் 4ம் (பிரதான சட்டம் 10 அ) பிரிவின் தண்டணைக்கு ஆளாவர் என்பதை தாழ்மையுடன் அறியத் தருகிறேன்.

**மாதவ வர்ணகுலசூரிய**
**பணிப்பாளர் நாயகம்**



**வனசீவராசிகள் மற்றும் வனவளங்கள் பாதுகாப்பு அமைச்சு**

**வனசீவராசிகள் பாதுகாப்புத் திணைக்களம்**

**விலைமனுக்களுக்கான அழைப்பு**

கிரிதலே, தேசிய வனசீவராசிகள் பயிற்சி மற்றும் ஆராய்ச்சி நிலையத்தில் புதிய கட்டிடத்திற்கான சமையல் உபகரணங்களின் வழங்கல், நிறுவுதல், சோதனை மற்றும் செய்து காட்டலின் பெறுகை

1. கிரிதலே, தேசிய வனசீவராசிகள் பயிற்சி மற்றும் ஆராய்ச்சி நிலையத்தில் புதிய கட்டிடத்திற்கான சமையல் உபகரணங்களின் வழங்கல், நிறுவுதல், சோதனை மற்றும் செய்து காட்டலின் பெறுகைக்காக விலைமனுக்கள் இத்தால் கோரப்படுவதோடு விலைமனுக்கள் ஏற்பது 2023 டிசம்பர் 15ஆம் திகதி பி.ப. 02.30க்கு நிறைவடையும்.
2. தேசிய போட்டிரீதியான விலைமனு (NCB) நடைமுறை மூலம் விலைக்கேட்பு நடத்தப்படும்.
3. மீளளிக்கப்படாத கேள்விக் கட்டணமாக மூவாயிரத்து தொல்லாயிரத்து ஐம்பது ரூபாவை (ரூபா 3950.00) ரொக்கப் பணத்தில் செலுத்தி பத்தரமுல்லை, ஜயந்திபுர வீதி, இல. 811/A, வனசீவராசிகள் பாதுகாப்புத் திணைக்களம், 1ஆவது மாடி, நிதிப் பிரிவில் இருந்து ஆங்கில மொழியிலான விலைமனு ஆவணங்களின் முழுமையான தொகுதி ஒன்றை ஆர்வமுடைய விலைமனுதாரர்களால் வாங்கலாம்.
4. விலைமனுக்கள் 90 நாட்கள் (2024.03.07) செல்லுபடியாக இருத்தல் வேண்டும் என்பதோடு எந்த ஒரு நீடிப்பு திகதியும் வாங்குபவரால் அறிவிக்கப்படும்.
5. 2023.12.08 ஆம் திகதி மு.ப. 11.00 தொடக்கம் பி.ப. 2.00 வரை வேலையிடத்தை பரீட்சிக்க முடியும்.
6. விலைமனுவுக்கு முந்திய சந்திப்பு கிரிதலே, தேசிய வனசீவராசிகள் பயிற்சி மற்றும் ஆராய்ச்சி நிலையத்தில் 2023.12.08 ஆம் திகதி பி.ப. 2.30க்கு இடம்பெறும்.
7. விலைமனு ஆவணத்தில் குறிப்பிடப்பட்டவாறு ரூபா ஒரு இலட்சத்து எண்பதாயிரத்தின் (ரூபா 180,000.00) பெறுமதி ஒன்றுக்காக விலைமனு பிணை ஒன்றை கொண்டிருத்தல் வேண்டும்.
8. விலைமனு பிணை 2024.04.16ஆம் திகதி வரை (விலைமனு மூடப்படும் திகதியில் இருந்து 120 நாட்கள்) செல்லுபடியாக இருத்தல் வேண்டும் என்பதோடு எந்த ஒரு நீடிப்பு திகதியும் வாங்குபவரால் அறிவிக்கப்படும்.
9. விலைமனுக்களை சமர்ப்பிப்பதற்கான இறுதித் திகதி 2023.12.18 ஆம் திகதி பி.ப. 02.30.
10. முத்திரை பொறிக்கப்பட்ட விலைமனுக்களை அது மூடப்படும் திகதிக்கு முன்னர் கிடைப்பதற்கு பணிப்பாளர் நாயகம், வனசீவராசிகள் பாதுகாப்புத் திணைக்களம், இல. 811/A, ஜயந்திபுர வீதி, பத்தரமுல்லை என்ற முகவரிக்கு பதிவுத் தபால் மூலம் அல்லது கைகளால் கொண்டுவந்து சேர்க்கலாம். விலைமனு ஏற்கும் நேரத்திற்குப் பின் கிடைக்கும் எந்த ஒரு விலைமனுவும் நிராகரிக்கப்படும். விலைமனுவைக் கொண்ட கடித உறையின் இடது பக்க மேல் மூலையில், "கிரிதலே, தேசிய வனசீவராசிகள் பயிற்சி மற்றும் ஆராய்ச்சி நிலையத்தில் புதிய கட்டிடத்திற்கான சமையல் உபகரணங்களின் வழங்கல், நிறுவுதல், சோதனை மற்றும் செய்து காட்டலின் பெறுகை" என்று குறிப்பிடுதல் வேண்டும் என்பதோடு கீழ் கையொப்பமிட்டிருத்தல் வேண்டும்.
11. விலைமனுக்கள் ஏற்கும் நேரம் முடிவுற்ற பின் மேலுள்ள முகவரியில் விலைமனுக்கள் உடன் திறக்கப்படும்.
12. விலைமனுக்களை திறக்கும் சந்தர்ப்பத்தில் பங்கேற்பதற்கு விலைமனுதாரர்கள் அல்லது அவர்தம் அதிகாரம் பெற்ற பிரதிநிதிகள் கோரப்படுகின்றனர்.
13. மேலதிக விபரங்கள் அல்லது தெளிவை பெற, விலைமனுதாரர் 011-2888585/011-2871537 என்ற தொலைபேசி இலக்கத்தில் பத்தரமுல்லை, ஜயந்திபுர வீதி, இல. 811/A, வனசீவராசிகள் பாதுகாப்புத் திணைக்கள, பணிப்பாளர் நாயகத்தை தொடர்புகொள்ளலாம்.

**பணிப்பாளர் நாயகம்,**
**வனசீவராசிகள் பாதுகாப்புத் திணைக்களம்**
**இல. 811/A, ஜயந்திபுர வீதி,**
**பத்தரமுல்லை.**



**இலங்கை துறைமுகங்கள் அதிகார சபை**

**விலைமனுக்களுக்கான அழைப்பு (IFB)**

**இலங்கைத் துறைமுகங்கள் அதிகார சபையின் CFS-1 பண்டகசாலைக்கு CCTV IP கெமரா முறைமையை நிறுவுதல் மற்றும் செயற்படுத்துதலுக்கான கேள்வி**

கேள்வி இல. **EW/13/EL/2023/CCTV III**

1. இலங்கைத் துறைமுகங்கள் அதிகார சபையின் CFS-1 பண்டகசாலைக்கு CCTV IP கெமரா முறைமையை நிறுவுதல் மற்றும் செயற்படுத்துதலுக்கான ஆர்வமுள்ள தரப்பினரிடமிருந்து முத்திரை பொறிக்கப்பட்ட விலைமனுக்களை இலங்கை துறைமுக அதிகார சபையின் சார்பில் திணைக்கள பெறுகைக் குழுவின் தவிசாளர் கோருகிறார்.
2. 5 மில்லியன் ரூபாவிற்கு மேற்படும் கேள்விகளுக்கு 1987இன் 03ம் இலக்க பொது ஒப்பந்தங்கள் சட்டத்தின் ஏற்பாடுகள் பிரயோகிக்கப்படும் என விலைமனுதாரர்கள் இத்தால் அறிவுறுத்தப்படுகிறார்கள். இதற்கமைய சகல தரப்பினரும் மேற்குறிப்பிட்ட ஒவ்வொரு கேள்வியின் பொருட்டும் ஒப்பந்தக் காலப்பகுதியில் கூறப்பட்ட சட்டத்தை கண்டிப்பாக பின்பற்றுதல் வேண்டும் என்பதுடன் முறையாகப் பூர்த்தி செய்யப்பட்ட பதிவுச் சான்றிதழை கேள்வி ஆவணங்களுடன் சமர்ப்பித்தல் வேண்டும்.
2. விலைமனுதாரர்கள் மேற்குறிப்பிட்டவைகளுக்கு நிகரான சேவைகளை வழங்கும் வியாபாரத்தில் ஆகக் குறைந்தது கடந்த மூன்று (3) வருடங்கள் ஈடுபட்டிருத்தல் வேண்டும்.
3. ஆர்வமுள்ள விலைமனுதாரர்கள் மேலதிக தகவல்களை கொழும்பு-01, இல. 45, லேடன் பஸ்தியன் மாவத்தை, இலங்கை துறைமுகங்கள் அதிகார சபை பிரதான பொறியியலாளர் (மின்சாரம் மற்றும் இலத்திரனியல்) அவர்களிடமிருந்து பெற்றுக்கொள்ளலாம். தொலைபேசி: 0094 11-2483081/ தொலைநகல்: 0094 11-2424309 / மின்னஞ்சல் ganaka@slpa.lk மற்றும் இதே முகவரியில் சாதாரண வேலை நேரங்களில் விலைமனுக்களைப் பரீட்சித்துப் பார்க்கலாம் என்பதுடன் விலைக்கோரல் முன்னோடிக் கூட்டமொன்று 2023-12-07ஆம் திகதி மு.ப. 10.00 மணிக்கு கொழும்பு-01, லேடன் பஸ்தியன் வீதி, 45ஆம் இலக்கத்திலுள்ள இலங்கை துறைமுகங்கள் அதிகார சபை, தொழில்நுட்ப நூலகத்தில் இடம்பெறும்.
4. ஒப்பந்தத்தைக் கையளிக்கப்பெறுவதற்கான தகுதியாக, சித்திகரமான விலைமனுதாரர்கள் அபகீர்த்தியாளர் பட்டியலுக்கு உட்படாதவராகவும் EM3 (ELV) CIDA தரப் பதிவையும் கொண்டிருத்தல் வேண்டும்.
5. ஆர்வமுள்ள விலைமனுதாரர்கள் 2,000.00 ரூபா (வரிகள் உட்பட) மீளளிக்கப்படாத கட்டணத்தைச் செலுத்தியதன் பின் 2023-11-27ஆம் திகதி தொடக்கம் 2023-12-07ஆம் திகதி வரையான வேலை நாட்களில் மு.ப. 9.00 மணி முதல் பி.ப. 3.00 மணி வரையில் பிரதான பொறியியலாளர் (E&E) அவர்களுக்கு எழுத்துமூலமான விண்ணப்பமொன்றைச் சமர்ப்பிப்பதன் மூலம் கொழும்பு-01, இல. 45, லேடன் பஸ்தியன் மாவத்தை, இலங்கை துறைமுக அதிகார சபை, பொறியியல் வேலைகள் கிளையிலிருந்து ஆங்கில மொழியிலான விலைமனு ஆவணங்களின் முழுமையான தொகுதியொன்றைக் கொள்வனவு செய்யலாம்.
6. விலைமனுக்கள் பின்வரும் முகவரிக்கு இறுதி நேரம் அல்லது அதற்கு முன்னர் ஒப்படைக்கப்படல் வேண்டும். தாமதமாகக் கிடைக்கும் விலைமனுக்கள் ஏற்றுக்கொள்ளப்பட மாட்டாது. விலைமனுக்கள் பின்வரும் முகவரியில் மூடும் வேளையில் நேரடியாகச் சமுகமளித்திருக்கும் விலைமனுதாரர்களின் பிரதிநிதிகள் முன்னிலையில் திறக்கப்படும். அனைத்து விலைமனுக்களுடனும் 120 நாட்களுக்கு செல்லுபடியாகும் 95,000.00 ரூபா பெறுமதியான விலைமனுப் பிணையொன்று இணைக்கப்பட்டிருத்தல் வேண்டும்.

**தலைவர்,**
**பெறுகைக் குழு (இலங்கை துறைமுகங்கள் அதிகார சபை),**
**மே/பா பிரதான முகாமையாளர் (மின்சாரம் மற்றும் இலத்திரனியல்),**
**மின்சாரம் மற்றும் இலத்திரனியல் பொறியியல் பிரிவு,**
**இலங்கை துறைமுக அதிகார சபை,**
**இல. 45, லேடன் பஸ்தியன் வீதி,**
**கொழும்பு-01.**

# அறிவித்தல்

## ஹப்புத்தளை நகரசபை

2024ம் ஆண்டிற்கான குறைநிரப்பு வரவு - செலவுத்திட்ட அறிக்கையை பொதுமக்களுக்கு பரீட்சித்துப் பார்ப்பதற்கான வாய்ப்பு வழங்குதல்.

255ம் அதிகாரமான நகர சபை சட்டவாக்கத்தின் 178ம் பிரிவில் தீர்மானிக்கப்பட்டுள்ளவாறு மற்றும் அச் சட்டத்தின் 193ம் பிரிவில் வழங்கப்பட்டுள்ள அதிகாரத்தின் பிரகாரம் கௌரவ ஊவாமாகாண ஆளுநரால் 2020.10.29ம் திகதிய வர்த்தமானி இல. 21 99/25 மூலம் பகிரங்கப்படுத்தப்பட்ட 2020 நகர சபை வரவு - செலவுத்திட்ட தயாரிப்பு மற்றும் அமுல்படுத்தல் வீதி இல. 10(2) (ஆ) பிரகாரம் ஹப்புத்தளை நகர சபையினால் 2024ம் ஆண்டு சார்பாக சமர்ப்பிப்பதற்கு தீர்மானிக்கப்பட்டுள்ள குறைநிரப்பு வரவு செலவுத்திட்ட அறிக்கை 2023.11.17 முதல் ஹப்புத்தளை நகர சபை அலுவலகத்தில் பொது மக்கள் பரீட்சித்துப் பார்ப்பதற்காக வாய்ப்பு வழங்கப்பட்டுள்ளதாக இத்தால் அறிவித்தல் விடுக்கப்படுகிறது.

**2023.11.15**

**டபிள்யூ.எச்.சீ. நிஷாந்தி**
**செயலாளர் (பதில்)**
**நகர சபை - ஹப்புத்தளை**

# 2007 ஆம் ஆண்டின் கம்பனிகள் சட்ட 59(2) ஆம் பிரிவின் கீழான பொது அறிவித்தல்

வத்தளை- நீர்கொழும்பு வீதி, 29 ஆம் இலக்கத்தில் அதனது பதிவு செய்யப்பட்ட முகவரியைக் கொண்டுள்ளதும் பிவி 89007 என்ற இலக்கத்தின் கீழ் பதிவு பெற்றதுமாகிய ஒடிலியா ஹோம்ஸ் மற்றும் ரியல் எஸ்டேட் கம்பனி (பிரைவட்) எல்டிடீ இன் உத்தேசிக்கப்பட்டுள்ள கூறப்பட்ட முதலீட்டானது 2,500,000.00 (இருபத்தைந்து இலட்சத்திலிருந்து) 750,000.00 (எழுபத்தைந்து இலட்சமாக) குறைக்கப்பட்டுள்ளதென இத்தால் வழங்கப்படுகின்றது.

மேற்கூறப்பட்டுள்ள முதலீட்டின் உத்தேசிக்கப்பட்டுள்ள குறைப்பிற்காக அனுமதியை பெறும் நோக்கத்திற்காக இந்த திகதியிலிருந்து 60 நாட்களுக்கு குறையாத காலத்தில் விஷேட தீர்மானமொன்று நிறைவேற்றப்படும்.

**சபையின் கட்டளைப்பிரகாரம்**
**கம்பனிச் செயலாளர்**

**2023 நவம்பர் 27ஆம் திகதியன்று**

# 2007 ஆம் ஆண்டின் 7ஆம் இலக்க கம்பனிகள் சட்ட 59(2) ஆம் பிரிவின் கீழான பொது அறிவித்தல்

வத்தளை, நீர்கொழும்பு வீதி, 29 ஆம் இலக்கத்தில் அதனது பதிவு செய்யப்பட்ட முகவரியைக் கொண்டுள்ளதும் பிவி 89007 என்ற இலக்கத்தின் கீழ் பதிவு பெற்றதுமாகிய ஒடிலியா ரெஜிடென்சீஸ் (பிரைவட்) எல்டிடீ இன் உத்தேசிக்கப்பட்டுள்ள கூறப்பட்ட முதலீட்டானது 5,000,000.00 (ஐம்பது இலட்சத்திலிருந்து) 2,500,000 (இருபைத்தைந்து இலட்சமாக) குறைக்கப்பட்டுள்ளதென இத்தால் வழங்கப்படுகின்றது.

மேற்கூறப்பட்டுள்ள முதலீட்டின் உத்தேசிக்கப்பட்டுள்ள குறைப்பிற்காக அனுமதியை பெறும் நோக்கத்திற்காக இந்த திகதியிலிருந்து 60 நாட்களுக்கு குறையாத காலத்தில் விஷேட தீர்மானமொன்று நிறைவேற்றப்படும்.

**சபையின் கட்டளைப்பிரகாரம்**
**கம்பனி செயலாளர்**

**2023 நவம்பர் 27 ஆம் திகதியன்று**

## மத்திய சுற்றாடல் அதிகாரசபை

இறுதித்தீர்மான பொது அறிவித்தல்

**தேசிய சுற்றாடல் சட்டத்தின் பிரிவு 23வ(4) இன் கீழான அறிவித்தல்**

**புதிய அநுராதபுரம் GS இலிருந்து புதிய ஹபரணை GS வரை உத்தேசிக்கப்பட்ட 220 KV மின் கடத்தும் கம்பி பாதை**

### ஆரம்ப சுற்றாடல் பரிசீலனை (ஆ.சு.ப.) அறிக்கை

மேற்கூறப்பட்ட ஆரம்ப சுற்றாடல் பரிசீலணை பிற்சேர்க்கைனை (ஆ.சு.ப) அறிக்கையை ஆய்வு செய்ததன் பின்னர் மத்திய சுற்றாடல் அதிகார சபையானது 22 நவம்பர் 2000 திகதியன்று வெளியிடப்பட்ட 1159/22 ஆம் இலக்க வர்த்தமானி அறிவித்தலின் மூலம் திருத்தியமைக்கப்பட்ட 1993 ஆம் ஆண்டின் 1 ஆம் இலக்க தேசிய சுற்றாடல் சட்ட (கருத்திட்டங்களை அங்கீகரிப்பதற்கான அறிவித்தல் முறை) ஒழுங்குவிதி 9(i) இற்கமைவாக இல.50, சிற்றம்பலம் ஏ.கார்டினர் மாவத்தை, கொழும்பு -02 என்னும் முகவரியில் அமைந்துள்ள இலங்கை மின்சார சபைக்கு மேற்கூறப்பட்ட செயற்றிட்டத்தினை நடைமுறைப்படுத்துவதற்கான அங்கீகாரத்தினை குறித்துரைக்கப்பட்ட நிபந்தனைகள், விசேட விதிகளுக்கமைய வழங்க தீர்மானித்துள்ளது என்பதை இத்தால் பொதுமக்கள் யாவருக்கும் அறியத்தருகின்றேன். 2000 ஆம் ஆண்டின் 53வது இலக்க (திருத்தியமைக்கப்பட்ட) தேசிய சுற்றாடல் சட்டத்தின் பொது ஆவணமான மேற்கூறப்பட்ட ஆரம்ப சுற்றாடல் பரிசோதனை அறிக்கையானது மத்திய சுற்றாடல் அதிகாரசபையின் தேசிய சுற்றாடல் தகவல் மையத்தில் உள்ளது.

**பணிப்பாளர் நாயகம்**
**மத்திய சுற்றாடல் அதிகாரசபை**
**"பரிசர பியச"**
**இல.104, டென்சில் கொப்பேகடுவ மாவத்தை**
**பத்தரமுல்ல**

## 2011 இல 40 சட்டத்தின் திருத்தப்பட்ட 2006 இல. 05 நிதி மோசடியை தவிர்க்கும் சட்டத்தின் 8(3) பிரிவின் பிரகாரம் விடுக்கப்படும் சொத்து செயற்பாடற்றதாக்கும் அறிவித்தல்

ராஜகிரிய, ஒபேசேக்கரபுர ஸ்கந்த தேவாலய வீதி, இல. 07/27, முகவரியில் தொன் சமன்மலி தில்ருக்ஷி ஹேவாவித்தாரன என்பவரால் கீழேயுள்ள சொத்துக்களை மேற்படி சட்டத்தின் 35ஆம் பிரிவின் பிரகாரம் சட்ட விரோத செயற்பாடொன்றின் மூலம் அல்லது ஏதேனும் சட்டவிரோத செயற்பாடொன்றின் மூலம் பெற்ற தொகையில் ஈட்டப்பட்டதாக தெரியவந்துள்ளதால் மேற்படி சட்டத்தின் 7ம் மற்றும் 8ம் பிரிவின் பிரகாரம் 2023.11.20 முதல் கொழும்பு மேல் நீதிமன்றத்தில் HC/SPL/14/2023 இன் கீழ் செயற்பாடற்றதாக்கும் கட்டளை உறுதி செய்யப்பட்டு நீடிக்கப்பட்டுள்ளது.

01. சட்டதரணி மற்றும் பகிரங்க நொத்ததாரிசு கே.கே. திக்கும்புரவினால் எழுதி உறுதி செய்யப்பட்ட 2021.09.30ம் திகதி இல. 194 எனும் விற்பனைமுறி மூலம் கொள்வனவு செய்துள்ள இல.524 மாதிவெல கிராம அதிகாரி பிரிவில் உள்ள "அளுபோகஹவத்த" எனும் எம்.ஏ. ஜயரத்ன அனுமதி பெற்ற நில அளவையாளரினால் அளந்து தயாரிக்கப்பட்ட 2024.07.04ம் திகதிய இல. 4830 என்ற வரைபடத்தின் துண்டு இல. "சீ1ஏ" என்ற 7.1 பேர்ச் கொண்ட காணி மற்றும் அதற்குள் அமைந்துள்ள சொத்துக்கள்.

மேற்படி சொத்து சம்பந்தமாக தமது உரித்துரிமையை நீதிமன்றத்தில் உறுதி செய்வதற்கு உண்மையான மூன்றாம் தரப்பினர்களுக்கு வசதிகள் வழங்கும் முகமாக இத்தால் பிரசுரிக்கிறேன்.

**நீதிமன்றத்தின் கட்டளைப் பிரகாரம்,**
**மேலதிக பிதிவாளர்,**
**கொழும்பு மேல் நீதிமன்றம் இல - 02**
**2023.11.21**



# 25 ஆண்டுகளுக்கு பின் புலமைப் பரீட்சையில் சித்தி

*(இரத்தினபுரி சுழற்சி நிருபர்)*

நடைபெற்று முடிந்த தரம் 5 புலமைப்பரிசில் பரீட்சையில் பலாங்கொடை கல்வி வலயத்தின் இ/பெட்டிகலை தமிழ் வித்தியாலய மாணவி எஸ்.சுதர்ஷனி சிறப்பாகச் சித்தியடைந்து தனது பெற்றோர்கள் மற்றும் பாடசாலை அதிபர், பொறுப்பாசிரியை உட்பட முழுப் பாடசாலை சமூகத்துக்கும் பெருமை சேர்த்துள்ளார்.

144 புள்ளிகளை பெற்று சித்தியடை ந்துள்ள இம்மாணவி இப்பிரதேசத்தைச் சேர்ந்த சுரேஷ் செல்வராணி தம்பதிகளின் புதல்வியாவார்.

இதற்கு முன் இப்பாடசாலையில் இருந்து 25 ஆண்டுகளுக்கு முன்பே ஒரு மாணவி இப்பரீட்சையில் சித்தியடைந்துள்ளார் அதன் பின் இம்மாணவியே தற்போது சித்தியடைந்துள்ளார் . இப்பரீட்சையில் இம்மாணவி சித்தி பெறுவதற்கு சிறப்பான வழிகாட்டலை வழங்கிய அதிபர் எஸ்.எம்.இல் லியாஸ் இவ்வகுப்பின் பொறுப்பாசிரியை ரீ.கலைமதி ஆகியோர் இவ்வகுப்பு மாணவர்களை வெளிப்பிர த்தியேக வகுப்புக்கள் எதற்கும் அனுப்பாது தாங்களே நடத்தி முன்மாதிரியாகச் செயல்பட்டதாக இப்பாடசாலைப் பெற்றோர் பாராட்டுகின்றனர்.

# இலங்கை வங்கி

1968 ஆம் ஆண்டு 34ஆம் இலக்கச் சட்டத்தாலும் 1974 ஆம் ஆண்டு 10 ஆம் இலக்க அதிகாரச் சட்டத்தாலும் திருத்தப்பட்டவாறு இலங்கை வங்கி கட்டளைச்சட்டம் 21 ஆம் பிரிவின் (397 ஆம் அத்தியாயம்) கீழ் வெளியிடப்படும் அறிவித்தல்.

2023.11.08 இல் நடைபெற்ற இலங்கை வங்கி பணிப்பாளர் சபை கூட்டத்தில் விஷேடமாகவும் ஏகமனதாகவும் தீர்மானித்ததாவது,

1. காலி பிரசித்த நொத்தாரிசு ஆர்.ஏ. லக்மாலி அத்தாட்சிப்படுத்திய 2021 நவம்பர் 26 திகதியிட்ட ஈட்டு முறி இல. 1103, காலி பிரசித்த நொத்தாரிசு பி.கே.ஆர். காரியவசம் அத்தாட்சிப்படுத்திய 2023 மார்ச் 20 திகதியிட்ட ஈட்டு முறி இல. 322, காலி பிரசித்த நொத்தாரிசு றீ.கே. அபேநாயக்க அத்தாட்சிப்படுத்திய 2023 ஆகஸ்ட் 25 திகதியிட்ட மேலதிக ஈட்டுமுறி இல. 1321 ஆகியவற்றின் பேரில் காலி, கராபிட்டிய, ஹிரிம்புர குறுக்கு வீதி, இல. 91 என்னும் முகவரியில் அமைந்த எம்.எஸ். குயின்ஸ்பரி ஹொஸ்பிட்டல் பிரைவேற் லிமிட்டெற்றிடமிருந்து (பீவீ 111696) 1 ஆவது மீள் அட்டவணைக் கடன் மீது 2023.10.11 வரை வருமதியாக உள்ள முதலும் வட்டியும் ரூ. 912,933,244.52 (தொள்ளாயிரத்து பன்னிரெண்டு மில்லியன் தொள்ளாயிரத்து முப்பத்து மூன்று ஆயிரத்து இருநூற்று நாற்பத்து நான்கு ரூபாய் ஐம்பதிரெண்டு சதம்) அத்துடன் ரூ. 852,000,000.00 (எண்ணூற்று ஐம்பத்து இரண்டு மில்லியன் ரூபாய்) மீது (2024.03.19 வரை) ஆண்டுக்கு இருபது (20%) வீதத்திலும் (2024.03.20 தொடக்கம்) மாதாந்தம் AWPR+ இரண்டு (2%) மும் ஆண்டுக்கு பதினைந்து (15%) மிதக்கும் வீதத்தில் 2023.10.12 தொடக்கம் கொடுப்பனவுத் திகதி வரை மேலும் வட்டியும், மற்றும் 2 ஆவது மீள் அட்டவணைக் கடன் மீது 2023.10.11 வரை வருமதியாக உள்ள முதலும் வட்டியும் ரூ. 197,779,863.02 (நூற்றுத் தொண்ணூற்றேழு மில்லியன் எழுநூற்று எழுபத்தொன்பது ஆயிரத்து எண்ணூற்று அறுபத்து மூன்று ரூபாய் இரண்டு சதமும்) அத்துடன் ரூ. 197,500,000.00 (நூற்றுத் தொண்ணூற்றேழு மில்லியன் ஐந்நூறு ஆயிரம் ரூபாய்) மீது ஆண்டுக்கு நான்கு (4%) வீதத்தில் 2023.10.12 தொடக்கம் மேலும் வட்டியும் 3 ஆவது தவணை கடன் மீது 2023.10.11 வரை வருமதியாக உள்ள முதலும் வட்டியும் ரூ. 15,722,617.08 (பதினைந்து மில்லியன் எழுநூற்று இருபத்திரெண்டு ஆயிரத்து அறுநூற்றுப்பதினேழு ரூபாய் எட்டு சதமும்) அத்துடன் ரூ. 15,639,154.78 (பதினைந்து மில்லியன் அறுநூற்று முப்பத்தொன்பது ஆயிரத்து நூற்று ஐம்பத்து நான்கு ரூபாய் எழுபத்தெட்டு சதம்) மீது ஆண்டுக்கு பதினைந்து (15%) வீதத்தில் 2023.10.12 தொடக்கம் மேலும் வட்டியும் வங்கிக்கு வருமதியாக உள்ளதாலும்,
2. காலி பிரசித்த நொத்தாரிசு ஆர்.ஏ. லக்மாலி அத்தாட்சிப்படுத்திய 2021 நவம்பர் 26 திகதியிட்ட ஈட்டு முறி இல. 1103, காலி பிரசித்த நொத்தாரிசு பி.கே.ஆர். காரியவசம் அத்தாட்சிப்படுத்திய 2023 மார்ச் 20 திகதியிட்ட ஈட்டு முறி இல. 322, காலி பிரசித்த நொத்தாரிசு றீ.கே. அபேநாயக்க அத்தாட்சிப்படுத்திய 2023 ஆகஸ்ட் 25 திகதியிட்ட மேலதிக ஈட்டுமுறி இல. 1321 ஆகியவற்றின் பேரில் 1 ஆவது மீள் அட்டவணைக் கடன் மீது ரூ. 912,933,244.52 (தொள்ளாயிரத்து பன்னிரெண்டு மில்லியன் தொள்ளாயிரத்து முப்பத்து மூன்று ஆயிரத்து இருநூற்று நாற்பத்து நான்கு ரூபாய் ஐம்பதிரெண்டு சதமும்) 2 ஆவது மீள் அட்டவணைக் கடன் மீது ரூ. 197,779,863.02 (நூற்றுத் தொண்ணூற்றேழு மில்லியன் எழுநூற்று எழுபத்தொன்பது ஆயிரத்து எண்ணூற்று அறுபத்து மூன்று ரூபாய் இரண்டு சதமும்) 3 ஆவது தவணைக் கடன் மீது ரூ. 15,722,617.08 (பதினைந்து மில்லியன் எழுநூற்று இருபத்திரெண்டு ஆயிரத்து அறுநூற்றுப்பதினேழு ரூபாய் எட்டு சதமும்) அத்துடன் 2023.10.12 தொடக்கம் விற்பனைத் திகதி வரை மேற்குறிப்பிட்டவாறு வட்டியும் இலங்கை வங்கி கட்டளைச்சட்டம் 26 ஆம் பிரிவின் கீழ் அறவிடவேண்டிய செலவுகள் மற்றும் பணங்களையும் அறவிடும் பொருட்டு இலங்கை வங்கிக்கு ஈடுவைத்த இங்கு கீழ் அட்டவணையில் விபரித்த சொத்தை இலங்கை வங்கி கட்டளைச்சட்டம் 19 ஆம் பிரிவு (397 ஆம் அத்தியாயம்) மற்றும் அதன் திருத்தங்களுக்கமைய பகிரங்க ஏலத்தில் விற்பதற்கு இல. 182/3 (50/3), விஹார மாவத்தை, கொலன்னாவை என்னும் முகவரியைச் சேர்ந்த T&.H. ஒக்ஷன் நிறுவனத்தின் ஏலதாரர் திரு. துசித்த கருணாரத்னவுக்கும், மேற்கூறிய இலங்கை வங்கி கட்டளைச்சட்டத்தின் பிரிவு 21ற்கமைய இத்தீர்மானத்தின் அறிவித்தலை வெளியிடுவதற்கு இலங்கை வங்கி கராப்பிட்டிய கிளை முகாமையாளருக்கும் இத்தால் அனுமதியும் அதிகாரமும் வழங்கப்படுகின்றது.

**மேற்குறிப்பிட்ட முதலாவது அட்டவணை.**

தென் மாகாணம் காலி மாவட்டத்தில் காலி பெரும் பகுதியில் காலி பெரும் பகுதி பிரதேச செயலாளர் பிரிவில் காலி மாநகர சபை எல்லைகளில் தெத்துகொட 101A இலக்க கிராம உத்தியோகத்தர் பிரிவில் தெத்துகொட கிராமத்தில் அமைந்த அலுத்கெதரவத்த காணித்துண்டு D (உத்தரவுபெற்ற நில அளவையாளர் B. வீரசேகர தயாரித்த 1991.02.26 திகதியிட்ட வரைபடம் இல. 2962 இல் எல்லை நிர்ணயித்த காணித்துண்டுகள் 70, 71, 73,75,83 மற்றும் 89) மற்றும் அலுத்கெதரவத்த காணித்துண்டு 3B (உத்தரவுபெற்ற நில அளவையாளர் ஏ. சமரரத்ன தயாரித்த 2008.07.10 திகதியிட்ட வரைபடம் இல. 3248 இல் எல்லை நிர்ணயித்த), அலுத்கெதரவத்த மற்றும் அல்கிரிவத்தயின் காணித்துண்டு B (உத்தரவுபெற்ற நில அளவையாளர் ஏ.என்.டபிள்யு. லியனகே தயாரித்த 2017.09.04 திகதியிட்ட வரைபடம் இல. 5063 இல் எல்லை நிர்ணயித்த), அலுத்கெதரவத்த காணித்துண்டு ஓ (உத்தரவுபெற்ற நில அளவையாளர் ஏ.என். டபிள்யு. லியனகே தயாரித்த 2018.07.23 திகதியிட்ட வரைபடம் இல. 5203 இல் எல்லை நிர்ணயித்த) அலுத்கெதரவத்த மற்றும் அல்கிரிவத்த (உத்தரவுபெற்ற நில அளவையாளர் ஏ.என்.டபிள்யு. லியனகே தயாரித்த 2016.02.18 திகதியிட்ட வரைபடம் இல. 4853 இல் எல்லை நிர்ணயித்த) என அழைக்கும் காணியின் காணித்துண்டு X ஒன்றிணைத்து மீளளவை செய்து உத்தரவுபெற்ற நில அளவையாளர் பீ.டபிள்யு.டீ. ஆனந்த தயாரித்த 2021 பெப்ரவரி 19 திகதியிட்ட வரைபடம் இல. 1286 இல் எல்லை நிர்ணயித்த காணித்துண்டு A என அடையாளமிட்ட பிரிக்கப்பட்ட குறித்த காணித்துண்டு அதாவது மேற்கூறிய காணித்துண்டு A, வடக்கில் தவட்டகஹவத்த அல்லது அசினாதோப்புவத்த மற்றும் கந்தவத்த மற்றும் ரதாகுட்டிகேவத்தயும், கிழக்கில் ரதாகுட்டிகேவத்தயும் ஹிரிம்புர குறுக்குப் பாதையும், தெற்கில் இக்காணியின் ஏனைய பாகம் (முஸ்லிம் பாடசாலை நிலமனை), இவ்வரைபடத்தின் காணித்துண்டு டீ16 மற்றும் காணித்துண்டு B உம் மேற்கில் இக்காணியின் மற்றைய பாகம் (முஸ்லிம் பாடசாலை நிலமனை), இவ்வரைபடத்தின் காணித்துண்டு B16 மற்றும் காணித்துண்டு Bஉம் எல்லைகளாகக் கொண்டு மேற்கூறிய வரைபடம் இல. 1286 இன் பிரகாரம் மூன்று றூட் பதினொரு தசம் ஐந்து பேர்ச்சுகள் அல்லது ஹெக்டெயர்கள் 0.3326 விஸ்தீரணமுடையதுடன் அங்கு காணப்படும் மண், மரங்கள், பயிர்கள் மற்றும் கட்டிடங்கள் சகலதும் ஆகும். இக்காணி காலி காணிப்பதிவகத்தில் Q282/73 இல் பதிவுசெய்யப்பட்டுள்ளது.

மேற்குறிப்பிட்ட இரண்டாவது அட்டவணை.

| ITEM | No. of Units | Serial No. |
|---|---|---|
| 800kva Generator | 01 | 0171990/05 |
| 275kva Generator | 01 | 0276542/020 |
| 16 Slice CT Scanner | 01 | 0461409 |

மேற்குறிப்பிட்ட மூன்றாவது அட்டவணை.I.

| ITEM | No. of Units | Serial No. |
|---|---|---|
| 1. Defibriallator | 01 | 112019CM13842 |
| 2. Defibriallator | 01 | 022020CM14274 |
| 3. Ultrasound Scanner P9 | 01 | 21401-018 |
| 4. Ultrasound Scanner VT8 | 01 | 6010048WXO |
| 5. Anesthesia Machine Astra 3 | 01 | 21401-018 X 01 |
| 6. Anesthesia Machine Astra 300 | 01 | 20904-009 X 01 |
| 7. Hamilton Ventilator | 01 | 8635 |
| 8. CR System (Radspeed MF-X Ray System) | 01 | 97099104 |
| 9. Haematology Analyzer | 01 | - |
| 10. INDIKO PLUS | 01 | - |
| 11. Sebia (HBAIC MACHINE) | 01 | 94445 |
| 12. Mini Vidas Analyser | 01 | - |
| 13. Electro Mechanical Operating Table | 01 | PRO2201001 |
| 14. Theater lamp | 01 | 20/17111 |
| 15. Tournique TT 20 | 01 | 495 |
| 16. CTG Machine | 01 | (21)777AA40198721 |
| 17. Mini Autoclave | 01 | LCB-61-5133 |
| 18. Ultrasound Machine | 01 | 802035 |
| 19. Ventilator | 01 | ARSF-0370 ASB-0362 |
| 20. Ultrasound Scanner | 01 | 99F0934443 |
| 21. Theater Bed Electric | 01 | B421705045 |
| 22. Theater Bed Electric | 01 | 101577343 |
| 23. Theater Lamp | 01 | ARYB-0208 |
| 24. Theater Lamp | 01 | DA011961 |
| 25. Theater Lamp | 01 | DA011356 |
| 26. Ventilator Anesthetic | 01 | ANAP01465 |
| 27. Operating Microscope | 01 | 141293001 |
| 28 .Mobile X Ray Machine | 01 | 18466ED3 |
| 29. X Ray Machine (Static) | 01 | 2269646/2259981 (1003592WK1) |
| 30. Panoramic X Ray Machine | 01 | 3701077 |
| 31. C-Arm System (Mobile) | 01 | 03212S06,03272S06 |
| 32. Dental X- Ray Machine | 01 | 20275,3701071 |
| 33. Baby Warmer | 01 | ARMA-0005 |
| 34. Baby Warmer | 01 | 2M3000-11 |
| 35. Baby Incubator | 01 | NGO 1126 |
| 36. Dental Unit with chair system | 01 | 3003-1043167 |
| 37. Table Top Autoclave | 01 | LKS-31-0609 |
| 38. 60L Compressor | 01 | CBD 191228 |
| 39. Vaccume Pulse Sterilizing Autoclave | 01 | 19G-0003 |
| 40. Mobile OT Lamp | 01 | - |
| 41. Mobile OT Lamp | 01 | - |
| 42. E C G hi end | 01 | E82251253701097 |
| 43. Operating Microscope (Nuromic) | 01 | 663614173 |
| 44. Nuro Drill system | 01 | 1957 |
| 45. Transport Ventilator | 01 | SRWA-0047 |
| 46. Oxygen Concentrator | 01 | 2268035091121 |
| 47. High flow heated respirator | 01 | FS210818118B |
| 48. Succer | 01 | TMI20S0006584-15473 |

இலங்கை வங்கி பணிப்பாளர் சபை கட்டளைப்படி,

**திருமதி. டீ.எச்.பீ. பிரேமசந்ர**
**முகாமையாளர்**

**இலங்கை வங்கி,**
**கராப்பிட்டிய கிளை**

1975 BOC CALL CENTRE www.boc.lk
A (lka) Fitch ரேட்டிங், AAA Brand Finance ரேட்டிங். இலங்கை வங்கி இலங்கை மத்திய வங்கியினால் கண்காணிக்கப்படும் உரிமம் பெற்ற வணிக வங்கியாகும்
தலைமை அலுவலகம், BOC சதுக்கம், இல.1, இலங்கை வங்கி மாவத்தை, கொழும்பு 1.
இலங்கை வங்கி BOC தேசத்தின் வங்கியாளர்

# குடும்ப பொருளாதாரத்தினை மேம்படுத்த குடும்ப தலைவிகளுக்கு கொட்டகலையில் பயிற்சி



*ஹட்டன் விசேட நிருபர்*

நாட்டில் ஏற்பட்டுள்ள பொருளாதார நெருக்கடியினை தொடர்ந்து பெருந்தோட்டப்பகுதியில் வாழுகின்ற மக்கள் பெருந்துன்பங்களை அனுபவித்து வருகின்றனர். பெரும் பாலான குடும்பங்கள் அன்றாட தங்களது ஜீவனத்தினை கொண்டு நடத்துவதில் பல்வேறு பிரச்சினைகளுக்கு முகம் கொடுத்து வருகின்றனர். பொருளாதார நெருக்கடி காரணமாக போசாக்கான உணவு உட்கொள்வதிலும் குடும்பங்களை கொண்டு நடத்ததுவதிலும் பலர் இடர்பட்டு வருகின்றனர்.

இவ்வாறு இடர் படும் வறுமை கோட்டின் கீழ் வாழ்கின்ற குடும்பங்களின் குடும்ப பொருளாதாரத்தினை மேம் படுத்தும் நோக்கில் சுய தொழில் பயிற்சி பட்டறை ஒன்று இன்று (26) கொட்டகலை பிரிடோ நிறுவனத்தில் நடத்தப்பட்டது.

குறித்த பயிற்சி பட்டறையில் தங்களுக்கு இருக்கும் இடத்தில் எவ்வாறு சுய தொழில் மேற்கொள்வது சுய தொழில் ஊடாக எவ்வாறு வருமானத்தினை பெற்றுக்கொள்வது உள்ளிட்ட பல்வேறு ஆலோசனை வழிகாட்டல்களும் சுய தொழில் பயிற்சியும் இதன் போது பெற்றுக்கொடுக்கப்பட்டன.

இந்த பயிற்சியில் காளான் வளர்ப்பு,ஜேம் தயாரித்தல்,கடித உறை செய்தல்,அலங்கார பொருட்கள் உருவாக்குதல் வீட்டுத்தோட்டம் உள்ளிட்ட பல பயிற்சிகள் பெற்றுக்கொடுக்கப்பட்டு அவற்றை செய்வதற்கான மூலப் பொருட்களும் பெற்றுக்கொடுக்கப்படவுள்ளன.

பிரிடோ நிறுவனத்தின் நிறைவேற்று பணிப்பாளர் மைக்கல் ஆர் ஜோக்கிம் அவர்களின் தலைமையில் நடைபெற்ற குறித்த பயிற்சி பட்டறைக்கு பொகவந்தலாவா,மஸ்கெலியா,லிந்துலை,டயகம,அக்கரபத்தனை நானுஓயா உள்ளிட்ட பிரதேசங்களிலிருந்து வறுமை கோட்டின் கீழ் வாழும் சுமார் 70 குடும்பங்களைச் சேர்ந்த குடும்ப தலைவிகள் கலந்து கொண்டிருந்தனர்.

குறித்த செயற்த்திட்டத்திற்கு தேவையான நிதியுதவியினை டிரேட்டேட் என்ற அவுஸ்த்திரேலியா நிறுவனம் வழங்குகின்றமை குறிப்பிடத்தக்கது.

பயிற்சி பட்டறையின் வழிகாட்டாளர்களாக எட்ரா நிறுவனத்தின் சுய தொழில் பயிற்சி திட்டத்திற்கு பொறுப்பான என். கணகரட்ணம் சரண்யா உள்ளிட்ட பலர் கலந்து பயிற்சிகளையும் வழிகாட்டல்களையும் செய்தனர்.

# இரத்தினபுரி மாவட்டத்தில் அல்மினாரா மாணவர்கள் 18 பேர் சித்தியடைந்து சாதனை



*(இரத்தினபுரி சுழற்சி நிருபர்)*

பலாங்கொடை கல்வி வலயத்தின் இ/ அல்மினாரா ஆரம்ப பாடசாலை மாணவர்கள் அண்மையில் வெளி யான தரம் 5 புலமைப் பரிசில் பரீட் சையில் 18 மாணவர்கள் சிறப்பாக சித்தியடைந்து சாதனை படைத்துள்ளனர். கடந்த பல ஆண்டுகளாக இப்பாட சாலை மாணவர்கள் இச்சாதனை யை நிலை நிறுத்தி வருவதாகவும் இச்சாதனைகளுக்காக தம்மை அர் ப்பணித்து செயலாற்றும் பொறுப்பாசிரியர்கள் பாடசாலை அபிவிருத் திக்குழு பழைய மாணவர் அமைப் பு மற்றும் நலன் விரும்பிகள் கல்வி த்துறை சார் அதிகாரிகள் அனைவ ருக்கு ம் பாடசாலை அதிபர் முக்தார் சவாஹிர் தனது பாராட்டைதெரிவித்துள்ளார்.

சித்தியடைந்த மாணவர்களின் விப ரங்கள் பின்வருமாறு எம்.ஆர்.றிப்கி அஹமட் (171) அஹமட்.ஐ.எப்.அம்ரா (170) எம்.ஐ.ருகையா (169) எம்.ஐ. எம் சுஹைல் (158) எம்.எப். அஹமட். பிர் னாஸ் (154) எம். எஸ்.எப்.சகாமா (153 ) எம். ஆர்.எம்.ஹம்தி(152) எம். ஆர். எ ப் . றைஹா (152) எம். ஜே.பாத்திமா இபா (151) எம். என்.எப்.தஹானி(151 ) எம். ஆர்.எம்.தஸ்ரின் (149) எம்.ஆர். எப்.சீமா (148) எம்.ஏ.எப்.அசா (147) எ ஸ்.ராதிகா (147) எஸ். நித்ருஜான் (14 7) எம்.ஏ.எப். ஸஹ்ரா (146) எம்.ஐ.எப். ஷமா (144) எம்.ஆர்.எப்.அஸ்கா (144) இரத்தினபுரி

# அடிக்கல் நாட்டும் நிகழ்வு



காவத்தை ஸ்ரீ கிருஷ்ணா மகா வித்தியாலயத்தில் நீண்ட நாட்களாக குறைபாடாக இருந்த சிற்றுண்டிச் சாலை அமைப்பதற்கான அடிக்கல் நாட்டும் நிகழ்வு (25) மேற்படி பாடசாலையின் வளாகத்தில் இடம் பெற்றது. காவத்தை ஸ்ரீ கிருஷ்ணா மகா வித்தியாலயத்தின் அபிவிருத்தி சங்கத்தின் முயற்சியாலும் மற்றும் மேற்படி பாடசாலையின் பழைய மாணவர்கள், நலன்விரும்பிகள், காவத்தை பிரதேச வர்த்தகர்கள் ஆகியோர்களின் முழுமையான ஒத்துழைப்புடன் இடம்பெற்ற இந்நிகழ்வில் காவத்தை ஸ்ரீ கிருஷ்ணா மகா வித்தியாலயத்தின் அதிபர் எம்.சந்திர குமார் மற்றும் பாடசாலை அபிவிருத் திச் சங்கத்தின் செயலாளர் முரளி பிரகலாதன் உட்பட பாடசாலையின் அபிவிருத்தி சங்கத்தின் உறுப்பினர்கள், பழைய மாணவர்கள், வர்த்தகர்கள், பாடசாலை ஆசிரியர்கள், மாணவர்கள், நலன் விரும்பிகள் ஆகியோர் கலந்து கொண்டனர்.

# பெறுகை அறிவித்தல்

## அரச அச்சக கூட்டுத்தாபனம்

### விலைமனுக்களுக்கான அழைத்தல் - (NCB) இறக்குமதிகள்

STATE PRINTING CORPORATION

கீழேயுள்ள பண்டங்களின் வழங்கலுக்காக தகுதியும் தகைமையுமுள்ள உற்பத்தியாளர்கள் அல்லது அவர்களின் உள்ளூர் முகவர்களிடமிருந்து அரச அச்சக கூட்டுத்தாபன பெறுகைக் குழுத் தலைவர் முத்திரையிடப்பட்ட விலைமனுக்களை அழைக்கின்றார்.

| FILE REFERENCE | QTY (M/Tons) | ITEM | BID BOND (Rs.) |
|---|---|---|---|
| SPC/SUP/F1/001/2023/28 | 450 (±5%) | Procurement of imported White Printing Paper in Reels/ 750mm/70±2.5% gsm | 1,790,000.00 |
| SPC/SUP/F1/001/2023/29 | 100 (±5%) | Procurement of Single side coated Board white back in Packets/100 shts/625x860mm/ 250±3.5% gsm | 390,000.00 |
| SPC/SUP/F1/001/2023/30 | 100 (±5%) | Procurement of Single side coated Board white back in Packets/100 shts/650x-860mm/300±3.5% gsm | 390,000.00 |

1. விலைமனுக்கோரலானது தேசிய போட்டிரீதியிலான விலைமனுக்கோரல் மூலம் நடத்தப்படும்.
2. ஒப்பந்தத்தை வழங்குவதற்காக விலைமனுதாரர் பின்வரும் தகுதித்தன்மை தகவுத்திறனுடன் இணைந்தொழுகுதல் வேண்டும்.
   அ. முகவராண்மையின் நிலவரத்தை உறுதிசெய்வதற்கான உற்பத்தியாளரின் அதிகாரம்/ அற்றோணித்தத்துவம்
   ஆ. செல்லுபடியாகும் தன்மையிலுள்ள வர்த்தக பதிவு
3. 2023.12.06 ஆம் திகதியன்று மு.ப. 11 மணிக்கு அரச அச்சக கூட்டுத்தாபனத்தில் விலைமனு முன்னோடிக் கூட்டம் நடைபெறும்.
4. 2023.11.27 ஆம் திகதியிலிருந்து 2023.12.15 ஆம் திகதியன்று வரையும் எந்தவொரு வேலை நாளிலும் மு.ப. 9 மணியிலிருந்து பி.ப. 3 மணி வரையும் மீளளிக்கப்படாத கட்டணமாக ஒவ்வொரு தொகுதிக்கும் 5,000 ரூபாவை செலுத்திய பின்னர், பாதுக்க, பாணாலுவ, அரச அச்சக கூட்டுத்தாபன, வழங்கல் முகாமையாளருக்கு எழுத்து மூலமான விண்ணப்பமொன்றைச் சமர்ப்பிப்பதன் மூலம், ஆங்கில மொழியிலுள்ள விலைமனுக்கோரல் ஆவணங்களின் முழுமையான தொகுதியொன்று ஆர்வமுள்ள விலைமனுதாரர்களினால் கொள்வனவு செய்யப்படலாம். பணக்கொடுப்பனவு முறைமையானது ரொக்கப் பணத்திலேயே இருத்தல் வேண்டும்.
5. முத்திரையிடப்பட்ட விலைமனுக்களை அடக்கியுள்ள தபாலுறையின் இடது பக்க மேல் மூலையில் கேள்வி குறிப்பீடு குறிப்பிடப்படல் வேண்டுமென்பதுடன், 2023.12.18 ஆம் திகதியன்று பி.ப. 2 மணிக்கு அல்லது அதற்கு முன்னராக கிடைக்கும் தன்மையில் பாதுக்க, பாணாலுவ, அரச அச்சக கூட்டுத்தாபன, வழங்கல் முகாமையாளரின் அலுவலகத்தில் வைக்கப்பட்டுள்ள கேள்விப் பெட்டியில் சேர்க்கப்படல் வேண்டும் அல்லது பதிவுத் தபாலில் தலைவர், அரச அச்சக கூட்டுத்தாபனம், பாணாலுவ, பாதுக்க என்ற மேலேயுள்ள முகவரிக்கு அனுப்பப்படல் வேண்டும். தாமதமான விலைமனுக்கள் நிராகரிக்கப்படும். விலைமனுக்கள் அவைகளை மூடிய பின்னர் உடனடியாகவே திறக்கப்படும். விலைமனுதாரர் அல்லது அவர்களின் பிரதிநிதிகள் விலைமனுக்களை திறக்கும் நிகழ்விற்கு சமுகமளிக்கலாம்.
6. விலைமனுவானது அதனை மூடும் திகதியலிருந்து 30 நாட்காட்டி நாட்களுக்கு செல்லுபடியாகும் தன்மையிலிருத்தல் வேண்டும்.
7. இலங்கையில் செயற்படும் இலங்கை மத்திய வங்கியினால் அங்கீகரிக்கப்பட்ட வர்த்தக வங்கியொன்றினால் வழங்கப்பட்ட கோரும்போது பெற்றுக் கொள்ளும் விலைமனு உத்தரவாத பணவைப்புக்கள் அல்லது நிபந்தனையற்றதும், தலைவர், அரச அச்சக கூட்டுத்தாபனம் என்ற முகவரிக்கு செலுத்தக்கூடிய வங்கி உத்தரவாதமானது விலைமனுவுடன் சமர்ப்பிக்கப்படல் வேண்டும். மேலதிக விபரங்களை 011-2757500 என்ற தொலைபேசி இலக்கத்தினூடாக / தொலைநகலூடாக வழங்கல் முகாமையாளரிடமிருந்து பெற்றுக் கொள்ளலாம்.

**தலைவர்,**
**பெறுகைக் குழு,**
**அரச அச்சக கூட்டுத்தாபனம்,**
**பாணாலுவ, பாதுக்க.**
**24.11.2023.**

SPC

# பெறுகை அறிவித்தல்

## ஊடக அமைச்சு

## இலங்கை தேசிய திரைப்படக் கூட்டுத்தாபனம்

தலைவர், பெறுகைக் குழு இலங்கை தேசிய திரைப்படக் கூட்டுத்தாபனத்தினால் கீழ் குறிப்பிடப்பட்டுள்ள பணிக்காக அங்கீகரிக்கப்பட்ட ஒப்பந்ததாரர்களிடம் இருந்து முத்திரை பொறிக்கப்பட்ட விலைமனுக்கள் தேசிய போட்டிரீதியான விலைமனு முறை மூலம் கோரப்படுகின்றன.

| விலைமனு கோரல் இலக்கம் | விடயத்தின் விபரம் | தேவையான தரம் | மீளளிக்கப்படாத வைப்பு (ரூபா) | மீளளிக்கப்படும் விலைமனு பிணை (ரூபா) |
|---|---|---|---|---|
| NFC/BID/S/20 23-5 | REFURBISHMENT OF 'THARANGANI HALL' AT THE NATIONAL FILM CORPORATION OF SRI LANKA | Specialiy - Building Grade - CIDA - C3-C5 | 12,500.00 | 380,000.00 |

1. மேல் குறிப்பிடப்பட்ட புனரமைப்பு செயற்பாட்டுக்காக விலைமனுக்களை சமர்ப்பிப்பதற்கு தேவையான விலைமனு ஆவணங்களை குறித்த நிறுவனத்தின் முகவரி அச்சிடப்பட்ட கடிதத் தாளில் விண்ணப்பித்து குறிப்பிடப்பட்டிருக்கும் மீளளிக்கப்படாத கட்டணத்தை செலுத்திய பின் இலக்கம் 303, பௌத்தாலோக்க மாவத்தை, கொழும்பு 07 என்ற முகவரியில் அமைந்துள்ள இலங்கை தேசிய திரைப்படக் கூட்டுத்தாபனத்திடம் இருந்து கொள்வனவு செய்ய முடியும்.
2. விலைமனு ஆவணங்களை வழங்கல் அரச வேலை நாட்களில் மு.ப. 9.00 தொடக்கம் பி.ப. 3.00 வரை மேற்கொள்ளப்படுவதோடு 2023.11.27 ஆம் திகதி தொடக்கம் 2023.12.18 ஆம் திகதி வரை கொள்வனவு செய்ய முடியும்.
3. சமர்ப்பிக்கப்பட்ட விலைமனுக்கள் 2023.12.19 ஆம் திகதி தொடக்கம் 2024.03.19 ஆம் திகதி வரை (90 நாட்கள்) செல்லுபடியாக இருத்தல் வேண்டும் என்பதோடு விலைமனு பிணை சான்று 2023.12.19 ஆம் திகதி தொடக்கம் 2024.04.16 ஆம் திகதி வரை (118 நாட்கள்) செல்லுபடியாக இருத்தல் வேண்டும்.
4. விலைமனுக்களுக்காக மேல் குறிப்பிடப்பட்ட பெறுமதி கொண்ட விலைமனு பிணை ஒன்றை பணம் அல்லது பிணை வைப்பு மூலம் சமர்ப்பிக்க முடியும் என்பதோடு பிணை வைப்பு மூலம் சமர்ப்பிப்பதாயின் விலைமனு ஆவணத்தில் குறிப்பிடப்பட்டுள்ள வடிவத்திற்கு அமைய சமர்ப்பித்தல் வேண்டும் என்பதோடு அவ்வாறு செய்யாத விலைமனுக்கள் முழுமை பெறாதவை என கருதி எந்த ஒரு அறிவுறுத்தலும் இன்றி நிராகரிக்கப்படும்.
5. விலைமனுக்களுக்கு தொடர்புடைய அனைத்து ஆவணங்களிலும், விலைமனு ஆவணத்தின் குறித்த இடங்களிலும் சமர்ப்பிக்கும் நபர்/ நிறுவனத்தின் அதிகாரம் பெற்றவர் கையொப்பம் இட்டு முத்திரை வைத்தல் வேண்டும்.
6. பூர்த்தி செய்யப்பட்டு முத்திரையிடப்பட்ட விலைமனுக்களை இலக்கம் 303, பௌத்தாலோக்க மாவத்தை, கொழும்பு 07 என்ற முகவரியில் அமைந்துள்ள இலங்கை தேசிய திரைப்படக் கூட்டுத்தாபனத்தில் வைக்கப்பட்டுள்ள விலைக்கேட்புப் பெட்டியில் இடுதல் அல்லது பதிவுத் தபாலில் தலைவர் பெறுகைக் குழு இலங்கை திரைப்படக் கூட்டுத்தாபனம் இலக்கம் 303, பௌத்தாலோக்க மாவத்தை, கொழும்பு 07 என்ற முகவரிக்கு 2023.12.19 ஆம் திகதி மு.ப. 10.30 க்கு கிடைக்குமாறு அனுப்ப வேண்டும் என்பதோடு குறித்த கடித உறையின் இடது பக்க மேல் மூலையில் விலைமனு இலக்கம் மற்றும் விடயத்தின் விபரத்தை குறிப்பிடுதல் வேண்டும்.
7. விலைமனுக்களை ஏற்பது 2023.12.19 ஆம் திகதி மு.ப. 10.30க்கு முடிவுறுவதோடு அந்த சந்தர்ப்பத்தில் விலைமனுக்கள் திறக்கப்படும். அந்த சந்தர்ப்பத்திற்கு விலைமனுதாரர்களுக்கு அல்லது அவர்களின் பிரதிநிதிகளுக்கு வருகை தர முடியும். தாமதித்து கிடைக்கின்ற விலைமனுக்கள் நிராகரிக்கப்படும்.
8. ஒரு விலைமனு அல்லது பல விலைமனுக்கள் அல்லது அனைத்து விலைமனுக்களையும் நிராகரிக்கும் அதிகாரம் இலங்கை தேசிய திரைப்படக் கூட்டுத்தாபன பெறுகைக் குழு வசமானதாகும். அந்தக் குழுவின் முடிவு இறுதி முடிவாகும்.
9. இது தொடர்பில் மேலதிகமாக தெளிவை பெற வேண்டுமாயின் 0112-584295 என்ற தொலைபேசி இலக்கத்தின் மூலம் உதவி பொது முகாமையாளர் வழங்கல் மற்றும் வர்த்தகம் (ப.) இடமிருந்து பெற்றுக்கொள்ள முடியும்.

**தலைவர்**
**இலங்கை தேசிய திரைப்படக் கூட்டுத்தாபனம்,**
**இலக்கம் 303, பௌத்தாலோக்க மாவத்தை, கொழும்பு 07.**

# மாவட்ட சமுர்த்தி பிரிவு

## மாவட்டச் செயலகம் - மாத்தறை

## அபரெக்க சனசமூக சமுர்த்தி வங்கிக்காக காணியொன்றை கொள்வனவு செய்வதற்கான திறந்த விலைமனுக் கோரல்

மகளிர், சிறுவர் விவகார மற்றும் சமூக வலுவூட்டல் அமைச்சின் கீழ் செயற்படும் சமுர்த்தி அபிவிருத்தி திணைக்களத்தின் மாத்தறை மாவட்ட தெவிநுவர பிரதேச செயலகப் பிரிவில் ஸ்தாபிப்பதற்கு தீர்மானிக்கப்பட்டுள்ள அபரெக்க சமுர்த்தி சனசமூக வங்கிக்காக தகைமையான மின் / நீர் / போக்குவரத்து வசதிகளை இலகுவில் பெற்றுக்கொள்ளக்கூடிய 12 பேர்ச் காணித்துண்டு மேற்படி வங்கி வலயத்திற்குள் தேவைப்படுகின்றது.

02. இதற்காக காணியை வழங்குவதற்கு ஆர்வம் காட்டுகின்ற தனிநபர்கள் மாத்தறை மாவட்ட சமுர்த்தி அலுவலகத்தின் மாவட்ட சமுர்த்தி பணிப்பாளருக்கு மீளளிக்கப்படாத ரூ. 1000.00 தொகையைச் செலுத்தி விண்ணப்பத்தை பெற்றுக்கொண்டு அதனைப் பூர்த்தி செய்து 2023.12.11 இற்கு முன்பு மாவட்ட சமுர்த்தி அலுவலகத்திற்கு ஒப்படைக்குமாறு தயவுடன் தெரிவித்துக் கொள்கிறேன்

**விண்ணப்பத்துடன் கீழ்க்காணும் ஆவணங்களை இணைத்து அனுப்புதல் வேண்டும்.**

* காணியுடன் சம்பந்தப்பட்ட 30 வருட அடிக்கட்டை (Folio)
* விற்பதற்கு விருப்பம் காட்டல் கடிதம் மற்றும் எதிர்பார்க்கும் விலை
* உறுதியின் பிரதிகள் மற்றும் அளவை வரைபடங்களுடன்
* காணியுடன் சம்பந்தப்பட்ட வழக்குத் தீர்ப்பு இருப்பின் அவற்றின் பிரதிகள்

**தலைவர்,**
**பெறுகைக்குழு,**
**மாவட்ட சமுர்த்தி பிரிவு,**
**மாத்தறை.**
**0714205315**

## சிறு விளம்பரம்



மோட்டார் வாகனங்கள்



119

**பஸ்கள், லொறிகள்**
விற்பனைக்கு

NP-PY-1959-TATA-ACE EX2-SINGLE CAB-2013-BLUE & BLACK கூடிய விலைக்கோரிக்கைக்கு CBC பினான்ஸ் லிமிட்டட், 187, கட்டுகஸ் தொட்ட வீதி, கண்டி தொ.பே 081 2 081033 077108

# தலவாக்கலை லிந்துலை நகர சபை

## கேள்விமனு கோரல் — 2024

01. 2024 ஜனவரி 01ஆம் திகதி தொடக்கம் 2024 டிசெம்பர் 31ஆம் திகதி வரையான காலத்திற்கான இங்கு கீழ்காணப்பட்ட உப அட்டவணையில் காணப்படும் தலவாக்கலை - லிந்துலை நகர சபைக்கு சொந்தமான சொத்துக்களை குத்தகைக்கு பெற்றுக் கொடுப்பதற்கு தீர்மானிக்கப்பட்டுள்ளது.

02. உப அட்டவணையில் குறிப்பிட்டுள்ளவாறு மீளளிக்கப்படாத கேள்விப்பத்திர கட்டணம் மற்றும் மீளளிக்கப்படும் கேள்விமனு வைப்புத்தொகையை செலுத்தி 2023.12.15ஆம் திகதி மு.ப 10.00 மணி வரை குறித்த கேள்விப்பத்திரங்களை தமது ஆள் அடையாளத்தை உறுதிப்படுத்தி தலவாக்கலை - லிந்துலை நகர சபையின் வருமான பிரிவில் பெற்றுக்கொள்ளலாம்.

03. முத்திரையிடப்பட்ட இரண்டு பிரதிகளுடனான கேள்விப்பத்திரங்கள் 2023.12.15 ஆம் திகதி மு.ப 10.30 மணி வரை என்னால் ஏற்றுக்கொள்ளப்படும். கேள்விப்பத்திரம் இடும் கடித உறையின் இடது பக்க மேல் மூலையில் கேள்விமனுவின் பெயரை குறிப்பிடவும்.

04. முத்திரையிடப்பட்ட கேள்விப்பத்திரங்கள் செயலாளர், தலவாக்கலை – லிந்துலை நகர சபை, தலவாக்கலை எனும் முகவரிக்கு பதிவுத் தபால் மூலமாகவோ அல்லது தலவாக்கலை லிந்துலை நகர சபை அலுவலகத்தில் வைக்கப்பட்டுள்ள கேள்விமனு பெட்டியில் இடுவதன் மூலமாகவோ சமர்ப்பிக்க முடியும்.

05. 2023.12.15 ஆம் திகதி மு.ப. 11.00 மணிக்கு கேள்விமனு திறக்கப்படும். அதற்காக தாங்கள் அல்லது தாங்களின் பிரதிநிதியொருவர் பங்கேற்க முடியும்.

**உப அட்டவணை**

| சொத்து நடவடிக்கை | கேள்விமனு வைப்புத் தொகை (ரூபா) | மீளளிக்கப் படாத கேள்விப் பத்திர கட்டணம் (ரூபா) | வருடாந்த குறைந்த கேள்வித் தொகை (ரூபா) |
|---|---|---|---|
| இல 12, மாட்டிறைச்சி கடை பொது சந்தை கட்டிடம் | 150,000.00 | 50,000.00 | 4,621,650.00 |
| இல 11, ஆட்டிறைச்சி கடை பொது சந்தை கட்டிடம் | 50,000.00 | 10,000.00 | 68,090.00 |
| தலவாக்கலை நகரத்தின் வாகன தரிப்பிட கூலி சேகரித்தல் | 50,000.00 | 10,000.00 | 891,220.00 |
| முச்சக்கர வண்டி தரிப்பிட கூலி சேகரித்தல் தலவாக்கலை-லிந்துலை | 50,000.00 | 10,000.00 | 1,045,220.00 |
| தலவாக்கலை பஸ் நிலையத்தின் பொது மலசலகூடம் | 50,000.00 | 10,000.00 | 964,810.00 |
| தலவாக்கலை பஸ் நிலையமேல் மாடிஉணவகம் | 50,000.00 | 10,000.00 | 180,000.00 |

❖ **தலவாக்கலை நகரத்தின் வாகன தரிப்பிட கூலி சேகரித்தல் தொடர்பாக கட்டணங்கள்.**

| தொடர் இலக்கம் | வாகனம் | கட்டணம் (ரூபா) (முதல் மணித்தியாலத்திற்காக) | அதிகரிக்கும் ஒவ்வொரு மணித்தியாலயத்திற்கும். (ரூபா) |
|---|---|---|---|
| 01 | அனைத்து வாகனங்களுக்கும் | வாகனம் நிறுத்தப்படும் சந்தர்ப்பத்தில் இருந்து 10 நிமிடங்கள் வரைகட்டணங்கள் அறவிடப்படுவதில்லை. | |
| 02 | அனைத்து மோட்டார் வண்டி அல்லது வேன் வண்டிக்காக | 60.00 | 40.00 |
| 03 | அனைத்து லொறி, பேருந்துக்கள் வண்டிகளுக்காக | 150.00 | 50.00 |
| 04 | முச்சக்கர வண்டிகளுக்காக | 50.00 | 40.00 |

| தொடர் இலக்கம் | வாகனம் | மாதாந்த கட்டணம் (ரூபா) |
|---|---|---|
| 01 | வேன் வண்டி தரிப்பிடத்தில் நிறுத்தப்பட்டுள்ள வேன்களுக்காக | 500.00 |
| 02 | லொறி வண்டி தரிப்பிடத்தில் நிறுத்தப்பட்டுள்ள லொறி வண்டிகளுக்காக | 600.00 |

❖ **முச்சக்கர வண்டி தரிப்பிட கூலி சேகரித்தல் - தலவாக்கலை - லிந்துலை.**

| தொடர் இலக்கம் | வாகனம் | மாதாந்த கட்டணம் (ரூபா) |
|---|---|---|
| 01 | பதிவு செய்யப்பட்ட முச்சக்கர வண்டிகளுக்காக | 400.00 |

**நிபந்தனைகள்**

01. சபையினால் நிராகரிக்கப்பட்டவர்களது பட்டியலில் பெயர் உள்ளவர்களுக்கு கேள்விப்பத்திரம் வழங்கப்படமாட்டாது.
02. ஏற்றுக்கொள்ளப்பட்ட கேள்விமனுதாரர் குறித்த திகதிக்குள் பாதுகாப்பு பிணைப்பணத்தை செலுத்தி சபையுடன், சபை தீர்மானிக்கும் திகதிக்குள் சபையுடன் தனது சொந்த செலவில் ஒப்பந்தமொன்றை கைச்சாத்திடல் வேண்டும். கேள்வி வைப்புத்தொகை ஒப்பந்தம் கைச்சாத்திடுவதற்கு முன் வழங்கப்படமாட்டாது.
03. ஏற்றுக்கொள்ளப்பட்ட கேள்விமனுதாரரினால் ஆறு மாதத்திற்கான பிணை வைப்பு பணத்தை 2023/12/20ஆம் திகதி பி.ப. 2.00 மணிக்கு முன் வைப்பு செய்தல் கட்டாயமாகும் என்பதுடன் ஒவ்வொரு மாதத்தினதும் இறுதி வேலை நாளுக்கு முன்னர் குறித்த மாதத்தின் குத்தகை பணத்தை செலுத்தி முடிக்க வேண்டும். அவ்வாறு இல்லையெனில் 10% தண்டப்பணத்துடன், மாதாந்த கேள்வித்தொகையை செலுத்துதல் வேண்டும்.
04. கேள்வி தொகைக்கு மேலதிகமாக அரசால் விதிக்கப்படும் அனைத்து வரிகளும் (VAT,NBT) நகர சபைக்கு செலுத்தப்பட வேண்டும்.
05. மேலும் குறித்த ஒப்பந்த நிபந்தனைகள் மீறப்பட்டாலோ அல்லது ஏற்றுக்கொள்ளப்பட்ட கேள்விமனுதாரர் கேள்விமனுவை ஏற்கவில்லை என்றாலோ, தாங்களது பெயர் நிராகரிக்கப்பட்டவர்களது பட்டியலில் சேர்க்கப்படுவதுடன் கேள்வி வைப்புத் தொகையும் சபை நிதிக்கு சேர்க்கப்படும்.
06. மாதாந்த நீர் கட்டணம் மற்றும் மின் கட்டணங்கள் கேள்விதாரரினால் நிலுவையின்றி செலுத்தப்படல் வேண்டும்.
07. கேள்விமனு பெற்றுக்கொள்ளும் சொத்தானது குறித்த நடவடிக்கைக்காக மாத்திரம் பயன்படுத்தப்படல் வேண்டும்.
08. கேள்வி சபையின் முடிவே இறுதித் தீர்மானமாகும்.

**குறிப்பு** - இது சம்பந்தமான மேலதிக விபரங்களை அலுவலக நாட்களில் நேரடியாக தொடர்பு கொண்டு அல்லது 052-2258275 என்ற இலக்கத்தை அழைப்பதன் மூலம் அறிந்துக்கொள்ளலாம்.

2023.11.23
**தலவாக்கலை - லிந்துலை நகர சபை காரியாலயத்தில்.**

**Y.P. விஜேவர்தன,**
**செயலாளர் (பதில் கடமை),**
**தலவாக்கலை - லிந்துலை நகர சபை.**

* Trusted Marketplace of Classified Advertisers...
SUNDAY OBSERVER adz it's what you want Classified
Green Light for Online Transfer
For 15 Words Rs. 800/-
(Additional each word Rs. 20/-)
Lake House Branch Acc. No. 000000377
Call :- 077 7 278 948/ 011 2 429 347 | 011 2 429 383 | 011 2 429 342/ 343
077 7 270 067 E-mail - classified@lakehouse.lk

# பௌத்த மத அலுவல்கள் திணைக்களம்

**1931 19ஆம் இலக்க பௌத்த விகாரை தேவாலய சட்டத்தின் 8வது வாசகத்தின் பிரகாரம் பஸ்நாயக்க நிலமேக்களை தேர்ந்தெடுத்தல்**

இரத்தினபுரி மாவட்டத்தின் இம்புல்பே பிரதேச செயலாளர் பிரிவில் அமைந்துள்ள பொல்கும்பே சமன் தேவாலயத்திற்கு பஸ்நாயக்க நிலமே பதவிக்கு ஒருவர் வீதம் நியமித்துக் கொள்ளும் பொருட்டான கூட்டமொன்று பின்வரும் வகையில் இடம்பெறும்.

| தேவாலயத்தின் பெயர் | கூட்டம் இடம்பெறும் திகதி மற்றும் நேரம் | கூட்டம் நடைபெறும் இடம் |
|---|---|---|
| பொல்கும்பே சமன் தேவாலயம் | 2023 டிசம்பர் 29ஆம் திகதி பி.ப. 2.00 மணிக்கு | இரத்தினபுரி மாவட்டச் செயலக கூட்ட மண்டபம் |

02. குறித்த தேவாலயத்தின் பஸ்நாயக்க நிலமே பதவிக்கு விண்ணப்பிப்பவர்கள் நிர்ணயிக்கப்பட்ட நேரத்தில் இக்கூட்டத்திற்கு சமுகம் தரல் வேண்டும் என்பதுடன் பௌத்த விகாரை தேவாயல சட்டத்தின் 14 மற்றும் 40ஆம் இலக்க வாசகத்தில் குறிப்பிடப்பட்டுள்ளவாறு தகுதிகள் தமக்குண்டு என்பதற்கான சாட்சியாக பிரகடனப் பத்திரமொன்றைச் சமர்ப்பிப்பதற்கு தயாராக இருத்தல் வேண்டும். குறித்த பிரகடனப் பத்திரங்களை இவ்வலுவலகத்தில் அல்லது பௌத்த விவகாரங்கள் தொடர்பான கண்டி / இரத்தினபுரி / குருநாகல் பிரதேச அலுவலகங்களில் பெற்றுக்கொள்ளலாம்.

03. விண்ணப்பதாரரின் தகுதியை நிரூபிப்பதற்கு பௌத்த விவகாரங்கள் ஆணையாளர் நாயகத்திற்கு சாட்சிகள் தேவைப்படின் அவ்வாறு தேவைப்படும் சாட்சிகளை சமர்ப்பிப்பதற்கு தயாராக இருத்தல் வேண்டும்.

04. பஸ்நாயக்க நிலமே பதவிக்கு தேர்ந்தெடுக்கப்படுபவரினால் அப்பதவிக்கான கடமைகளை ஏற்றுக்கொள்வதற்கு முன் ரொக்கப் பணமாக பிணையொன்று வைக்கப்படல் வேண்டும்.

**கே.பீ. சிறிபத்தன,**
**பௌத்த விவகார ஆணையாளர் நாயகம்**
**2023-11-24ஆம் திகதி பௌத்த விவகாரங்கள் தொடர்பான திணைக்களத்தில்.**

OBSERVER JOBS
BREAKING BOUNDARIES
THE COUNTRY'S LARGEST RECRUITMENT DATABASE
FOR JOBSEEKERS
www. observerjobs. lk

# பெறுகை அறிவித்தல்

## பிரதம செயலகம் – மேல் மாகாணம்

## மேல் மாகாண சபை அலுவலகத்திற்கு அலுவலக போக்குவரத்து சேவை வழங்குவதற்கான கேள்விகோரல்

பத்தரமுல்ல டென்சில் கொப்பேகடுவ மாவத்தை, மேல் மாகாண சபை அலுவலக கட்டிடத்தொகுதியில் சேவையில் ஈடுபட்டுள்ள ஊழியர் குழாமிற்கு 2024ம் ஆண்டிற்குள் அலுவலக போக்குவரத்து சேவையை வழங்குவதற்கு தகைமையுள்ள சேவை வழங்குநர்களைத் தேர்ந்தெடுக்கும் முகமாக மேல் மாகாணத்தில் நிரந்தர வதியைக் கொண்டுள்ளவர்களிடமிருந்து கேள்விகள் கோரப்படுகின்றன.

2023.11.28 முதல் 2023.12.15 வரை மு.ப. 9.00 முதல் பி.ப. 3.00 வரை ஒரு விண்ணப்பத்திற்கு மீளளிக்கப்படாத ரூ. 2500.00 மற்றும் மீளளிக்கப்படும் பிணை வைப்புக் கட்டணமாக ரூ. 10,000.00 ஐ பத்தரமுல்ல, கொஸ்வத்த, டென்சில் கொப்பேகடுவ மாவத்தை, இல. 204, பிரதம செயலகத்தின், 6ம் மாடியில் அமைந்துள்ள நிதிப்பிரிவிற்கு செலுத்திய பின்னர் பெற்றுக் கொள்ளும் பற்றுச்சீட்டை, 4ம் மாடியில் அமைந்துள்ள, பெறுகைப் பிரரிவிற்கு சமர்ப்பித்த பின்னர் கேள்வி விணணப்பப்படிவத் தொகுதியைப் பெற்றுக் கொள்ளலாம்.

இக் காலத்திற்குள் பிரதம செயலகத்தில் நிர்வாகப் பிரிவில் அல்லது பிரதம செயலகத்தின் adm.chiefsec.wp.gov.lk இணையதளத்தில் இருந்து கேள்வி ஆவணங்களைப் பரீட்சித்துப் பார்க்கலாம்.

கேள்விகளை சமர்ப்பிப்பதற்காக பிரதம செயலகத்தினால் விநியோகிக்கப்பட்டுள்ள கேள்வி ஆவணங்களை மட்டும் பாவித்தல் வேண்டும். அத்துடன் அவ் ஆவணங்களில் குறிப்பிடப்படும் அறிவுறுத்தல்களின் பிரகாரம், முறையாக தயாரிக்கப்பட்ட கேள்விகள், 2023.12.18 பி.ப. 1.00 இற்கு முன் தலைவர், சிறிய பெறுகைக் குழு, பிரதம செயலகம், நான்காம் மாடி (04) இல. 204, டென்சில் கொப்பேகடுவ மாவத்தை, பத்தரமுல்ல என்ற முகவரிக்கு பதிவுத் தபாலில் அனுப்பலாம். அல்லது கணக்காளர் (நிர்வாகம்) உத்தியோகபூர்வ அறையில் வைக்கப்பட்டுள்ள கேள்விப் பெட்டியில் கையோடு கொண்டு வந்து உள்ளிடல் வேண்டும். கேள்வி உள்ளிடும் உறையின் இடதுபக்க மேல் மூலையில் "விலைமனுக்கள் மேல் மாகாண சபை ஊழியர் குழாமிற்காக அலுவலக போக்குவரத்து சேவை வழங்குவதற்கான கேள்விகோரல்" என்று குறிப்பிடுதல் வேண்டும்.

இது பற்றிய மேலதிக விபரங்களை 0112093249 மூலம் கணக்காளர் (நிர்வாகம்) ஐ அழைத்து பெற்றுக் கொள்ளலாம்.

**தலைவர்,**
**சிறிய பெறுகைக் குழு,**
**மேல் மாகாண பிரதம செயலகம்,**
**இல. 204, டென்சில் கொப்பேகடுவ மாவத்தை,**
**பத்தரமுல்ல**
**2023.11.27**

# இலங்கை சனநாயக சோசலிச குடியரசு

# போக்குவரத்து மற்றும் நெடுஞ்சாலைகள் அமைச்சு/ இலங்கை புகையிரத சேவைகள் கொழும்பு புறநகர் புகையிரத வினைத்திறனுடனான மேம்படுத்தல் செயற்றிட்டம் (Colombo Suburban Railway Efficiency Improvement Project)

**விலைமனுக்களுக்கான அழைத்தல்**

| | |
|---|---|
| திகதி | : 2023 நவம்பர் 27 ஆம் திகதியன்று |
| கடனிலக்கம் மற்றும் தலைப்பு | : ADB Loan No. 3806-SRI – Railway Efficiency Improvement Project |
| ஒப்பந்த இல. மற்றும் தலைப்பு | : REIP/ADB/ICB/G/14 இலங்கை புகையிரத சேவைக்காக Base Plates & Rail Shims ஆகியவற்றின் வழங்கல் மற்றும் ஒப்படைத்தல் ஆகியவற்றிற்கான பெறுகை. |

**விலைமனுக்களின் சமர்ப்பித்தலுக்கான இறுதித் திகதி: 2024 ஜனவரி 12 ஆம் திகதியன்று**

1. புகையிரத வினைத்திறனுடனான மேம்படுத்தல் செயற்றிட்டத்திற்காக இலங்கை சனநாயக சோசலிச குடியரசானது ஆசிய அபிவிருத்தி வங்கியிடமிருந்து (ஆஅவ) (ADB) கடனொன்றைப் பெற்றுள்ளது. இக்கடனின் பாகமொன்று மேலே பெயர் குறிப்பிட்டுள்ள ஒப்பந்தத்தின் கீழான தகுதியுள்ள பணக்கொடுப்பனவுகளுக்காக பிரயோகப்படுத்தப்படும்.
2. பின்வரும் ஒப்பந்த பொதிக்காக தகுதியுள்ள விலைமனுதாரர்களிடமிருந்து முத்திரையிடப்பட்ட விலைமனுக்களை போக்குவரத்து மற்றும் நெடுஞ்சாலைகள் அமைச்சு/ இலங்கை புகையிரத சேவைகள் ("தொழில் வழங்குநர்") இப்போது அழைக்கின்றார்.

| IFB No. | ஒப்பந்த தலையங்கம் | அமைவிடம் | கால எல்லை |
|---|---|---|---|
| REIP/ADB/ICB/G/14 | **Procurement of Supply and hand over of Base Plates & Rail Shims for Sri Lanka Railways** | மேல் மாகாணம் | 180 நாட்கள் |

3. ஆஅவ இன் பிந்தைய தகைமைகளுடனான தனி-கட்ட ஒரு-உறை விலைமனுக்கோரல் நடைமுறைக்கமைவாக சர்வதேச போட்டிரீதியிலான விலைமனுக்கோரல் நடாத்தப்படும்.
4. தகுதியுள்ள விலைமனுதாரர் பின்வரும் தகவுத்திறனை பூர்த்தி செய்தல் வேண்டும்.
   (i) விலைமனுதாரரின் தேறிய பெறுமதியின் 50% இற்கு மேலதிகமான தொகையை முடிவுறா வழக்குகள் பிரதிநிதிப்படுத்தல் ஆகாது.
   (ii) கடந்த 3 வருடங்களில் விலைமனுதாரரின் தேறிய பெறுமதியானது சாதகமாகவிருத்தல் வேண்டும்.
   (iii) கடந்த ஐந்து (5) வருடங்களில் பூர்த்தி செய்யப்பட்ட அல்லது நிறைவேற்றப்பட்டுக் கொண்டிருக்கும் ஒப்பந்தங்களுக்காக மொத்த பணக்கொடுப்பனவுகளாக கணக்கிடப்பட்டு விலைமனுதாரரினால் பெற்றுக் கொள்ளப்பட்ட சராசரி வருடாந்த ஆகக்குறைந்த நிதிப்புரள்வானது 0.1 - 0.102 மில்லியன் அஐடொ ஆகவிருத்தல் வேண்டும்.
5. மேலதிக தகவலைப் பெறுவதற்காகவும் விலைமனுக்கோரல் ஆவணங்களை பரீட்சிப்பதற்காகவும், தகுதியுள்ள விலைமனுதாரர்கள் பின்வருபவருடன் தொடர்பு கொள்ளல் வேண்டும்.

**செயற்றிட்டப் பணிப்பாளர்,**
**செயற்றிட்ட முகாமைத்துவ பணிமனை,**
**கொழும்பு புறநகர் புகையிரத செயற்றிட்டம்/ புகையிரத வினைத்திறனுடனான மேம்படுத்தல் செயற்றிட்டம்,**
**இல.: 217, கொட்டா வீதி,**
**கொழும்பு-08, இலங்கை.**

**தொலைபேசி: 0094-112056240-41**
**தொலைநகல்: 0094-112674354**
**மின்னஞ்சல்: pd@csrp.lk**

6. ஆங்கிலத்திலுள்ள விலைமனுக்கோரல் ஆவணங்களை கொள்வனவு செய்வதற்காக, தகுதியுள்ள விலைமனுதாரர்கள் பின்வருவனவற்றை பூர்த்தி செய்தல் வேண்டும்.
   (i) REIP/ADB/ICB/G/14 என்ற ஒப்பந்த பொதி இலக்கத்திற்கான விலைமனுக்கோரல் ஆவணங்களை பெற்றுக் கொள்வதற்கான எழுத்து மூலமான கோரிக்கையொன்றை மேலேயுள்ள முகவரிக்கு சமர்ப்பித்தல்.
   (ii) விலைமனுக்கோரல் ஆவணம் தொடர்பாக மீளளிக்கப்படாத தொகையாக இலங்கைப் பணத்தில் 3,500 ரூபாவை அல்லது சமமான அஐடொ ஐ (பெசேவ அடங்கலானது) அல்லது ரொக்கப் பணத்தில் அல்லது பத்தரமுல்ல இலங்கை வங்கி 0007040317 என்ற கணக்கிலக்கத்திற்கு "செயலாளர், போக்குவரத்து அமைச்சு, புகையிரத வினைத்திறனுடனான மேம்படுத்தல் செயற்றிட்டம்" என்ற பெயரில் வழங்கப்பட்ட வங்கி வரைவொன்று.
   (iii) 2023 நவம்பர் 27 ஆம் திகதியிலிருந்து விலைமனுக்களை சமர்ப்பித்தலுக்கான இறுதி திகதி வரையும் வேலை நாட்களில் மு.ப. 9 மணியிலிருந்து பி.ப. 3 மணி வரையும் மேலேயுள்ள 5 ஆம் பந்தியின் கீழுள்ள முகவரியில் விலைமனுக்கோரல் ஆவணங்கள் வழங்கப்படும்.
7. விலைமனுதாரர் பின்வருமாறு ஒப்படைத்தல் வேண்டும்.
   (i) இறுதித் திகதியன்று அல்லது அதற்கு முன்னராக கீழேயுள்ள முகவரியில் அவர்களின் விலைமனுக்களை ஒப்படைத்தல் வேண்டும். 2024 ஜனவரி 12 ஆம் திகதியன்று பி.ப. 2 மணிக்கு.

**செயற்றிட்டப் பணிப்பாளர்,**
**செயற்றிட்ட முகாமைத்துவ பணிமனை,**
**கொழும்பு புறநகர் புகையிரத செயற்றிட்டம்/ புகையிரத வினைத்திறனுடனான மேம்படுத்தல் செயற்றிட்டம்,**
**இல.: 217, கொட்டா வீதி,**
**கொழும்பு-08, இலங்கை.**

   (ii) விலைமனுக்கோரல் ஆவணங்களில் திட்டவட்டமாக குறிப்பிட்டுள்ளவாறான தொகைக்கான விலைமனுப் பிணையொன்றுடன் இலகுவில் மாற்றக்கூடிய நாணயத்தில் தேவைப்படும் விலைமனுப் பிணைத் தொகையின் நிகரான தொகையை நிர்ணயப்படுத்துவதற்கான நோக்கத்திற்காக, விலைமனுக்களை சமர்ப்பிப்பதற்கான இறுதித் திகதிக்கு 28 நாட்களுக்கு முன்னரான திகதியன்று நிலவுவதும் இலங்கை மத்திய வங்கியினால் பிரசுரிக்கப்பட்ட விற்பனை மாற்று விகிதமானது பிரயோகப்படுத்தப்படும்.
   (iii) விலைமனுக்கள் அவைகளின் சமர்ப்பித்தலுக்கான இறுதி நேரத்தின் பின்னர் உடனடியாகவே சமுகமளித்திருக்கும் விலைமனுதாரர்களின் பிரதிநிதிகளின் முன்னிலையில் திறக்கப்படும்.
8. இலங்கை, கொட்டா வீதி, 217 ஆம் இலக்கத்திலுள்ள கொழும்பு புறநகர் புகையிரத செயற்றிட்டம் / புகையிரத வினைத்திறனுயுடனான மேம்படுத்தல் செயற்றிட்டம், செயற்றிட்ட முகாமைத்துவ பணிமனையில் 2023 டிசம்பர் 18 ஆம் திகதியன்று மு.ப. 10 மணிக்கு விலைமனு முன்னோடிக் கூட்டம் நடைபெறும்.
9. தாமதமான விலைமனுக்கள் நிராகரிக்கப்படும்.
10. விலைமனுக்களை தயாரித்தல் மற்றும் சமர்ப்பித்தல் ஆகியன தொடர்பான அனைத்து ஆகுசெலவுகளையும் விலைமனுதாரரே பொறுப்பேற்றல் வேண்டுமென்பதுடன் தொழில் வழங்குநரானவர் விலைமனுக்கோரல் செயற்பாட்டின் நடாத்தல் அல்லது விளைவை பொருட்படுத்தாமல் அவ்வாறான ஆகுசெலவுகளுக்கான பொறுப்பை அல்லது கடப்பாட்டை ஏற்கமாட்டாது.

**செயற்றிட்டப் பணிப்பாளர்,**
**செயற்றிட்ட முகாமைத்துவ பணிமனை,**
**கொழும்பு புறநகர் புகையிரத செயற்றிட்டம்/ புகையிரத வினைத்திறனுடனான மேம்படுத்தல் செயற்றிட்டம்,**
**இல.: 217, கொட்டா வீதி,**
**கொழும்பு-08, இலங்கை.**
**27.11.2023.**

| AAT (மில்லியன் ரூபாவில்) | நிதியிடல் வளங்கள் அஐடொ (மில்லியன்) | திட்டவட்டமாக குறிக்கப்பட்டுள்ள அனுபவம் | |
|---|---|---|---|
| | | நிகரான ஒப்பந்த அனுபவம் | பிரதான செயற்பாடுகளின் தொழில்நுட்ப அனுபவம் |
| கடந்த மூன்று (3) வருடங்களில் பூர்த்தி செய்யப்பட்ட அல்லது நிறைவேற்றப்பட்டுக் கொண்டிருக்கும் ஒப்பந்தங்களுக்காக மொத்த பணக்கொடுப்பனவுகளாக கணக்கிடப்பட்டு விலைமனுதாரரினால் பெற்றுக் கொள்ளப்பட்ட சராசரி வருடாந்த ஆகக்குறைந்த நிதிப்புரள்வானது 0.102 மில்லியன் அஐடொ ஆகவிருத்தல் வேண்டும். | காசுப் பாய்ச்சல் தேவைப்படுத்தலான 0.8 மில்லியன் அஐடொ ஐ அடைவதற்காக போதுமானளவு தற்போதுள்ள அல்லது திரவச் சொத்துக்கள், கடன் வரிகள் மற்றும் ஏனைய நிதிகள். | (1) 6 ஆம் பிரிவில் விபரிக்கப்பட்டவாறான (வழங்களின் அட்டவணை) வழங்களின் நோக்கத்திற்கு நிகரான தன்மை மற்றும் சிக்கல் தன்மையுடன் 250,000 அஐடொ இற்கு மொத்தமாக மதிப்பிடப்பட்ட நிகரான ஒப்பந்தங்களில் கடந்த ஐந்து (5) வருடங்களில் பிரதான வழங்குநராக சித்திகரமாக பூர்த்தி செய்திருத்தல். ( 2 ) நிரந்தர தண்டவாள வழிக்கான பொருட்கள் அல்லது நிகரான அம்சங்களை வழங்கல் மற்றும் பராமரித்தல் ஆகியவற்றில் ஆகக் குறைந்தது 3 வருட அனுபவத்தைக் கொண்டுள்ள புகழ்வாய்ந்த உள்ளூர் முகவர் (ஆவணச் சான்றானது இணைக்கப்பட்டிருத்தல் வேண்டும்) | விலைமனுதாரரானவர் முன்வைக்கப்பட்டுள்ள பண்டங்கள் பின்வருமாறு முன்னெடுக்கப்பட்டுள்ளதென சான்று பகருதல் வேண்டும். (i) ஆகக் குறைந்தது ஐந்து (05) வருடங்களுக்கு நிகரான அம்சங்களின் உற்பத்தி/ வழங்கல் இருந்திருத்தல் வேண்டும். (ii) இலங்கை புகையிரத சேவைகளுக்கு கடந்த ஐந்து (5) வருடங்களுக்கு நிகரான இன அம்சங்களை விற்பனை செய்திருத்தல்/ வழங்கியிருத்தல் (மேலேயுள்ள (i), (ii) ஆகியவற்றை நிரூபிப்பதற்கான ஆவணச் சான்று வழங்கப்படல் வேண்டும். மேலேயுள்ள ஷரத்துக்களில் குறிப்பிடப்பட்டுள்ள தேவைப்படுத்தல்களை பூர்த்தி செய்யாமல் சமர்ப்பிக்கப்படும் எந்தவொரு ஆவணச் சான்றும் தகைமையை இழப்பதற்கு அல்லது நிராகரிப்பதற்கான வழியை வகுக்கும். |

சுகாதார அமைச்சு

## தேசிய இரத்த மாற்று சேவை

# வழங்குநர்கள், கராஜ்கள் மற்றும் சேவை நிலையங்களை பதிவு செய்தல் - 2024

2024ஆம் ஆண்டுக்காக கீழுள்ள பட்டியலிடப்பட்ட உருப்படிகள் மற்றும் சேவைகளின் வழங்கலுக்காக இந்த நிறுவனத்துடன் பதிவு செய்வதற்கு எதிர்பார்க்கும் சட்டரீதியான சபைகள் உட்பட முகவர்கள், உற்பத்தியாளர்கள், வழங்குநர்கள், பதிவு செய்யப்பட்ட கூட்டுறவுச் சங்கங்கள் மற்றும் அரச நிறுவனங்களிடம் இருந்து விண்ணப்பங்கள் கோரப்படுகின்றன.

**A) வழங்கல்கள்**

1. அனைத்து வகையான எழுதுபொருள் உருப்படிகள்.
2. தளபாடம் மற்றும் வீட்டு உபகரணங்கள் (மரப்பலகை, உருக்கு, Fibre Glass மற்றும் பிளாஸ்டிக்)
3. தும்புத்தடி, விளக்குமாறு மற்றும் அனைத்து வகையான துடைப்பான்கள், தூரிகைகள், கழிப்பறை தூரிகைகள்.
4. அனைத்து வகையான துணிகள், திரைச்சீலைகள் மற்றும் ஆடை உருப்படிகள்.
5. வண்ணப்பூச்சு, வார்னிஷ் மற்றும் தரை பளபளப்பூட்டிகள்/ செர்ஜிகல் ஸ்பிரிட்/ myth elated spirit
6. வாகனங்களுக்கான அனைத்து வகையான பெற்றரிகள்
7. தோல் மற்றும் தோல் தயாரிப்புகள்.
8. பெயர் பலகை/ அறிவித்தல் பலகைகள்/ இறப்பர் முத்திரைகள் மற்றும் தின முத்திரைகள்.
9. வன்பொருள் உருப்படிகள்
10. டயர்களுக்கான டயர், டியூப், கொலர்கள்
11. கணினிகள், கணினி துணைப்பொருட்கள் மற்றும் டோனர் காட்ரிட்ஜ்கள்
12. அனைத்து வகையான குப்பை பைகள் மற்றும் பொலிதின் உற்பத்திகள்.
13. தச்சு உருப்படிகள் (அனைத்து வகையான மரப் பலகைகள்)
14. மருந்தியல் உருப்படிகள் (ஊசிகள் உட்பட)
15. ஆய்வுகூட இரசாயனங்கள் மற்றும் சோதனைப் பொருட்கள்
16. ஆய்வுகூட உபகரணம் மற்றும் இரத்த வங்கி உபகரணம்
17. ஆய்வுகூட நுகர்வு பொருட்கள்
18. சத்திரசிகிச்சை உருப்படிகள்/ நுகர்வு பொருட்கள் (Ex-Plasters, Gouse, Cotton Wool, Wadding முதலியன)
19. மின் உபகரணங்கள் (நிழல்பிரதி இயந்திரம், நகல் இயந்திரம், overhead projector, பல்லூடக திரைபெருக்கிகள், ஒலி அமைப்புகள், சுவர் கடிகாரங்கள், குளிர்சாதனப்பெட்டிகள், மின் விசிறிகள், கெண்டி மற்றும் கொதிகலன்கள், சுருள்கள், மின்குமிழ்கள் முதலியன)
20. பார்கோட் ஸ்டிக்கர்கள் மற்றும் ஏனைய ஸ்டிக்கர் உருப்படிகள்
21. வளிச்சீராச்சி இயந்திரங்கள்
22. அச்சு மற்றும் அச்சிடப்பட்ட உருப்படி

**B) சேவைகள்**

23. அனைத்து மின் உபகரணங்களையும் பழுதுபார்த்தல் (குளிர்சாதனப்பெட்டி/ மின்சாரம்/ மோட்டார்கள்/ மின்விசிறிகள்/ நிழல்பிரதி இயந்திரம்/ அச்சுப்பொறிகள்/ இலத்திரன் உபகரணங்கள் மற்றும் அது சார்ந்த உபகரணங்கள் மற்றும் இயந்திர உபகரணம்/ கணிப்பான்கள் முதலியன)
24. அனைத்து கணினிகள் மற்றும் அச்சுப்பொறிகளின் பழுதுபார்த்தல் மற்றும் வலைப்பின்னல்
25. வாகனங்களின் பழுதுபார்த்தல்/ நன்னிலைப்படுத்தல்/ மின் வேலைகள்/ குஷன் மற்றும் வளிச் சீராக்கி
26. ஆய்வுகூட உபகரணங்கள், தளபாடங்கள் மற்றும் வீட்டு உபகரணங்களின் பழுதுபார்த்தல்
27. கட்டிடப் பராமரிப்பு
28. வளிச்சீராக்கி இயந்திரங்களின் பழுதுபார்த்தல்

**விதிகள் மற்றும் நிபந்தனைகள்**

1. தேவையெனில் வழங்குநர்கள் ஒன்று அல்லது அதற்கு மேற்பட்ட உருப்படிகளுக்கு பதிவு செய்ய முடியும்.
2. ஒவ்வொரு உருப்படிக்காகவும் மீளளிக்கப்படாத கட்டணமாக 500 ரூபாவை செலுத்த வேண்டும் என்பதோடு வழங்கல் மற்றும் சேவைகளுக்கு அமைய வெவ்வேறு விண்ணப்பங்களை சமர்ப்பித்தல் வேண்டும். 2023.11.24ஆம் திகதி தொடக்கம் 2023.12.30 ஆம் திகதி மு.ப. 10.30 வரை தேசிய இரத்த மத்திய நிதியத்தின் சிறாப்பருக்கு ரூபா 500 மீளளிக்கப்படாத கட்டணத்தை செலுத்தி பெற்ற பற்றுச்சீட்டுடன் சேர்த்து விண்ணப்பத்தை சமர்ப்பித்தல் வேண்டும்.
3. வர்த்தகப் பதிவு சான்றிதழின் பிரதி ஒன்றுடன் சேர்த்து கீழ் தரப்பட்டுள்ள மாதிரியின்படி சுயமாகத் தயாரிக்கப்பட்ட விண்ணப்பத்தை 2023.12.30 ஆம் திகதி பி.ப. 2.30 அல்லது அதற்கு முன்னர் கிடைப்பதற்கு தேசிய இரத்த மத்திய நிலைய, பணிப்பாளருக்கு பதிவுத் தபால் மூலம் அனுப்புவது அல்லது இந்த நிறுவனத்தின் கணக்காளர் அறையில் வைக்கப்பட்டுள்ள விலைக்கேட்புப் பெட்டியில் இடுவதற்கு வேண்டும்.
4. விண்ணப்பத்தை கொண்ட கடித உறையின் இடது பக்க மேல் மூலையில் "வழங்குநர்களை பதிவு செய்தல் 2024" என்று குறிப்பிடுதல் வேண்டும்.
5. வழங்குநர்கள் பொருட்கள் மற்றும் சேவைகளை குறைந்தது ஒரு மாத கடன் அடிப்படையில் வழங்குவதற்கு இணங்குதல் வேண்டும்.
6. வழங்கல் மற்றும் சேவைகளுக்காக பதிவு செய்யப்பட்ட வழங்குநர்களிடம் இருந்து கூறுவிலைகள் கோரப்பட்டபோதும் பதிவு செய்யப்படாத புகழ்பெற்ற வழங்குநர்களிடம் இருந்து கூறுவிலைகளுக்காக அழைப்பு விடுப்பதற்கும் எந்த ஒரு அறிவித்தலும் இன்றி பதிவுக்கான எந்த ஒரு விண்ணப்பத்தையும் இரத்துச் செய்வதற்கும் இந்த நிறுவனத்தின் பணிப்பாளருக்கு உரிமை உள்ளது.
7. தேவையான தரம் மற்றும் மாதிரிக்கு அமைவாக உருப்படிகள் மற்றும் பொருட்களை வழங்கத் தவறும் வழங்குநர்களின் பெயரை வழங்குநர்களின் பதிவில் இருந்து நீக்குவதற்கு நடவடிக்கை எடுக்கப்படும்.

**கீழுள்ள மாதிரியின்படி உங்களது விண்ணப்பத்தை தயாரிக்கவும்.**

### வழங்குநர்களை பதிவு செய்வதற்கான விண்ணப்பம் - 2024

01. பதிவு செய்யப்பட்ட பெயர் மற்றும் முகவரி:
02. மின்னஞ்சல் முகவரி:
03. உருப்படியின் இலக்கத்துடன் பதிவு செய்ய எதிர்பார்க்கும் வழங்கல்கள்/ சேவைகள்:
04. விண்ணப்பதாரரின் பெயர் மற்றும் முகவரி:
05. நிறுவனத்தின் பதிவு செய்யப்பட்ட பெயர், பதிவு இல. மற்றும் திகதி:
06. தொலைபேசி இல: தொலைநகல்:
07. வழங்கப்படும் கடன் வசதி மற்றும் நிபந்தனைகள்:
08. 2021/2023 ஆண்டு காலத்தில் மேற்கொண்ட வழங்கல்கள் விபரம்:

மேல் தரப்பட்ட விபரங்கள் உண்மையானது மற்றும் சரியானது என நான் உறுதி செய்கிறேன். மேல் தரப்பட்ட விபரங்கள் தவறானது எனக் கண்டறிந்தால் பதிவு நிராகரிக்கப்பட்டு இரத்துச் செய்யப்படும் என்பதை நான் அறிவேன். வர்த்தகப் பதிவு சான்றிதழின் பிரதி ஒன்று இத்துடன் இணைக்கப்பட்டுள்ளது.

திகதி:................ ..............................
கையொப்பம்

**ஈ.ஏ.எல்.கே. எதிரிசிங்க,**
**பணிப்பாளர்,**
**தேசிய இரத்த மாற்று சேவை,**
**555/5D, எல்விட்டிகல மாவத்தை,**
**நாராஹென்பிட்ட, கொழும்பு 05.**

OBSERVER JOBS
BREAKING BOUNDARIES
THE COUNTRY'S LARGEST RECRUITMENT DATABASE
FOR JOBSEEKERS
www.observerjobs.lk

# பெறுகை அறிவித்தல்

## நகர சபை – ஹப்புத்தளை

ஹப்புத்தளை நகர சபைக்கு சொந்தமான தினசரி சந்தை அமைந்துள்ள கீழுள்ள அட்டவணையில் தரப்பட்டுள்ள மீன் கடை மற்றும் கோழி இறைச்சிக் கடை, ஆட்டிறைச்சிக் கடை, மாட்டிறைச்சிக் கடை ஆகிய கடைகளில் இறைச்சி விற்கும் உரிமையை குத்தகைக்கு விடுவதற்கும், தினசரி சந்தைப் பகுதியில் அமைந்துள்ள ஞாயிறு சந்தையின் கட்டணத்தை அறவிடும் உரிமையை குத்தகைக்கு விடுவதற்கும், மொத்த சந்தை நிலம் மற்றும் ஹப்புத்தளை நகரின் வாகனம் நிறுத்தி வைக்கும் கட்டணத்தை அறவிடும் உரிமையை குத்தகைக்கு விடுவதற்கும், பொதுக் கழிப்பறை கட்டணத்தை அறவிடும் உரிமையை குத்தகைக்கு விடுவதற்கும், 2024 ஆம் ஆண்டுக்காக (2024.01.01 ஆம் திகதி தொடக்கம் 2024.12.31 ஆம் திகதி வரை) 18 வயதுக்கு மேற்பட்ட இலங்கை பிரசைகளிடம் இருந்து பெறுகை விண்ணப்பங்கள் கோரப்படுகின்றன.

| வரிசை இலக்கம் | பெறுகை மூலம் | குறைந்தபட்ச விலைமனு (ரூபா) | மீளளிக்கப்படும் பெறுகை வைப்பு தொகை (ரூபா) | மீளளிக்கப்படாத வைப்புத் தொகை (ரூபா) |
|---|---|---|---|---|
| 01 | மீன் கடை | 636,300.00 | 30,000.00 | 3,000.00 |
| 02 | கோழி இறைச்சிக் கடை | 612,000.00 | 30,000.00 | 3,000.00 |
| 03 | ஆட்டிறைச்சிக் கடை | 407,400.00 | 30,000.00 | 3,000.00 |
| 04 | மாட்டிறைச்சிக் கடை | 4,115,550.00 | 100,000.00 | 3,000.00 |
| 05 | ஞாயிறு சந்தை கட்டணம் அறவிடல் | 759,150.00 | 30,000.00 | 3,000.00 |
| 06 | மொத்த சந்தை நிலம் மற்றும் ஹப்புத்தளை நகரத்தில் வாகனம் நிறுத்தி வைக்கும் கட்டணம் அறவிடல் | 766,850.00 | 30,000.00 | 3,000.00 |
| 07 | பொது கழிப்பறைக் கட்டணம் அறவிடல் (பஸ் தரிப்பிடம், பதுளை வீதி, கொழும்பு வீதி, தினசரி சந்தை பகுதி) | 625,650.00 | 30,000.00 | 3,000.00 |

**பெறுகை படிவத்தை வழங்கல்:-**

- ❖ ஹப்புத்தளை நகர சபை அலுவலகத்தில் 2023.11.27 ஆம் திகதி தொடக்கம் 2023.12.18 ஆம் திகதி வரை அரச வேலை நாட்களில் மு.ப. 9.00 தொடக்கம் பி.ப. 3.00 வரை பெறுகை விண்ணப்பத் தொகையை செலுத்தி பெற்றுக்கொள்ள முடியும்.
- ❖ பெறுகை விண்ணப்பங்களை பெறும்போது தேசிய அடையாள அட்டை/ ஓட்டுநர் அனுமதிப் பத்திரம்/ கடவுச்சீட்டை அவசியம் சமர்ப்பித்தல் வேண்டும்.
- ❖ ஒரு விலைமனுதாரருக்கு பெறுகை விண்ணப்பங்களை சமர்ப்பிக்க முடிவது ஒரு பெறுகை மூலத்திற்காக ஒரு விண்ணப்பம் என்ற வகையிலாகும். பெறுகை மூலங்கள் பலதுக்கு உரிமையை பெறுவதற்கு எதிர்பார்ப்பதாயின் அதற்காக வெவ்வேறாக விண்ணப்பங்களை வாங்கி சமர்ப்பித்தல் வேண்டும்.
- ❖ ஹப்புத்தளை நகர சபைக்கு நிலுவை கடை வாடகை செலுத்த உள்ள அல்லது இதற்கு முன்னர் ஹப்புத்தளை நகர சபையுடன் ஒப்பந்தங்களுக்கு வந்து, ஒப்பந்த நிபந்தனைகளை மீறி இருக்கும் எவருக்கும் பெறுகை படிவங்கள் வழங்கப்படமாட்டாது.

**பெறுகை விண்ணப்பங்களை ஏற்றல்:-**

- ❖ முறையாக பூர்த்தி செய்யப்பட்ட பெறுகை விண்ணப்பங்களை 2023.12.19 ஆம் திகதி பி.ப. 1.30க்கு முன்னர் கிடைக்குமாறு தலைவர், பெறுகைக் குழு, நகர சபை, ஹப்புத்தளை என்ற முகவரிக்கு பதிவுத் தபாலில் அனுப்ப முடியும். இல்லையேல் குறித்த நேரத்திற்கு முன் ஹப்புத்தளை நகர சபை அலுவலகத்தில் உள்ள பெறுகைகளை இடுகின்ற பெட்டியில் (Tender Box) இடுவதற்கு வேண்டும். பெறுகை விண்ணப்பங்களை மூலப்பிரதி மற்றும் நகல்பிரதியை இரு உறைகளில் இட்டு மூலப் பிரதி மற்றும் நகல்பிரதி என குறிப்பிட்டு முத்திரை இட்டு, அந்த இரு உறைகளையும் வேறு உறை ஒன்றில் இட்டு மீண்டும் முத்திரை இட்டு உறையின் இடது பக்க மேல் மூலையில் குறித்த பெறுகை மூலத்தை குறிப்பிட்டு அனுப்ப வேண்டும். தாமதித்து கிடைக்கும் விலைமனுக்கள் நிராகரிக்கப்படும்.

**பெறுகைகளை திறப்பது:-**

- ❖ 2023.12.19 ஆம் திகதி பி.ப. 1.30க்கு ஹப்புத்தளை நகர சபை அலுவலகத்தில் விலைமனுக்கள் திறக்கப்படுவதோடு, விண்ணப்பதாரர் அல்லது அவரினால் எழுத்துமூலமாக அதிகாரம் வழங்கப்பட்ட பிரதிநிதி ஒருவருக்கு அதற்காக பங்கேற்க முடியும்.
- ❖ கேள்விமனுக்களை ஏற்பது அல்லது நிராகரிக்கும் உரிமை முழுமையாக பெறுகைக் குழு வசமானது என்பதோடு பெறுகை நிபந்தனைகளுக்கு அமைய செயற்படுவதை நிராகரித்தால் அவர்களின் பிணைத் தொகை பெறுகை நிபந்தனைகளுக்கு கீழ்பட்டு சபைக்கு உரித்தாக்கும் முழு அதிகாரம் சபைக்கு உள்ளது.
- ❖ இது தொடர்பில் மேலதிக விபரங்களை கீழுள்ள தொலைபேசி இலக்கத்தை அழைப்பதன் மூலம் பெற்றுக்கொள்ள முடியும்.

**நகர சபை, ஹப்புத்தளை :- 057-2268075**

**2023-11-24 ஆம் திகதி**
**நகர சபை, ஹப்புத்தளையில்**
**தலைவர்,**
**பெறுகைக் குழு,**
**நகர சபை**
**ஹப்புத்தளை**

Best way to fulfil your Future Dreams
Marriage Proposals
in the
Sunday Observer

# அறிவித்தல்

2007ம் ஆண்டின் 7ம் இலக்க கம்பனிகள் சட்டத்தின் 9(2) பிரிவின் விதிகளுக்கமைய கீழே குறிப்பிடப்படும் கம்பனியின் பெயர் மாற்றப்படுவதாக இத்தால் அறிவித்தல் விடுக்கிறோம்.

**கம்பனியின் பழைய பெயர்:-**

**பெட்டா பார்மசி (பிரைவட்) லிமிட்டட்**

**கம்பனியின் இல:-** PV 7708

**பதிவு அலுவலகம்:-**

இல. 98, ஸ்ரீ சங்கராஜ மாவத்த, கொழும்பு-10.

**மாற்றப்பட்ட திகதி:-** 2023 நவம்பர் 23

**கம்பனியின் புதிய பெயர்:-** முல்லர் அன் பிப்ஸ் (ஹெல்த்கெயா) (பிரைவட்) லிமிட்டட்

**கோப்பரேட் மெனேஜர்ஸ் அன்ட் செக்ரடரீஸ் (பிரைவட்) லிமிட்டட்**
**செயலாளர்கள்**

2023 நவம்பர் 24

# காலி மாநகர சபை

## 2024ம் ஆண்டிற்கான வழங்குநர்களைப் பதிவு செய்தல்

2024ஆம் ஆண்டிற்காக காலி மாநகர சபையில் பதிவு செய்வதற்கு எதிர்பார்க்கும் அங்கீகரிக்கப்பட்ட உள்ளூர் வழங்குநர்கள் மற்றும் உற்பத்தியாளர்களிடமிருந்து கீழ்க்காணும் வழங்கல் மற்றும் சேவைகள் மற்றும் உள்ளக தேவைப்பாடுகளுக்காக தொடர்ந்து வழங்குவதற்கு கீழ்க்காணும் நிபந்தனைகளுக்கு உட்பட்டு, விண்ணப்பங்கள் கோரப்படுகின்றன.

**விண்ணப்பதாரிகளுக்கான சம்பந்தப்பட்ட தகவல்கள் மற்றும் பொது நிபந்தனைகள்**

01. ஒரு உருப்படிக்கு அல்லது பலவற்றிற்கு விண்ணப்பிக்க முடிவதுடன் ஒவ்வொரு உருப்படிக்கும் வேறுவேறாக விண்ணப்பங்களை சமர்ப்பித்தல் வேண்டும்.
02. அந்த ஒவ்வொரு விண்ணப்பத்திற்கும் அறவிடப்படும் கட்டணம் ரூ. 2000.00 ஆகும். அதனை "மாநகர ஆணையாளர், காலி மாநகர சபை" பெயருக்கு எழுதப்பட்ட காசோலை மூலம் அல்லது காசாக மாத்திரம் செலுத்துதல் வேண்டும்.
03. வியாபாரத்தின் பெயர், வியாபாரத்தின் தன்மை, பதிவு செய்வதற்கு விண்ணப்பிக்கும் உருப்படியின் இலக்கம் மற்றும் பெயர், விண்ணப்பதாரியின் பெயர், தொ.பே. இலக்கம், வெட் வரிக்காக பதிவு செய்து இருப்பின் அச் சான்றிதழின் பிரதி மற்றும் வியாபார பெயர் பதிவுத் சான்றிதழ் உட்பட விபரங்களுடன் தம்மால் தயாரிக்கப்பட்ட விண்ணப்பத்தின் மூலம் பதிவு செய்வதற்காக விண்ணப்பித்தல் வேண்டும்.
04. சகல விண்ணப்பத்துடனும் வியாபார பதிவின் பிரதியொன்றையும் இணைத்து அனுப்புதல் கட்டாயமாகும். அவ்வாறே, இங்கு வியாபாரத்தின் தன்மை விண்ணப்பிக்கும் உருப்படியுடன் பொருத்துதல் வேண்டும்.
05. விண்ணப்பங்கள் அனுப்பப்படும் உறையின் இடது பக்க மேல் மூலையில் "வழங்குநர்களைப் பதிவு செய்தல் - 2024" என்று குறிப்பிட்டு "மாநகர ஆணையாளர், மாநகரசபை, காலி" என்ற முகவரிக்கு 2023.12.18 அல்லது அதற்கு முன்பு கிடைக்குமாறு பதிவுத் தபாலில் அல்லது கையோடு கொண்டு வந்து ஒப்படைக்கலாம்.
06. விலைமனுக்களுக்காக கேள்விகளை அனுப்பிய பின்னர் விலைமனுக்களை சமர்ப்பிக்க முடியாத விடத்து அது பற்றி எழுத்துமூலம் அறிவித்தல் வேண்டும். அதற்காக மூன்று முறை (03 முறை) பதிலளிக்காமை, பொய்யான தகவல்கள்/ஆவணங்களை சமர்ப்பித்தல், விண்ணப்பிக்கும் வழங்கல் மற்றும் சேவைகளை சரியான நேரத்தில் வழங்குவதற்கு தவறுதல் மற்றும் அனுமதிக்கப்பட்ட சாம்பிள்களுக்கு அமைவாக வழங்காது இருத்தல் என்ற காரணங்களால் வழங்குநர்களை வழங்கல் பட்டியலில் இருந்து நீக்கும் அதிகாரம் மாநகர சபைக்கு உரியது.
07. பதிவு செய்துள்ள இந்த வழங்குநர்களுக்கு மேலதிகமாக நிறுவனத்திற்கு தேவயையான பொருட்கள், வழங்கல்கள் மற்றும் சேவை பெறுகைக்காக பெறுகை வழிகாட்டல்களின் பிரகாரம் வேறு முறைமைகளை தேர்ந்தெடுக்கும் உரிமை மாநகர சபைக்கு உரியது.
08. விண்ணப்பிக்கும் உருப்படியின் தன்மையின் பிரகாரம், தேவைப்படும் வேளையில் பரீட்சிப்பதற்கு உட்பட்டு பதிவு மேற்கொள்ளப்படும்.
09. மேலதிக விபரங்கள் 091 - 2223146 என்ற தொலைபேசி இலக்கத்தில் மாநகர நிதித் திணைக்களத்தில் பெற்றுக் கொள்ளலாம்.

**வழங்குநர்களைப் பதிவு செய்வதுடன் சம்பந்தப்பட்ட உருப்படிகள்**

| வழங்கல்கள் | |
|---|---|
| **உருப்படி இல** | **வழங்கல் தன்மை** |
| 01 | சகல அலுவலக காகிதாதிகள் மற்றும் பாடசாலை உபகரணங்கள் |
| 02 | சகல அலுவலக உபகரணங்கள் மற்றும் மரப் பொருட்களை தயாரித்து வழங்குதல் |
| 03 | சீருடை மற்றும் சீருடைதுணி, பாதணி, உத்தியோகபூர்வ இலச்சினை, மழை அங்கி, கையுறை, முகக்கவசம் |
| 04 | துப்புரவேற்பாட்டு பொருட்கள் (தும்புத்தடி, விளக்குமாறு, சவர்க்காரம், பீடை நாசினி, கிருமிநாசினி போன்றவை) |
| 05 | ரெடிமிக்ஸ், கொங்கிறீட்தார், கோலாஸ் |
| 06 | ஆயுர்வேத மருந்து வகைகள் |
| 07 | சகல வகையான டயர் மற்றும் டியூப் |
| 08 | வாகன உதிரிப்பாகங்கள், ஒயில்வகை, வாகன சேர்விஸ் பொருட்கள் |
| 09 | வாகன பற்றரி |
| 10 | தீயணைப்பு மற்றும் பாதுகாப்பு உபகரணம் |
| 11 | அச்சு மாதிரிப் பத்திரங்கள் மற்றும் புத்தகங்கள் |
| 12 | ஹியூம் பைப், நினைவுப்படிகம், கொங்கிறீட் உற்பத்தி |
| 13 | கணனி மற்றும் துணைப்பாகங்கள், போட்டோப்பிரதி இயந்திரம், அச்சு இயந்திரம், கைவிரல் அடையாள இயந்திரம், டுப்ளோ இயந்திரம், CCTV இயந்திரம் |
| 14 | சகல ஹாட்வெயார் உபகரணம் (மண்வெட்டி, மண்வெட்டி முள்ளு, இரும்பு சவல், வீல்பெரோ, இரும்பு கம்பி, இரும்பு ஆணி, G.I. பைப் மற்றும் நீர் துணைப்பாகங்கள் போன்றன) |
| 15 | டோனர், ரிப்பன் வழங்குதல் |
| 16 | கட்டிட நிர்மாண வழங்கல் பொருட்கள் (கருங்கல் வகை, சீமெந்து, மணல், விறகு, செங்கல், கட்டிட பூச்சு தீந்தை வகை, தீந்தை பூசும் உபகரணங்கள் போன்றன) |
| 17 | Aluminium Partition இற்கான துணைப்பாகங்கள் வழங்குதல் |
| 18 | கதவு ஜன்னல்களுக்கான கண்ணாடி வழங்குதல் |
| 19 | வளிச்சீராக்கி மற்றும் துணைப்பாகங்கள் கொள்வனவு செய்தல் |
| 20 | மின் துணைப்பாகங்கள், மின் உபகரணங்கள், மின் பல்ப், சகல வகையான வீதி விளக்கு |
| 21 | L.P. கேஸ் வழங்குதல் (37.5kg) |
| 22 | பூங்கா மற்றும் மைதானங்களில் விளையாட்டு உபகரணம் மற்றும் உடற்பயிற்சி உபகரணங்கள் பெற்றுக் கொள்ளல் |
| 23 | சகல வகையான மரம் வழங்குதல் |
| 24 | பலஞ்சி, குழாய், இயந்திர உபகரணங்கள் குத்தகை அடிப்படையில் வழங்குதல் |
| 25 | நிர்மாண பழுதுபார்த்தல் விடயங்களுக்கான இரசாயனப் பொருட்கள் வழங்குதல் |
| 26 | அலுமினியம் ஒட்டுநர்களை வாடகை அடிப்படையில் பெற்றுக் கொள்ளல் (Aluminium Fabricator) |
| 27 | உபசரணை விடயங்களுக்கான சிற்றுண்டி மற்றும் பு∴பே முறையில் உணவு வழங்குதல் |
| **சேவைகள்** | |
| **உருப்படி இலக்கம்** | **வழங்கல் தன்மை** |
| 28 | அச்சு சேவை மற்றும் முத்திரை தயாரித்தல் (போஸ்டர், பெனர், மாதிரிப் பத்திரங்கள்) |
| 29 | டயர் மீள் நிரப்புதல் மற்றும் வொல்கனைஸிங் செய்தல் |
| 30 | கணனி மற்றும் அச்சு இயந்திரம், பெக்ஸ் போட்டோப்பிரதி இயந்திரம், தட்டச்சு, கைவிரல் அடையாள இயந்திரம் பழுதுபார்த்தல். |
| 31 | வாகன சேர்விஸ் செய்தல் |
| 32 | வாகன பழுதுபார்த்தல் வளிச்சீராக்கி அமைப்பு மற்றும் மின் அமைப்பு உட்பட, கடைசல் வேலை, சகல வகையான வாகன பழுதுபார்த்தல். |
| 33 | வாகன குஷன் செய்தல் (சீட்கவர் தைத்தல், டென்ட் துணி எடுத்தல்) |
| 34 | ஒலி பெருக்கி இயந்திரம், வளிச்சீராக்கி இயந்திரம், ஜெனரேட்டர் மற்றும் உற்சவப் பொருட்கள் வாடகைக்கு எடுத்தல் |
| 35 | வளிச்சீராக்கி இயந்திரம் மற்றும் மின் உபகரண பழுதுபார்த்தல் |
| 36 | கெட்டபில்லர், வீதி அழுத்தும் புல்டோசர், டிரக்டர் டிரெயிலர், எஸ்கவேட்டர், பெக்கோ லோட், கியூப் 03 லொறி, வாடகைக்கு எடுத்தல் |
| 37 | பூங்கா மற்றும் மைதானங்களில் விளையாட்டு உபகரணம் மற்றும் உடற்பயிற்சி உபகரணங்கள் பழுதுபார்த்தல் |
| 38 | அலுவலக அடையாள அட்டை தயாரித்தல் |
| 39 | பெயர் பலகை, அறிவித்தல் பலகை, பெனர் தயாரித்தல் |
| 40 | நில அளவையாளர் சேவை வழங்குதல் |
| 41 | தச்சு வேலை, மேசன் வேலை, வெல்டின் வேலை, நீர்க்குழாய், தொழில்நுட்ப சேவை, உள்ளக தொலைபேசி சேவை |
| 42 | வாகனங்களை வாடகைக்கு எடுத்தல் |
| 43 | Injector pump and injector பழுதுபார்த்தல் |
| 44 | Alternator and Starter motor, single phase and 3 phase motors பழுதுபார்த்தல் |
| 45 | Electronic Circuit Board மற்றும் வாகனங்களின் மின் அமைப்புகளை பழுதுபார்த்தல் |
| 46 | ஹைட்ரொலிக் பம்ப், ஹைட்ரொலிக்ஜெக், ஹைட்ரொலிக் வேல் உட்பட சகல ஹைட்ரொலிக் பழுதுபார்த்தல் |
| 47 | Engine, Gear box, Differential, Power steering pump பழுதுபார்த்தல் |
| 48 | சகல வாகனங்களினதும் டிங்கரிங் மற்றும் பெயின்டிங் விடயங்கள் |
| 49 | ஹைட்ரொலிக் ஹோஸ் பழுதுபார்த்தல் மற்றும் புதிதாக தயாரித்தல் |
| 50 | Wiper motor, power shutter motor பழுதுபார்த்தல் |
| 51 | Radiator பழுதுபார்த்தல் |
| 52 | வாகனங்கள் காப்புறுதி காப்பீடு |

**2023.11.22ம் திகதி**
**காலி மாநகர சபை**

**மாநகர ஆணையாளர்**
**காலி மாநகர சபை.**

www.adz.lk
it's what you want

# தேசிய இளைஞர் படையணி

## (விளையாட்டுத்துறை மற்றும் இளைஞர் விவகார அமைச்சு)

## விலைமனுக்களுக்கான அழைப்பு

விளையாட்டுத்துறை மற்றும் இளைஞர் விவகார அமைச்சின் கீழ் நிர்வகிக்கப்படும் தம்புள்ள ஹோட்டல் பயிற்சிப் பாடசாலைக்கு 2024 பெப்ரவரி மாதம் 01ஆம் திகதி முதல் 2025 ஜனவரி மாதம் 31ஆம் திகதி வரையிலும் மற்றும் யக்கல அழகியற்கலை பயிற்சிப் பாடசாலைக்கு 2024 ஜனவரி மாதம் 01ஆம் திகதி முதல் 2024 டிசம்பர் 31ஆம் திகதி வரையில் சமைத்த உணவுபானங்கள் வழங்குவதற்காக தேசிய போட்டி ரீதியில் விலைமனுக்கோரல்

1. விளையாட்டுத்துறை மற்றும் இளைஞர் விவகார அமைச்சின் கீழ் நிர்வகிக்கப்படும் தம்புள்ள ஹோட்டல் பயிற்சிப் பாடசாலைக்கு 2024 பெப்ரவரி மாதம் 01ஆம் திகதி முதல் 2025 ஜனவரி மாதம் 31ஆம் திகதி வரையிலும் மற்றும் யக்கல அழகியற்கலை பயிற்சிப் பாடசாலைக்கு 2024 ஜனவரி மாதம் 01ஆம் திகதி முதல் 2024 டிசம்பர் 31ஆம் திகதி வரையில் சமைத்த உணவுபானங்கள் வழங்குவதற்காக இதற்கான வியாபாரப் பதிவைக் கொண்டுள்ள தகைமை வாய்ந்த உணவுபான வழங்குநர்களிடமிருந்து 2023-11-27ஆம் திகதி முதல் 2023-12-19ஆம் திகதி வரை இத்தால் விலைமனுக்கள் கோரப்படுகின்றன.

**அட்டவணை 01**

| தொ/ இல. | நிலையம் | ஒப்பந்த இலக்கம் | பயிலுநர்களின் எண்ணிக்கை | விலைக்கோரல் கட்டணம் ரூபா | விலைக்கோரல் பிணை முறி ரூபா | விலைக்கோரல் பிணை முறியின் செல்லுபடிக் காலம் |
|---|---|---|---|---|---|---|
| 01 | தம்புள்ள ஹோட்டல் பயிற்சிப் பாடசாலை | YC/2/4/2023/G/44 | 250 | 15,000.00 | 600,000.00 | 2023-12-19 2024-04-02 |
| 02 | யக்கல அழகியற்கலை பயிற்சிப் பாடசாலை | YC/2/4/2023/G/56 | 100 | 4,000.00 | 144,000.00 | 2023-12-19 2024-03-19 |

1. 2022-01-01ஆம் திகதிக்குப் பின்னர் பெற்றுக்கொள்ளப்பட்ட சமைத்த உணவுகள் வழங்குவது தொடர்பான, ஆகக் குறைந்தது ஒரு வருட அனுபவத்தை உறுதி செய்வதற்கு இயைபாக பெற்றுக்கொள்ளப்பட்ட ஆவணங்களின் புகைப்படப் பிரதிகள் விலைமனுதாரரினால் உண்மை பிரதியென அத்தாட்சிப்படுத்தப்பட்டு சமர்ப்பிக்கப்படல் வேண்டும்.

   விலைமனுக்களைச் சமர்ப்பிக்கும் போது சமைத்த உணவுபானங்கள் வழங்குவதற்கு இயைபான பதிவு உள்ளதென்பதை உறுதிப்படுத்துவதற்கான பின்வரும் ஆவணங்களில் ஒன்றை உண்மைப் பிரதியென உறுதி செய்யப்பட்ட புகைப்படப் பிரதியுடன் சமர்ப்பித்தல் வேண்டும்.

   i) பிரதேச செயலாளரிடமிருந்து பெற்றுக்கொள்ளப்பட்ட வியாபாரப் பதிவுச் சான்றிதழ்

   அல்லது

   ii) கம்பனிகள் பதிவாளர் திணைக்களத்திலிருந்து பெற்றுக்கொள்ளப்பட்ட கூட்டிணைப்புச் சான்றிதழ் மற்றும் அதன் சட்டவாக்கம் (Article Of Association)

2. தம்புள்ள ஹோட்டல் பயிற்சிப் பாடசாலை மற்றும் யக்கல அழகியற்கலை பயிற்சிப் பாடசாலைகளுக்கு சமைத்த உணவுபானங்களை வழங்குவதற்காக மேற்கூறப்பட்ட அட்டவணையில் 02ஆம் இலக்கத்தில் குறிப்பிடப்பட்டுள்ளதன் பிரகாரம் விலைக்கோரல் கட்டணத்தை தேசிய இளைஞர் படையணி கணக்கிடல் பிரிவின் சிறாப்பருக்கு செலுத்திப் பெற்றுக்கொண்ட பற்றுச்சீட்டை பெறுகைப் பிரிவிற்குச் சமர்ப்பித்து 2023-11-27ஆம் திகதி முதல் 2023-12-18ஆம் திகதி வரையான வேலை நாட்களில் மு.ப. 9.00 மணி முதல் பி.ப. 3.00 மணி வரையில் விலைமனுக்களைப் பெற்றுக்கொள்ளலாம்.
3. முத்திரைக் குறி பொறிக்கப்பட்ட விலைமனுக்களை 2023-12-19ஆம் திகதி மு.ப. 11.00 மணி அல்லது அதற்கு முன் கிடைக்கும் வகையில், தலைவர், திணைக்கள பெறுகைக் குழு (பிரதானம்), தேசிய இளைஞர் படையணி தலைமை அலுவலகம், இல. 420, பௌத்தாலோக்க மாவத்தை, கொழும்பு-07 எனும் முகவரிக்கு பதிவுத் தபாலில் அனுப்புதல் வேண்டும் அல்லது தேசிய இளைஞர் படையணி தலைமை அலுவலகத்தில் வைக்கப்பட்டுள்ள விலைமனுப் பெட்டியில் உள்ளிடுதல் வேண்டும். விலைமனுக்கள் 2023-12-19ஆம் திகதி மு.ப. 11.00 மணிக்கு திறக்கப்படும். இந்நிகழ்வில் நீங்கள் அல்லது உங்களது பிரதிநிதியொருவர் கலந்துகொள்ளலாம்.
4. 2023-12-19ஆம் திகதி மு.ப. 11.00 மணிக்குப் பின்னர் கிடைக்கப்பெறும் விலைமனுக்கள் அறிவிக்கப்படாமலேயே நிராகரிக்கப்படும்.
5. விலைமனுதாரரால் இலங்கை மத்திய வங்கியினால் அங்கீகரிக்கப்பட்ட வர்த்தக வங்கியொன்றில் மேற்கூறப்பட்ட 01ஆம் இலக்க அட்டவணையில் குறிப்பிடப்பட்டுள்ள பெறுமதிக்குச் சமனான வகையில் தலைவர், தேசிய இளைஞர் படையணி, இல. 420, பௌத்தாலோக்க மாவத்தை, கொழும்பு 07 எனும் பெயரில் பெற்று மேற்கூறப்பட்ட இரண்டு விடயங்களுக்காகவும் வெவ்வேறாக விலைக்கோரல் பிணை முறியைச் சமர்ப்பித்தல் வேண்டும்.
6. இது தொடர்பான முன்னோடிக் கலந்துரையாடல் 2023-12-08ஆம் திகதி தேசிய இளைஞர் படையணி தலைமையக கேட்போர் கூடத்தில் இடம்பெறும்.
7. விலைக்கோரல் ஆவணங்களை 2023-11-27ஆம் திகதி முதல் 2023-12-18ஆம் திகதி வரையான வேலை நாட்களில் மு.ப. 9.00 மணி முதல் பி.ப. 3.00 மணி வரையில் தேசிய இளைஞர் படையணி தலைமையக பெறுகைப் பிரிவில் இலவசமாகப் பரீட்சித்துப் பார்க்கலாம்.
8. இது தொடர்பான மேலதிக விசாரணைகள் தேவையானால் மேலதிகப் பணிப்பாளர் (நிர்வாகம் மற்றும் நிதி) சட்டத்தரணி ஆர். நிஷாந்த புஷ்பகுமார அவர்களை 011-2-690294 எனும் தொலைபேசி இலக்கத்தில் தொடர்பு கொள்ளலாம்.

**தலைவர்,**
**திணைக்கள பெறுகைக் குழு (பிரதானம்),**
**தேசிய இளைஞர் படையணி,**
**இல. 420, பௌத்தாலோக்க மாவத்தை,**
**கொழும்பு 07.**
**2023-11-27.**

# இளையோர் ஆசிய கிண்ண தொடருக்கு இலங்கையின் 15 பேர் குழாம் அறிவிப்பு

19 வயதுக்கு உட்பட்ட ஆசிய கிண்ண தொடருக்கான இலங்கை குழாம் அறிவிக்கப்பட்டுள்ளது.

இதில் றோயல் கல்லூரியின் சினத் ஜயவர்தன 15 பேர் கொண்ட குழாத்துக்கு அணித் தலைவராக நியமிக்கப்பட்டிருப்பதோடு உப தலைவராக மல்ஷ திருபத்தி தேர்வு செய்யப்பட்டுள்ளார். இதில் கொழும்பு பெனடிக்ட் கல்லூரியின் விக்கெட் காப்பு துடுப்பாட்ட வீரரான ஷருஜன் ஷன்முகநாதனும் அணியில் இடம்பெற்றுள்ளார்.

இலங்கை இளையோர் அணி கடந்த இரண்டு மாதங்களில் மேற்கிந்திய தீவுகள் மற்றும் பாகிஸ்தான் 19 வயதுக்கு உட்பட்ட அணிகளுக்கு எதிரான ஒருநாள் தொடர்களில் வெற்றியீட்டிய நிலையிலேயே ஆசிய கிண்ண போட்டிகளில் களமிறங்கவுள்ளது.

கடந்த செப்டெம்பரில் இலங்கையில் நடந்த மேற்கிந்திய தீவுகள் இளையோர் அணிக்கு எதிராக 2–1 என வெற்றியீட்டிய இலங்கை இளையோர்கள் கடந்த ஒக்டோபரில் பாகிஸ்தானுக்கு எதிரான ஒருநாள் தொடரை 3–2 என கைப்பற்றினர்.

இளையோர் ஆசிய கிண்ணத் தொடர் எதிர்வரும் டிசம்பர் 8 தொடக்கம் 17 வரை ஐக்கிய அரபு இராச்சியத்தில் நடைபெறவுள்ளது. இந்தத் தொடரில் எட்டு ஆசிய நாடுகள் போட்டியிடவுள்ளன. இந்தியா பாகிஸ்தான், ஆப்கானிஸ்தான், நேபாள அணிகள் ஆரம்ப சுற்றில் ஏ குழுவில் விளையாடவுள்ளன. குழு பி இல் இலங்கையுடன் பங்களாதேஷ், ஐக்கிய அரபு இராச்சியம் மற்றும் ஜப்பான் அணிகள் பங்கேற்கின்றன.

இலங்கை இளையோர் அணி எதிர்வரும் டிசம்பர் 9ஆம் திகதி டுபாயில் முதல் போட்டியில் ஜப்பான் அணியை எதிர்கொள்ளவுள்ளது. தொடர்ந்த டிசம்பர் 11 மற்றும் 13ஆம் திகதிகளில் முறையே ஐக்கிய அரபு இராச்சியம் மற்றும் பங்களாதேஷ் அணிகளை சந்திக்கும்.



எனினும் அறிவிக்கப்பட்டிருக்கும் இலங்கை இளையோர் குழாத்திற்கு விளையாட்டுத் துறை அமைச்சு இன்னும் ஒப்புதல் அளிக்கவில்லை. இந்தக் குழாம் தலைமை பயிற்சியாளர் ஜெஹான் முபாரக்கின் கீழ் பல்லேகலயில் தீவிர பயிற்சியில் ஈடுபட்டமை குறிப்பிடத்தக்கது.

இலங்கை இளையோர் குழாம்: சினெத் ஜயவர்தன (தலைவர்), மல்ஷ திருபத்தி (உப தலைவர்), புலிந்து பெரேரா, ருசந்த கமகே, ரவிஷன் நெத்சர, ஷருஜன் ஷன்முகநாதன், தினுர களுபஹன, விஷ்வ லஹிரு, கருக சங்கேத், விஷேன் ஹலம்பகே, ருவிஷன் பெரேரா, விஹாஸ் தெவ்மிக்க, துவிந்து ரணதுங்க, ஹிருன் கபுருபண்டார, தினுக்க தென்னகோன். மேலதிக வீரர்கள்: ஜனித் பெர்னாண்டோ, சுபுன் வாதுகே.

# ஓட்டமின்றி 8 விக்கெட்டுகள் வீழ்த்தி இந்து வீரர் சாதனை



இலங்கை பாடசாலை கிரிக்கெட் சங்கத்தின் 13 வயதுக்குட்பட்டோருக்கான இரண்டாம் கட்ட முதல்தர போட்டியில் கொழும்பு இந்துக் கல்லூரியின் மாணவன் செல்வசேகரன் ரிஷியுதன் அபாரமாக பந்துவீசி ஓட்டங்கள் எதனையும் வழங்காது 08 விக்கெட்டுகளை வீழ்த்தி பாடசாலை மட்டத்தில் சாதனைப் படைத்துள்ளார்.

கடந்த 24ஆம் திகதி கொழும்பு இந்துக் கல்லூரி மற்றும் பத்தரமுல்லை எம்.டி.எச். ஜயவர்தன மகா வித்தியாலயத்துக்கு இடையில் நடைபெற்ற போட்டிலேயே இந்த சாதனை நிகழ்த்தப்பட்டுள்ளது.

முல்லேரியா கிரிக்கெட் மைதானத்தில் நடைபெற்ற இந்தப் போட்டியில் முதலில் துடுப்பெடுத்தாட பணிக்கப்பட்ட இந்துக் கல்லூரி 9 விக்கெட் இழப்புக்கு 126 ஓட்டங்களை பெற்ற நிலையில் இன்னிங்ஸை இடைநிறுத்தியது. முதல் இன்னிங்ஸை ஆரம்பித்த எம்.டி.எச். ஜயவர்தன அணி 28 ஓட்டங்களுக்கே சுருண்டது. அபாரமாக பந்துவீசிய ரிஷியுதன் 9.4 ஓவர்களில் ஓட்டம் எதனையும் விட்டுக்கொடுக்காது 8 விக்கெட்டுகளை வீழ்த்தினார்.

முதல் இன்னிங்ஸில் முன்னிலை பெற்ற இந்து அணி போட்டியில் வெற்றியீட்டியது.

# பாடசாலைகள் கிரிக்கெட்டில் கல்முனை ஸாஹிறா வெற்றி

மாளிகைக்காடு குறூப் நிருபர்



இலங்கை பாடசாலைகள் கிரிக்கெட் சம்மேளனம் நடாத்தும் அகில இலங்கை பாடசாலைகளுக்கு இடையிலான 19 வயதுக்குட்பட்ட மூன்றாம் பிரிவு கடினப்பந்து கிரிக்கெட் சுற்றுப் போட்டியில் கல்முனை ஸாஹிறா தேசிய கல்லூரி அணி 8 விக்கெட்டுகளால் வெற்றியீட்டி 2ஆவது சுற்றுக்கு தெரிவானது.

மட்டக்களப்பு , கல்லடி, சிவானந்தா தேசிய பாடசாலை மைதானத்தில் கடந்த வியாழக்கிழமை (23) நடைபெற்ற இந்தப் போட்டியில் மட்டக்களப்பு புனித மைக்கல் கல்லூரியை எதிர்கொண்ட கல்முனை சாஹிறா எதிரணியை 92 ஓட்டங்களுக்கு மட்டுப்படுத்தியது.

தொடர்ந்த அந்த அணி 17 ஓவர்களில் 2 விக்கெட்டுகளை இழந்து வெற்றி இலக்கை எட்டியது.

## சர்வதேச செய்திகள்



# இழுபறிகளுடன் இஸ்ரேல்–ஹமாஸ் நான்கு நாள் போர் நிறுத்தம் நீடிப்பு

## மேற்குக் கரையில் ஆறு பலஸ்தீனர்கள் பலி

இஸ்ரேல் மற்றும் ஹமாஸ் இடையிலான கைதிகள் பரிமாற்ற உடன்படிக்கையில் தாமதத்திற்குப் பின் இரண்டாம் கட்டமாக 13 இஸ்ரேலியர்கள் உட்பட 17 பணயக்கைதிகளை ஹமாஸ் விடுவித்ததோடு பதிலாக இஸ்ரேல் 39 பலஸ்தீன கைதிகளை விடுவித்தது.

போர் நிறுத்தத்தை இஸ்ரேல் மீறியதாக ஹமாஸ் குற்றம்சாட்டிய நிலையில் கைதிகள் பரிமாற்றத்தில் பல மணி நேரம் தாமதம் ஏற்பட்டது. இதனைத் தொடர்ந்து கடந்த சனிக்கிழமை பிந்திய இரவிலேயே பணயக்கைதிகள் விடுவிக்கப்பட்டனர்.

கட்டாரின் மத்தியஸ்தத்தில் நான்கு நாள் போர் நிறுத்தம் எட்டப்பட்டதை அடுத்து முதலாவது கைதிகள் பரிமாற்றம் கடந்த வெள்ளிக்கிழமை எந்த சிக்கலும் இன்றி இடம்பெற்றது.

எனினும் வடக்கு காசாவுக்கு உதவிகள் செல்வதில் பிரச்சினை இருப்பதாகவும் பணயக்கைதிகளுக்கு பகரமாக விடுவிக்கப்படும் பலஸ்தீன கைதிகளை தேர்வு செய்யும் முறையில் சிக்கல் இருப்பதாகவும் ஹமாஸ் ஆயுதப் பிரிவான கஸ்ஸாம் படை குற்றம்சாட்டியது. எனினும் இந்த குற்றச்சாட்டை இஸ்ரேல் மறுத்தது.



கடந்த வெள்ளிக்கிழமை தொடக்கம் காசாவுக்கு மொத்தம் 340 உதவி ட்ரக் வண்டிகள் நுழைந்திருப்பதாகவும் ஆனால் வடக்கு காசாவை 65 வண்டிகள் மாத்திரமே அடைந்திருப்பதாகவும் ஹமாஸ் பேச்சாளர் ஒசாமா ஹம்தான் தெரிவித்தார். இது இஸ்ரேல் இணங்கியதில் பாதி எண்ணிக்கையானது என்று அவர் சுட்டிக் காட்டினார்.

எனினும் வடக்கு போர் வலயத்தில் இருப்பதாகவும் உதவி விநியோகத்திற்கு ஐ.நாவே பொறுப்பாக உள்ளது என்றும் இஸ்ரேல் பதிலளித்துள்ளது.

தொடர்ந்து இந்தப் பிரச்சினை தீர்க்கப்பட்டதாக கட்டார் வெளியிட்ட அறிவிப்பை ஹமாஸ் மூத்த அதிகாரி ஒருவர் உறுதி செய்துள்ளார்.

ஒன்றரை மாதங்கள் நீடித்த போருக்குப் பின்னரான முதல் போர் நிறுத்த உடன்படிக்கையின்படி நான்கு நாட்களில் 50 பெண்கள் மற்றும் சிறுவர்களாகிய இஸ்ரேலிய பணயக்கைதிகளை விடுக்கவும் பதிலாக 150 பலஸ்தீன கைதிகளை விடுவிக்கவும் இணக்கம் எட்டப்பட்டது.

தினசரி 10 பணயக்கைதிகள் விடுக்கப்பட்டால் இந்தப் போர் நிறுத்தம் நீடிக்கப்பட முடியும் என்று இஸ்ரேல் கூறியபோதும், இந்த உடன்படிக்கை தற்காலிகமானது என்றும் மீண்டும் போர் ஆரம்பிக்கப்படும் என்றும் அது உறுதியாகக் கூறி வருகிறது.

இந்நிலையில் கடந்த சனிக்கிழமை இரவு காசாவில் இருந்து அனுப்பப்பட்ட பணயக்கைதிகள் ரபா எல்லையைத் தாண்டி எகிப்துக்கு அழைத்து வரப்பட்டு அங்கு சர்வதேச செம்பிறை சங்கத்திடம் கையளிக்கப்பட்டனர்.

இவ்வாறு விடுவிக்கப்பட்ட 13 இஸ்ரேலியர்களில் ஆறு பெண்கள் மற்றும் ஏழு சிறுவர்கள் மற்றும் பதின்ம வயதினர் உள்ளனர்.

'விடுவிக்கப்பட்ட பயணக்கைதிகள் இஸ்ரேலில் மருத்துவமனைக்கு அனுப்பப்பட்டு தொடர்ந்து குடும்பத்தினருடன் இணைக்கப்படுவார்கள்' என்று இஸ்ரேல் இராணுவம் வெளியிட்ட அறிவிப்பில் குறிப்பிடப்பட்டுள்ளது.

மறுபுறம் இஸ்ரேல் விடுவித்த 39 பலஸ்தீனர்களில் ஆறு பெண்கள் மற்றும் 33 சிறுவர்கள் அடங்குகின்றனர். இவர்களில் சிலர் ரமல்லாவில் உள்ள அல் பிரா மாநகர சதுக்கத்திற்கு வருகை தந்தபோது அவர்களை அங்கு கூடியிருந்த ஆயிரக்கணகானவர்கள் வரவேற்றனர்.

இவ்வாறு விடுவிக்கப்பட்டவர்களில் ஒருவரான 23 வயது நுர்ஹான் அவாத் என்ற பெண் ஜெருசலத்தில் கத்திக்குத்து தாக்குதல் நடத்திய சந்தேகத்தில் 2015 ஆம் ஆண்டு கைது செய்யப்பட்டவராவார். அவருக்கு விதிக்கப்பட்ட 10 ஆண்டு சிறைத் தண்டனையில் எட்டு ஆண்டுகள் சிறை அனுபவித்திருந்தார்.

அதேபோன்று இஸ்ரா ஜாபிஸ் என்ற பெண்ணும் 2015 தொடக்கம் சிறை அனுபவித்தவராவார். அவரது கார் வண்டி மேற்குக் கரை சோதனைச்சாவடி ஒன்றில் இருந்து 1.5 கிலோ மீற்றர் தொலைவில் நெடுஞ்சாலை ஒன்றில் உடைந்தது. அப்போது அவர் கார் குண்டு தாக்குதலுக்கு முயன்றதாக இஸ்ரேல் குற்றம்சாட்டினாலும் அந்தக் கூற்று முரண்பாட்டுக்கு உரியதாக இருந்தது.

தவிர தாய்லாந்தைச் சேர்ந்த நான்கு பணயக் கைதிகள் ஹமாஸ் போராளிகளால் தனியாக விடுவிக்கப்பட்டனர்.



கடந்த ஒக்டோபர் 7 ஆம் திகதி இஸ்ரேலுக்குள் ஊடுருவி ஹமாஸ் நடத்திய தாக்குதலில் 1200 பேர் கொல்லப்பட்டு 240 பேர் வரை பணயக்கைதிகளாக கடத்திச் செல்லப்பட்டதை அடுத்து இஸ்ரேல், காசா மீது இடைவிடாது நடத்திய தாக்குதல்களில் 14,800க்கும் அதிகமானவர்கள் கொல்லப்பட்டனர். இதில் 40 வீதத்திற்கும் அதிகமானவர்கள் சிறுவர்களாவர்.

போர் நிறுத்தம் அமுலுக்கு வந்த நிலையிலும் வடக்கு காசாவுக்குச் செல்ல முயன்ற பலஸ்தீனர்கள் மீது இஸ்ரேல் இராணுவம் கடந்த வெள்ளிக்கிழமை நடத்திய தாக்குதலில் குறைந்தது இரு பலஸ்தீனர்கள் கொல்லப்பட்டதோடு 11 பேர் வரை காயமடைந்தனர்.

போர் நிறுத்தத்தை அடுத்து காசாவில் பெரும் எண்ணிக்கையான மக்கள் தமது வீடுகளுக்கு திரும்ப முயன்றபோதும் வடக்கு காசாவுக்கு மக்கள் திரும்புவதை இஸ்ரேல் தடுத்து வருகிறது.

இதேவேளை இஸ்ரேலிய துருப்புகள் ஆக்கிரமிக்கப்பட்ட மேற்குக் கரையில் நடத்திய சுற்றிவளைப்பு தேடுதல்களில் ஒரு சிறுவன் உட்பட ஆறு பலஸ்தீனர்கள் கொல்லப்பட்டதாக பலஸ்தீன சுகாதார அமைச்சு தெரிவித்துள்ளது. இதன்படி காசாவில் போர் வெடித்த ஒக்டோபர் 7 ஆம் திகதி தொடக்கம் மேற்குக் கரையில் கொல்லப்பட்ட பலஸ்தீனர்கள் எண்ணிக்கை 239 ஆக உயர்ந்துள்ளது.

கடந்த சனிக்கிழமை இரவு, ஞாயிறு காலையில் ஜெனின் நகரில் ஐந்து பலஸ்தீனர்களை சுட்டுக் கொன்ற இஸ்ரேல், நப்லுஸ் நகருக்கு அருகில் இருக்கும் யத்மா கிராமத்தில் மற்றொரு பலஸ்தீனரை கொன்றதாக அமைச்சு தெரிவித்துள்ளது. ஜெனினில் இடம்பெற்ற சுற்றிவளைப்பில் மேலும் ஆறு பலஸ்தீனர்கள் காயமடைந்துள்ளனர்.

பல முனைகளாலும் ஜெனின் நகருக்குள் நுழைந்த இஸ்ரேலிய இராணுவம் துப்பாக்கிச் சூடுகளை நடத்தி அரச மருத்துவமனைகள் மற்றும் செம்பிறை சங்க தலைமையகத்தை சுற்றிவளைத்ததாக பலஸ்தீன செய்தி நிறுவனமான வபா தெரிவித்தது.

# உலகின் மிகப்பெரிய பனிப்பாறை வேகமாக நகருவதால் அச்சுறுத்தல்



நியூயோர்க் மாநகரை விட மூன்று மடங்கு பெரிய பனிப்பாறை ஒன்று அண்டார்டிகாவில் இருந்து பிரிந்துள்ளதாக விஞ்ஞானிகள் தெரிவித்துள்ளனர். உலகின் மிகப்பெரிய பனிப்பாறையால் தெற்கு ஜோர்ஜியா தீவில் பாதிப்பு ஏற்படலாம் என்றும் விஞ்ஞானிகள் அச்சம் தெரிவித்துள்ளனர்.

1986ஆம் ஆண்டு அண்டார்டிகாவில் இருந்து பிரிந்த உலகின் மிகப் பெரிய பனிப்பாறையான ஏ23 ஏ 30 ஆண்டுகளின் பின் முதல் முறை நகர ஆரம்பித்துள்ளது.

சுமார் ஒரு டிரில்லியன் மெட்ரிக் தொன் எடையுள்ள இந்த பாறையானது, பலத்த காற்று மற்றும் நீரோட்டங்களின் உதவியால், அண்டார்டிக் தீபகற்பத்தின் வடக்கு முனையை கடந்து வேகமாக நகர்ந்து வருகிறது. அண்மையில் எடுக்கப்பட்ட செயற்கைக்கோள் படங்களும் பனிப்பாறை நகர்வதை உறுதி செய்துள்ளது.

பிரிட்டிஷ் அண்டார்டிக் சர்வே, பனிப்பாறை நிபுணர் ஒலிவர் மார்ஷ் கூறும் போது, "உலகின் மிகப்பெரிய அளவில் உள்ள இந்த பனிப்பாறையை நகர்த்தும்போது, அதனை பார்ப்பது அரிது. எனவே விஞ்ஞானிகள் அதன் பாதையை உன்னிப்பாகக் கவனித்தது வருகிறார்கள்" என்றார்.

இந்த இராட்சத பாறை சற்று ஆவியாகி உள்ளதால், எடை குறைந்து காற்று மற்றும் கடல் நீரோட்டம் குறைந்து அட்லாண்டிக் பெருங்கடலின் தெற்கு நோக்கி நகர்கிறது. இது தெற்கு ஜோர்ஜியா தீவினை நோக்கி நகர்ந்து வருகிறது.

அந்த தீவினை இந்தப் பனிப்பாறை சென்றால், அண்டார்டிகாவின் வனவிலங்குகளுக்கு சிக்கலை ஏற்படுத்தும். பல்லாயிரம் உயிரினங்கள், பென்குயின்கள் மற்றும் கடற்பறவைகளுக்கு பாதிப்பு ஏற்படும் வாய்ப்பு உள்ளது என்றும் அவர் எச்சரித்துள்ளார்.

# இஸ்ரேலிய கப்பலின் மீது ஆளில்லா வான் தாக்குதல்




இஸ்ரேலிய வர்த்தகர் ஒருவருக்கு சொந்தமான கொள்கலன் கப்பல் ஒன்றின் மீது இந்திய பெருங்கடலில் வைத்து ஆளில்லா வான் தாக்குதல் ஒன்று நடத்தப்பட்டிருப்பதாக அமெரிக்க பாதுகாப்பு அதிகாரி ஒருவர் தெரிவித்துள்ளார்.

ஈரான் தயாரிப்பு ஷஹித் 136 ஆளில்லா விமானம் மூலம் கடந்த வெள்ளிக்கிழமை இந்த தாக்குதல் நடத்தப்பட்டிருப்பதாக பெயரை வெளியிடாத அந்த அதிகாரி தெரிவித்துள்ளார். மோல்டா கொடியுடன் பிரான்ஸில் இயக்கப்படும் கப்பால் மீதே சர்வதேச கடல் பகுதியில் இந்தத் தாக்குதல் இடம்பெற்றுள்ளது. இதனால் கப்பலுக்கு சேதம் ஏற்பட்டபோதும் அதில் இருக்கும் பணியாளர்களுக்கு பாதிப்பு ஏற்படவில்லை.

எனினும் இது தொடர்பில் ஈரான் தரப்பில் இருந்து எந்த பதிலும் அளிக்கப்படவில்லை.

ஏற்கனவே இஸ்ரேல் வர்த்தகர் ஒருவருக்கு சொந்தமான கப்பல் ஒன்றை ஈரான் ஆதரவு யெமன் ஹூத்தி கிளர்ச்சியாளர்கள் கடத்திச் சென்றமை குறிப்பிடத்தக்கது.

இப்பத்திரிகை அஸோஸியேட்டட் நியூஸ் பேப்பர்ஸ் ஒப் சிலோன் லிமிடட் கம்பனியரால் கொழும்பு இல. 35, டி ஆர். விஜயவர்தன மாவத்தையிலுள்ள லேக் ஹவுஸில் 2023 நவம்பர் மாதம் 27ம் திகதி திங்கட்கிழமை அச்சிட்டுப் பிரசுரிக்கப்பட்டது.

தினகரன்
THINAKARAN
තිනකරන්

# கேள்வி மற்றும் ஏனைய விளம்பரங்கள்

සියපත ෆිනෑන්ස්
சியபத பினான்ஸ்
Siyapatha Finance
(Finance Company of Sampath Bank Group)

## மீட்கப்படாத தங்க நகைகளை ஏலத்தில் விற்பனை செய்தல்

சியபத பினான்ஸின் கீழ்க்காணும் கிளை மத்தியஸ்தானங்களில் 2023 ஜுலை 31ம் திகதி வரை அடகுவைக்கப்பட்டு இதுவரை மீட்கபடாத தங்க நகைகள் கீழ்க்குறிப்பிட்ட திகதியில் போது ஏலத்தில் விற்பனை செய்யப்படும்.

ஏலவிற்பனை 2023 டிசம்பர் 14ம் திகதி மு.ப 9.30க்கு நடைபெறும்.

| கிளை / மத்தியஸ்தானம் | மீட்கப்பட வேண்டிய கால எல்லை | ஏலவிற்பனை நடைபெறும் இடம் |
|---|---|---|
| கண்டி-கட்டுகஸ்தோட்ட, மாத்தறை, அம்பாறை, நுவரெலிய, நீர்க்கொழும்பு, குருணாகலை, பேலியகொட, நுகேகொட, சாய்ந்தமருது, அநுராதபுரம், இரத்தினபுரி, கேகாலை, குளியாபிட்டிய, வவுனியா, குருணாகலை-நகர், கண்டி - கந்த வீதிஇ , கல்முனை, அவிஸ்சாவெல்ல, மட்டக்களப்பு, கம்பஹா, களுத்தறை, திருகோணமலை, வெள்ளவத்தை, காலி, பாணதுறை, கிரிபத்கொட, மஹரகம, வத்தளை, ஹட்டன், பிலியந்தல, சிலாபம், மொரட்டுவ, புறக்கோட்டை , யாழ்ப்பாணம், கொஹுவல நிட்டம்புவ, மாலபே. மாத்தளை, தம்புள்ளை, நவம் மாவத்தை, பொலன்னறுவை மற்றும் கிளிநொச்சி, புத்தளம் | 2023 ஜுலை 31ம் திகதிக்கு முன் மீட்கபடாத தங்க நகைகள் | சியபத பினான்ஸ், தலைமை காரியாலயம், இல 111, டட்லி சேனாநாயக்க மாவத்தை, கொழும்பு 08 |

ஏலவிற்பனையை நிராகரித்தல், பிற்போடுதல் மற்றும் வேறொரு கிளையுடன் ஒன்றிணைந்து நடாத்துதல் ஆகிய உரிமைகள் சியபத பினான்ஸ் பி.எல்.சி வசம் உள்ளன.

பதிவு இலக்கம்: PB 917PQ

தலைமை அதிகாரி
சியபத பினான்ஸ் பீஎல்சீ
இல 111, டட்லி சேனாநாயக்க
மாவத்தை, கொழும்பு 08
0117 605 605

## இலங்கை வங்கி

### ஏலவிற்பனை அறிவித்தல்

1968 ஆம் ஆண்டு 34 ஆம் இலக்கச் சட்டத்தாலும் 1974 ஆம் ஆண்டு 10 ஆம் இலக்க அதிகாரச் சட்டத்தாலும் திருத்தப்பட்டவாறு இலங்கை வங்கி கட்டளைச்சட்டம் 21 ஆம் பிரிவின் (397 ஆம் அத்தியாயம்) கீழ் வெளியிடப்படும் அறிவித்தல்.

2023.10.18 இல் நடைபெற்ற இலங்கை வங்கி பணிப்பாளர் சபைக் கூட்டத்தில் விஷேடமாகவும் ஏகமனதாகவும் தீர்மானித்ததாவது,

1. பிரசித்த நொத்தாரிசு திருமதி. டீ.எம்.என்.எஸ். திசாநாயக்க அத்தாட்சிப்படுத்திய 2017.06.12 திகதியிட்ட ஈட்டு முறி இல. 350 மற்றும் 2018.11.13 திகதியிட்ட ஈட்டுமுறி இல. 863 ஆகியவற்றின் பேரில் வெள்ளவாய, நுகயாய, திஸ்ஸ றோட், M/s பிரியந்த குஷன் வேர்க்ஸிடமிருந்து கடன் வசதி மீது 2023.10.12 இல் உள்ளவாறு ரூ. 25,000,907.63 (இருபத்தைந்து மில்லியன் தொள்ளாயிரத்து ஏழு ரூபாய் அறுபத்து மூன்று சதமும்) அத்துடன் நிலுவை முதல் ரூ. 19,722,000.00 (பத்தொன்பது மில்லியன் எழுநூற்று இருபத்திரெண்டு ஆயிரம் ரூபாய் மீது ஆண்டுக்கு பதின்மூன்று தசம் ஐந்து (13.5%) வீதத்தில் 2023.10.13 தொடக்கம் வட்டியும் வங்கிக்கு வருமதியாக உள்ளதாலும்,
2. மேற்குறிப்பிட்ட பிரசித்த நொத்தாரிசு திருமதி டீ.எம்.என்.எஸ். திசாநாயக்க அத்தாட்சிப்படுத்திய 2017.06.12 திகதியிட்ட ஈட்டு முறி இல. 350 மற்றும் 2018.11.13 திகதியிட்ட ஈட்டுமுறி இல. 863 ஆகியவற்றின் பேரில் வருமதியாக உள்ள மேற்குறிப்பிட்ட ரூ. 25,000,907.63 (இருபத்தைந்து மில்லியன் தொள்ளாயிரத்து ஏழு ரூபாய் அறுபத்து மூன்று சதமும்) அத்துடன் 2023.10.13 தொடக்கம் மேற்குறிப்பிட்டவாறு வட்டியும், இலங்கை வங்கி கட்டளைச்சட்டம் 26 ஆம் பிரிவின் கீழ் அறவிடவேண்டிய செலவுகள் மற்றும் பணங்களையும் அறவிடும் பொருட்டு இலங்கை வங்கிக்கு ஈடுவைத்த இங்கு கீழ் அட்டவணையில் விபரித்த சொத்தை இலங்கை வங்கி கட்டளைச்சட்டம் 19 ஆம் பிரிவு (397 ஆம் அத்தியாயம்) மற்றும் அதன் திருத்தங்களுக்கமைய பகிரங்க ஏலத்தில் விற்பதற்கு இல. 50/3 விஹார மாவத்தை, கொலன்னாவை என்னும் முகவரியைச் சேர்ந்த T &.H. ஒக்ஷன் நிறுவனத்தின் ஏலதாரர் திரு. துசித்த கருணாரத்னவுக்கும், மேற்கூறிய இலங்கை வங்கி கட்டளைச்சட்டத்தின் பிரிவு 21ற்கமைய இத்தீர்மானத்தின் அறிவித்தலை வெளியிடுவதற்கு இலங்கை வங்கி வெள்ளவாயக் கிளை, கிளை முகாமையாளருக்கும் இத்தால் அனுமதியும் அதிகாரமும் வழங்கப்படுகின்றது.

   (இலங்கை வங்கிப் பணிப்பாளர் சபைக் கூட்டத்தில் விஷேடமாகவும் ஏகமனதாகவும் தீர்மானித்ததன் பின்னர் 14.11.2023 வரை ரூபா 3,001,878.15 (மூன்று மில்லியன் ஆயிரத்து எண்ணூற்று எழுபத்தெட்டு ரூபா பதினைந்து சதம்) வாடிக்கையாளர் வைப்புச் செய்துள்ளார்.)

**ஈட்டுமுறியில் குறிப்பிட்ட அட்டவணை.**

ஊவா மாகாணம் மொனராகலை மாவட்டத்தில் வெள்ளவாய பிரதேச சபை எல்லைகளுள் மற்றும் பிரதேச செயலாளர் பிரிவில் வெள்ளவாய கோரளையில் நுகயாய கிராம சேவகர் பிரிவில் நுகயாய கிராமத்தில் அமைந்த அரசாங்க காணி பிரிக்கப்பட்ட எல்லை நிர்ணயித்த காணித்துண்டு உத்தரவுபெற்ற நில அளவையாளர் எல்.கே. குணசேகர தயாரித்த 2003.11.13 திகதியிட்ட வரைபடம் இல. 4115 இல் காணித்துண்டு 01 என விபரித்த மேற்குறிப்பிட்ட காணி, வடக்கில் உத்தரவுபெற்ற நில அளவையாளர் எல்.கே. குணசேகர தயாரித்த வரைபடம் இல. 4113 உம், கிழக்கில் இக் காணியின் மீதிப்பாகமும், தெற்கில் இக்காணியின் மீதிப்பாகமும் மேற்கில் பிரதான பாதைக்கான ஒதுக்கமும் எல்லைகளாகக் கொண்டு ஒரு றூட் (ஏ.0, றூ.1, பே.0) அல்லது ஹெக்டெயர் பூச்சியம் ஒன்று பூச்சியம் ஒன்று (ஹெக்.0.101) விஸ்தீரணமுடைய காணியும் அங்கு காணப்படும் சகலதும் ஆகும். இக்காணி மொனராகலை மாவட்ட காணிப்பதிவகத்தில் LDO/P20/122 இல் பதிவு செய்யப்பட்டுள்ளது.

**ஒதுக்கங்கள்:**

1. இக்காணியில் அல்லது அதனகத்தே காணப்படும் கனிமங்கள் (இவ்வனுமதியில் விலைமதிப்புள்ள கல் எனக் குறிப்பிடப்படும்) அனைத்தினதும் உரிமையும் அத்தகையவற்றை தோண்டுவதற்கும், தேடுவதற்கும், அங்கு பணியாற்றுவதற்கும் மற்றும் எடுத்துச் செல்வதற்குமான உரிமையும் அரசுக்கே உரியதாகும்.
2. காணி உரிமையாளருக்கு காணி மீதுள்ள உரிமையானது இவ்வனுமதித் திகதியில் தற்போதுள்ள எந்தவொரு வழியுரிமைக்கும் அல்லது பிற சேவக உரிமைக்கும் உட்பட்டதாகும்.

**நிபந்தனைகள்:**

1. உரிமையாளர் மேட்டு நிலத்தில் .......... இங்கு குறிப்பிடப்பட்டுள்ள துணைப்பிரிவின் அலகினை விட பரப்பளவில் குறைவான இக்காணியின் பிரிக்கப்பட்ட பங்கொன்றினை விற்பனை செய்யலாகாது.
2. உரிமையாளர் இங்கு குறிப்பிடப்பட்டுள்ள குறைந்தபட்சப் பகுதியை விடக் குறைவான பங்கின் அதாவது பிரிக்கப்படாத பங்கினை விற்பனை செய்யக்கூடாது.
3. நிபந்தனை 1 இல் குறிப்பிடப்பட்டுள்ள துணைப்பிரிவின் அலகினை விட பரப்பளவில் குறைவான பிரிக்கப்பட்ட பங்கொன்றிற்கு எந்தவொரு நபரும் உரிமையாளராக முடியாது.
4. நிபந்தனை 2 இல் குறிப்பிடப்பட்டுள்ள இக்காணியின் குறைந்தபட்சப் பகுதியை விடக் குறைவான பிரிக்கப்படாத பங்கொன்றிற்கு எந்தவொரு நபரையும் உரிமையாளராக்க முடியாது.
5. இக்காணியோ அல்லது அதன் எந்தவொரு பகுதியோ நீர்ப்பாய்ச்சத்தகு பிரதேசமாகவிருப்பின் அல்லது ஏற்கனவே கட்டுமானத்தின்போது கட்டப்பட்ட அல்லது இனிமேல் கட்டப்படவிருக்கும் நீர்ப்பாசனப் பணியின்போது நீர்ப்பாசனத்திற்கு உட்படுமாயின், உரிமையாளர் நீர்ப்பாசனப் பகுதியைப் பொறுத்து நீர்ப்பாசனக் கட்டளைச்சட்டம் (அத்தியாயம் 453) ஏற்பாடுகளுக்கும் அதன் கீழ் உருவாக்கப்பட்ட விதிகளுக்கும் இணங்க வேண்டும்.
6. அரச முகவரின் எழுத்திலான அனுமதியையும் உரிய அதிகார சபையிடம் உரிமத்தினையும் எழுத்துமூலம் பெற்றாலே ஒழிய உரிமையாளர் இக்காணியில் அல்லது அதன் உள்ளிருக்கும் கனிமங்களைத் தோண்டவோ தேடவோ எடுக்கவோ உபயோகப்படுத்தவோ விற்கவோ இன்றேல் அப்புறப்படுத்தவோ கூடாது.
7. பிரதேச செயலாளரின் எழுத்துமூலமான முன் அனுமதியின்றி காணியினது அல்லது அதன் எந்தவொரு பகுதியையும் கைமாற்றலாகாது.

**இலங்கை வங்கிப் பணிப்பாளர் சபையின் கட்டளைப்படி**
**திரு. D.M.K.B திசாநாயக்க**
**கிளை முகாமையாளர்**
**இலங்கை வங்கி**
**வெள்ளவாயக் கிளை**

1975 BOC CALL CENTRE www.boc.lk
A (lka) Fitch ரேட்டிங், AAA Brand Finance ரேட்டிங்.
இலங்கை வங்கி இலங்கை மத்திய வங்கியினால் கண்காணிக்கப்படும் உரிமம் பெற்ற வணிக வங்கியாகும்
தலைமை அலுவலகம், BOC சதுக்கம், இல.1, இலங்கை வங்கி மாவத்தை, கொழும்பு 1.
இலங்கை வங்கி BOC தேசத்தின் வங்கியாளர்

## மீட்கப்படாத அடகுத் தங்க நகைகளின் ஏல விற்பனை

மக்கள் வங்கியின் அடகுப் பிரதிநிதிகளாக வரையறுக்கப்பட்ட ஹெலியகொட பலநோக்கு கூட்டுறவுச் சங்கம்.

| | |
|---|---|
| 01. எஹலியகொட | 07. பத்பேரிய |
| 02. போபெத்த | 08. பொஹொரபாவ |
| 03. மாரம்பே | 09. களுஅதுர |
| 04. மாடுவகல | 10. திக்தெனிய |
| 05. புஸ்செல்ல | 11. மின்னான |
| 06. கெட்டஹெத்த | 12. ஏ/பஹலகல |

கிராமிய வங்கிகளில் 2022.06.30ம் திகதிக்கு (30திகதியுடன் உள்ளடங்கலாக) முன் அடகு வைத்து 2023 டிசம்பர் 09 சனி முற்பகல் 9.00 இற்கு முன் மீட்கப்படாத சகல அடகு தங்க நகைகளும் 2023.12.09 மு.ப. 9.00 இற்கு ஹெலியகொட கூட்டுறவு சங்கத் தலைமையக வளாகத்தில் பகிரங்க ஏலத்தில் விற்கப்படும்.

**பொது முகாமையாளர்,**
**வ/ப எஹலியகொட பலநோக்கு கூட்டுறவு சங்கம்**
**எஹலிகொட.**
**2023.11.22**

தொ.பே : 036-2258216
036-2258932
036-2256025

## இலங்கை வங்கி

1968 ஆம் ஆண்டு 34 ஆம் இலக்கச் சட்டத்தாலும் 1974 ஆம் ஆண்டு 10 ஆம் இலக்க அதிகாரச் சட்டத்தாலும் திருத்தப்பட்டவாறு இலங்கை வங்கி கட்டளைச்சட்டம் 21 ஆம் பிரிவின் (397 ஆம் அத்தியாயம்) கீழ் வெளியிடப்படும் அறிவித்தல்.

2023.11.08 இல் நடைபெற்ற இலங்கை வங்கி பணிப்பாளர் சபை கூட்டத்தில் விஷேடமாகவும் ஏகமனதாகவும் தீர்மானித்ததாவது,

1. பிரசித்த நொத்தாரிசு பொவிதந்திரி குஞ்சனா ரண்சிமாலி காரியவசம் அத்தாட்சிப்படுத்திய 2015.01.26 திகதியிட்ட ஈட்டு முறி இல. 334, பிரசித்த நொத்தாரிசு பொவிதந்திரி குஞ்சனா ரண்சிமாலி காரியவசம் அத்தாட்சிப்படுத்திய 2018.03.27 திகதியிட்ட ஈட்டு முறி இல. 1596, பிரசித்த நொத்தாரிசு பொவிதந்திரி குஞ்சனா ரண்சிமாலி காரியவசம் அத்தாட்சிப்படுத்திய 2018.03.27 திகதியிட்ட ஈட்டு முறி இல. 1599 ஆகியவற்றின் பேரில் அம்பலந்தோட்டை, ஹம்பாந்தோட்டை வீதி, சுபிரின்டன்கம இல. 197/A என்னும் முகவரியில் அமைந்த பரணமான ரைஸ் மில் அன்ட் அக்ரோ கெமிகல் (பிரைவேற்) லிமிடெற் ஏக உரிமையாளர் திரு. சமிந்த பரணமான என்பவரிடமிருந்து BOC SPL Credit line – தொழில் முயற்சிக் கடன் மீது 2023.10.05 வரை வருமதியாக உள்ள முதலும் வட்டியும் ரூ. 5,569,988.55 (ஐந்து மில்லியன் ஐந்நூற்று அறுபத்தொன்பது ஆயிரத்து தொள்ளாயிரத்து எண்பத்தெட்டு ரூபாய் ஐம்பத்தைந்து சதம்) அத்துடன் ரூ. 3,199,000.00 ( மூன்று மில்லியன் நூற்றுத் தொண்ணூற்றொன்பது ஆயிரம் ரூபாய்) மீது ஆண்டுக்கு பதினாறு தசம் ஒன்பது ஆறு (16.96%) வீதத்தில் 2023.10.06 தொடக்கம் கொடுப்பனவுத் திகதி வரை மேலும் வட்டியும், மற்றும் நிரந்தர மேலதிகப்பற்று மீது 2023.10.05 வரை வருமதியாக உள்ள முதலும் வட்டியும் ரூ. 3,604,356.16 (மூன்று மில்லியன் அறுநூற்று நான்கு ஆயிரத்து முந்நூற்று ஐம்பத்தாறு ரூபாய் பதினாறு சதம்) அத்துடன் ரூ. 2,000,000.00 (இரண்டு மில்லியன் ரூபாய்) மீது ஆண்டுக்கு இருபத்தாறு தசம் இரண்டு ஐந்து (26.25%) வீதத்தில் 2023.10.06 தொடக்கம் கொடுப்பனவுத் திகதி வரை மேலும் வட்டியும், அடகுக்கடன் மீது 2023.10.05 வரை வருமதியாக உள்ள முதலும் வட்டியும் ரூ. 6,848,619.08 (ஆறு மில்லியன் எண்ணூற்று நாற்பத்தெட்டு ஆயிரத்து அறுநூற்றுப் பத்தொன்பது ரூபாய் எட்டு சதமும்) அத்துடன் ரூ. 4,000,000.00 (நான்கு மில்லியன் ரூபாய்) மீது ஆண்டுக்கு பதினொரு (11%) வீதத்தில் 2023.10.06 தொடக்கம் கொடுப்பனவுத் திகதி வரை மேலும் வட்டியும் ஜய இசுர கடன் மீது 2023.10.05 வரை வருமதியாக உள்ள முதலும் வட்டியும் ரூ.51,197,619.21 (ஐம்பத்தொரு மில்லியன் நூற்று தொண்ணூற்றேழு ஆயிரத்து அறுநூற்றுப் பத்தொன்பது ரூபாய் இருபத்தொரு சதமும்) அத்துடன் ரூ.30,215,694.90 (முப்பது மில்லியன் இருநூற்றுப் பதினைந்து ஆயிரத்து அறுநூற்றுத் தொண்ணூற்று நான்கு ரூபாய் தொண்ணூறு சதம்) மீது ஆண்டுக்கு பதின்மூன்று தசம் ஐந்து (13.5%) வீதத்தில் 2023.10.06 தொடக்கம் கொடுப்பனவுத் திகதி வரை மேலும் வட்டியும் வங்கிக்கு வருமதியாக உள்ளதாலும்,
2. 1. பிரசித்த நொத்தாரிசு பொவிதந்திரி குஞ்சனா ரண்சிமாலி காரியவசம் அத்தாட்சிப்படுத்திய 2015.01.26 திகதியிட்ட ஈட்டு முறி இல. 334, பிரசித்த நொத்தாரிசு பொவிதந்திரி குஞ்சனா ரண்சிமாலி காரியவசம் அத்தாட்சிப்படுத்திய 2018.03.27 திகதியிட்ட ஈட்டு முறி இல. 1596, பிரசித்த நொத்தாரிசு பொவிதந்திரி குஞ்சனா ரண்சிமாலி காரியவசம் அத்தாட்சிப்படுத்திய 2018.03.27 திகதியிட்ட ஈட்டு முறி இல. 1599 ஆகியவற்றின் பேரில் BOC SPL Credit line – தொழில் முயற்சிக் கடன் மீது 2023.10.05 ரூ. 5,569,988.55 (ஐந்து மில்லியன் ஐந்நூற்று அறுபத்தொன்பது ஆயிரத்து தொள்ளாயிரத்து எண்பத்தெட்டு ரூபாய் ஐம்பத்தைந்து சதம்) மற்றும் நிரந்தர மேலதிகப்பற்று மீது ரூ. 3,604,356.16 (மூன்று மில்லியன் அறுநூற்று நான்கு ஆயிரத்து முந்நூற்று ஐம்பத்தாறு ரூபாய் பதினாறு சதம்) அடகுக்கடன் கடன் மீது 2023.10.05 வரை வருமதியாக உள்ள முதலும் வட்டியும் ரூ. 6,848,619.08 (ஆறு மில்லியன் எண்ணூற்று நாற்பத்தெட்டு ஆயிரத்து அறுநூற்றுப் பத்தொன்பது ரூபாய் எட்டு சதமும்) ஜய இசுரு கடன் ரூ. 51,197,619.21 (ஐம்பத்தொரு மில்லியன் நூற்று தொண்ணூற்றேழு ஆயிரத்து அறுநூற்றுப் பத்தொன்பது ரூபாய் இருபத்தொரு சதமும்) 2023.10.06 தொடக்கம் விற்பனைத் திகதி வரை மேற்குறிப்பிட்டவாறு மேலும் வட்டியும் அத்துடன் இலங்கை வங்கி கட்டளைச்சட்டம் 26 ஆம் பிரிவின் கீழ் அறவிடவேண்டிய செலவுகள் மற்றும் பணங்களையும் அறவிடும் பொருட்டு இலங்கை வங்கிக்கு ஈடுவைத்த இங்கு கீழ் அட்டவணையில் விபரித்த சொத்தை இலங்கை வங்கி கட்டளைச்சட்டம் 19 ஆம் பிரிவு (397 ஆம் அத்தியாயம்) மற்றும் அதன் திருத்தங்களுக்கமைய பகிரங்க ஏலத்தில் விற்பதற்கு இல. 182/3 (50/3) விஹார மாவத்தை, கொலன்னாவை என்னும் முகவரியைச் சேர்ந்த T&.H. ஒக்ஷன் நிறுவனத்தின் ஏலதாரர் திரு. துசித்த கருணாரத்னவுக்கும், மேற்கூறிய இலங்கை வங்கி கட்டளைச்சட்டத்தின் பிரிவு 21ற்கமைய இத்தீர்மானத்தின் அறிவித்தலை வெளியிடுவதற்கு இலங்கை வங்கி அம்பலந்தோட்டை கிளை முகாமையாளருக்கும் இத்தால் அனுமதியும் அதிகாரமும் வழங்கப்படுகின்றது.

**மேற்குறிப்பிட்ட அட்டவணை**

தென் மாகாணம் ஹம்பாந்தோட்டை மாவட்டத்தில் கிருவபற்று கிழக்கில் ஹம்பாந்தோட்டை பிரதேச செயலாளர் பிரிவு மற்றும் பிரதேச சபை எல்லைகளுள் வளவ 125 ஆம் இலக்க கிராம உத்தியோகத்தர் பிரிவில் மெதகம மற்றும் பாய்பொக்க அமைந்த "மெதகமகலே காணித்துண்டு 2 மற்றும் திகனஎளிய காணித்துண்டு 2" என அழைக்கும் காணி உத்தரவு பெற்ற நில அளவையாளர் என். விஜேவீர தயாரித்த 2007 செப்டெம்பர் 2 திகதியிட்ட வரைபடம் இல. 7386 இல் எல்லை நிர்ணயித்த காணித்துண்டு 01 என அடையாளமிட்டு பிரிக்கப்பட்ட குறித்த காணித்துண்டு அதாவது காணித்துண்டு 01 வடக்கில் காணித்துண்டுகள் 08 மற்றும் 09 உம், கிழக்கில் காணித்துண்டு 6 உம், தெற்கில் தங்கல்ல-ஹம்பாந்தோட்டை பிரதான பாதையும் மேற்கில் காணித்துண்டு 9 மற்றும் வரைபடம் இல. 293 இல் காணித்துண்டு 01உம் எல்லைகளாகக் கொண்டு மேற்கூறிய வரைபடம் இல. 7386 இன் பிரகாரம் ஒரு றூட் ஐந்து தசம் பூச்சியம் ஏழு பேர்ச்சுகள் (ஏ.0, றூ.1, பே.5.07) விஸ்தீரணமுடையதுடன் அங்கு காணப்படும் மண், மரங்கள், பயிர்கள் மற்றும் கட்டிடங்கள் சகலதும் ஆகும். இக்காணி ஹம்பாந்தோட்டை காணிப்பதிவகத்தில் H 59/44 இல் பதிவுசெய்யப்பட்டுள்ளது.

தென் மாகாணம் ஹம்பாந்தோட்டை மாவட்டத்தில் கிருவபற்று கிழக்கில் ஹம்பாந்தோட்டை பிரதேச செயலாளர் பிரிவு மற்றும் பிரதேச சபை எல்லைகளுள் வளவ 125 ஆம் இலக்க கிராம உத்தியோகத்தர் பிரிவில் மெதகம மற்றும் பாய்பொக்க கிராமங்களில் அமைந்த "மெதகமகலே காணித்துண்டு D2 மற்றும் திகனஎளிய காணித்துண்டுகள் 07 மற்றும் 08" என அழைக்கும் காணி உத்தரவு பெற்ற நில அளவையாளர் எல்.கே. குணசேகர தயாரித்த 2015 ஜுலை 09 திகதியிட்ட வரைபடம் இல. 6772 இல் எல்லை நிர்ணயித்த காணித்துண்டு C என அடையாளமிட்டு பிரிக்கப்பட்ட குறித்த காணித்துண்டு அதாவது காணித்துண்டு C வடக்கில் அதே வரைபடத்தில் காணித்துண்டு B உம், கிழக்கில் வரைபடம் இல. 653 இல் காணித்துண்டு 06 உம், தெற்கில் உத்தரவு பெற்ற நில அளவையாளர் என். விஜயவீர தயாரித்த வரைபடம் இல. 7386 இல் காணித்துண்டு 01 உம் மேற்கில் வரைபடம் இல. 653 இல் காணித்துண்டு 9 (பிரவேசப்பாதை)உம் எல்லைகளாகக் கொண்டு மேற்கூறிய வரைபடம் இல. 6772 இன் பிரகாரம் ஒரு றூட் பதின்மூன்று பேர்ச்சுகள் (ஏ.0, றூ.1, பே.13) விஸ்தீரணமுடையதுடன் அங்கு காணப்படும் மண், மரங்கள், பயிர்கள் மற்றும் கட்டிடங்கள் சகலதும் ஆகும். இக்காணி ஹம்பாந்தோட்டை காணிப்பதிவகத்தில் H 59/42 இல் பதிவுசெய்யப்பட்டுள்ளது.

அத்துடன் மேற்கூறிய அனைத்துக் காணிகளுக்கும் ஒதுக்கியுள்ள சகல பாதைகளையும் உபயோகிப்பதற்கான உரிமையும் ஆகும்.

இலங்கை வங்கி பணிப்பாளர் சபை கட்டளைப்படி,

**இலங்கை வங்கி**
**அம்பலந்தோட்டை**

**திரு. எச்.எம்.சீ.எஸ். குமார**
**முகாமையாளர்.**

1975 BOC CALL CENTRE www.boc.lk
A (lka) Fitch ரேட்டிங், AAA Brand Finance ரேட்டிங்.
இலங்கை வங்கி இலங்கை மத்திய வங்கியினால் கண்காணிக்கப்படும் உரிமம் பெற்ற வணிக வங்கியாகும்
தலைமை அலுவலகம், BOC சதுக்கம், இல.1, இலங்கை வங்கி மாவத்தை, கொழும்பு 1.
இலங்கை வங்கி BOC தேசத்தின் வங்கியாளர்

## உஹன பிரதேச சபை

### 2024ம் ஆண்டிற்கான வரிக்கட்டண மதிப்பீடு

2024ம் ஆண்டு முதல் செயற்படுத்துவதற்காக வரிக்கட்டண சொத்து மதிப்பீடு செய்யப்பட்டுள்ளதுடன் அவ்விபரங்கள் உஹன பிரதேச சபையில் மு.ப. 8.30 முதல் பி.ப. 4.30 வரை சகல அலுவலக நாட்களிலும் அலுவலக நேரங்களில் பரீட்சித்துப் பார்ப்பதற்கு வைக்கப்பட்டுள்ளது.

அவ்வாறே இது பற்றிய எதிர்ப்புக்கள் இருப்பின் அறிவித்தல் பிரசுரம் செய்த தினம் முதல் 30 நாட்களுக்குள் உஹன பிரதேச சபைக்கு சமர்ப்பிக்குமாறு அறிவித்துக் கொள்கிறேன்.

**செயலாளர்,**
**பிரதேச சபை,**
**உஹன.**
**0632250355**

## பெறுகை அறிவித்தல்

### பிராந்திய சுகாதார சேவைகள் பணிப்பாளர் அலுவலகம், மட்டக்களப்பு

### 2024ம் ஆண்டிற்கான வைத்தியசாலைகளுக்கு சமைக்காத உணவுப் பொருட்கள் வழங்குவதற்கான கேள்விப்பத்திரம் கோரல்

01. 2024ம் ஆண்டிற்கான ஒரு வருட காலத்திற்கு (01.01.2024 தொடக்கம் 31.12.2024 வரை) மட்டக்களப்பு பிராந்திய சுகாதார சேவைகள் பணிப்பாளர் அலுவலக நிர்வாகத்திற்கு உட்பட்ட அரச வைத்தியசாலைகளுக்காக சமைக்காத உணவுப் பொருட்கள் வழங்குவதற்கு தகுதியும், தகைமையுமுள்ள வழங்குநர்களிடமிருந்து விலைமனுப் பத்திரங்களினை பிராந்திய சுகாதார சேவைகள் பணிப்பாளர் பணிமனையின் பிராந்திய பெறுகை சபையினால் கோரப்படுகின்றது.

சமைக்காத உலர் உணவு வழங்கப்படவேண்டிய வைத்தியசாலைகளின் விபரம்

| தொ. இல. | நிறுவனம் | மீளளிக்கத்தக்க வைப்புப் பணம் (ரூபா) | சொத்துச் சான்றிதழ் பெறுமதி (ரூபா) |
|---|---|---|---|
| 01 | ஆதார வைத்தியசாலை, வாழைச்சேனை | 240,000.00 | 300,000.00 |
| 02 | ஆதார வைத்தியசாலை, களுவாஞ்சிகுடி | 240,000.00 | 350,000.00 |
| 03 | ஆதார வைத்தியசாலை, காத்தான்குடி | 200,000.00 | 400,000.00 |
| 04 | ஆதார வைத்தியசாலை, ஏறாவூர் | 75,000.00 | 200,000.00 |
| 05 | மாவட்ட வைத்தியசாலை, ஆரையம்பதி | 50,000.00 | 250,000.00 |
| 06 | மாவட்ட வைத்தியசாலை, கல்லாறு | 30,000.00 | 150,000.00 |
| 07 | பிரதேச வைத்தியசாலை, செங்கலடி | 30,000.00 | 150,000.00 |
| 08 | பிரதேச வைத்தயசாலை, சந்திவெளி | 20,000.00 | 100,000.00 |
| 09 | பிரதேச வைத்தியசாலை, வாகரை | 15,000.00 | 75,000.00 |
| 10 | பிரதேச வைத்தியசாலை, கரடியனாறு | 20,000.00 | 100,000.00 |
| 11 | பிரதேச வைத்தியசாலை, மீராவோடை | 25,000.00 | 125,000.00 |
| 12 | பிரதேச வைத்தியசாலை, கதிரவெளி | 12,000.00 | 60,000.00 |
| 13 | பிரதேச வைத்தியசாலை, மாவடிவேம்பு | 15,000.00 | 75,000.00 |
| 14 | பிரதேச வைத்தியசாலை, மண்டபத்தடி | 15,000.00 | 75,000.00 |
| 15 | பிரதேச வைத்தியசாலை, மகிழடித்தீவு | 20,000.00 | 100,000.00 |
| 16 | பிரதேச வைத்தியசாலை, பழுகாமம் | 15,000.00 | 75,000.00 |
| 17 | பிரதேச வைத்தியசாலை, மண்டூர் | 12,000.00 | 60,000.00 |
| 18 | பிரதேச வைத்தியசாலை, நாவற்காடு | 8,000.00 | 40,000.00 |
| 19 | பிரதேச வைத்தியசாலை, பாலமுனை | 7,000.00 | 35,000.00 |
| 20 | பிரதேச வைத்தியசாலை, துறைநீலாவணை | 15,000.00 | 75,000.00 |
| 21 | பிரதேச வைத்தியசாலை, செட்டிபாளையம் | 15,000.00 | 75,000.00 |
| 22 | பிரதேச வைத்தியசாலை, பாலமீன்மடு | 15,000.00 | 75,000.00 |
| 23 | உள நல புனர்வாழ்வு நிலையம், மாவடிவேம்பு | 16,000.00 | 80,000.00 |
| 24 | ஆயுர்வேத ஆதார வைத்தியசாலை, புதுக்குடியிருப்பு | 25,000.00 | 150,000.00 |
| 25 | மாவட்ட ஆயுர்வேத வைத்தியசாலை,ஏறாவூர் | 15,000.00 | 100,000.00 |
| 26 | ஆயுர்வேத கிராமிய வைத்தியசாலை, ஓந்தாச்சிமடம் | 7,000.00 | 50,000.00 |

02. விண்ணப்பிக்க விரும்புவோர் தமது ஆளடையாளத்தை உறுதிப்படுத்தியதன் பின்னர் பிராந்திய சுகாதார சேவைகள் பணிப்பாளர் அவர்களுக்கு ஒவ்வொரு வைத்தியசாலைக்கும் தனித்தனியான மீளளிக்கப்படாத மேல் குறிப்பிடப்படும் வைப்பு கட்டணத்தை செலுத்துவதன் மூலம் வேலை நாட்களில் 2023.11.27ம் திகதி தொடக்கம் 2023.12.18 ம் திகதி வரையும் மு.ப. 9.00 மணி முதல் பி.ப. 3.00 மணி வரை பற்றுச்சீட்டினைப் பெற்று, கேள்விப்பத்திரங்களை பெற்றுக் கொள்ளலாம். அத்துடன் ஒரு கேள்விதாரர் ஒன்றுக்கு மேற்பட்ட நிலையங்களுக்கும் விண்ணப்பிக்கலாம். ஒவ்வொன்றுக்கும் தனித்தனியாக பணம் செலுத்தி கேள்விப்பத்திரங்களை பெற்றுக் கொள்ள வேண்டும். விண்ணப்பிக்க விரும்புவோர் கறுப்புப் பட்டியலில் இடம் பெறலாகாது வேண்டும்.
03. அந்தந்த வைத்தியசாலைக்குத் தேவையான உணவு மதீப்பீடுகள் பற்றிய விபரங்கள் விலைமனு மாதிரிப் படிவத்துடன் அத்தியாயம் 5 ல் வழங்கப்படும்.
04. விலைமனு ஆவணங்களைப் பெற்றுக்கொள்ளும் போது சமர்ப்பிக்க வேண்டிய ஆவணங்கள்
    1. பிராந்திய சுகாதார சேவைகள் பணிப்பாளர், மட்டக்களப்பு என முகவரியிடப்பட்ட விண்ணப்பத்தை கோரும் கடிதம்.
    2. பொது 170 மாதிரிப் படிவத்தில் ஒவ்வொரு வைத்தியசாலைக்கும் மேற்குறிப்பிடப்பட்டுள்ள பெறுமதிக்குச் சமமான சொத்து பற்றிய சான்றிதழின் மூலப்பிரதி (வைத்தியசாலை அமைந்துள்ள பிரிவில் அல்லது ஒப்பந்தகாரர் வசிக்கும் பிரதேச செயலகத்தின் பிரதேச செயலாளரினால் வழங்கப்பட்ட சொத்துக்கள் பற்றிய சான்றிதழ். இது வழங்கப்பட்ட தினத்திலிருந்து எதிர்வரும் 06 மாத காலத்திற்கு செல்லுபடியாதல் வேண்டும்)
    3. முன்னைய அனுபவ சான்றிதழ் (ஏதுமிருப்பின்)
    4. உணவு விநியோகம் சம்பந்தமான வலிதான வியாபாரப் பதிவினைக் கொண்டிருத்தல் வேண்டும். வியாபார பதிவுச்சான்றிதழ் பிரதி சமர்ப்பிக்கப்படல் வேண்டும்.
    5. விண்ணப்பதாரர் விலைகூறல் ஆவணக்கட்டணமாக ஒவ்வாரு வைத்தியசாலைகளுக்கும் தனித்தனியாக மீளளிக்கப்படாத ரூபா. 1000.00 பிராந்திய சுகாதார சேவைகள் பணிமனையில் செலுத்தி பெற்றுக்கொண்ட பற்றுச்சீட்டு
05. கேள்விப்பத்திர கடித உறையின் இடது பக்க மேல் மூலையில் "2024ம் ஆண்டிற்கான அரச வைத்தியசாலைகளுக்கான உணவு வழங்குதல் " எனக்குறிப்பிட்டு வைத்தியசாலையின் பெயரினையும் குறிப்பிட்டு பிராந்திய சுகாதார சேவைகள் பணிப்பாளர், பிராந்திய சுகாதார சேவைகள் பணிப்பாளர் அலுவலகம், மட்டக்களப்பு என்ற விலாசத்திற்கு 2023.12.19 திகதி மு.ப. 10.00 மணிக்கு முன்னர் கிடைக்கக்கூடியதாக பதிவுத்தபாலில் அனுப்புதல் வேண்டும் அல்லது பிராந்திய சுகாதார சேவைகள் பணிப்பாளர் அலுவலகத்தின் நிதி முகாமைத்துவப் பிரிவில் வைக்கப்பட்டுள்ள கேள்விப்பத்திரப் பெட்டியினுள் இடப்படல் வேண்டும்.
06. விண்ணப்பங்களை ஏற்றுக் கொள்ளும் நேரம் முடிவடைந்தவுடன் விண்ணப்பங்கள் திறக்கப்படும் அதன்போது விண்ணப்பதாரர் அல்லது அவரது அங்கீகாரம் பெற்ற பிரதிநிதி ஒருவா் பங்கேற்க முடியும். தாமதித்துக் கிடைக்கும் விண்ணப்பங்கள் நிராகரிக்கப்படும்.
07. பிராந்திய சுகாதார சேவைகள் பணிப்பாளர் பணிமனையிலுள்ள பெறுகைப் பிரிவில் கேள்வி ஆவணங்களை இலவசமாகப் பரீட்சிக்க முடியும். இது தொடர்பிலான மேலதிகத் தகவல்களுக்கு 065 2222997 என்ற தொலைபேசி இலக்கத்துடன் தொடர்பு கொள்ளவும்.
08. குறித்த கேள்வியை முழுமையாகவோ அல்லது அதன் ஒரு பகுதியை ஏற்றுக்கொள்ளும் அல்லது நிராகரிக்கும் உரிமை எவருக்கும் நட்டஈடு செலுத்தாமலே இரத்து செய்வதற்கு அல்லது இக்கேள்வி தொடர்பான இறுதித் தீர்மானம் எடுக்கும் உரிமை பெறுகை குழுவின் தலைவருக்கு பூரண அதிகாரம் உண்டு

**தலைவர்,**
**பிராந்திய பெறுகை குழு,**
**பிராந்திய சுகாதார சேவைகள் பணிப்பாளர் அலுவலகம்,**
**மட்டக்களப்பு**

Daily News Classifieds, the Housewives' companion

# உடபலாத்த பிரதேச சபை

## பொதுச் சந்தை கடைகள் மற்றும் ஆதனங்களை 2024 ஆம் ஆண்டுக்காக குத்தகைக்கு விடுதல்

உடபலாத்த பிரதேச சபைக்கு சொந்தமான கீழுள்ள அட்டவணை இலக்கம் 01 இல் குறிப்பிடப்பட்டுள்ள பாரதெக்க பொது சந்தை கடைகள், அட்டவணை இலக்கம் 02 இல் குறிப்பிடப்பட்டுள்ள புசல்லாவ புதிய சந்தை தொகுதியில் இறைச்சி, மீன் மற்றும் முட்டை கடைகள், அட்டவணை இலக்கம் 03 இல் குறிப்பிடப்பட்டுள்ள தொலுவ வாரச்சந்தை மேல் மாடி கடைகள், அட்டவணை 04 இல் தொலுவ பொதுச் சந்தை மேல் மாடி, அட்டவணை 05 இல் குறிப்பிடப்பட்டுள்ள பன்விலதன்ன துனுகேவுல்ல சந்தியின் கடைகள், அட்டவணை இலக்கம் 06 இல் குறிப்பிடப்பட்டுள்ள கஹவத்த சந்தியின் கடைகள் மற்றும் அட்டவணை இலக்கம் 07 இல் குறிப்பிடப்பட்டுள்ள ஆதனங்களை 2024.01.01 ஆம் திகதி தொடக்கம் 2024.12.31 ஆம் திகதி வரை குத்தகைக்கு விடுவதற்காக முத்திரை இடப்பட்ட கேள்விமனுக்கள் என்னால் கோரப்படுகின்றன.

**கேள்விமனு வழங்கல் - 2023.11.27 அன்று மு.ப. 9.00 தொடக்கம் 2023.12.14 அன்று பி.ப. 03.00 வரை (வாரத்தின் வேலை நாட்கள்)**

**கேள்விமனு ஏற்றல் - 2023.11.27 அன்று மு.ப. 10.00 தொடக்கம் 2023.12.15 அன்று நண்பகல் 12.00 வரை (வாரத்தில் வேலை நாட்கள்)**

**கேள்விமனு திறப்பது – 2023.12.15 அன்று பி.ப. 01.30க்கு**

அட்டவணை இலக்கம் 01 - பாரதெக்க பொது சந்தை

| வரிசை இலக்கம் | ஆதனம் | கொடுப்பனவு விபரம் | | |
|---|---|---|---|---|
| | | கேள்விமனு படிவக் கட்டணம் | மீளளிக்கப்படும் பிணை வைப்பு | 2024 ஆண்டுக்கு குறைந்தபட்ச விலைமனு |
| 01 | பாரதெக்க பொது சந்தை இலக்கம் 01 கடை | 500.00 | 1000.00 | 36000.00 |
| 02 | பாரதெக்க பொது சந்தை இலக்கம் 02 கடை | 500.00 | 1000.00 | 36000.00 |
| 03 | பாரதெக்க பொது சந்தை இலக்கம் 03 கடை | 500.00 | 1000.00 | 36000.00 |
| 04 | பாரதெக்க பொது சந்தை இலக்கம் 04 கடை | 500.00 | 1000.00 | 36000.00 |
| 05 | பாரதெக்க பொது சந்தை இலக்கம் 05 கடை | 500.00 | 1000.00 | 36000.00 |

அட்டவணை இலக்கம் 02 - புசல்லாவ புதிய சந்தை தொகுதியின் இறைச்சி மற்றும் முட்டைக் கடைகள்

| வரிசை இலக்கம் | ஆதனம் | கொடுப்பனவு விபரம் | | |
|---|---|---|---|---|
| | | கேள்விமனு படிவக் கட்டணம் | மீளளிக்கப்படும் பிணை வைப்பு | 2024 ஆண்டுக்கு குறைந்தபட்ச விலைமனு |
| 01 | புசல்லாவ புதிய சந்தை தொகுதியின் இலக்கம் A1 கடை - மீன் | 500.00 | 1000.00 | 93684.93 |
| 02 | புசல்லாவ புதிய சந்தை தொகுதியின் இலக்கம் A2 கடை - மாட்டிறைச்சி | 500.00 | 1000.00 | 1045094.19 |
| 03 | புசல்லாவ புதிய சந்தை தொகுதியின் இலக்கம் A3 கடை - கோழியிறைச்சி | 500.00 | 1000.00 | 479257.96 |
| 04 | புசல்லாவ புதிய சந்தை தொகுதியின் இலக்கம் A5 கடை - ஆட்டிறைச்சி | 500.00 | 1000.00 | 93597.30 |
| 05 | புசல்லாவ புதிய சந்தை தொகுதியின் இலக்கம் A6 கடை - முட்டை (மொத்தமாக) | 500.00 | 1000.00 | 85892.73 |

அட்டவணை இலக்கம் 03 - தொலுவ வாரச் சந்தை மேல்மாடி

| வரிசை இலக்கம் | ஆதனம் | கொடுப்பனவு விபரம் | | |
|---|---|---|---|---|
| | | கேள்விமனு படிவக் கட்டணம் | மீளளிக்கப்படும் பிணை வைப்பு | 2024 ஆண்டுக்கு குறைந்தபட்ச விலைமனு |
| 01 | தொலுவ வாரச்சந்தை மேல்மாடி கடை 01 | 500.00 | 1000.00 | 21600.00 |
| 02 | தொலுவ வாரச்சந்தை மேல்மாடி கடை 02 | 500.00 | 1000.00 | 21600.00 |
| 03 | தொலுவ வாரச்சந்தை மேல்மாடி கடை 03 | 500.00 | 1000.00 | 21600.00 |
| 04 | தொலுவ வாரச்சந்தை மேல்மாடி கடை 04 | 500.00 | 1000.00 | 21600.00 |
| 05 | தொலுவ வாரச்சந்தை மேல்மாடி கடை 05 | 500.00 | 1000.00 | 21600.00 |
| 06 | தொலுவ வாரச்சந்தை மேல்மாடி கடை 06 | 500.00 | 1000.00 | 21600.00 |
| 07 | தொலுவ வாரச்சந்தை மேல்மாடி கடை 07 | 500.00 | 1000.00 | 21600.00 |
| 08 | தொலுவ வாரச்சந்தை மேல்மாடி கடை 08 | 500.00 | 1000.00 | 21600.00 |
| 09 | தொலுவ வாரச்சந்தை மேல்மாடி கடை 09 | 500.00 | 1000.00 | 21600.00 |
| 10 | தொலுவ வாரச்சந்தை மேல்மாடி கடை 10 | 500.00 | 1000.00 | 21600.00 |
| 11 | தொலுவ வாரச்சந்தை மேல்மாடி கடை 11 | 500.00 | 1000.00 | 21600.00 |
| 12 | தொலுவ வாரச்சந்தை மேல்மாடி கடை 12 | 500.00 | 1000.00 | 21600.00 |
| 13 | தொலுவ வாரச்சந்தை மேல்மாடி கடை 13 | 500.00 | 1000.00 | 21600.00 |

அட்டவணை இலக்கம் 04 - தொலுவ பொதுச் சந்தை மேல்மாடி

| வரிசை இலக்கம் | ஆதனம் | கொடுப்பனவு விபரம் | | |
|---|---|---|---|---|
| | | கேள்விமனு படிவக் கட்டணம் | மீளளிக்கப்படும் பிணை வைப்பு | 2024 ஆண்டுக்கு குறைந்தபட்ச விலைமனு |
| 01 | தொலுவ பொதுச் சந்தை மேல்மாடி கடை 01 | 500.00 | 1000.00 | 50985.00 |
| 02 | தொலுவ பொதுச் சந்தை மேல்மாடி கடை 02 | 500.00 | 1000.00 | 50985.00 |
| 03 | தொலுவ பொதுச் சந்தை மேல்மாடி கடை 03 | 500.00 | 1000.00 | 50985.00 |
| 04 | தொலுவ பொதுச் சந்தை மேல்மாடி கடை 04 | 500.00 | 1000.00 | 50985.00 |
| 05 | தொலுவ பொதுச் சந்தை மேல்மாடி கடை 05 | 500.00 | 1000.00 | 50985.00 |
| 06 | தொலுவ பொதுச் சந்தை மேல்மாடி கடை 06 | 500.00 | 1000.00 | 50985.00 |
| 07 | தொலுவ பொதுச் சந்தை மேல்மாடி கடை 07 | 500.00 | 1000.00 | 50985.00 |
| 08 | தொலுவ பொதுச் சந்தை மேல்மாடி கடை 08 | 500.00 | 1000.00 | 50985.00 |
| 09 | தொலுவ பொதுச் சந்தை மேல்மாடி கடை 09 | 500.00 | 1000.00 | 50985.00 |
| 10 | தொலுவ பொதுச் சந்தை மேல்மாடி கடை 10 | 500.00 | 1000.00 | 50985.00 |

அட்டவணை இலக்கம் 05 - பன்விலதன்ன துனுகேவுல்ல சந்தி

| வரிசை இலக்கம் | ஆதனம் | கொடுப்பனவு விபரம் | | |
|---|---|---|---|---|
| | | கேள்விமனு படிவக் கட்டணம் | மீளளிக்கப்படும் பிணை வைப்பு | 2024 ஆண்டுக்கு குறைந்தபட்ச விலைமனு |
| 01 | பன்விலதன்ன துனுகேவுல்ல சந்தி இலக்கம் 01 கடை | 500.00 | 1000.00 | 30000.00 |
| 02 | பன்விலதன்ன துனுகேவுல்ல சந்தி இலக்கம் 02 கடை | 500.00 | 1000.00 | 30000.00 |
| 03 | பன்விலதன்ன துனுகேவுல்ல சந்தி இலக்கம் 02 கடை | 500.00 | 1000.00 | 30000.00 |

அட்டவணை இலக்கம் 06 - கஹவத்த சந்தி

| வரிசை இலக்கம் | ஆதனம் | கொடுப்பனவு விபரம் | | |
|---|---|---|---|---|
| | | கேள்விமனு படிவக் கட்டணம் | மீளளிக்கப்படும் பிணை வைப்பு | 2024 ஆண்டுக்கு குறைந்தபட்ச விலைமனு |
| 01 | கஹவத்த சந்தி இலக்கம் 01 கடை | 500.00 | 1000.00 | 36000.00 |
| 02 | கஹவத்த சந்தி இலக்கம் 02 கடை | 500.00 | 1000.00 | 36000.00 |
| 03 | கஹவத்த சந்தி இலக்கம் 03 கடை | 500.00 | 1000.00 | 36000.00 |

அட்டவணை இலக்கம் 07 - ஆதனங்கள் குத்தகைக்கு விடுதல்

| வரிசை இலக்கம் | ஆதனம் | கொடுப்பனவு விபரம் | | |
|---|---|---|---|---|
| | | கேள்விமனு படிவக் கட்டணம் | மீளளிக்கப்படும் பிணை வைப்பு | 2024 ஆண்டுக்கு குறைந்தபட்ச விலைமனு |
| 01 | நாரன்விட்ட பொது மயான காணி (தெங்கு அறுவடை) | 500.00 | 1000.00 | 18378.44 |
| 02 | புசல்லாவ நகர மண்டபத்திற்கு அருகில் புதிய கழிப்பறையை நடத்திச் செல்வதை குத்தகைக்கு விடுதல் | 500.00 | 1000.00 | 92400.00 |

கேள்விமனு படிவக் கட்டணம் மற்றும் பிணை வைப்பை இந்த பிரதேச சபை அலுவலகத்திற்கு செலுத்திய பின், கேள்விமனு படிவத்தை பெற்றுக்கொள்ள முடியும். கேள்விமனுக்களை சமர்ப்பிக்க முடிவது இந்த அலுவலகத்தினால் வழங்கப்படும் கேள்விமனு படிவத்தில் மாத்திரமாகும். பூர்த்தி செய்யப்பட்ட கேள்விமனுக்களை பொருத்தமான உறை ஒன்றில் இட்டு செயலாளர், உடபலாத்த பிரதேச சபை, தெல்பிட்டிய, அட்டபானே, கம்பளை என்ற முகவரிக்கு பதிவுத் தபால் மூலம் அனுப்ப வேண்டும். இல்லையேல் உடபலாத்த பிரதேச சபையில் வைக்கப்பட்டுள்ள விலைக்கேட்புப் பெட்டிக்கு இட வேண்டும். கேள்விமனுக்களை இட்டு அனுப்புகின்ற உறையின் இடது பக்க மேல் மூலையில் கேள்விமனு சமர்ப்பிக்க எதிர்பார்க்கின்ற ஆதனம் அல்லது கடையின் பெயரை எழுத வேண்டும். இது தொடர்பில் இறுதி முடிவு கேள்விமனு குழு வசமானது. மேலதிக விபரங்களை 0812352218 என்ற இலக்கம் கொண்ட அலுவலக தொலைபேசியில் கேட்டறிந்து கொள்ள முடியும்.

**உடபலாத்த பிரதேச சபை**
**செயலாளர்**
**உடபலாத்த பிரதேச சபை**

# நீர்ப்பாசன அமைச்சு

## வெற்றிடங்கள்

## மகாவலி நீர் பாதுகாப்பு முதலீட்டுத் திட்டம் (MWSIP)

**நிதி மூலம்: ஆசிய அபிவிருத்தி வங்கி (ADB)**

மகாவலி நீர் பாதுகாப்பு முதலீட்டுத் திட்டமானது இலங்கை அரசாங்கம் மற்றும் ஆசிய அபிவிருத்தி வங்கி (ADB) இடம் இருந்து பெறப்பட்ட சலுகைக் கடன் வசதியுடன் நீர்ப்பாசன அமைச்சு மூலம் முன்னெடுக்கப்படும் மகாவலி பல்நோக்கு அபிவிருத்தித் திட்ட முதன்மை திட்டத்தின் ஓர் அங்கமாகும்.

**விண்ணப்பங்கள்:**
ஒப்பந்த அடிப்படையில் பின்வரும் பதவிக்காக பொருத்தமான தகுதியுடைய இலங்கை பிரசைகளிடம் இருந்து இத்தால் விண்ணப்பங்கள் கோரப்படுவதோடு, பின்வரும் முகவரிக்கு கிடைப்பதற்கு 2023.12.11 ஆம் திகதி அல்லது அதற்கு முன்னர் இரு உறவினர் அல்லாத நடுவர்கள் மற்றும் கல்வி, தொழில் தகைமை அனுபவத்தின் சான்றிதழ்களை உள்ளடக்கியதாக தமது சுயவிபரக் கோவையைக் கொண்டதாக தமது விண்ணப்பங்களை பதிவுத் தபாலில் அனுப்புவதற்கு விண்ணப்பதாரர்கள் கோரப்படுகின்றனர், திட்டப் பணிப்பாளர், மகாவலி நீர் பாதுகாப்பு முதலீட்டு திட்டம், இல. 493-1/1, டீ.பி. ஜாயா மாவத்தை, கொழும்பு 10.
கடித உறையின் இடது பக்க மேல் மூலையில் விண்ணப்பிக்கும் பதவியை குறிப்பிடவும். இது தவிர, முன் நகல் ஒன்றாக அதே விண்ணப்பத்தை மின்னஞ்சலின் தலைப்பில் விண்ணப்பிக்கும் பதவியை குறிப்பிட்டு hr.mwsip@gmail.com என்ற முகவரிக்கு பிரதி வைப்பதுடன் pdadbproject@gmil.com என்ற முகவரிக்கு அனுப்பவும்.

| பதவி மற்றும் தொழில் விபரம் | தகைமை மற்றும் அனுபவம் |
|---|---|
| 1. கணக்காளர் (**PS 04 –** பிரிவு **A**)<br>திட்ட முகாமைத்துவ பிரிவு – கொழும்பு<br>02 பதவிகள்<br>தொழில் விபரம் - 01<br>திட்டத்தின் நிதி மற்றும் கணக்கு தயாரித்தல் மற்றும் பராமரித்தலுக்கு நிதி முகாமையாளருக்கு உதவுதல், திட்டமிடல், வரவு செலவு திட்டம், வங்கிக் கணக்குகள், பேரேடுகளை பராமரித்தல், கொடுப்பனவுகள் மற்றும் உள்ளக கட்டுப்பாடுகள், நிதி அறிக்கைகள் மற்றும் செலவு ஈடு ஆவணங்களை தயாரித்தல், களஞ்சியங்கள் முகாமைத்துவ நடைமுறைகள், சரிபார்த்தல் மற்றும் கணக்காய்வு அறிக்கைகள் மற்றும் MWSIP முகாமைத்துவத்தின் மூலம் தேவையான வேறு ஏனைய நிதி தொடர்பான ஒப்படை.<br>தொழில் விபரம் - 02<br>நிதி தயாரிப்பின் ஒரு கணக்கியல் அமைப்பு ஒன்றில் நிதி முகாமையாளருக்கு உதவுதல், ADB, CB வழங்கல்களை கையாளுதல், கடன் தொடர்பான அறிக்கைகளை பராமரித்தல், ADB வழிகாட்டல் மற்றும் நடைமுறையின்படி செலவு மற்றும் ஏனைய சமரசங்களின் அறிக்கை சமர்ப்பித்தல், சிக்கலற்ற செயற்பாடுகளுக்காக நிதியின் கிடைக்கும் தன்மையை உறுதி செய்தல், ADB இற்காக அறிக்கைகள் மற்றும் ஆவணங்களை சமர்ப்பித்தல், தேவையின்படி GOSI அறிக்கைகள், மீளாய்வு, கொடுப்பனவுகளை உறுதி செய்தல் மற்றும் MWSIP முகாமைத்துவத்தின் மூலம் தேவையான வேறு ஏனைய நிதி தொடர்பான ஒப்படை. | • கீழ் குறிப்பிடப்பட்டிருக்கும் தகைமைகள், அனுபவங்கள் மற்றும் சம்பள அளவுகள் 01/2019ஆம் இலக்க முகாமைத்துவ சேவைகள் திணைக்கள சுற்றுநிருபத்துக்கு அமைவானதாகும்.<br>1. பல்கலைக்கழக மானியங்கள் ஆணைக்குழுவினால் அங்கீகரிக்கப்பட்ட தொடர்புடைய துறையில் இளமாணிப் பட்டத்தை வெற்றிகரமாக பூர்த்திசெய்திருத்தல்<br>அல்லது<br>தொடர்புடைய துறையில் பட்டத்திற்கு இணையான தகைமை ஒன்றாக பல்கலைக்கழக மானியங்கள் ஆணைக்குழுவால் அங்கீகரிக்கப்பட்ட தகைமை<br>அல்லது<br>தொடர்புடைய துறையில் அங்கீகரிக்கப்பட்ட நிறுவனம் ஒன்றில் இருந்து பெறப்பட்ட இணை அங்கத்துவம்/ அதனை ஒத்த தொழில்முறை தகைமை<br>அத்துடன்<br>தொடர்புடைய துறையில் குறைந்தது 09 ஆண்டுகள் பின் தகைமை அனுபவம்.<br>2. இலங்கை சேவை வகுப்பு III/II அல்லது அதற்கு மேற்பட்ட அதிகாரி ஒருவர் அல்லது தொடர்புடைய துறையில் அதனையொத்த அந்தஸ்து<br>(சம்பள அளவு: **PS 4,** பிரிவு **A –** ரூபா 155,000.00 - ரூபா 170,000.00)<br>(செலவு அறிக்கையை (**SOE**) கண்காணித்தல் மற்றும் சரிபார்த்தல் மற்றும் கொடை நிறுவனம், மத்திய வங்கிக்காக மீளப்பெறல் விண்ணப்பத்தை சமர்ப்பித்தல் மற்றும் அவ்வப்போது பணப்பாய்வு தேவையை தயாரித்தல் மற்றும் கொடை நிறுவன நடைமுறைகள் மற்றும் வழிகாட்டலை நிறுவுதல், வெளிநாட்டு உதவி திட்டங்களில் பதிவுகளை பேணுதலில் அனுபவம் அனுகூலமாக சேர்க்கப்படும்.) |
| 2. தகவல் தொடர்பாடல் தொழில்நுட்ப (**ICT**) அதிகாரி (**PS 05**)<br>திட்ட முகாமைத்துவ பிரிவு – கொழும்பு<br>01 பதவி<br>தொழில் விபரம்<br>• திட்ட முகாமைத்துவ பிரிவு (PMU)/ திட்ட அமுலாக்கல் பரிவுகள் (PIUs) மற்றும் திட்ட முகாமைத்துவ, வடிவமைப்பு மற்றும் மேற்பார்வை ஆலோசகருக்காக (PMDSC) கொள்வனவு செய்வதற்கு அனைத்து ICT தொடர்புடைய விபரக்குறிப்புகளை தயாரித்தல்.<br>• PMU இன் வலைப்பின்னல் மற்றும் சேர்வர் முகாமைத்துவம், அனைத்து திட்ட அலுவலகங்கள் மற்றும் PMDSC வில் வலைப்பின்னல் மற்றும் மென்பொருள் தொடர்புபட்ட விடயங்களை ஒருங்கிணைத்தல்.<br>• PMU வின் கணினிகள், UPS சாதனங்கள், பன்முகச் செயற்பாட்டு கறுப்பு வெள்ளை/ வர்ண நகல்பிரதி இயந்திரங்கள், அச்சுப்பொறிகள், வலைப்பின்னல், கோப்பு சேர்வர், சீ.சீ.டீ.வி. அமைப்பு மற்றும் PABX வின் பராமரிப்பு.<br>• அனைத்து ICT உபகரணங்களுக்காகவும் இணக்கச்சான்றிதழ் வழங்கல்.<br>• PMU, PIUs மற்றும் PMDSC இற்காக ICT தொடர்புபட்ட பொருட்களின் பெறுகைக்கு தொடர்புபட்ட விலைமனுக்களின் மதிப்பீட்டுக்காக தொழில்நுட்ப மதிப்பீட்டுக் குழுவின் (TEC) அங்கத்தவர் ஒருவராக செயற்படுதல்.<br>• MWSIP இன் உத்தியோகபூர்வ இணையதளத்தை இற்றைப்படுத்தல்.<br>• PMU, PIUs விற்காக GIS வரைபடங்கள் மற்றும் சுற்றுச்சூழல் மற்றும் மீள் குடியேற்றத்திற்கு தொடர்புடைய வரைபடங்களை தயாரித்தல்.<br>• PIUs - வடமேல் மாகாண கால்வாய் திட்டம் (NWPCP) மற்றும் வட மத்திய மாகாண கால்வாய் திட்டத்தின் (NCPCP) மீள் குடியேற்றத்திற்கான தரவுகளை உருவாக்குதல் மற்றும் நிர்வகித்தல்.<br>• PMU/PIUs இற்காக கணினி நிகழ்ச்சி நிரல்களின் வடிவமைப்பு.<br>• கணினி செயற்பாடுகளில் PMU/PIU ஊழியர்களுக்கு பயிற்சிக்கு உதவுதல்.<br>• வீடியோ மாநாட்டு கருவிகள் மூலம் மெய்நிகர் கூட்டங்களை ஏற்பாடு செய்தல் (Zoom மற்றும் MS Teams) | • கீழ் குறிப்பிடப்பட்டிருக்கும் தகைமைகள், அனுபவங்கள் மற்றும் சம்பள அளவுகள் 01/2019ஆம் இலக்க முகாமைத்துவ சேவைகள் திணைக்கள சுற்றுநிருபத்துக்கு அமைவானதாகும்.<br>1. பல்கலைக்கழக மானியங்கள் ஆணைக்குழுவினால் அங்கீகரிக்கப்பட்ட தொடர்புடைய துறையில் இளமாணிப் பட்டம்<br>அல்லது<br>தொடர்புடைய துறையில் பட்டத்திற்கு இணையான தகைமை ஒன்றாக பல்கலைக்கழக மானியங்கள் ஆணைக்குழுவால் அங்கீகரிக்கப்பட்ட தகைமை<br>அல்லது<br>தொடர்புடைய துறையில் அங்கீகரிக்கப்பட்ட நிறுவனம் ஒன்றில் இருந்து பெறப்பட்ட இணை அங்கத்துவம்/ அதனை ஒத்த தொழில்முறை தகைமை<br>அல்லது<br>பதவிக்கு தொடர்புடைய துறை ஒன்றுக்காக மூன்றாம் நிலைக்கல்வி, தொழில்கல்வி ஆணைக்குழுவால் அங்கீகரிக்கப்பட்ட தொழில்நுட்ப/ தொழில் பயிற்சி நிறுவனம் ஒன்றினால் வழங்கப்பட்ட தேசிய தொழில் தகைமை தரம் 7 இற்கு குறையாத தேர்ச்சி சான்றிதழ் ஒன்றை பெற்றிருத்தல்.<br>மற்றும்<br>தேவையான நிபுணத்துவப் பரப்பில் குறைந்தது 06 ஆண்டுகள் அனுபவம்.<br>2. பதவிக்கு தொடர்புடைய துறை ஒன்றுக்காக மூன்றாம் நிலைக்கல்வி, தொழில்கல்வி ஆணைக்குழுவால் அங்கீகரிக்கப்பட்ட தொழில்நுட்ப/ தொழில் பயிற்சி நிறுவனம் ஒன்றினால் வழங்கப்பட்ட தேசிய தொழில் தகைமை தரம் 6 இற்கு குறையாத தேர்ச்சி சான்றிதழ் ஒன்றை பெற்றிருத்தல்.<br>மற்றும்<br>தேவையான நிபுணத்துவப் பரப்பில் குறைந்தது 11 ஆண்டுகள் அனுபவம்.<br>3. பதவிக்கு தொடர்புடைய துறை ஒன்றுக்காக மூன்றாம் நிலைக்கல்வி, தொழில்கல்வி ஆணைக்குழுவால் அங்கீகரிக்கப்பட்ட தொழில்நுட்ப/ தொழில் பயிற்சி நிறுவனம் ஒன்றினால் வழங்கப்பட்ட தேசிய தொழில் தகைமை தரம் 5 இற்கு குறையாத தேர்ச்சி சான்றிதழ் ஒன்றை பெற்றிருத்தல்.<br>மற்றும்<br>தேவையான நிபுணத்துவப் பரப்பில் குறைந்தது 16 ஆண்டுகள் அனுபவம்.<br>(சம்பள அளவு: **PS 5 –** ரூபா 105,000.00 - ரூபா 113,000.00) |

*01/2019 ஆம் இலக்க **MSD** சுற்றுநிருபத்திற்கு அமைய மேல் கூறப்பட்ட சம்பளத்திற்கு மேலதிகமாக வாழ்க்கைச் செலவு கொடுப்பனவு வழங்கப்படும்.

**பொது நிபந்தனைகள்**

1. விண்ணப்பதாரர்கள் 64 வயதுக்குக் குறைவாக இருத்தல் வேண்டும்.
2. அனைத்து உத்தியோகத்தர்களும் தொடர்புடைய அரச நிறுவனங்கள் மற்றும் ஏனைய நிறுவனங்களுடன் பிணைப்பு மற்றும் ஒருங்கிணைப்பு செயற்பாடுகளுடன் தமது பணிகளை மேற்கொள்வதற்கு எதிர்பார்க்கப்படுகிறது.
3. இலங்கையில் மேற்கொள்ளப்படும் வெளிநாட்டு நிதியிலான திட்டங்களில் உள்ள பணி அனுபவம் மேலதிக அனுகூலமாக அமையும்.
4. இந்த பதவிகளுக்கான முன் நிபந்தனைகளாக ஆங்கிலத்தில் தேர்ச்சி, அரசாங்க ஒழுங்குமுறைகளில் பரீட்சயம் மற்றும் கணினி அறிவு அவசியமாகும்.
5. செயற்றிட்டங்களின் தேவை மற்றும் செயல்திறன் அடிப்படையில் ஆண்டுதோறும் புதுப்பிக்கும் வகையில் ஓர் ஆண்டு ஒப்பந்த அடிப்படையில் பணியமர்த்தப்படும்.
6. 01/2019 ஆம் இலக்க முகாமைத்துவ சேவைகள் சுற்றுநிருபத்தின்படி கொடுப்பனவுகளுடன் அரசாங்கம் அங்கீகரித்த சம்பளம் வழங்கப்படும் என்பதோடு அதன் பின் எந்த மாற்றங்களும் மேற்கொள்ளப்படும். (http://www.treasury.gov.lk)
7. நீண்ட மணி நேரங்கள் மற்றும் வார இறுதி நாட்களில் வேலை செய்வதற்கான திறன்.

உயர் தகைமைகள் மற்றும் அனுபவத்தின் அடிப்படையில் தேர்வு செய்யப்படும் விண்ணப்பதாரர்கள், நேர்முகப்பரீட்சைக்கு அழைக்கப்படுவதோடு தகுதி அடிப்படையில் தேர்வு இடம்பெறும். எனவே, ஆட்சேர்ப்பு நடைமுறைக்காக பிரதிநிதித்துவத்தை ஏற்படுத்துவது அல்லது எந்த ஒரு செல்வாக்கு செலுத்தலும் விண்ணப்பம் நிராகரிக்கப்படுவதற்கு காரணமாகலாம். அரச சேவைகள்/ சட்டரீதியான சபைகள்/ கூட்டுத்தாபனங்கள் மற்றும் ஏனைய அரச நிறுவனங்களின் அபேட்சகர்களது விண்ணப்பங்கள், முறையே தமது நிறுவனங்களின் தலைவர்கள் ஊடாக சமர்ப்பிக்கப்படுதல் வேண்டும் என்பதோடு அதில் அபேட்சகர் தேர்வு செய்யப்பட்டால் 01/2019 முகாமைத்துவ சேவைகள் சுற்றுநிருபத்தின் 2.33 (a) அல்லது 2.3.3 (b) பந்திக்கு அமைவாக சம்பளம் இன்றி – முழு நேரம் விடுவிப்பது குறித்து குறிப்பிடப்பட்டிருத்தல் வேண்டும். மேலுள்ள தேவைகளை பூர்த்தி செய்யாது முழுமை பெறாத விண்ணப்பங்கள் நிராகரிக்கப்படும்.

**செயலாளர்**
**நீர்ப்பாசன அமைச்சு**



## குடியியல் நடைமுறைக்கோவைச் சட்டத்தின் 16 ஆம் பிரிவின் கீழான அறிவித்தல்

## கொழும்பு மாவட்ட நீதிமன்றில்

**மொஹோமட் அப்துல் ரஹீம் அலி சப்ரி**
**இல. 09, இஸ்பில் ரோட், புத்தளம்.**
**- முறைப்பாட்டாளர்**

**வழக்கு இல : டீஎஸ்பீ521/2023**
**தன்மை : சிறப்பு**
**நடைமுறை: பொது**
**பெறுமதி : ரூபா 1,000,000/-**

**எதிர்**

1. **ரிசார்ட் பதுடீன்,**
**தலைவர்**
**அகில இலங்கை மக்கள் காங்கிரஸ் (ACMC)**
**இல. 56, 1 வது மாடி,**
**சுபுன் அர்கேட் ரெசிடென்சீஸ், காலி வீதி,**
**கொழும்பு-06.**
2. **சஹீப்டீன் சுபைர்டீன்,**
**பொது செயலாளர்,**
**அகில இலங்கை மக்கள் காங்கிரஸ் (ACMC)**
**இல. 56, 1 வது மாடி,**
**சுபுன் அர்கேட் ரெசிடென்சீஸ்,**
**காலி வீதி, கொழும்பு-06.**
**மற்றும்**
**இல.23/4, சார்லிமெண்ட் வீதி, கொழும்பு-06.**
3. **மஸிஹுடீன் நயமுல்லா**
**பொது செயலாளர்,**
**ஐக்கிய தேசிய கூட்டமைப்பு**
**(முன்னர் முஸ்லீம் தேசிய கூட்டமைப்பு என கருதப்பட்டது)**
**இல. 7, நோரிஸ் அவென்யூ, கொழும்பு-08**

**-பிரதிவாதிகள்**

அகில இலங்கை மக்கள் காங்கிரஸ் சார்பில், மற்றும் எதிராக அதன் அங்கத்தவர்கள்

மேற் பெயர் குறிப்பிடப்பட்ட முறைப்பாட்டாளரால் கீழ் குறிப்பிடப்படும் நிவாரணங்களை பெற்றுக் கொள்ளும் பொருட்டு கொழும்பு மாவட்ட நீதிமன்றில் கீழ்வரும் இலக்கமுடைய வழக்கு தாக்கல் செய்யப்பட்டுள்ளது.

**அவையாவன**

